வெளியீடு 17-3-2003

Issued 17-3-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, அக்டோபர் 25, 2002– தொகுதி 31 – எண் 2

**Friday the 25th October, 2002 – Volume 31 – No. 2**

...றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...ative Assembly Secretariat, Fort St. George,

Chennai - 600 009

... 3.00] [Price Rs. 3.00

25-10-2002

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 15-68 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (1 முதல் 5 பட்டியல்கள்) | 68-408 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) அரசு ஊழியர்களில் ஒரு பிரிவினர் 23-10-2002 முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது | 409-411 |
| **3. அறிவிப்புகள்—** | |
| (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 411 |
| (ஆ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2002-2003 - வெட்டுத் தீர்மானங்கள் குறித்து | 442 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 411-414 |
| (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2002 | 414-421 |
| (இ) தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 421-437 |

பக்கங்கள்

5. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2002–2003–அளித்தல்–

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 437-441

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 442-444


225170
நூலகம்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 9, சித்ரபானு—திருவள்ளுவர் ஆண்டு 2033

## 2002 அக்டோபர் 25, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"

நலவாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலை உணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும் மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 1, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

### திட்ட மதிப்பீடு

***5781—திரு. கா.பூ. முனுசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி அணையின் வலதுபுறக் கால்வாய் உபரி நீரை பொம்மசமுத்திரம் வழியாக திண்டல் ஏரி வரை கொண்டு செல்லும் திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) இத்திட்டம் இந்த ஆண்டே நிறைவேற்றப்படுமா?

[2002 அக்டோபர் 25

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி அணையின் வலதுபுறக் கால்வாய் உபரி நீரை பொம்மசமுத்திரம் வழியாக திண்டல் ஏரி வரை கொண்டு செல்லும் திட்டம், திட்ட உருவாக்கம் தலைமைப் பொறியாள விரிவான ஆய்வில் உள்ளது.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில் கிருஷ்ணகிரி அணையின் இரண்டு புறமும் வலதுபுறம் மற்றும் இடதுபுறமாக கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர் நீளம் தண்ணீர் பாய்கின்றது. இந்த அணையில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக உபரி நீராக சுமார் 1556 மில்லியன் கன அடி தண்ணீர் வீணாக வெளியேறுகிறது, இந்தத் தண்ணீரைச் சேமிக்கின்ற வகையில் இப்போது ஏரி வலதுபுறக் கால்வாயின் வாயிலாக பொம்மசமுத்திரம் வழியாக காரிமங்கலம், திண்டல் மற்றும் 39 ஏரிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்யக்கூடிய வகையிலே இந்தத் திட்டம் இந்த ஆண்டு நிறைவேற்றப்படுமா? அப்படி நிறைவேற்றப்படுகின்ற நிலையில் சுமார் 1,212 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். அதேபோல இடதுபுறக் கால்வாயும் கிட்டத்தட்ட வீரமலை ஏரி வரை பாய்கின்றபோது 1,020 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். எனவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் இந்த நிதி ஆண்டிலேயே இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பாலக்கோடு மற்றும் கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின் கால்வாய்களைச் சீரமைத்து, வலதுபுறக் கால்வாயை நீட்டித்து, புதியதாக 1,212 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதியை உருவாக்கி, மேலும் பொம்மசமுத்திரம் ஏரி, காரிமங்கலம் ஏரி, திண்டல் ஏரி மற்றும் 31 பிற ஏரிகளுக்கு நீர் வழங்குவதற்கான திட்ட முதல்நிலை அறிக்கை ரூ.1,715 இலட்சங்களுக்குத் தயாரிக்கப்பட்டது. இத்திட்ட மதிப்பீட்டினை விரிவாக ஆய்வு செய்து, விரிவான மதிப்பீடு அனுப்பிவைக்குமாறு தல அதிகாரிகள், திட்ட உருவாக்கம் தலைமைப் பொறியாளரால் கோரப்பட்டுள்ளனர். இத்திட்டத்தினால் ஏற்கெனவே உள்ள 710 ஏக்கர் நஞ்சை நிலமும், இடைவழி 383 ஏக்கரும், 1,212 ஏக்கர் புதிய நிலங்களும் கூடுதலாகப்



2002 அக்டோபர் 25]

பாசன வசதி பெற வாய்ப்புள்ளது. தற்போது, இத்திட்டம், திட்ட உருவாக்கம் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. அதற்குப் பின் மாவட்ட ஆட்சித் தலைவர், நில நிர்வாக ஆணையர் ஒத்திசைவு பெறப்பட வேண்டும். அரசின் நிதிநிலைக்கேற்ப இப்பணி எடுத்துச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமையான காவிரி நதிநீர் உரிமையைத் தன்னந்தனியாக நின்று போராடி, உச்ச நீதிமன்றத்தின் வாயிலாக இன்று தமிழகத்திற்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) உபரி நீராகச் செல்லக்கூடிய கிட்டத்தட்ட 1,556 மில்லியன் கன அடி தண்ணீரை, 4 விழுக்காடுகள் தண்ணீரை மழைக்காலங்களில் சேமித்து, இந்தக் கால்வாய் வழியாக விட்டால் சுமார் 16 பஞ்சாயத்துகளில் உள்ள குக்கிராமங்களில் நிலத்தடி நீர் மேம்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. விவசாயத்திற்குப் பயன்படுவதோடு மட்டுமல்லாமல், கிட்டத்தட்ட 40, 50 கிராமங்களுக்கு குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கக்கூடிய, இரண்டு நிலை இலாபம் இதிலே கிடைத்திருக்கிறது. எனவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நிதியை இந்த ஆண்டே ஒதுக்கி, புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் அந்தப் பகுதி மக்களுக்கு வாழ்வளிக்க முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10—05*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தினுடைய பயன்களை மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவின் அரசு தீவிரமாகப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி அணையினுடைய வலதுபுறக் கால்வாய் நீட்டிப்புப் பணிக்கு வாய்ப்பளிக்கின்ற வகையிலே நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் பாராட்டைத் தெரிவித்து, வரவேற்கக்கூடிய அதே நேரத்தில் அதையொட்டி இருக்கக்கூடிய பஞ்சபள்ளி அணையினுடைய வாய்க்காலை நீட்டிப்பதாகச் சொல்லி — (குறுக்கீடு) அதையொட்டிதான்...

[2002 அக்டோபர் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓட்டியெல்லாம் போகக்கூடாது. பதில் இருக்காது. அமைச்சரிடம் பதில் இருக்காது. தனியாகக் கேள்வி போட்டால்தான் பதில் இருக்கும்.

வினா எண் 2, திரு. ப. சிதம்பரம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

2—

## திட்ட மதிப்பீடு

***7419—திரு. ப. சிதம்பரம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதியில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு புதியதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்த விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதுள்ள நிதி நிலையின் காரணமாக புதிய அரசுக் கலைக் கல்லூரிகளைத் தொடங்குவது இல்லை என அரசு கொள்கை முடிவெடுத்துள்ளது. எனவே, பவானிசாகர் தொகுதியில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு புதிதாகக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பவானிசாகர் தொகுதி என்பது பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாகும். மேலும் உயர்மட்டக் கல்வி பெற வேண்டுமெனில், தொலைவில் உள்ள கோபிசெட்டிப்பாளையத்திற்கு சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. பல ஆண்டுகாலமாக எனது தொகுதி மக்கள் கல்லூரி வேண்டுமென போராடி வருகிறார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மறுபரிசீலனை செய்து



2002 அக்டோபர் 25]

அடுத்த ஆண்டாவது கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய நிதி நிலை சீரமைக்கப்பட்டு, அந்த அளவிற்குப் பணம் பெறப்பட்டால், அந்தக் கோரிக்கை மறுபரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், பவானிசாகரைப் பற்றியா?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆமாம். பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருவது இல்லை என்ற முறையிலே பதில் அளித்திருக்கிறார்கள். ஆனால் self-financing கல்லூரிகளுக்கு அனுமதி கொடுப்பதாகத் தெரிகிறது. அந்த முறையிலே ஏதாவது மாறுதல் அரசு கொள்கையிலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதிக் கல்லூரி தொடங்குவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பினார்கள். சுயநிதிக் கல்லூரியைத் தொடங்க முன்வருபவர்கள், அவர்கள் விண்ணப்பம் செய்தால் அது பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுயநிதிக் கல்லூரிகளுக்கு விண்ணப்பித்தால் அனுமதிக்கப்படும் என்று சொல்கிறார்கள். அரசு கொள்கை முடிவு எடுத்திருக்கிறது, கல்லூரிகள் தொடங்கப்படுவதற்கான வாய்ப்பில்லை என்று சொல்லப்படுகிறதே, இது இப்படியே போகும்பட்சத்தில் கல்வியே தனியார்மயமாகி விடுகிற ஓர் அபாயம் இருக்கிறது. இதன் மூலமாக ஏழையெளியவர்கள் படிப்பதற்கு கல்விக் கட்டணம் மிக அதிகமாக இருக்கிற காரணத்தாலே பாதிக்கப்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே, அரசு அந்தக் கொள்கை நிலையிலிருந்து மாறி, அரசே ஏற்று, கல்லூரிகளைத் திறப்பதற்கான முயற்சியை எடுக்குமா? அதோடு பல கல்லூரிகளுக்கு புதிய பாடத் திட்டங்கள் இன்னும் அளிக்கப்படாமல் இருக்கிறது. அந்தப் புதிய

பாடத் திட்டங்களையும் அளிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குப் போதிய அளவிற்கு நிதி வருமானத்தைப் பெறும் வகையில் இதுபற்றிப் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**3—**

## செயற்கைக்கோள் தரை நிலையம்

***23782—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கணினி மென்பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோருக்கு பன்னாட்டுச் சந்தைகளை எளிதில் அணுகும் வகையில் செயற்கைக்கோள் தரை நிலையம் ஒன்று கோயம்புத்தூரில் விரைவில் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கணினி மென்பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோருக்கு பன்னாட்டுச் சந்தைகளை எளிதில் அணுகும் வகையில் செயற்கைக்கோள் தரை நிலையங்கள் - Satellite Earth Stations - இரண்டு, கோயம்புத்தூரில் ஏற்கெனவே அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதுபோல் மதுரை, திருச்சி மற்றும் திருநெல்வேலியிலும் செயற்கைக்கோள் தரை நிலையங்கள் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

*முற்பகல் 10—10*

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர்" அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் கணினி மென்பொருள் உற்பத்தியானது,





நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக வரக்கூடிய சூழ்நிலையிலே அந்தத் துறையும் முதன்மையாக வரக்கூடிய சூழ்நிலை உள்ளது. இந்தக் காலகட்டத்திலே, இரண்டாவது இடத்திலேயிருந்து முதல் இடத்திற்கு வரக்கூடிய நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை, பன்னாட்டுச் சந்தைகளை எளிதில் அணுகும் வகையில் செயற்கைக்கோள் தரை நிலையம் ஒன்று கோயம்புத்தூரில் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தமிழகத்தில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி தொழில்களை மாவட்ட பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்ற மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் கொள்கையையொட்டி, இந்தியத் தொழில்கள் கூட்டமைப்பு மற்றும் தமிழக அரசு இணைந்து நவம்பர் 2002-ல் கோவையில் I.T. Com. என்ற ஒரு கருத்தரங்கு ஏற்படுத்தக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, இத்தகைய நடவடிக்கைகள் தொழில்நுட்ப வளர்ச்சி மாவட்ட பகுதிகளுக்குச் செல்ல வழி வகுக்கும். கோயம்புத்தூர் மற்றும் சுற்றுப்புறங்களில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களும், பணிகளும் தொடங்குவதற்கான வாய்ப்பு வசதிகளை இது உருவாக்கும். இரண்டாம் நிலை நகரங்களில் ஒன்றான கோவை மாவட்டத்தில், போதுமான மின் வசதி, உயர்தரம் வாய்ந்த மனித ஆற்றல், நல்ல உட்கட்டமைப்பு, தரம் உயர்ந்த ஏராளமான பொறியியல் கல்லூரிகள் ஆகிய அடிப்படை வசதிகள் உள்ளதால், உலகத் தரம் வாய்ந்த செயற்கைக்கோள் தரை நிலையம் ஒன்று விரைவில் அமைக்க அரசு முன்வரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டு, அதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை ஒரு முன்னோடி மாநிலமாக உருவாக்க வேண்டுமென்ற ஓர் இலட்சிய முனைப்போடு, அனைத்துத் துறைகளும் ஒரு முன்மாதிரியாக, இந்தியாவிலேயே சிறந்து விளங்கவேண்டும் என்கின்ற வகையிலும், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடுமையாக உழைத்து வருகிறார்கள். எனவே, முதல் கட்டம்தான் இது. இரண்டாவது கட்டம், ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுபோன்ற Satellite Earth Stations அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் இந்த அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு— Software exports—மென்பொருள் ஏற்றுமதியைப் பொறுத்தவரையிலே,

2000—2001 ஆம் ஆண்டில் ரூபாய் 3,116 கோடியாக இருந்த ஒரு நிலை, அது 2001—2002 ஆம் ஆண்டில் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த சீரிய துரித நடவடிக்கைகள் காரணமாக ரூ.5,223 கோடி ரூபாய் அளவுக்கு ஒரு மிகப் பெரிய ஏற்றுமதி வளர்ச்சியைத் தமிழ்நாடு பெற்று இருக்கின்றது. எனவே, 2002—2003—ல் நிச்சயமாக தமிழ்நாடு, இந்தியாவிலேயே மென்பொருள் ஏற்றுமதியிலே முதலாவதாக வரும் என்கின்ற ஒரு சூழ்நிலை நமக்கு நிச்சயமாகத் தென்படுகிறது. அதேபோன்று, இதற்கு அடிப்படைத் தேவைகளை நாம் நிறைவேற்ற வேண்டும் என்றால் Infrastructure-ஐ நாம் create செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலையில் இருக்கின்றோம். அதைப் படிப்படியாகச் செய்வதன் மூலம் நிச்சயமாக வருகின்ற காலங்களில் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒரு முதன்மையான அளவுக்கு வரும் என்ற ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதுவும் குறிப்பாக Connect 2002 என்கின்ற ஒரு கண்காட்சியை சமீபத்திலே நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்ததன் மூலம், முந்தைய ஆண்டு, இந்த ஆண்டு என்று கணக்கிடும்போது, முந்தைய ஆண்டில் ஏறக்குறைய மொத்த தொழில் நிறுவனங்கள், தொழில் அதிபர்கள் என்று பார்த்தால் 35 பேர் பங்கு பெற்றிருக்கின்றார்கள்.

அதேபோன்று அங்கே நிறுவப்பட்ட ஸ்டால்களின் எண்ணிக்கை 40. அதேபோன்று மொத்தம் பார்வையாளர்கள் முந்தைய ஆண்டிலே 6,000 பேர். ஆனால், ஒரு வருடத்திலே வேகமான வளர்ச்சி என்று சொல்லும்போது, இந்த ஆண்டு மட்டும் ஏறக்குறைய 100 தொழில் அதிபர்கள் பங்குபெற்றுள்ளார்கள். மற்றும் ஸ்டால்கள் என்று சொன்னால் 100 தொழில் ஸ்டால்கள் நிறுவப்பட்டு, மொத்தம் 40,000 பார்வையாளர்கள் இந்த மூன்று நாட்களிலே Chennai Trade Centre—லே நடைபெற்றிருக்கின்ற அந்தத் தொழில்நுட்பக் கண்காட்சியைப் பார்த்திருக்கின்றார்கள் என்று சொல்லும்போது, எந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் இதிலிருந்து அறிய முடிகிறது.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கின்ற கம்ப்யூட்டர் படித்த இளைஞர்கள் வரும் காலங்களிலே வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்ல வேண்டிய அவசியமே நிச்சயமாக இருக்காது. காரணம் இங்கேயே B.P.O. - Business Process Out-sourcing என்று சொல்லக்கூடிய, அதாவது வெளிநாட்டில் இருக்கக்கூடிய States—ஆக இருந்தாலும் சரி, அங்கே உள்ள நிறுவனங்களுக்கு data-களை இங்கே நம்முடைய தமிழ்நாட்டிலே





Call Centre—களை அமைப்பதன் மூலம், இங்கே Call Centres-களிடமிருந்து அங்கே இருக்கின்ற நிறுவனங்களுக்கு data-களை நாம் Satellite மூலம் அனுப்புவதன் மூலம் நிச்சயமாக நம்முடைய தமிழ்நாட்டைச் சார்ந்த கம்ப்யூட்டர் படித்த இளைஞர்களுக்கு நல்லதொரு எதிர்காலம் தமிழ்நாட்டிலே இருக்கிறது. அதற்கு புரட்சித் தலைவி அவர்கள் வேகமாக நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். ஏறக்குறைய ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10—15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மிக முக்கியமான, பயனுள்ள கேள்வி என்பது என்னுடைய கருத்து. தமிழ்நாட்டில் பஞ்சாலை நகரமாக விளங்குகிற கோவை நகரத்திலே பாரம்பரியமான அடிப்படைத் தொழில்கள் பாதிக்கப்பட்டு, மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியில் இருக்கிறபோது, இந்தத் தகவல் தொழில்நுட்பத் துறையிலே புதிய காலடி எடுத்துவைத்து தமிழகம் முன்னேறுவதற்குண்டான வாய்ப்புகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குண்டான எல்லாவிதமான infrastructure-களும் கோவையிலே இருக்கிறது என்பதை கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, சென்னையிலே உருவாகியிருக்கக்கூடிய TIDEL PARK போன்ற ஒன்றை கோவையிலும் அமைப்பதற்குண்டான ஏற்பாடுகள் தொடங்கியிருப்பதாகவும், அதற்கான இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும்கூட தகவல்கள் இருக்கின்றன. ஆகவே, அதைப் பயன்படுத்தி, அழிந்து வருகிற தொழில் நிலைகளிலிருந்து தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒரு புதிய வேகத்தோடு கொண்டு செல்வதற்கு, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு, தொழில் துறையில் தமிழகம் முன்னேறுவதற்கு, நீங்கள் சொல்வதைப்போல தமிழகம் முதன்மை மாநிலமாக மாறுவதற்கும்கூட இது பெரிய அளவிற்கு உதவி அளிக்கும். ஆகவே, நடப்பாண்டிலே இதற்குரிய கவனத்தைச் செலுத்தவும், திட்டத்தை உருவாக்கவும், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இருப்பது போன்ற ஒரு TIDEL PARK கோயம்புத்தூரிலே அமைக்க வேண்டும் என்கின்ற கருத்தைச் சொன்னார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுத்து

[2002 அக்டோபர் 25

வருகிறது. கோயம்புத்தூரில் மட்டுமல்ல திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற மாநகரங்களில்கூட அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து, அதன் மூலம் மென்பொருள் ஏற்றுமதி, பல்வேறு வகைகளிலே Software, Hardware என்று சொல்லக்கூடிய அனைத்திலும் நம்முடைய மாநிலம் முதன்மையாக வருகின்ற அளவுக்கு நடவடிக்கை வேகமாக எடுக்கப்பட்டு வருகிறது,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

4—

## கோயில் தேர்

***7552—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி தொகுதி, வீரபாண்டியிலுள்ள கௌமாரியம்மன் கோயிலில் உள்ள தேர் பழுதடைந்துள்ளதால், தேரினை புதியதாக அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையினை அவைக்கு தங்கள் அனுமதியுடன் அளிக்கிறேன்.

தேனி மாவட்டம், வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயிலில் உள்ள தேர் தற்போது நல்ல நிலையில் உள்ளது. கடந்த 11-5-2001 முதல் 14-5-2001 மற்றும் 10-5-2002 முதல் 13-5-2002 முடிய நடைபெற்ற தேரோட்டத்தில் தேர் சிறப்பாக ஓடி, நிலைக்கு வந்துள்ளது. தேர் உரிய அமைப்பில் இல்லாத காரணத்தினால் சாஸ்திர விதிப்படி புதிய மரத் தேர் செய்ய திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.16 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நிர்வாக அனுமதியும், தொழில்நுட்ப அனுமதியும் அளிக்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில் பணி தொடங்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன்.



2002 அக்டோபர் 25]

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கம் வகிக்கின்ற மாவட்டமாக தேனி மாவட்டத்தில், தேனி தொகுதியில், வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் கோயில் தேனி மாவட்ட மக்கள் வழிபடக்கூடிய முக்கியமான ஒரு கோயிலாகும். கோயிலில் உள்ள தேர் கடந்த பல ஆண்டுகளாக சீர் செய்யப்படாமல், இயங்காமல் இருந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் தற்போது மதிப்பீடு தயார் செய்து ஆய்வில் உள்ளது என்று கூறுகிறார். அது விரைந்து செயல்பட நடவடிக்கை எடுப்பார்களா என்பதை பேரவைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** கூடிய விரைவில் பணி தொடங்கப்படும் என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

5—

## கோயில் நிலங்கள்

***10108—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதியில் நாகையகோட்டை, கோவிலூர் ஊராட்சிகளில் இன்னும் பல இடங்களில் கோயில் மானிய நிலமென்று ஒவ்வொரு தனி நபரும் 100, 50 ஏக்கர் நிலங்களை அனுபவித்தும், பிரித்தும் விற்பனை செய்து வருவதோடு சம்பந்தப்பட்ட கோயில்களுக்கு எண்ணெய் விளக்குகூட போடுவதில்லை. அந்த நிலங்களை மீட்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதியில் உள்ள நாகையகோட்டை

மற்றும் வெம்பூர் ஆகிய இரு ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட கிராமங்களில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகையின்கீழ் உள்ள 27 திருக்கோயில்களில், கோயிலூர் அருள்மிகு தட்சிண திருப்பதி வெங்கிடாசலபதி திருக்கோயிலுக்கு மட்டும் 50 ஏக்கருக்கு மேல் நிலங்கள் உள்ளன. இக்கோயில் நிலங்கள் தொடர்பாகவும் மற்ற கோயில் தொடர்பாகவும், தவறான பட்டா வழங்கல், ஆக்கிரமிப்பு போன்றவை உள்ளனவா என்பதை விரிவாக ஆய்வு செய்து அறிக்கை தரவும் இவ்விஷயமாக ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு, வேடசந்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும், மாவட்ட வருவாய்த் துறை அலுவலர் முன்னிலையிலும் வழக்கு மற்றும் மேல்முறையீடுகள் நிலுவையில் உள்ளன. நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி பெறப்படும் தீர்ப்புகள் அடிப்படையில் உரிய மேல் நடவடிக்கைகள் தொடரவும் சரக மற்றும் உதவி ஆணையருக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகையகோட்டை, கோவிலூர் ஊராட்சிகளில் இருக்கின்ற கோயில் நிலங்களை எடுப்பதற்கான நடவடிக்கை சட்டபூர்வமாக எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். குறிப்பாக, வேடசந்தூர் வட்டம், நாகையகோட்டை ஊராட்சி செண்டுவழி என்ற ஒரு குக்கிராமத்தில் 22.35 ஏக்கர் வைத்துள்ள பொன்னுசாமி என்பவர் 2001 ஆம் ஆண்டு, முதலிலே எம்.பி. நிதியிலிருந்து ரோடு அமைப்பதற்காக சர்வே எண் 338, சர்வே எண் 389 என்ற இந்த இரண்டு நம்பர்களில் 30 செண்ட் நிலத்தை அரசாங்கம் எடுப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு செய்தபோது அதற்குத் தடையாணை வாங்கிவிட்டார்கள். அந்த ஊருக்கு சாலை வசதி இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் பல சர்வே நெம்பர்களில் அந்த நாகையகோட்டை பஞ்சாயத்தில் உள்ள ஓரே நபர், பொன்னுசாமி என்பவர் 58.42 ஏக்கரும், கோவிலூர் பகுதியில் இருந்து முனியாண்டிப்பிள்ளை என்பவர் 50.46 ஏக்கரும் வைத்திருக்கிறார்கள். இதை உடனடியாக அரசு எடுத்து, நிலமில்லாத ஏழைகளுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் பட்டா வழங்கி, வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10—20*

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, வெம்பூர், தட்சிண திருப்பதி வெங்கிடாசலபதி திருக்கோயிலுக்கு இனாம் ஒழிப்புச்



சட்டத்திற்கு முன்பு 45.83 ஏக்கர் நிலம் இருந்துள்ளது. இனாம் ஒழிப்புச் சட்டப்படி அந்நிலம் பலருக்கு வழங்கப்பட்டுள்ளது. 1971 ஆம் ஆண்டில் பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையில், இப்பொழுது 31 ஆண்டுகளுக்குப் பிறகு, மேற்படி பட்டா வழங்கியதை எதிர்த்து மேல்முறையீடு செய்ய இயலுமா என்பதைப் பற்றி வழக்கறிஞர்களிடம் ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதேபோன்று நாகையகோட்டை, அருள்மிகு மலைக்கன்னிமார் செண்டுவழி முனியாண்டி நாச்சிமுத்துசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 40 ஏக்கர் நிலத்தில், 16.32 ஏக்கர் தனியாருக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதைத் திரும்பப் பெற வழக்கறிஞரிடம் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் 1971 ஆம் ஆண்டில் பட்டா வழங்கியுள்ள நிலையில், 31 ஆண்டுகள் கழித்து நிலங்களைத் திரும்பப் பெறுவதில் சட்டச் சிக்கல் காரணமாக காலதாமதம் ஏற்படுகிறது என்பதை பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோல கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் பல்வேறு இடங்களில் சில தனியாரிடத்திலே சிக்கிக்கொண்டு அந்தக் கோயிலுக்கு எந்தவித வருமானமும் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்கள் கிராமத்திற்கு அருகில் இருக்கிறபோது, இப்பொழுது நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்குகிறோம், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்குகிறோம். அப்படி ஆக்குகின்ற நேரத்தில், போதிய நிலங்கள் அந்தப் பள்ளிகளுக்கு இல்லையென்று வருகிறபோது, அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள், இப்படி கோயிலுக்குரிய நிலங்களில் எந்தவித வருவாயும் இல்லாது இருக்கிற நேரத்தில் ஒரு தொகையை கிராம மக்களே வசூல் செய்து அந்தப் பள்ளிகளை உருவாக்குவதற்கு, அந்த நிலங்களை எடுப்பதற்கு முன்வந்தால் அந்தத் தொகையை வங்கிகளிலே வைப்பீட்டுத் தொகையாக வைத்துகூட அந்தக் கோயில்களுக்கு வேண்டிய பணிகளைச் செய்ய முடியும் என்கிற காரணத்தால், அப்படி நிலங்களை எடுத்து கிராம மக்கள் பொது உபயோகத்திற்குத் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இன்றைக்கு, அரசினுடைய பொது உபயோகத்திற்காக, அது கல்விக்கூடம் கட்டுவதற்காக இருந்தாலும் சரி, மருத்துவமனை

கட்டுவதற்காக இருந்தாலும் சரி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக இருந்தாலும் சரி அரசாங்கம் கேட்கின்ற நேரத்தில் அங்கிருக்கிற நில எடுப்பிற்கிணங்க அரசினுடைய அனுமதியைப் பெற்று, தமிழகத்தில் இருக்கிற அனைத்துப் பகுதிகளிலும் இப்படிப்பட்ட நிலங்களைக் கொடுப்பதற்கு அரசு முன்வந்து இப்பொழுது கொடுத்துக் கொண்டிருக்கிறது. தாங்கள் கேட்கின்ற இடம் எங்கே என்று சொன்னால், அதற்குரிய தொகையைக் கட்டுவதற்கு நீங்கள் முன்வந்தால், நிச்சயமாக அறநிலையத் துறை மூலம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளிலே பல்வேறு கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் குத்தகை என்ற பெயராலே உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. ஓர் ஏக்கர் நிலம் ரூ.10 இலட்சம், ரூ.20 இலட்சம் என்று குத்தகைதாரர்கள் வாங்கிக் கொண்டு, திரும்பவும் குத்தகையை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அதிகாரிகள்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதையும், குறிப்பாக, பூவிருந்தவல்லி, திருமழிசை, திருநின்றவூர் ஆகிய இடங்களில் இருக்கின்ற கோயில்களுக்குச் சொந்தமான இடங்களில் ஏக்கர் 20 இலட்சம், 25 இலட்சம் ரூபாய் என்று வாங்கிக் கொண்டு குத்தகை மாற்றம் செய்கிறார்கள். அந்த அதிகாரிகள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு இணங்க மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதையெல்லாம் கண்டறிவதற்காகத்தான் ஒரு புதிய ஐ.ஏ.எஸ். அலுவலரை அங்கே நியமித்து, எங்கெங்கே இப்படிக் காணாமல் இருக்கின்றதோ அந்த இடங்களையெல்லாம் கண்டுபிடித்து, உடனடியாக அறநிலையத் துறைக்கு எடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, டாக்டர் க. பொன்முடி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



## மருத்துவக் கல்லூரி

***10071—டாக்டர் க. பொன்முடி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி, தூத்துக்குடி, வேலூர், விழுப்புரம் ஆகிய இடங்களில் மருத்துவக் கல்லூரி அமைக்க சொல்லப்பட்டவாறு முதல் மூன்று இடங்களில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளபடியால், மீதமுள்ள விழுப்புரத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*விழுப்புரத்தில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**டாக்டர் க. பொன்முடி:** மிக்க நன்றி.

*முற்பகல் 10—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. பொன்முடி அவர்கள் விழுப்புரத்தில் மருத்துவக் கல்லூரி கேட்டு, நன்றி சொல்லி அமர்ந்துவிட்டார்கள். ஆனால், நான் என்னுடைய வேலூருக்குப் பலமுறை நன்றி சொல்லியிருக்கிறேன். இன்னும் அங்கே கல்லூரி தொடங்கப்படவில்லை. அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. மருத்துவமனையும் மருத்துவக் கல்லூரியும் ஒரே campus-ல் அமைய வேண்டுமென்று Medical Council of India வலியுறுத்தி வருகிற காரணத்தினால், இப்போது நம்முடைய வேலூரிலே அந்த மருத்துவக் கல்லூரியைத் தொடங்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறோம். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஓர் அரசாணை பிறப்பித்து, 54.45 கோடி ரூபாய் கன்னியாகுமரியில் இருக்கக்கூடிய ஆசாரிப்பள்ளத்திலும், அதேபோல் வேலூரிலும் மருத்துவக் கல்லூரியைத்

தொடங்கி, மருத்துவக் கல்லூரி வளாகத்தில் மருத்துவமனை கட்டுவதற்கு பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், பணம் இன்னும் வந்து சேரவில்லை. G.O. மட்டும் பிறப்பித்திருக்கிறார்கள். பணம் இன்னும் வந்து சேராத காரணத்தினால் எங்களுடைய வேலூர் மருத்துவக் கல்லூரி தொடங்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் M.C.I. -யிலே தேவைப்படக்கூடிய அத்துணை நிபந்தனைகளையும் அமைச்சர் அவர்கள் பூர்த்தி செய்து form கொடுத்துவிட்டாரா? வருகிற கல்வியாண்டிலே எங்களுடைய வேலூரில் மருத்துவக் கல்லூரி தொடங்கப்படுமா என்கிற கேள்வியைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமைச்சர் அவர்களிடமிருந்து பதிலை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் என்னுடைய பதிலுக்கு நன்றி என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டு, மறு கேள்வி கேட்காமல் அமர்ந்துவிட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களும் சுருக்கமாகப் பேசினால் ரொம்பவும் நல்லது. *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** அவர் அப்படி கேள்வி கேட்காமல் அமர்ந்ததற்குக் காரணம் என்று நான் கருதுவது, ஏதோ அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே சொல்லப்பட்டு, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, விழுப்புரத்தில் அந்தப் பரிசீலனை கைவிடப்பட்டுவிட்டது என்று பின்னாலே அவர் சொல்கிறவகையிலே ஒரு வாய்ப்பாக ஏற்படுத்திக்கொண்டு கேள்வி கேட்கவில்லையென்று கருதுகிறேன். அவர் இங்கே கேள்வியில் கேட்டிருப்பதுபோல், கன்னியாகுமரி, தூத்துக்குடி, வேலூர், விழுப்புரம் ஆகிய இடங்களில் மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கு அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே *1998-99*-லே சட்டமன்றத்திலே அன்றைக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு உறுப்பினர் ஆற்காடு வீராசாமி அவர்களால் சொல்லப்பட்டது உண்மை. ஆனால், அதற்குப் பிறகு, அவருடைய ஆட்சிக் காலத்திலே அது கைவிடப்பட்டதும் உண்மை என்பதை நான் இந்த மன்றத்திற்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். 2-2-2001 அன்று இடைக்கால நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முன்னாள் முதல்வர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பதில் அளிக்கிறபோது 'நான்கு புதிய மருத்துவக் கல்லூரிகள் திறக்க திட்டமிடப்பட்டு ஏற்கெனவே இரண்டு திறக்கப்பட்டுவிட்டன. மேலும் இரண்டு மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட இருக்கின்றன. அதிலே ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தில், மற்றொன்று வேலூரில் என்று பதில் சொல்லி, விழுப்புரத்தை அன்றைக்குக் கைகழுவிவிட்டு, ஏற்கெனவே தூத்துக்குடியையும் திருச்சியையும் கணக்கில் எடுத்துக்கொண்டிருக்கிறார். எனவே, விழுப்புரத்திலே மருத்துவக் கல்லூரி அமைக்கப்படப்போவதாகச் சொன்னதும் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான், அதைக் கைவிட்டதும் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் தலைவராக இருக்கிற அந்த உறுதிமொழிக் குழுவில்கூட இந்த உறுதிமொழி இடம் பெறவில்லை என்று நான் கருதுகிறேன். எனவே, இதுபோன்ற வாக்குறுதி உறுதிமொழிக் குழுவிற்கே அனுப்பப்படவில்லை. அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயே முடிந்துவிட்டது. எனவே, அதுகுறித்து பிரச்சினையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இங்கே அவர்களுடைய கேள்வியிலே தன்னுடைய தொகுதிக்கும் ஒரு பதிலைத் தரவேண்டுமென்று இங்கே கேட்டிருக்கிறார்கள். நம்முடைய வேலூரிலே, அவர் சொன்னதைப்போல, நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிதி ஒதுக்கப்பட்டு, மருத்துவக் கல்லூரி வளாகத்திலேயே மருத்துவமனை அமைய வேண்டுமென்ற இந்திய மருத்துவக் கழகத்தினுடைய புதிய நிபந்தனைக்கேற்ப அந்த இடத்திலேயே மருத்துவமனை கட்டுவதற்கு நம்முடைய மாண்புமிகு டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு *5* கோடி ரூபாயை ஒதுக்கி, இந்த ஆண்டே அந்தப் பணி தொடங்கப்பட இருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசாரிப்பள்ளம் பகுதியிலே மருத்துவக் கல்லூரியை அமைப்பதற்காக முயற்சிகளை மேற்கொண்டு, அதற்கான கட்டடப் பணிகள் சுமார் மூன்று, நான்கு கோடி ரூபாய்களுக்குக் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே கடந்த அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்தக் கல்லூரியை அங்கே ஆரம்பிப்பதாக அறிவித்துப் பணிகள் தொடங்கப்பட்ட பிறகு, பணிகள் முடிக்கப்படாத சூழ்நிலையை நாங்கள் அறிகிறோம். கடந்த ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நான் கேள்வி கேட்டபோது, மாண்புமிகு சுகாதாரத் துறை

[2002 அக்டோபர் 25

அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிறபோது, மத்திய கவுன்சிலுக்கே, எங்களுக்கு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்கிற விண்ணப்பத்தைக்கூட திராவிட முன்னேற்றக் கழக அரசு அனுப்பி வைக்கவில்லை, நாங்கள்தான் அனுப்பி வைத்திருக்கிறோம்; எனவே அடுத்த ஆண்டு நிச்சயமாக வரும் என்கிற விதத்திலே எங்களுக்கு உத்தரவாதம் அளித்தார்கள். எங்களுடைய மாவட்ட மக்கள் இந்த அரசை, அதிலும் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசை, வெகுவாக நம்பி இந்த ஆண்டே மருத்துவக் கல்லூரி வரும் என்ற ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அரசு, எங்களுக்கு, கன்னியாகுமரி மாவட்ட மக்களுடைய வெகு நாளைய ஆவலைப் பூர்த்தி செய்கிற முகத்தான் இந்த ஆண்டே மருத்துவக் கல்லூரியை அமைத்துத் தருவதற்கு முன்வருமா என்பதை குமரி மாவட்ட மக்கள் சார்பிலே நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10—30*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் சொன்னதைப்போல, ஏற்கெனவே அரசாங்கம் 175 கோடி ரூபாயை ஒதுக்கி, முதலாண்டுக்கான கட்டுமானப் பணிகளைச் செய்வதற்கு அந்த நிதியைச் செலவிட்டிருக்கிறது. அதைப்போல அந்த மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய நிதியிலிருந்து கொடுத்த அந்தத் தொகையை வைத்து முதலாண்டுக்கான அனைத்துக் கட்டுமானப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. ஆனால், நம்முடைய Medical Council of India புதிதாக விதித்திருக்கிற நிபந்தனையின்படி, அந்த மருத்துவக் கல்லூரியினுடைய வளாகத்திலேயே மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைய வேண்டும் என்ற அந்த நிபந்தனைக்கேற்ப இப்போது ஆசாரிப்பள்ளத்திலே புதிதாக ஒரு மருத்துவமனை கட்ட வேண்டும்; அதற்கு பூமி பூஜை எல்லாம்கூட போடப்பட்டுவிட்டது. எனவே அதற்காகத்தான் நிதியொதுக்கம் வேண்டும் என்று நாங்கள் நிதித் துறையைக் கேட்டிருந்தோம். நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆணையின்படி நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் நேற்றுதான் 5 கோடி ரூபாயை கன்னியாகுமரியில் மருத்துவமனை கட்டுவதற்கு ஒதுக்குவதற்கு சம்மதம் தெரிவித்திருக்கிறார் என்கிற அந்த மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. பொன்முடி.



2002 அக்டோபர் 25]

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலிலே மிகவும் சிரமப்பட்டு கேள்வி பதிலை எல்லாம் தயாரித்து அதிலே சொல்லியிருக்கிறார்கள். நன்றி. இதிலே குறிப்பாக, அன்று நடந்த விவாதத்திலேகூட ஐந்து கல்லூரிகளை அன்றைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதிலே நான்கு போக ஐந்தாவது விழுப்புரம். அதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது இரண்டு முடிவு பெற்றிருக்கிறது. இரண்டு நடைபெறும் என்று சொன்னார்கள். அப்போதே அன்றைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. அழகுவேல் அவர்கள் கேள்வி கேட்டபோது அன்றைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. வீராசாமி அவர்கள் இதை முறைப்படி வரிசைக் கிரமத்திலே எடுத்துக்கொள்கிறோம். ஐந்தாவதாக விழுப்புரம் பரிசீலிக்கப்படும் என்ற பதிலையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே எங்களைப் பொறுத்தவரையில் அன்றிருந்த நான்கிலே இப்போது மீதம் இருக்கிற இரண்டையும் நீங்கள் முயற்சி செய்து, செய்து கொண்டு இருக்கிறீர்கள். மற்ற சில இடங்களிலே கல்லூரிகளைத் தொடங்க முற்படுவதைவிட ஏற்கெனவே சொல்லப்பட்ட அந்த ஐந்தாவதாக இருக்கின்ற விழுப்புரத்திலே, நீங்கள் உங்கள் ஆட்சியிலே மருத்துவக் கல்லூரியைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்யப்படுமா என்பதுதான் எங்களுடைய கேள்வி. அதை நீங்கள் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி, அந்தத் தொகுதி மக்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், சென்னையை விட்டால் செங்கல்பட்டு. செங்கல்பட்டிலே இருந்து திருச்சிக்கு இடையிலே ஒரு மருத்துவக் கல்லூரிகூட இல்லாத ஒரு சூழ்நிலை. அந்தப் பகுதி மக்கள், மிகவும் பின்தங்கிய பகுதி மக்களாக இருக்கின்ற காரணத்தினால், இந்த அரசு அங்கேயும் ஒரு மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2-2-2001 ஆம் ஆண்டு நடைபெற்ற இடைக்கால நிதிநிலை அறிக்கையின் மீதான பதிலுரையில் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு திரு. கருணாநிதி அவர்கள் தெளிவாகவே சொல்லி இருக்கிறார்கள். "புதிய மருத்துவக் கல்லூரிகள் நான்கு. ஏற்கெனவே இரண்டு திறக்கப்பட்டு விட்டன-அதில்தான் விழுப்புரத்தைக் கை கழுவிவிட்டு திருச்சியை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். திருச்சியையும், தூத்துக்குடியையும்— மேலும் இரண்டு மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட இருக்கின்றன. ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தில், மற்றொன்று வேலூரில்." எனவே, உங்கள்

ஆட்சியிலேயே இரண்டு மருத்துவக் கல்லூரிகள்தான் நிறைவேற்றப்பட எண்ணமுள்ளது என்று அவரே தெளிவாகச் சொல்லிவிட்டார். நீங்கள் commit செய்ததைத்தான் நாங்கள் இப்போது நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறோம். எனவே இதையெல்லாம் முடித்துவிட்டு, தேவைப்படுகிற இடத்தில் நிதிநிலைமை அடிப்படையில், தேவையின் அடிப்படையில் மக்களுடைய வசதிக்காக மருத்துவக் கல்லூரி அமைப்பது பற்றி நிச்சயமாகப் பரிசீலிக்கலாம்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள், விழுப்புரத்திலே ஒரு மருத்துவக் கல்லூரி அமைப்பதன் மூலம், அங்கே ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைவதோடு, அந்த மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த மருத்துவமனை வருகிறபோது, அந்த மாவட்டத்து மக்களுக்கு கூடுதலான மருத்துவ சேவை கிடைக்கும் என்கிற அந்த ஒரு ஆதங்கத்தில், தொகுதி மக்களுடைய நலன் கருதி கேட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

*முற்பகல் 10—35*

அதையும் கருத்தில் கொண்டுதான் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 11-வது Finance Commission-னுடைய நிதி உதவியோடு 21 கோடி ரூபாயில் 7 Regional Diagnostic Centres அமைப்பதற்கு உத்தரவிட்டு, அந்த 7 இடங்கள்-திருவண்ணாமலை, விழுப்புரம், நாமக்கல், திருப்பூர், புதுக்கோட்டை, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய இந்த 7 இடங்களிலே 21 கோடி ரூபாய் செலவில், 7 மண்டல மருத்துவப் பரிசோதனை மையங்களை ஆரம்பிப்பதற்கு உத்தரவிட்டு, ஒவ்வொரு மையத்திற்கும் 3 கோடி ரூபாயை ஒதுக்கித் தர உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படி அந்த 7 இடங்களிலும் அந்த மையங்கள் அமைக்கப்பெறுகிறபோது, ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு என்னென்ன வசதிகள் இருக்குமோ, அந்த வசதிகள் அடங்கிய அந்த மையம், 47 இலட்சம் ரூபாயிலே கட்டடம் கட்டப்பட்டு அந்த 7 மையங்களுக்கும் C.T. Scan, Tread Mill, E.C.G. Machine, X-ray, E.E.G. Machine, Auto Analyser, Clinical Lab, Mammography போன்ற அனைத்து நவீன மருத்துவ வசதிகளும் அங்கேயிருந்து, அந்தப் பகுதி மக்களுக்கு அந்த மருத்துவ சேவை கிடைக்கின்ற வகையிலே அந்த மையம் அமைக்கப்படும்.

இப்போது இருக்கின்ற நிலையில் தமிழகத்திலே இருக்கின்ற அனைவரும் இதுபோன்ற பரிசோதனைகள் செய்ய வேண்டுமென்று





சொன்னால், சென்னைக்குத்தான் வர வேண்டும். ஆனால் இப்போது இந்த 7 மையங்களை உருவாக்குவதன் மூலம், இந்த 7 இடங்களில் அந்தந்தப் பகுதி மக்களுக்குத் தேவையான நவீன சிகிச்சைகள், பரிசோதனைகள் மக்களுக்கு அங்கேயே கிடைக்கும். அந்த வகையிலே விழுப்புரம் மாவட்ட மக்களுக்கு விழுப்புரத்திலே அமைக்கப்பட இருக்கின்ற இந்த மையத்தின் மூலமாக அந்த மருத்துவ சேவை கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பு வசதிகளை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி கட்டுவதற்காக அரசு 5 கோடி ரூபாய் அனுமதித்திருக்கிற செய்தி கிடைத்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வருகிற கல்வியாண்டில் அந்தக் கல்லூரி தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Medical Council of India வந்து inspection செய்ய வேண்டுமென்று சொன்னால், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கட்டி முடிக்கப்பட வேண்டும். எனவேதான், துரிதமாக அதைக் கட்ட வேண்டுமென்று நாங்கள் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் பொதுப் பணித் துறையோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். அவர்களும் 8 மாத காலத்திற்குள், அந்த மருத்துவமனையைக் கட்டி முடித்துக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த M.C.I.-க்கு விண்ணப்பம் ஆகஸ்ட் 30 ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும். அதுதான் கடைசித் தேதி. ஆக, 2003 ஆகஸ்ட் 30 ஆம் தேதிக்குள் அந்த மருத்துவமனை கட்டி முடிக்கப்பட்டு, முறையாக விண்ணப்பம் அனுப்பப்பட்டு, M.C.I அவர்களை inspection-க்கு அழைத்து வந்து, அவர்கள் ஒப்புதல் பெற்று, மத்திய அரசினுடைய ஒப்புதல் பெற்று, நிச்சயமாக, 2003 ஆம் ஆண்டு டிசம்பருக்குள் மருத்துவக் கல்லூரி தொடங்கப்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு துரிதமாக எடுத்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அசோகன்.

[2002 அக்டோபர் 25

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லையென்று சொன்னாலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், தொடர்பு இல்லையென்றால் அவ்வளவுதான். திரு. எ.வ. வேலு. *(குறுக்கீடு)*

**திரு. அ. அசோகன்:** முக்கியமான பிரச்சினை. பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது சி.டி.ஸ்கேன் இப்போது அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் வைத்திருக்கிறார்கள். அதிலே எங்களுடைய திருவாரூர் மாவட்டத் தலைமை மருத்துவமனையில் சி.டி.ஸ்கேன் வைக்கப்பட்டு, அது இரவோடு இரவாக நாகர்கோவிலுக்குக் கொண்டு செல்லப்பட்டு, பழைய சி.டி.ஸ்கேன் 85 ஆயிரம் films எடுக்கப்பட்ட பிறகு பழையதாகத்தான் இருக்க முடியும்; அந்த சி.டி.ஸ்கேனை திருவாரூரிலே வைத்திருக்கிறார்கள். அது மாற்றப்பட்டு புதிய சிடிஸ்கேன் வைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்வி போடவும். திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, All India Medical Council அதாவது அகில இந்திய மருத்துவக் கழகத்தினுடைய விதிக்குட்பட்டு, வைப்புத் தொகை, இடம், அதேபோன்று மருத்துவமனை-ஏனென்று சொன்னால், Medical College ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால் 650 bed கொண்ட மருத்துவமனை இருக்க வேண்டும். *(குறுக்கீடு)* ஆரம்பத்திலே ஆரம்பிக்கிறபோது First Year-ல், Second Year-ல் தான் 350, முடிகிறபோது நான்காம் ஆண்டுக்கு 650. அப்படி 650 bed உள்ள மருத்துவமனை அந்தப் பகுதியிலே இருந்து, மருத்துவம் கொடுப்பதற்கு வாய்ப்பு உண்டு. எனவே, அந்த வகையிலே பணம் இல்லையென்கிற காரணத்தால், மாவட்டத் தலைநகரிலே எல்லாம் மருத்துவக் கல்லூரி தொடங்க முடியவில்லை என்கிற ஆதங்கம் இந்த அரசுக்கு இருப்பது தெரிகிறது. ஆனால், நான் கேட்க விரும்புவது ஓர் அறக்கட்டளை மூலமாக வைப்புத் தொகை, இடம், மருத்துவமனை இவை எல்லாம் இருந்தால், அப்படி தனிப்பட்ட அறக்கட்டளைக்கு சுயநிதி மருத்துவக் கல்லூரி கொடுக்கிற திட்டம், அதற்குரிய N.O.C.-மறுப்பின்மைச் சான்று அது கொடுக்கிற திட்டம், இந்த அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.



2002 அக்டோபர் 25]

*முற்பகல் 10—10*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கிற மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்குவது நம்முடைய அரசாங்கம் அல்ல. M.C.I.-யும்—Medical Council of India —ம் மத்திய சர்க்காரும்தான். எனவே எங்களுடைய பணி Essentiality Certificate கொடுக்கப்படுவதோடு நிறுத்தப்பட்டு விடுகிறது. அப்படி வாய்ப்புள்ள இடத்தில், நீங்கள் சொல்வதைப்போல, Trust அமைத்து, மருத்துவக் கல்லூரி அமைப்பதற்காக முறையாக பரிசீலனை செய்தால், அனைத்து நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டு இருந்தால், M.C.I. விதித்திருக்கிற அனைத்து விதிமுறைகளும் நிறைவேற்றப்பட்டு இருந்தால் இந்த அரசாங்கத்திற்கு Essentiality Certificate கொடுப்பதிலே ஆட்சேபனை இருக்க முடியாது. ஆனால் இறுதியான முடிவு M.C.I.-யும், மத்திய சர்க்காரும்தான் எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிறபோது தூத்துக்குடி, கன்னியாகுமரி, வேலூர், விழுப்புரம் என்றார். நான் கடலூர் மாவட்டத்தைச் சார்ந்தவன். கடலூரிலும் ஓர் அரசு மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு அரசு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, திரு. கே. பாண்டுரங்கன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

7 –

## ஆரம்ப சுகாதார நிலையம்

***18666—திரு. கே. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, வேலூர் வட்டம், விரிஞ்சிபுரம் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் தொடங்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், விரிஞ்சிபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிஞ்சிபுரம் கிராமத்திலே சற்றேறக்குறைய 30,000-க்கும் மேற்பட்ட பொது மக்கள் வசித்து வருகிறார்கள். குறிப்பாக 15,000-க்கும் மேற்பட்ட இஸ்லாமிய பெருமக்களும், ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் வாழ்கின்ற காரணத்தினாலே, அவர்கள் மருத்துவ வசதி வேண்டுமென்றால், அவர்களுக்கு போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினாலே, மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆதலாலே, சங்க காலத்திலே கடையெழு வள்ளல்களும், கடந்த காலத்திலே எட்டாவது வள்ளலாக வாழ்ந்த நம் புரட்சித் தலைவர் அவர்களும், நம்முடைய காலத்திலே அன்னதானத் திட்டத்தையும், இதயம் காப்போம் திட்டத்தையும், அள்ளித் தந்த நமது தமிழகத்தினுடைய முதலமைச்சர், நம்முடைய குடும்பத்தினுடைய குல விளக்கு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியிலே, சிறுபான்மை மக்களைப் பாதுகாக்கின்ற அளவிலேயும், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வருகின்ற ஏழையெளிய மக்களுக்கு மருத்துவ வசதி கொடுக்கின்ற அடிப்படையிலேயும், தாயுள்ளம் கொண்ட தமிழகத்தின் முதலமைச்சர் அம்மா அவர்கள், மறுபரிசீலனை செய்து, சிறப்பு நிகழ்வாகக் கருதி, விரிஞ்சிபுரம் கிராமத்திலே அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அப்படி அனுமதித்தால் நிச்சயமாக பொதுமக்கள் அங்கே இடவசதியும், கட்டட வசதியும் இலவசமாகத் தருவதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியையும் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கனிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்திலே நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒடுக்கத்தூரிலே ஒன்றும், பொய்கையிலே ஒன்றும், அணைக்கட்டிலே ஒன்றும், பள்ளிகொண்டாவிலே ஒன்றும் ஆகிய 4 ஆரம்ப சுகாதார நிலையங்களும் அங்கே இருக்கின்றன. அந்த ஒன்றியத்தினுடைய மக்கள்தொகை 1991-ன்





கணக்கெடுப்பின்படி 1,32,375. எனவே, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் பார்த்தால்கூட, அங்கு இருக்கிற நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களும் அந்தப் பகுதி மக்களுக்கு சுகாதாரத் தேவை அளிக்கக்கூடியனவாக இருக்கின்றன. இருந்தாலும், இப்போது சமீபத்தில் எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், அங்கே கூடுதலாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டிய தேவை இருந்தாலும்கூட, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, புதியதாக ஆரம்ப சுகாதார நிலையங்களை அதிக அளவில் உருவாக்கி, அவற்றை குறைபாடுகளோடு நடத்தி, அதிருப்தியை சம்பாதிப்பதைவிட, இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களை இன்னும் தரம் உயர்த்தி, சிறப்பான மருத்துவ சேவையை செய்வதற்கு திட்டமிட்டு இன்றைக்கு செயலாற்றி வருகிறது. அதற்காக இந்த அரசு நபார்டு வங்கி, உலக வங்கியினுடைய உதவிகளை நாடியுள்ளது. அதுவும் குறிப்பாக சொல்லப்போனால், முதன்முதலாக நபார்டு வங்கி சுகாதாரத் துறைக்கு, அதுவும் தமிழகத்திற்கு மட்டுமே கடனுதவி தர முன்வந்திருப்பது, நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முயற்சியால்தான். எனவே, இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சீர்படுத்திவிட்டு, பின்னர் தேவையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் தகுதியான இடங்களில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து இந்த அரசு பரிசீலிக்கும்.

*முற்பகல் 10—45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, திரு. இரா. திருமாவளவன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**8—**

## நுகர்பொருள் வாணிபக் கிடங்கு

***23379—திரு. இரா. திருமாவளவன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதி, திட்டக்குடியிலுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்கிற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தரப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புரட்சித் தலைவியினுடைய இந்த அரசு, தமிழ்நாட்டில், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் கடனுதவியுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 40 வட்டங்களில் செயல்முறை கிடங்குகள் கட்ட திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தில் கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதிக்குட்பட்ட திட்டக்குடியும் இடம் பெற்றுள்ளது. எனவே, திட்டக்குடி வட்டத்தில் கிடங்கு கட்டத் தகுதியான நிலம் கிடைக்கப்பெற்றபின் நிதி வசதிக்கேற்ப கிடங்கு கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**9—**

## முத்திரைத்தாள்

***9858—திரு. ஏ.எஸ். கண்ணன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டி, அம்பத்தூர் ஆகிய தொழிற்பேட்டைகளில் உள்ள சிறுதொழில் முனைவோர்கள், முத்திரைத்தாள் அதிக விலைக்கு வாங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தொழிற்பேட்டை இடங்களுக்கு முத்திரைத்தாள் விலக்கு அளிக்க ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில் உள்ள சிறுதொழில் முனைவோர்கள் அதிக விலைக்கு முத்திரைத்தாள் வாங்குவதில்லை.



(ஆ) பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட பகுதிகளிலுள்ள சிட்கோ, சிப்காட் போன்ற அரசு நிறுவனங்களால் சிறுதொழில் முனைவோருக்கு எழுதிக் கொடுக்கப்படும் தொழில் மனைகள் மற்றும் கூடங்களுக்கான கிரயம் மற்றும் குத்தகை ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை விதிப்பிலிருந்து முழு விதிவிலக்கு 25-1-2000 முதல் 24-1-2002 வரை வழங்கப்பட்டது. இச்சலுகையை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிப்புச் செய்வதோடு எல்லாப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென கோரிக்கைகள் பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளன.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5, 6 ஆண்டுகாலமாக தொழில் துறை கடுமையான நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதிலும், சிறுதொழில் முனைவோர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் கடந்த காலத்தில், 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் தொழிற்பேட்டைகளில் நிலம் வாங்குவதற்கு-வாங்கவோ, விற்கவோ செய்பவர்களுக்கு ஒரு சதவீதம்தான் முத்திரைத்தாள் வாங்க வேண்டும் என்ற நிலை இருந்தது. ஆனால் கடந்த ஆட்சியில் அதை 13 சதவீதம் என்றும், குறிப்பாக கிண்டிக்கு 13 சதவீதம் என்றும், அம்பத்தூர் போன்ற பகுதிகளுக்கு 10 சதவீதம் என்றும், பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்ற தொழிற்பேட்டைகளில், அந்தந்த மாவட்டங்களுக்குத் தகுந்தவாறு முத்திரைத்தாள் வாங்க வேண்டும் என்ற கடுமையான ஆணை போடப்பட்டது. நாங்கள் அன்றைய சிறுதொழில் துறை அமைச்சரை, மரியாதைக்குரிய பெரியசாமி அவர்களைப் பலமுறை நேரில் சந்தித்து, அதைக் குறைக்க வேண்டும் என்று கேட்டபோதுகூட, நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உதாரணத்திற்கு, கிண்டியைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் அங்கே இன்றைக்கு, கிண்டி தொழிற்பேட்டையில் சிட்கோ எங்களுக்குத் தந்த விலை 68,000 ரூபாய். ஆனால், இன்றைக்கு அதனுடைய நிர்ணய விலை, அரசு விலை 33 இலட்சம் ரூபாய். இது எப்படி போடப்பட்டிருக்கிறது என்றால், SPIC building உள்ள இடத்திற்கு 33 இலட்சம் ரூபாய் என்று விலை நிர்ணயம் இருக்கிறது. அதே விலையை இன்றைக்கு கிண்டி தொழிற்பேட்டைக்கும் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால், 33 இலட்சம் ரூபாய் அங்கே விற்கப்படவில்லை. குறைந்தது 10 இலட்சம் ரூபாய்கூட அங்கே நிலம், ஒரு கிரவுண்ட் நிலம் விற்கப்படவில்லை என்ற நிலை அங்கே இருக்கின்றது. ஆனால், இந்த விலை உயர்வு எதற்காக அங்கே உயர்த்தப்பட்டது என்று நாங்கள் அறிகின்றபோது, கடந்த ஆட்சியின்போது இன்றைய முதல்வர் அவர்களால் அங்கே கிண்டி தொழிற்பேட்டையிலே உள்ள அந்த டான்சி

நிலம் வாங்கப்பட்டதால் இந்த விலை உயர்வு அங்கே நிர்ணயிக்கப்பட்டது என்பதை இன்றைக்குத் தொழில் முனைவோர்கள் திட்டவட்டமாகக் கூறுகிறார்கள். ஆகுலால் இன்றைக்கு நெருக்கடியாக உள்ள இந்த நேரத்தில் இந்த முத்திரைத்தாள் 13 சதவீதம் உயர்த்தப்பட்டிருப்பது தொழில் முனைவோர்களைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது. தயவுசெய்து இந்த அரசு இதைப் பரிசீலனை செய்து, கடந்த ஆட்சியில் இருந்ததுபோல, மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது இருந்த ஒரு சதவீதம் முத்திரைத்தாளையே வாங்க வேண்டும் என்று நீங்கள் பரிசீலனை செய்து, அதை முடிவு செய்ய வேண்டும் என்று அன்போடு உங்கள் மூலமாக நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இன்றையதினம் தொழில் துறையிலே முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக இதை ஆய்வில் கொண்டு, இப்போது ஏற்கெனவே கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில் எல்லாம் தமிழ்நாட்டிலே தொழில் துறையின் மூலமாக பிற்பட்ட தொழிற்கூடங்கள், மிகவும் பிற்பட்ட தொழிற்கூடங்கள் என்று பிரித்திருக்கிறார்கள். நாங்கள் இதைக் கருத்தில்கொண்டு, இப்போது அரசு அதைப் பரிசீலனை செய்து தொழில் துறைக்கு அனுப்பியிருக்கிறோம். இதற்கான நடவடிக்கை கூடிய விரைவில் எடுக்கப்படும்.

*முற்பகல் 10—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. பி.எஸ். அருள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**10—**

## ஆக்கிரமிப்பை அகற்றுதல்

***12837—திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியிலுள்ள வாண்டையாங்குப்பம் கிராமத்தில் உள்ள குளம் மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் உள்ள வடிகால் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) புவனகிரி தொகுதி, சிதம்பரம் வட்டம், வாண்டையாங்குப்பம் கிராமத்தில் புல எண் 204/2-ல் அமைந்துள்ள குளத்தின் தென்கரையில் இரண்டு நபர்கள் கூரை வீடுகள் மூலமும், அதன் வாய்க்கால் புறம்போக்கில் ஐந்து நபர்கள் வீட்டின் முற்றம் மூலமும், வாய்க்கால் வடிகால் பகுதியில் பக்கத்து நிலத்தின் உரிமையாளர் நெற்பயிர் செய்தும் ஆக்கிரமணம் செய்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார்கள். இந்த ஆக்கிரமணங்களை விரைவில் அகற்றிவிடுவதாக சிதம்பரம் வட்டாட்சியர் அவர்கள் உறுதியளித்துள்ளார்.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது புவனகிரி தொகுதியில், வாண்டையாங்குப்பம் கிராமத்தில் 204/2 என்ற புல எண்ணில் அமைந்துள்ள குளத்தின் தென்கரையில் 4 நபர்கள் கூரை வீடுகள் கட்டியும், அதன் வடிகால் வாய்க்கால் புறம்போக்கில் 5 நபர்கள் வீட்டின் முன்பு ஆக்கிரமிப்பும் செய்துள்ளனர். இதன் காரணமாக அந்தக் குளத்திற்கு வர வேண்டிய தண்ணீர் வராமல் அடைக்கப்பட்ட காரணத்தாலும், வாய்க்கால் வடிகால் பகுதியில் பக்கத்து நிலத்தின் உரிமையாளர் நெற்பயிர் செய்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதாலும், அந்தக் கிராமத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் நல்ல குடிநீர் இன்றி, தங்கள் வீடுகளில் வளர்த்துவரும் ஆடு, மாடுகளுக்கு குடிக்க குடிதண்ணீர் கிடைக்காத நிலை உள்ளது. இந்தக் குளத்தை தனியார் நபர்கள் ஆக்கிரமிப்பு செய்த காரணத்தால் பல ஆண்டுகளாக இந்தக் குளம் வறண்டு காணப்படுகிறது. கிராமத்தில் மேல் ஊற்று இல்லாத காரணத்தினால் சுமார் 300, 400 அடிகளுக்கு மேல் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தாலும் அங்கே உவர் நீர்தான் கிடைக்கிறது. அதனால், இந்த நிலைமையை எல்லாம் மாற்றிட பல கிராமங்களில் ஏரி மற்றும் குள ஆக்கிரமிப்புகளை அகற்றிட அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே தமிழகத்திலே

[2002 அக்டோபர் 25

அனைத்து மாவட்டங்களிலும் Steering Committee என்ற ஒரு Committee-யை அமைத்து, அதிலே மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், காவல் துறையின் மாவட்ட அளவிலான அலுவலரை உறுப்பினராகவும், பொதுப் பணித் துறையின் மாவட்ட அளவிலான சம்பந்தப்பட்ட செயற் பொறியாளரை (நீர்வள ஆதார அமைப்பு) உறுப்பினராகவும், நெடுஞ்சாலைத் துறையின் கோட்டப் பொறியாளரை உறுப்பினராகவும், வனத் துறையின் மாவட்ட வன அலுவலரை உறுப்பினராகவும், மாவட்ட வருவாய் அலுவலரை உறுப்பினர்—செயலராகவும், ஊராட்சி உதவி இயக்குநரை உறுப்பினராகவும், பேரூராட்சி உதவி இயக்குநரை உறுப்பினராகவும், நகராட்சிகளின் நிர்வாகத் துறை மண்டல இயக்குநரை உறுப்பினராகவும், மாநகராட்சிகளின் ஆணையர்களை உறுப்பினராகவும், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் அல்லது அவரது சார்பாளரை உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். எல்லா மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்கள் எங்கெல்லாம் ஆக்கிரமிப்பு இருக்கிறதோ அவற்றை உடனடியாக அகற்றிட மாதந்தோறும் கூட்டம் நடத்தி, அந்தக் கூட்டத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு கிராமப்புறங்களில் இருக்கின்ற அனைத்து குளங்களையும் வெட்ட வேண்டுமென்ற ஓர் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். அந்த உத்தரவை அமலாக்கம் செய்து கொண்டிருக்கின்ற அரசு அதிகாரிகள் உள்ளாட்சித் துறை அமைப்பைச் சேர்ந்தவர்கள் அங்கே பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அந்தக் குளங்களிலே இருக்கின்ற ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாமல், இருக்கின்ற நிலப்பரப்பு எந்த அளவுக்கு இருக்கிறதோ அதை மட்டும் வெட்டி, அந்தக் குளத்தை இப்போது சரிசெய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே வருவாய்த் துறையினர் அந்தக் குளத்தை வெட்டுவதற்கு, முன்பு எப்படி இருந்ததோ அந்தப் புல எண் சர்வே எடுத்து, அந்தக் குளம் எந்த அளவுக்கு விஸ்தீரணம் எப்படி இருக்கிறதோ அந்த அளவுக்கு சர்வே செய்து கொடுத்து, அதை உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.



2002 அக்டோபர் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 11, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

11—

## குளிரூட்டல் கிடங்கு

***11054—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் பழ வகைகள், காய்கறிகள் மற்றும் கீரை வகைகளை இருப்பு வைக்க குளிரூட்டும் கிடங்குகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி வட்டாரத்தில் அதிகப்படியாக திராட்சை மட்டுமே சாகுபடி செய்யப்படுகிறது. அவ்வாறு சாகுபடி செய்யப்படும் திராட்சையை விவசாயிகள் நேரிடையாக எடுத்துச் சென்று ஓசூர் மற்றும் பெங்களூரில் உடனுக்குடன் விற்பனை செய்துவிடுவதால், அங்கு குளிர்ப்பதன கிடங்கு அமைக்கும் அவசியம் ஏற்பட வாய்ப்பு மிக மிகக் குறைவு என்பதால், நாட்ராம்பள்ளி தொகுதியில் குளிர்ப்பதனக் கிடங்கு அமைத்திட சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாட்ராம்பள்ளி சட்டப் பேரவைத் தொகுதி மிகவும் வறட்சியான பகுதியாகும். இது கிணற்றுப் பாசனத்தை நம்பி வாழ்ந்து வரும் ஏழை விவசாயிகளைக் கொண்டதாகும். விவசாயிகள் பயிரிடும் கீரை வகைகளையும், காய்கறி வகைகளையும், பழ வகைகளையும், கொய்யா, மா, சப்போட்டா, சீத்தாப்பழம் போன்றவற்றையும் அன்றாடம் அறுவடை செய்து, உடனுக்குடன் மார்க்கெட்டுக்கு கொண்டு செல்ல இயலுவதில்லை. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, இடைத் தரகர்கள் விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு வாங்கி, அதிக இலாபம் சம்பாதித்து

வருகிறார்கள். ஆகவே, ஏழை விவசாயிகளுக்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் குளிரூட்டும் கிடங்கு ஒன்று கட்டிக் கொடுத்தால், கீரை வகைகளையும், பழ வகைகளையும், காய்கறி வகைகளையும், இருப்பில் வைத்து, அதிக விலைக்கு விற்று இலாபம் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதியாண்டில் இல்லாவிட்டாலும், அடுத்த நிதியாண்டிலாவது கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்களின் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10—5.5*

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி வட்டாரத்தைப் பொறுத்தமட்டில் அதிகப்படியாக திராட்சை மட்டுமே சாகுபடி செய்யப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் கணக்கெடுத்தபடி அங்கே 20 முதல் 25 எக்டேர் வரை திராட்சை மற்றும் பழ வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஒரு எக்டேருக்கு 25 டன் திராட்சை உற்பத்தி செய்யப்படுகிறது. மொத்தத்தில் 500 முதல் 600 மெட்ரிக் டன் வரை திராட்சை மற்றும் பழ வகைகள் அங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்படி உற்பத்தி செய்யப்படுகிற அந்தப் பழ வகைகளை பக்கத்திலே இருக்கிற ஓசூர், பெங்களூர் போன்ற இடங்களுக்கு எடுத்துச் சென்று விவசாயிகள் உடனடியாக விற்று விடுகிறார்கள். ஆகவே, அங்கு குளிர்ப்பதன வசதி செய்து கொடுப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை என்பது மட்டுமல்ல, தனியார் யாராவது முன்வந்தால் அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்து தரப்படும் என்பதையும் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் விளைபொருட்களைப் பாதுகாக்கின்ற இந்தக் குளிரூட்டும் கிடங்குகள் தமிழகத்தில் அரசின் மூலம் இதுவரை எத்தனை கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன? மேலும் இந்த ஆண்டு கட்டுவதற்கு ஏதாவது நிதி ஒதுக்கியிருக்கின்றீர்களா? அவ்வாறு ஒதுக்கியிருந்தால் என்னுடைய இராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காவல்கிணறு விலக்கில் பெருந்தலைவர் காமராஜர் காய்கறி மார்க்கெட் இருக்கிறது. அங்கிருந்து மிக அதிகமாக காய்கறிகளும், பூக்களும் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் அதேபோன்று கேரளாவில் திருவனந்தபுரம் போன்ற பகுதிகளுக்கு செல்கின்றன. எனவே, அந்தப் பகுதியிலே அரசு குளிரூட்டும் கிடங்கு,





விவசாயிகளின் நலன் கருதி கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 9 இடங்களில் குளிர்ப்பதனக் கிடங்குகள் அமைப்பதற்காக தனியார் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய பகுதிக்கு அவசியம் என்று சொன்னால் தனியார் மூலமாகக் கட்டிக் கொடுப்பதற்குத் தேவையான உதவிகள் செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர்.

**12—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

***19062—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட தெங்கரை, பத்மநாபபுரம், மிடாலம், கேரளபுரம், கல்லுவிளை ஆகிய இடங்களிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்திட நிதியுதவி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவான நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தெங்கரை, பத்மநாபபுரம், கேரளபுரம் மற்றும் கல்லுவிளை பகுதிகளில் இலவச வீட்டுமனை கோரி விண்ணப்பித்துள்ளோர் மனுக்கள் எதுவும் நிலுவையில் இல்லை. எனவே,

காத்திருப்போர் பட்டியலில் பயனாளிகள் எவருமில்லை. ஆகையால், மேற்சொன்ன இடங்களில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் தேவைக்கென நிலமெடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய தேவை எழவில்லை. மிடாலம் கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியில் சுமார் 575 ஏழை ஆதிதிராவிட குடும்பங்கள் வீடு கட்ட இடம் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். இவர்கள் குறிப்பாக, தெங்கரை, பத்மநாபபுரம், கேரளபுரம், கல்லுவிளை ஆகிய ஊர்களைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். இவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க திருவிதாங்கோடு, சாமியார்மடம், புலியூர்குறிச்சி ஆகிய ஊர்களில் நிலங்களை அதிகாரிகள் தேர்வு செய்து, போதிய நிதி ஒதுக்கீடு செய்யாத காரணத்தினால் நிலங்களைக் கையகப்படுத்த முடியாத நிலையில் உள்ளது. ஆகையால் ஆதிதிராவிட மக்களைப் பாதுகாக்கும் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அவர்கள் தரும் கோரிக்கை மனுக்களை ஏற்று, அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நிதியுதவி அளிக்க முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வழியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தெங்கரை, பத்மநாபபுரம், கேரளபுரம், கல்லுவிளை ஆகிய பகுதிகளில் ஆதிதிராவிடர்கள் இலவச வீட்டுமனைப பட்டா கோரி விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை. எனவே, காத்திருப்போர் பட்டியலில் பயனாளிகள் இடம் பெறவில்லை. ஆனால், கிள்ளியூர் தொகுதி, விளவங்கோடு வட்டத்தைச் சார்ந்த மிடாலம் ஒரு வருவாய் கிராமம். இந்தக் கிராமத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா...

*முற்பகல் 11—00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** இந்தக் கிராமத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா கேட்டு காத்திருப்போர் பட்டியலில் தகுதியான



ஆதிதிராவிடர்கள் 40 நபர்கள் உள்ளனர். இந்தக் கிராமத்தில் புல எண் 301/24-ல் 1.15 எக்டேர் நிலம் கையகப்படுத்தி, ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட சுமார் ரூ.09 இலட்சம் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது, நிலமற்ற ஆதிதிராவிடர்கள் பயன்பெறும் வகையில் நிலம் கையகம் செய்து இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டத்திற்கு, கடுமையான நிதி நெருக்கடி இருக்கின்றபோதும், நடப்பாண்டிற்குரிய 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகை அனைத்து மாவட்டங்களுக்கும் தேவைக்கேற்ப பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, கூடுதலாகத் தேவைப்படும் தொகை, பிற மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் சேமிப்புத் தொகை கிடைக்கப்பெறும் பட்சத்தில் மிடாலம் கிராமத்தைச் சார்ந்த தகுதியான ஆதிதிராவிடர் பயனாளிகளுக்கு நிலம் கையகம் செய்த இடத்தில், வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நில உரிமையாளர்களிடம் பேசி, சகாய விலையில் நிலம் கிடைத்திட ஆவன செய்வார்களேயானால், மிக விரைவாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நிதி குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், ஏற்கெனவே பட்டாக்கள் வழங்கப்பட்ட இடங்களிலே சாலைகள், குடிதண்ணீர் வசதிகள் செய்து, வீடே இல்லாத இடங்களில் பணிகள் நடைபெறுகின்றன. ஆனால், வீட்டுமனைப் பட்டாக்களுக்காக வழங்கப்பட்ட நிதி அதற்கு ஒதுக்கப்பட்டுவிட்டதால் குறைவாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குகிற பணியே பல மாவட்டங்களில் நடைபெறவில்லை. அதை அரசு உணர்ந்து அதிலே நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டில் ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டா

ஆதிதிராவிட தகுதியான பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இருந்தாலும் அந்த இடத்தில் தானாகவே, ஆதிதிராவிடர்கள் — அந்த வீட்டுமனையில் வீடுகள் தாமாகக் கட்டிக்கொள்வதற்கு, அப்படிப்பட்ட இடங்களில் குடிதண்ணீர் வசதி, தெருவிளக்கு வசதி, சாலைகள், அடிப்படைத் தேவைகளான தெருவிளக்கு வசதி, சாலைகள் போன்ற infrastructure அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தால், தாமாகவே வீடுகளைக் கட்டிக்கொள்ள அவர்கள் முன்வருவார்கள் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்கான நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் பயனாக கடந்த ஆண்டு 2001-2002-ல், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன், கிட்டத்தட்ட தமிழ்நாடு முழுவதும் ஆதிதிராவிடர் பயனாளிகள் 16,705 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் ரூ.4.38 கோடி ரூபாயில் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இவ்வளவு நிதி நெருக்கடியிலும், 2002-2003 ஆம் ஆண்டிற்கு கிட்டத்தட்ட 12,000 ஆதிதிராவிடர்கள் பயன்பெறும் வகையில் 12,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு 3 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆகவே, இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கினாலும் அந்தப் பட்டாக்கள் மூலம் எந்தவித பயன்பெற முடியாத நிலையில் இருந்து வருகிற சூழ்நிலையின் காரணமாக மாண்புமிகு அம்மா அவர்கள் தாமாகவே, வீடுகட்டிக்கொள்ள முன்வர வேண்டும் என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான், ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் பகிர்ந்தளித்து, தேவையான அளவிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மிகப் பணிவோடு மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் துணைத் திட்டம், பட்டியலின மக்கள் சிறப்புக் கூறு திட்டம் பற்றி விழிப்புணர்வு இன்று நாடு முழுவதும் பரவி வருகிற நேரம் என்பது தாங்கள் அறிந்ததே. ஒரு காலத்தில் பட்டியலின மக்கள், பழங்குடியின மக்கள் தொழில் செய்வதற்காக கடனுதவி கோருவதற்கும், பட்டியலின, பழங்குடியின மாணவர்கள் கல்விக் கடனுதவி என்கிற லோன் ஸ்காலர்ஷிப்பைப் பெறுவதற்கு அணுகக்கூடிய இடமாக இருந்த



ஆதிதிராவிடர் நலத் துறை இன்று சுடுகாட்டுப் பாதை அமைப்பதற்கு நிதி பெறுவதற்காகவும், பட்டா பெறுவதற்காகவும் அணுகக்கூடிய இடமாக மட்டும் மாறியிருக்கிறது என்கிற சூழ்நிலையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முருகவேல் ராஜன்...

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை, இல்லை, தொடர்புடைய கேள்விதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை இல்லை, மூலவினா இலவச வீட்டுமனைப் பட்டா பற்றியது.

**திரு. க. முருகவேல் ராஜன்:** நான் கேள்விக்கு வருகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணத்திற்கு என்னுடைய வந்தவாசி தொகுதியில் செய்யாறு தாலுகாவிற்கும், வந்தவாசி தாலுகாவிற்கும் சேர்த்தே ஆதிதிராவிடர் நலத் துறைப் பிரிவிலே வெறும் 70,000 ரூபாய் நான் கையிருப்பு இருக்கிறது. இலவசப் பட்டா கேட்கிற ஆயிரக்கணக்கான மனுக்களும், சுடுகாட்டிற்கு மயானப் பாதை கேட்கிற ஆயிரக்கணக்கான மனுக்களும் இருக்கிற நேரத்தில், வெறும் 70,000 ரூபாயை வைத்துக்கொண்டு, இரண்டு தாலுகாக்களில் பட்டியலின, பழங்குடியின மக்களுக்குரிய இந்த அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை இல்லை. இதே நிலைமைதான் தமிழ்நாடு முழுவதும் இருக்கிறது. நான் கேட்பது என்னவென்றால், பட்டியலின பழங்குடியின மக்களின் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிற இந்த அரசு, கருணை அடிப்படையில் கடனுதவித் தொகைகள் வழங்கப்பட்ட மார்ஜின் தொகையை மீண்டும் கொடுத்தும், கல்விக் கடன் உதவித் தொகை கொடுத்தும், அந்த மாணவர்கள் படிப்பதற்கு உதவி செய்தும், இந்தத் திட்டங்களை, பட்டா வழங்குதல், சுடுகாட்டுப் பாதை அமைப்பதற்கு திட்டங்களை, பட்டா வழங்குதல், சுடுகாட்டுப் பாதை அமைப்பதற்கு வாய்ப்புக் கொடுக்கிற வகையில் அதிக நிதியொதுக்கீடு செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11—05*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள மாவட்டம், அவருடைய தொகுதியைச் சார்ந்தது. திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு மட்டும் கிட்டத்தட்ட 10 இலட்சம் ரூபாய் செலவில் 440 வீட்டுமனைப் பட்டாக்கள் ஆதிதிராவிடர்களுக்கு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்புதான், ஆதிதிராவிடர்கள், குறிப்பாக கல்வியிலே முக்கியத்துவம் பெற வேண்டும், கல்விக்காக அதிக நிதியை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும், கல்வியில் முன்னேறினால்தான் ஒரு சமூகம் முன்னுக்கு வர முடியும் என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையில் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குறிப்பாக, பெண்கள் 11-வது, 12-வது படிக்கின்ற பெண்கள், பள்ளிக்குச் சென்று படிப்பதற்கு - கல்வியில் அதிகம் முக்கியத்துவம் கொடுத்து, அதிகம் முன்னுக்கு வரவேண்டும் என்கிற அந்தச் சீரிய நோக்கோடு - இலவசமாக மிதி வண்டிகளை வழங்கியிருக்கின்றார்கள். 56,525 மிதி வண்டிகள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டும் 47,000 மிதி வண்டிகள் வழங்குவதற்கு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி வழங்கி நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். மாணவிகளுக்கு முதுகலைப் பட்டப் படிப்புவரை இலவசமாகக் கல்வி கற்றுக் கொடுக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் உத்தரவிட்டிருக்கின்றார்கள். கல்விக்கு அதிக ஊக்க நிதி, கிட்டத்தட்ட ஸ்காலர்ஷிப் மட்டும் இந்த ஆண்டு 40 கோடியே 74 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். இந்த அளவுக்கு அதிக நிதியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் ஆதிதிராவிடர்கள் முன்னுக்கு வர வேண்டும்; (மேசையைத் தட்டும் ஒலி) வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் இல்லை என்கிற நிலையை உருவாக்க வேண்டுமென்ற சீரிய முனைப்போடுதான் அல்லும் பகலும் அயராது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உழைத்து வருகிறார்கள்; கண்டிப்பாக ஆதிதிராவிட நலத் துறை தமிழ்நாட்டில் முதல் துறையாக வரும் என்பதை இந்த நேரத்தில் மிகப் பணிவோடு மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, திரு. மே.ப. காமராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர். (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்லிவிட்டார், முடிந்தது, முடிந்துவிட்டது.

**13—**

## பேருந்து வசதி

***8475—திரு. மே.ப. காமராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும்



(அ) ஓமலூர் பேருந்து நிலையத்திலிருந்து முத்துநாயக்கன்பட்டி, கே.ஆர். தோப்பூர், கே.கே. நகர், எளம்பிள்ளை, காகாபாளையம் வரை அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் பேருந்து நிலையத்திலிருந்து முத்துநாயக்கன்பட்டி, கே.ஆர். தோப்பூர், கே.கே. நகர், எளம்பிள்ளை, காகாபாளையம் வரை நகரப் பேருந்துகளும், மினி பேருந்துகளும் பகுதி வாரியாக இயக்கப்பட்டு வருவதால் நேரடிப் பேருந்து இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் பேருந்து நிலையத்திலிருந்து முத்துநாயக்கன்பட்டி, கே.ஆர். தோப்பூர் நகரம், எளம்பிள்ளை, காகாபாளையம் வரை 20 கிலோமீட்டர் தூரம் உள்ளது. இந்தப் பகுதியில் வழிநெடுக 8 பஞ்சாயத்துகளில் 25,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றார்கள். இந்தப் பகுதியில் விசைத் தறி, கைத்தறி நெசவுத் தொழில் செய்ய மக்கள் அதிக தூரம் செல்ல வேண்டியிருப்பதால், இடையிடையே பஸ்கள் அந்தத் தூரத்தில் செல்ல முடியவில்லை. பாதியிலேயே அந்த பஸ்கள் நின்று விடுவதால், அந்தப் பகுதி cut-ஆகி விடுகிற காரணத்தினாலே, அந்த தூரத்தை அடைய முடியவில்லை. மேலும், இந்த டவுன் பஸ் வேண்டி நீண்ட காலமான கோரிக்கை அந்த மக்களிடத்திலே இருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் தற்போது இல்லை என்று சொன்னாலும் மறு பரிசீலனை செய்து, அதிகமாக பாட்டாளி மக்கள் வசிக்கக்கூடிய, ஏழை மக்கள் வசிக்கக்கூடிய அந்தப் பகுதிகளுக்கு, டவுன் பஸ் விட அரசு ஆவன செய்யுமா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்களா, பாட்டாளி மக்கள் கட்சியா? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூரிலிருந்து முத்துநாயக்கன்பட்டி வரை 8 நகரப் பேருந்துகள், 118 நடைகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. முத்துநாயக்கன்பட்டி-கே.ஆர். தோப்பூர் வழித் தடத்தில் இரண்டு மினி பேருந்துகள் 36 நடைகள் ஓடிக் கொண்டிருக்கின்றன.

முத்துநாயக்கன்பட்டி-கே.ஆர். தோப்பூர் வழித் தடத்தில் ஒரு நகரப் பேருந்து 4 நடைகள் இயக்கப்படுகின்றது. கே.ஆர். தோப்பூரிலிருந்து, எளம்பிள்ளை வரை உள்ள வழித் தடத்தில் 2 மினி பேருந்துகள் 36 நடைகள் இயக்கப்படுகின்றன. எளம்பிள்ளை — காகாபாளையம் வழித் தடத்தில் 18 நகரப் பேருந்துகள் 136 நடைகள் இயக்கப்படுகின்றன. ஆக, இந்த அளவுக்கு இந்தப் பகுதி மக்களுக்கு தேவைக்கு அதிகமாகவே அந்தப் பகுதியிலே பேருந்து வசதி செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்த வழித் தடத்தில் கூடுதலாக, நேரடியாக, புதியதாக பேருந்து வசதி ஏற்படுத்துவதற்குத் தேவை எழவில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11—10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியினுடைய உள்நோக்கம் 20 கிலோமீட்டர் இருக்கக்கூடிய அந்தத் தூரத்தைக் கடக்க சுமார் 5 பேருந்து மாறி மாறிச் சென்று, ஒரு பாட்டாளி தன்னுடைய விசைத் தொழிலைச் செய்ய வேண்டியுள்ளது. விவசாயக் கூலிக்கு அந்த இடங்களை மாற்றி மாற்றிச் செல்ல எவ்வளவு காலதாமதம் ஏற்படும் என்பதனை இந்த அரசு சிந்தித்து, எளம்பிள்ளையிலிருந்து ஓமலூர் வரையும், காகாபாளையத்திலிருந்து ஓமலூர் வரையும் நகரப் பேருந்து விட இந்த அரசு முன்வருமா என்பதனை ஏழைகளின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரொம்ப பயமுறுத்தாதீர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய தேவைக்கேற்ப இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கோரிக்கைகளைப் பரிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, திரு. எம். ராம்குமார், மாண்புமிகு மின்சாரம், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.



**14—**

**மின்மாற்றி**

***6711—திரு. எம். ராம்குமார்:**

மாண்புமிகு மின்சாரம், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, கொரநாட்டுக்கருப்பூர் நத்தம் கிராம மின்மாற்றியை அதிக அளவு கிலோ வோல்ட் சக்தி உள்ள மின்மாற்றியாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, கொரநாட்டுக்கருப்பூர் நத்தம் கிராமத்திலுள்ள 63 கே.வி. திறனுள்ள மின்மாற்றி இப்பொழுது 100 கிலோ வோல்ட் திறனுள்ள மின் மாற்றியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு உட்பட்ட கொரநாட்டுக்கருப்பூர் ஊராட்சி ஒன்றியம், நத்தம் கிராமத்தில் கடந்த காலத்தில் கும்பகோணம் நகராட்சியிலிருந்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, அந்த ஆக்கிரமிப்புகளிலே குடியிருந்த நூற்றுக்கணக்கான ஆக்கிரமிப்பாளர்கள் அங்கே புதிதாக குடியமர்த்தப்பட்டார்கள். எனவே, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல 63 கே.வி. திறனுள்ள மின்மாற்றி இருந்தது. அதனை மாற்றி, 100 கே.வி. மின்மாற்றியாக மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தபோதும்கூட, குறைந்த மின் அழுத்தத்தின் காரணமாக அந்தப் பகுதி மக்கள், பல்புகள் மற்றும் டியூப் லைட்டுகள் சரிவர எரியாமல் மிகுந்த துன்பத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே, கூடுதலாக ஒரு மின்மாற்றியினை அந்தப் பகுதிக்கு அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் கிராமத்தில் 150 குடிசை வீடுகளும், ஒரு

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியும், 15 விவசாய மோட்டார்களும் ஆகிய மின் இணைப்புகள் மட்டுமே உள்ளன. மேற்கண்ட மின் இணைப்புகளுக்கு உரிய மின் பகிர்வுக்குப் போதுமான திறனுடைய 100 கே.வி.ஏ. மின்மாற்றி நத்தம் கிராமத்தில் அமைக்கப்பட்டு, மேற்கண்ட கிராமத்தில் சீரிய முறையில் கும்பகோணம் கிராமிய மின்சார கூட்டுறவு சங்கத்தால் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகின்ற அளவிலே இருக்கிறது. தேவைப்பட்டால் மாற்றி அமைத்துக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, திரு. ஆ.கு.சி. அன்பழகன், மாண்புமிகு மின்சாரம், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**15—**

## பதவி உயர்வு

***24538—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:**

மாண்புமிகு மின்சாரம், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கல்வித் தகுதிகொண்ட தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவி மின் பொறியாளர்/மின்னியல் பதவி உயர்வு மறுக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கல்வித் தகுதி கொண்ட தொழில் நுட்ப உதவியாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவி மின் பொறியாளர்/மின்னியல் பதவி உயர்வு அளிக்கப்படுகிறது.

(ஆ) உதவிப் பொறியாளர் பதவி நியமனம் பணி மூப்பு அடிப்படையில்தான் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவடைந்து வந்த தமிழக மின்சாரத் துறையைச் சீரமைத்துவரும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி. எப்பொழுது முதல் இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது? தற்போது காலியாகவுள்ள அனைத்துப் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளனவா? இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்தோர் விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் தகுதி கொண்ட தொழில்நுட்ப உதவியாளர்கள், இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் இதரப் பணியாளர்கள் தற்போது 463 பேர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு, அனைவருமே பதவி ஏற்பு செய்துவிட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11—15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 16, திரு. டி.என். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**16—**

## பிளாஸ்டிக் ஆலை

***9787—திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி உபயோகம் மற்றும் எரித்தலின்போது வெளியாகும் டையாக்சினால் புற்று நோய் மற்றும் இதர நோய்கள் வர வழியாகிறது என சுற்றுச்சூழல் வாரியம் தெரிவித்துள்ளதால், கடலூரில் கெம்ப்ளாஸ்ட் சன்மார் கம்பெனி பி.வி.சி. உற்பத்தி செய்யும்பொருட்டு பெரிய ஆலையைத் தொடங்க வழங்கப்பட்ட ஒப்புதலை நிறுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட் என்கின்ற இந்த நிறுவனம் கடலூரிலே தொழிற்சாலை அமைக்க அரசு ஏதும் அனுமதி வழங்கவில்லை என்பதை மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளாஸ்டிக் பேப்பர் மற்றும் இதரத் தொழிற்சாலைகளில் குளோரின் பயன்படுத்துவதால் Orgno Chlorine Compound என்கின்ற டையாக்சின் வெளியாகின்றது. இதனால் பொதுமக்களுக்குப் புற்று நோய் மற்றும் மலட்டுத் தன்மை போன்ற நோய்கள் வர வழியாகின்றது. அதனால் தொழிற்சாலைகளில் குளோரின் பயன்படுத்துவதைத் தடை செய்ய அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கெம்ப்ளாஸ்ட் அண்டு சன்மார் லிமிடெட் என்பது கடலூரிலே அமைவதற்காக பல்வேறு நடவடிக்கை எடுத்திருந்தாலும், இந்த பி.வி.சி. உற்பத்தியானது, மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை வெளியிட்டுள்ள, திருத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 1994-ன்கீழ் வருகிறபடியால், இந்த நிறுவனம் இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் அனுமதியைப் பெற வேண்டும். என்றாலும், 27-5-2002 அன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை வேண்டி, நீர் சட்டம் 1974 மற்றும் காற்றுச் சட்டம் 1981-ன்கீழ் விண்ணப்பித்துள்ளது. கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் கருத்து கேட்கப்பட்டு, இந்தத் தொழிற்சாலை புற்று நோய் ஏற்படுத்தக்கூடிய Vinyl Chloride Monomer என்கின்ற இரசாயனப் பொருள் கையாளப்படுவதால், அவை உற்பத்தியின்போது, வாயு நிலையில் வெளியேற்ற வாய்ப்புள்ளது என்பதால், எரியும்போது டையாக்சின் என்ற நச்சுவாயு வெளியேறும் வாய்ப்புள்ளதால், இந்தத் தொழிற்சாலை நிலத்தடி நீரை மிக அதிகமான அளவில் பயன்படுத்த திட்டமிட்டு உள்ளதால், சுற்றுச்சூழல் மாசுபடுவதோடு மட்டுமல்லாமல், நிலத்தடி நீர் மிகவும் பாதிப்பு அடையும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளதனால் தொழிற்சாலை அமைவது தொடர்பாக தடையில்லாச் சான்றிதழ் எதையும் இவ்வாரியம் வழங்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.



**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் சிப்காட் வளாகம் இரசாயனத் தொழிற்சாலைகள் நிறைந்துள்ள ஓர் இடமாகும். அந்த இரசாயனத் தொழிற்சாலைகள் மூலமாக ஏற்படுகின்ற மாசு, காற்றின் மூலமாக, நீரின் மூலமாக மக்களை வெகுவாகப் பாதிக்கக்கூடிய சூழ்நிலைகளை சமீபத்திலே நாம் பத்திரிகைகளின் வாயிலாகவும் பார்த்திருக்கிறோம், நேரிலும் சென்று பார்வையிட்டிருக்கிறோம். கடலூரிலே இருக்கக்கூடிய அந்தச் சூழ்நிலையில் FEDCOT என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனமும் பார்வையிட்டு, பல்வேறு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையங்கள் எல்லாம், குழுக்கள் எல்லாம் பார்வையிட்டு, இனிமேல் கடலூர் சிப்காட் வளாகத்தில் புதியதாக எந்தவொரு இரசாயனத் தொழிற்சாலையையும் அமைப்பதற்கு அனுமதி அளிக்கக்கூடாது என்ற மக்களுடைய கருத்தை வெகுவாக வலியுறுத்தியிருக்கின்றன. ஆகவே, இந்த அரசு புதியதாக கடலூரில் எந்தவிதமான இரசாயனத் தொழிற்சாலைக்கும் அனுமதி அளிப்பதில்லை என்று முடிவு எடுக்குமா, அந்த மக்களின் கருத்தை ஏற்று, அதைச் செயல்படுத்த முன்வருமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்திலேயும், எந்த நேரத்திலேயும், பொதுமக்கள் பிரச்சினைகளால் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னால், அதை உடனடியாகத் தீர்க்கிற அரசு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதனாலேதான் கிட்டத்தட்ட 300 கோடி ரூபாயிலே இந்த நிறுவனத்தை அமைக்க வேண்டுமென்று அந்தத் துறை கேட்டிருந்தாலும், அந்தப் பகுதியிலே மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதற்காகத்தான் பல ஆண்டுகளாக அவர்கள் கேட்டிருந்தாலும், மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக அதற்கு அனுமதி தரமுடியாத ஒரு சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது என்பதை மெத்தப் பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளாஸ்டிக் ஒரு Non-bio-degradable substance என்பதால், அது அழியாது; நிலத்தடி நீரையும் பாதிக்கின்றது. Lung Cancer போன்ற கொடிய நோய்களை உருவாக்குகின்றது. இதனை மக்கள்

அறிவதற்கு, அடுத்த தலைமுறையை எண்ணி, திட்டங்களை நிறைவேற்றும் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, விழிப்புணர்வு முகாம்களை தமிழகம் முழுவதும் அமைத்து, மக்களுக்கு பிளாஸ்டிக் பொருட்களைப் பற்றிய விவரங்களை எடுத்துரைக்க ஆவன செய்யுமா என்பதையும், பிளாஸ்டிக் பைகளால் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அவற்றிற்கு மாற்றாக பேப்பர் பைகள் மற்றும் துணிப் பைகளை செயல்படுத்துவதற்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாக அறிவுறுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11—20*

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் — இந்தக் கட்டுப்பாட்டிற்காக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திட வேண்டும் என்கின்ற ஒரு எண்ணத்தின் அடிப்படையில் ஒரு நடமாடுகிற கண்காட்சி ஆகஸ்ட் 2001-ல் தொடங்கி வைக்கப்பட்டது என்பதையும், இக்கண்காட்சி, சென்னை மாநகரத்தில் மட்டும் பல்வேறு இடங்களில் பொதுமக்களின் பார்வைக்காக நடத்தப்பட்டது என்பதையும், மாவட்ட அளவில் பிளாஸ்டிக் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதையும், Children Against Plastics என்ற விழிப்புணர்வுப் பிரச்சாரம் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாக தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும், கலை நிகழ்ச்சிகளின் மூலமாக நம்முடைய மாநிலத்தில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 17, திரு. எஸ்.ஏ.எம். உசேன், மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

**17 —**

## கல்நார் வீடுகள்

***16282—திரு. எஸ்.ஏ.எம். உசேன்:**

மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சென்னை நகரில் குடிசைகளை மாற்றி, தீப்பிடிக்காத கல்நார் வீடுகள் அமைத்துத் தர வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகரில் எளிதில் தீ விபத்துகளால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு நடப்பு 2002-2003 ஆம் ஆண்டில் 2,700 குடியிருப்புகளுக்கு ரூ.4.2 கோடி செலவில் சுற்றுச் சுவர்களுடன்கூடிய கல்நார் கூரை வீடுகள் அமைக்கப்படும். மேலும், முதற்கட்டமாக 1,818 குடியிருப்புகளுக்கு ரூ.2.73 கோடி செலவில் சுற்றுச் சுவர்களுடன்கூடிய கல்நார் வீடுகள் அமைக்கப்படும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைநகர் சென்னையில் குடிசை வாழ் மக்கள் வெயில் காலத்தில் தீ விபத்தினாலும், மழைக் காலத்தில் வெள்ளத்தினாலும் மிகவும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்த நிலையில், வாழ்க்கையில் வறுமையோடு போராடிக் கொண்டிருக்கக்கூடிய அவர்கள், தங்களுடைய வீடுகளில் கூரையை மாற்றிக்கொள்வதற்குக்கூட வழியில்லாத நிலையில் அவதிப்படுகின்ற சூழ்நிலையில், எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 39,000 குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, சென்னை நகரில் 31,000-க்கு மேற்பட்ட குடியிருப்புகள், கல்நார் வீடுகள் இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 40 கோடி ரூபாய் திட்டத்தில் அவை அமைந்துள்ளன. எனவே, ஏழையெளிய மக்கள் நலன் காக்கக்கூடிய அரசு என்று சொல்லக்கூடிய இந்த அரசு, மேலும் விரிவுபடுத்தி அனைத்து மக்களுக்கும் கல்நார் வீடுகள் கட்டித் தருவதற்கான முயற்சியைத் தீவிரப்படுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், ஆட்சேபகரமான பகுதியில் வாழும் குடிசைவாழ் மக்கள் குடும்பங்கள் 75,632. தனியாருக்குச் சொந்தமான நிலங்களில் வாழும் குடிசை வாழ் குடும்பங்கள் 45,600.

சட்டச் சிக்கல் எழுவதால், இந்த அரசால், இக்குடும்பங்களுக்கு, ஏழையெளிய மக்களுக்கு, முழுமையாகச் சுற்றுச் சுவர்களுடன்கூடிய கல்நார் வீடுகள் அமைக்க இயலாது என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் கலைஞர் ஆட்சியில், சென்னையிலுள்ள குடிசைகளையெல்லாம் அப்புறப்படுத்தி, கல்நார் வீடுகளைக் கட்டித் தந்து, சாதனைகளைப் படைத்திருக்கிறோம். குறிப்பாக தியாகராய நகர் பகுதியில், சென்ற ஆண்டிலிருந்து இந்த அரசு ஏற்பட்ட பிறகு, பாதியளவு கட்டப்பட்டு, மீதி கட்டப்படாமல் இருக்கிற கல் நார் வீடுகளை - தியாகராய நகர், அசோக் நகர் பகுதிகளிலே, புதூர் பகுதியிலே, பாதி கட்டப்படாமல் அப்படியே இருக்கிறது - அவற்றைக் கட்டித் தர அரசு முன்வருமா? நான் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்கான பணத்தை ஒதுக்கித் தர முன்வந்தபோதுகூட, இந்த அரசின் திட்டத்திலே இப்போது கல்நார் வீடுகள் இல்லை என்று அதிகாரிகள் மறுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு ஏழையெளிய மக்களின் வாழ்க்கையை முன்னேற்ற கல்நார் வீடுகளைக் கட்டித் தர மீண்டும் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11—25*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட மீனவர்கள் வாழுகின்ற பகுதியில், தற்சமயம் நடப்பு ஆண்டிலே, முதற்கட்டமாக, 14 வட்டங்களில் 1,818 குடும்பங்களுக்குச் சுற்றுச் சுவர்களுடன்கூடிய கல்நார் ஓடு வேய்ந்த வீடுகள் அமைத்துத் தரப்படும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது ஆட்சேபகரமான இடங்கள், சட்டச் சிக்கலான இடங்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆட்சேபகரம், சட்டச் சிக்கல் என்றால் எந்த வகையில் அப்படிப்பட்ட வீடுகள் என்பதை விளக்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாருக்குச் சொந்தமான நிலங்களிலே குடிசைப் பகுதிவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு, அவர்களுக்குப் பட்டாக்கள் இல்லை. உரிமைப் பட்டாக்கள் இருந்தால் அதில் கல்நார் ஓடு வேய்ந்த வீடுகள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மூலமாக அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-1996 ஆம் ஆண்டிலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தமிழ்நாடு புறநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூபாய் 8,000-உடன் புதிதாக வீடுகளைக் கட்டுவதற்குக் கடனுதவி வழங்கி, அதேபோல் 2-12-1995-லே தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தினுடைய வெள்ளிவிழா நிகழ்ச்சியிலே குடிசை மாற்று வாரிய வீடுகளைச் சீரமைப்பதற்கு ரூபாய் 5 கோடியினை வழங்கி, அதேபோல், சென்னை நகரில் புறநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னை மாநகரத்திலே குடிசைகளே இல்லாத வண்ணம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை நகரத்திலே புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற குடிசைப் பகுதிகளைக் கணக்கெடுத்து, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அந்தப் பகுதிகளிலே குடிசைகளிலே வாழ்கின்ற மக்களுக்குச் சுகாதார வசதி, மின்சார வசதி, சாலை வசதி போன்ற அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்ய ஒரு குறிப்பிட்ட கால அளவு நிர்ணயித்து, நடவடிக்கை எடுத்திட மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஏழையெளியவர்களின் நலன் காக்கின்ற அரசு. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்டதற்கிணங்க அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகளை நிறைவேற்றித் தருவதில் இந்த அரசு கவனத்தில்கொள்ளும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, திரு. செ. அண்ணாதுரை, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

18—

## கால்நடை மருத்துவமனை

***6961 திரு. செ. அண்ணாதுரை:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஜெயங்கொண்டம் தொகுதியில் கால்நடை மருத்துவ நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திரு. செ. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதி காடுகள் நிறைந்த தொகுதி. எனவே, கால்நடை வளர்ப்பதற்கு ஏற்ற சூழல் இருப்பதால், இங்கு அதிக கால்நடைகள் உள்ளன. ஜெயங்கொண்டம் தொகுதிக்கு உட்பட்ட ஜெயங்கொண்டம் ஒன்றியம், தா. பழூர் ஒன்றியங்களிலே தலா இரண்டு கால்நடை மருத்துவமனைகள் உள்ளன. இவை இரண்டும் தொகுதியினுடைய மையப் பகுதியில் அமையாததால், அந்தக் கால்நடைகளை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கு, சுமார் 30 கிலோமீட்டர் தூரம் உள்ளதால், கால்நடைகளின் நலன் கருதி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு, இரண்டு ஒன்றியங்களின் மையப் பகுதியான கங்கைகொண்டசோழபுரம் மற்றும் திருப்புரந்தான் ஆகிய இடங்களில் வரும் நிதியாண்டில் மருத்துவமனை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில், பெரியவளையம் என்னும் ஊரில் கால்நடை மருத்துவமனை ஒன்று உள்ளது. மேலும், தா. பழூர், கோடாலிகருப்பூர், விக்கிரமங்கலம் ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்களும், கங்கைகொண்டசோழபுரம், உடையார்பாளையம், திருப்புரந்தான், வடவாறு தலைப்பு, உள்ளியங்குடி மற்றும் எரவாக்குடி ஆகிய இடங்களில் கிளை நிலையங்களும் உள்ளன.



மேலும் மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற அடிப்படையில் விதிமுறைகளுக்கு உட்பட்டு புதியதாக கால்நடை மருத்துவமனையோ, கிளைநிலையமோ திறக்கப்பட வேண்டுமென்றால் அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்ப பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டுமென்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11—30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 19, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

19 –

## கட்டடங்கள்

***15185–திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம், கயத்தாறு, கழுகுமலை போன்ற இடங்களில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர் இல்லங்களுக்கு அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருமா?

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு சீர்மரபினர் மாணவர் விடுதி ரூ.31.50 இலட்சம் செலவில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கழுகுமலை மற்றும் ஒட்டப்பிடாரம் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் நடப்பு நிதியாண்டில் இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் நித்தம் வணங்கும் அம்மாவை வணங்கி, ஒட்டப்பிடாரம் தொகுதியிலே 5 அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர் இல்லங்கள் உள்ளன. அவை அனைத்தும் வாடகைக் கட்டடத்தில்தான் செயல்பட்டு வருகின்றன. இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்த

நிலையை மாற்றி, முதன்முதலில் 2001-2002-ல் கயத்தாறு பிற்படுத்தப்பட்டோர் அரசு மாணவர் இல்லத்திற்கு ரூ.31.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. அதேபோல, ஏழையெளிய பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவிகள் அதிகமாக வாழும் கழுகுமலை, ஓட்டப்பிடாரம், கில்லாங்குளம் பகுதிகளிலே பிற்பட்ட அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லம் கட்டித்தர அம்மாவின் அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அடிப்படை வசதிகள் இல்லாமல் தனியார் கட்டடங்களில் இயங்கிக்கொண்டிருக்கும் விடுதிகளுக்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு விடுதிக் கட்டடமும் ரூ.31.50 இலட்சம் செலவில் அத்தனை அடிப்படை வசதிகளுடன் கட்ட ஆணையிட்டு, 100 விடுதிகள் இப்பொழுது தமிழகத்தில் கட்டடங்கள் வரப்பெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும், நிதிநிலைக்கு ஏற்ப அடுத்த வருடம் மற்ற கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யும் என்று இந்த மாமன்றத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுடைய விடுதிகளை அமைப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியில் சென்ற ஆண்டு 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதேநேரத்திலே பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக கிட்டத்தட்ட 22 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக அந்தக் கட்டடங்கள் கட்டுவதற்குரிய தொகையிலே பாதியை குடிநீருக்காக நாம் எடுத்த பிறகு 5 இலட்சம் ரூபாய் மட்டுமே கட்டடங்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்தது, வரையறுக்கப்பட்டுள்ளது. ஆக, இந்தக் குழப்பமான சூழ்நிலையில், விடுதிகள் கட்டுவதற்கு 12 இலட்சம் ரூபாயா, 22 இலட்சமா, 5 இலட்சமா என்பதை முறைப்படுத்தி அமைச்சர் அவைக்கு அறிவிப்பாரா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசு விடுதிகளில் படிக்கும் மாணவர்களுக்கு அத்தனை அடிப்படை வசதிகளும் வேண்டும் என்பதற்காக, அதேபோன்று தனியார் கட்டடங்களில் இயங்கும் விடுதிகளில் அடிப்படை வசதிகள் இல்லையென்ற காரணத்திற்காக ரூ.31.50 இலட்சம் செலவில் இன்று அரசு விடுதிகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்டதற்கிணங்க, இவர்கள் நிதியிலிருந்து 5 இலட்சம் ஒதுக்கினாலும், கட்டும் கட்டடங்கள் ரூ.31.50 இலட்சத்தில்தான் கட்டப்படும் என்று இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 20, திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**20–**

## பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

***10076–திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

சேலம் மாவட்டம், வாழப்பாடி ஒன்றியம், கொமாரபாளையத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு கொமாரபாளையம் கிராமப் பொதுமக்கள் எவரும் மனு செய்யவில்லை என்பதால் சங்கம் பதிவு செய்யும் திட்டம் ஏதுமில்லை.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகையில் கொமாரபாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிப்பதற்கு அந்தப் பகுதியிலுள்ள மக்கள் எவரும் மனு செய்ய வில்லை என்று இங்கு கூறினார்கள். மனு செய்தால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, பால் உற்பத்தியாளர்களின் நலனைக் கருதி, அவர்களுக்கு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு முன்வருமா என்பதனை தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

[2002 அக்டோபர் 25

*முற்பகல் 11—35*

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தித் தொழிலில் அதிகபட்சமாக எவ்வளவு மகளிரைப் பயன்படுத்த வேண்டுமோ அந்த அளவுக்கு அவர்களுக்கு அந்தத் தொழிலில் அதிகபட்சமாக வசதி செய்து தரவேண்டுமென்ற நோக்கிலே பல்வேறு சலுகைகளை அறிவித்து சிறப்பாகத் திட்டங்கள் தீட்டிக் கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, சங்கம் பதிவு செய்யக் கோரி பொது மக்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டால் பால் வளத் துறையின் இணைப் பதிவாளர் மூலமாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, உடனுக்குடன் சங்கங்கள் பதிவு செய்வதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

**(பட்டியல்கள் 1 முதல் 5) ***

### முதல் பட்டியல் 1

### வாய்க்கால் சுவர் கட்டுதல்

**வினா 1811—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி தையல்குணாம் பட்டினம் வாய்க்காலில் தூர்வாரி இருபுறமும் சுவர் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

நடப்பு நிதியாண்டில் திட்டம் ஏதுமில்லை.

* உடுக்குறியிடாத வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2002 அக்டோபர் 25]

2—

### இறவை பாசனத் திட்டம்

**வினா 5157—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், தொண்டியயங்காடு ஊராட்சி, தொண்டியயங்காடு பகுதியில் விளையும் நிலங்களுக்கு மறைக்கா கோரையாற்றின் தண்ணீரை இறவை பாசனம் மூலமாக பயன்படுத்துவதற்கு இறவை பாசனத் திட்டத்தை கொண்டு வர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் கீழ் தொண்டியயங்காடு விளை நிலங்களுக்கு (சுமார் 750 ஏக்கர்) முளங்காடு இறவை திட்டம் மூலமும், மேல் தொண்டியயங்காடு பகுதிக்கு (சுமார் 310 ஏக்கர்) கிளை தாங்கியார் ஆற்றில் அமைந்துள்ள இறவைத் திட்டத்தின் மூலமும் பாசனம் நடைபெற்று வருகிறது. இது தவிர மறைக்கா கோரையாற்றில் இருந்து இடும்பாவனம் ரெகுலேட்டர் மூலமும் தொண்டியயங்காடு விளை நிலங்களுக்கு நீர்ப் பாசனம் நடைபெற்று வருகிறது.

தற்போது மேலே குறிப்பிடப்பட்டுள்ள நீர் ஆதாரங்களே இந்த ஆயக்கட்டுகளின் பாசனத்திற்குப் போதுமானது. ஆகவே இந்த கிராமத்திற்கு மறைக்கா கோரையாற்றில் இருந்து புதிய இறவை பாசனத் திட்டம் அமைக்கத் தேவையில்லை.

3—

### டாப் ஸ்லிப்பில் விடுகள் பழுதுபார்ப்பு

**வினா 12953—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் அடங்கிய டாப் ஸ்லிப்பில் பொதுப் பணித் துறையால் கட்டப்பட்ட வீடுகளை உபயோகிக்க அரசு நடவடிக்கை எடுக்க முற்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) டாப் ஸ்லிப்பில் உள்ள பொதுப் பணித் துறையால் கட்டப்பட்ட வீடுகளுக்கு பழுதுகள் மேற்கொள்ள சிறப்பு மராமத்து மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளன. நிதி நிலைமைக்கு ஏற்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4—

## இட்டம்பட்டி கிராமம் தொகுதி மாற்றம்

**வினா 7361—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரிக்கு மிக அருகில் உள்ள அகசிப்பள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட இட்டம்பட்டி கிராமத்தை கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்கு மாற்ற அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டணம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அகசிப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட இட்டம்பட்டி கிராமத்தை கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை. மத்திய அரசால் நியமிக்கப்படவுள்ள தொகுதி எல்லை வரையறை ஆணையத்தால் (Delimitation Commission) மட்டுமே ஒரு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமத்தைப் பிரித்து இன்னொரு சட்டமன்றத் தொகுதியோடு சேர்ப்பது பற்றி முடிவெடுக்க முடியும்.





5—

## ஓய்வூதிய நிலுவைத் தொகை

**வினா 13148—திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996 முதல் 31–3–1998 வரை ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் ஓய்வூதிய நிலுவைத் தொகை 60 விழுக்காடு நிறுத்தி வைக்கப்பட்டும், மேலும் சில அலுவலர்களுக்கு 25 விழுக்காடு மொத்த தொகையில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள மேற்படி நிலுவைத் தொகையினை இந்த நடப்பாண்டிலேயே வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மீதமுள்ள 60 விழுக்காடு நிலுவைத் தொகையினை 2003–2004 நிதியாண்டில் வழங்க அரசு ஏற்கெனவே கொள்கை முடிவு எடுத்துள்ளது. தற்பொழுதுள்ள நிதி நிலையில் நடப்பு நிதியாண்டில் நிலுவைத் தொகையினை வழங்க இயலாது. மேலும் எந்த அரசு அலுவலர்களுக்கும் 25 விழுக்காடு மொத்தத் தொகையில் பிடித்தம் செய்யப்படவில்லை.

## நூலகத்திற்கு சொந்தக் கட்டடம்

**வினா 5387—திரு. பி. எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சி அரசு பொது நூலகம், சொந்தக் கட்டடத்தில் இயங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சி, வீரவநல்லூர் கிளை நூலகத்திற்கென வீரவநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த 0.01.48 ஹெக்டேர் நிலம் நூலகத் துறைக்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு அக்காலிமனையில் நூலகக் கட்டடம் கட்ட பொது நூலக இயக்குநர் அனுமதி அளித்துள்ளார்.

7—

## கிளை நூலகம், சொந்தக் கட்டடம்

**வினா 10546—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட புலியூர் கிராமத்திலுள்ள கிளை நூலகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதால், அரசு சொந்தக் கட்டடம் கட்டித்தர முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட புலியூர் கிராமத்திலுள்ள கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட காலிமனை கிடைக்கப்பெறாததால் அந்நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட இயலவில்லை.

8—

## நூலகம் அமைத்தல்

**வினா 12634—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பாவைக்குளம் கிராமத்திற்கு நூலகம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பாவைக்குளம் கிராமத்தின் தற்போதைய மக்கள் தொகை 5116 ஆகும். பாவைக்குளம் கிராமத்திற்கு 1/2 கி.மீ. தூரத்தில் காடாம்புலியூர் கிராமத்தில் ஊர்ப்புற நூலகம் செயல்படுகிறது. இருப்பினும், பாவைக்குளம் கிராம மக்கள் ஒரு பகுதி நேர நூலகம் திறப்பதற்கான கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றாததால் அக்கிராமத்தில் நூலகம் திறக்க இயலவில்லை.

(1) இந்நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ. 2000 மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

(5) தலா ரூ.1000 வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

9—

## அரசு கலைக் கல்லூரி

**வினா 12670—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொங்கலூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

அரசின் தற்போதைய நிதி நிலைமையின் காரணமாக, புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் தொடங்குவதில்லை என அரசு கொள்கை முடிவு

எடுத்துள்ளது. எனவே, பொங்கலூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்கும் வாய்ப்பு ஏதும் இல்லை.

10—

## பணியாளர் நியமனம்

**வினா 18368—திரு. டி. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, செந்தமிழ் கலைக் கல்லூரியில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர் பணியிடங்களில் நியமனம் செய்ய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

மதுரை செந்தமிழ் கலைக் கல்லூரியின் 2001–2002 ஆம் ஆண்டிற்கான அக்கல்லூரியின் பணிப் பளு அறிக்கையின்படி ஆசிரியர் பதவிக்கான காலிப் பணியிடம் ஏதும் இல்லாததால் அதனை நிரப்ப வேண்டிய நிலை எழவில்லை மற்றும் துப்புரவாளர் பணியிடம் நிரப்புவது தொடர்பான கருத்துரு ஏதும் அக்கல்லூரியிலிருந்து பெறப்படவில்லை. மேலும் அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு இம்மாதிரியான ஆசிரியரல்லாத பணியிடங்கள் நிரப்புவதற்கு அரசு தற்பொழுது தடை (Ban) விதித்துள்ளது.

11—

## காலிப் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா 1347—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறநிலையத் துறையில் காலியாக உள்ள உதவி ஆணையர் மற்றும் நிர்வாகப் பணியாளர் பணியிடங்கள் எத்தனை?

(ஆ) அதை நிரப்ப அரசிடம் கருத்துரு உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) அறநிலையத் துறையில் காலியாகவுள்ள பணியிடங்கள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| உதவி ஆணையர் | 10 |
| கண்காணிப்பாளர்/ஆய்வர் | 28 |
| உதவியாளர் | 88 |
| தட்டச்சர் | 29 |

(ஆ) உதவி ஆணையர் பதவிக்கு 1999–2000 மற்றும் 2000–2001 ஆம் ஆண்டுகளுக்கான காலியிட மதிப்பீடு நிர்ணயம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதனடிப்படையில் தற்போது 7 உதவி ஆணையர் காலி பணியிடங்களுக்குத் தேர்ந்த பெயர் பட்டியல் தயாரிக்க இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டு துறையின் பரிசீலனையில் இருந்து வருகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்து தேர்ந்த பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டு உதவி ஆணையர் பணியிடங்கள் நிரப்பப்படும். மீதமுள்ள 3 பணியிடங்கள் 2001–2002 பட்டியல் ஆண்டில் மேல்குறிப்பிட்ட நடைமுறையைப் பின்பற்றி நிரப்பப்படும்.

2001–2002 ஆம் ஆண்டுக்கான ஆய்வர்/கண்காணிப்பாளர் பதவிக்குத் தகுதியுடைய உதவியாளர் பட்டியல் அங்கீகரிக்கப்பட்டு, விருப்பம் உள்ள நபர்களுக்கு பதவி உயர்வும் பணி நியமனமும் வழங்கப்பட்டு பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

உதவியாளர் பதவிக்கான தகுதியுடைய நபர்கள் இல்லாத நிலையில், இப்பதவிகளை நிரப்ப இயலவில்லை. அடுத்த பட்டியல் ஆண்டில் தகுதி வாய்ந்த நபர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

தட்டச்சர் பணியிடங்கள் நிரப்ப 2000–2001 மற்றும் 2001–2002ஆம் ஆண்டிற்கான காலியிட தேவைப் பட்டியல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. தேர்வாணையத்திடமிருந்து ஒதுக்கீடு பெறப்பட்டதும் இப்பணியிடங்கள் நிரப்பப்படும்.

12—

## தெப்பக்குளம் சீர் செய்தல்

**வினா 7952—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் நகரிலுள்ள அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் ஆலய தெப்பக்குளம் எப்போது சீர் செய்யப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

விருத்தாசலம் அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில் தெப்ப உற்சவம் நடத்தப்படுகின்ற 'தெப்பக்குளம்' அரசு புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டு, நகராட்சியின் பொறுப்பிலும், பராமரிப்பிலும் உள்ளது. இத்தெப்ப உற்சவம், விருத்தாசலம் நகர் ரி.ச. எண் 108—ல் உள்ள 4 ஏக்கர் 19 சென்ட் நிலத்தில், 300' x 400' அளவில் அமைந்துள்ள தெப்பக் குளத்தில், நகராட்சி ஊழியர்களின் உபயத்தில் நடத்தப்பட்டு வருகிறது. குளத்தினை செப்பனிட்டு, படிகளை சரிசெய்து படகு குழாம் அமைப்பதற்காக உத்தேசிக்கப்பட்டு, நகராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இக்குளத்தினைச் சீர்படுத்த, விருத்தாசலம் நகராட்சி பொறியாளர் மூலம் ரூ.9,00,000/—க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியரிடம் நிதியுதவி கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு, விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆவன செய்யப்பட்டு வருகிறது. தெப்பக்குளம் நகராட்சிப் பொறுப்பிலும் பராமரிப்பிலும் உள்ளதால், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வழியாக, தெப்பக்குளத்தைச் சீரமைக்கவோ, நிதி உதவிகள் செய்யவோ வழிவகைகள் இல்லை.

13—

## அறங்காவலர் நியமித்தல்

**வினா 12353—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தமிழ்நாட்டில் அரசுக்குச் சொந்தமான திருக்கோயில்கள் அனைத்திற்கும் ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு உள்ளவர்களை அறங்காவலராக அரசு நியமிக்க ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 39/1996) சட்டப்பிரிவு 26—ன்கீழ், அறங்காவலராக நியமனம் செய்யவும், அறங்காவலராகப் பதவியில் இருக்கவும் சட்டப்படி "தக்கவை"/"தகவின்மைகள்" வரையறுக்கப் பட்டுள்ளன. ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு உள்ளவர்களும் தகுதி உடையவர்களாக இருப்பின், அறங்காவலர்களாக நியமிக்கப்படுவார்கள்.

14—

## கோயிலின் வருமானம்

**வினா 12487—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000—ம் ஆண்டு சென்னையிலுள்ள வடபழனி கோயிலில் உண்டியல் மூலம் எவ்வளவு வருமானம் கிடைத்துள்ளது?

(ஆ) அதில் கோயில் பராமரிப்புக்கு எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை, வடபழனி, அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் 2000—ஆம் ஆண்டில் (1—1—2000 முதல் 31—12—2000 முடிய) உண்டியல் மூலம் ரூ.49,07,747.65 (நாற்பத்து ஒன்பது இலட்சத்து ஏழாயிரத்து எழுநூற்று நாற்பத்து ஏழு மற்றும் அறுபத்தைந்து பைசா மட்டும்) வருமானம் வரப்பெற்றுள்ளது.

[2002 அக்டோபர் 25

(ஆ) இத்திருக்கோயிலின் பராமரிப்பு மற்றும் நிர்வாக செலவிற்காக 2000–ம் ஆண்டில் ரூ.1,62,46,361/— செலவிடப்பட்டுள்ளது.

15—

## கோயில்களில் ஒரு கால பூஜை

**வினா 15315—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஒன்றியம், அண்ணமங்கலம் ஊராட்சியிலுள்ள காளிகோயில், முருகன் கோயில், திரௌபதியம்மன் கோயில் ஆகிய மூன்று கோயில்களிலும் ஒரு கால பூஜை நடைபெற ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்தாண்டில் அரசு நடைமுறைப்படுத்துமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஒன்றியம், அண்ணமங்கலம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு காளி திருக்கோயில், அருள்மிகு முருகன் திருக்கோயில், அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோயில் ஆகியவை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டின்கீழ் இல்லாததால் இத்திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜைகளுக்கு நிதியுதவி வழங்க இயலாது.

16—

## நோயாளிகளின் விவரம்

**வினா 9983—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் சானடோரியம் நெஞ்சக நோய் மருத்துவமனையில் எத்தனை எய்ட்ஸ் நோயாளிகள் சிகிச்சைப் பெறுகிறார்கள்?



2002 அக்டோபர் 25]

(ஆ) அவர்களில் ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) தாம்பரம் சானடோரியம், அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில் மார்ச் 2001 முதல் பிப்ரவரி 2002 வரை 6621 எச்.ஐ.வி. (HIV) வெளிநோயாளிகள் மற்றும் 7347 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

(ஆ) இவர்களில் ஆண்கள், பெண்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**வெளிநோயாளிகள் விவரம்:**

| ஆண் | பெண் | குழந்தைகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 4280 | 2103 | 238 | 6621 |

**உள்நோயாளிகள் விவரம்:**

| ஆண் | பெண் | குழந்தைகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 5,335 | 1750 | 242 | 7347 |

வெளி நோயாளிகளில் 5,296 நபர்களும், உள்நோயாளிகளில் 5,878 நபர்களும், காசநோயால் (Co–infection of Tuberculosis) பாதிக்கப்பட்டு உள்ளனர்.

17—

## சுற்றுச் சுவர் கட்டுதல்

**வினா 13143—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோயில் தொகுதி, மூலனூரில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால், வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூரில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**18—**

**சுகாதார பயிற்சி**

**வினா 14350—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் பொது சுகாதார பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் பொது சுகாதார பயிற்சி அளிக்க தற்பொழுது திட்டம் ஏதும் இல்லை.

**19—**

**பான்பராக் தடை**

**வினா 17217—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் பான்பராக் விற்கும் கடைகள் இருப்பது அரசுக்குத் தெரியுமா?



(ஆ) ஆம் எனில், அவற்றைத் தடை செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மக்களின் பொது சுகாதாரத்தைப்பேணும் வகையில் தமிழ்நாட்டில் மெல்லுவதற்கான புகையிலை, புகையிலை உள்ளடக்கிய குட்கா, பான்மசாலா போன்றவற்றிற்கு 19–11–2001 முதல் 5 ஆண்டு காலத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ரூ.6 இலட்சம் மதிப்புள்ள 591 கிலோ பான்மசாலா குட்கா மற்றும் மெல்லும் புகையிலை சென்னை மாநகராட்சி பகுதியில் பிடிக்கப்பட்டுள்ளது. கையகப்படுத்தப்பட்ட 20 மாதிரிகளில் 2 மாதிரிகள் மீது வழக்குத்தொடர அனுமதி வழங்கப்பட்டது. மீதமுள்ள 18 மாதிரிகள் மீது வழக்குத்தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் சென்னை மத்திய இரயில் நிலையத்தில் ரூ.3 இலட்சம் மதிப்புள்ள 106 சாக்குமூட்டை குட்கா பிடிக்கப்பட்டுள்ளது.

**20—**

**கழிவுநீர் கால்வாய்**

**வினா 1173—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சி 11–வது வார்டு வடகாட்டுப்பட்டி பகுதிக்கு கழிவுநீர் கால்வாய் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி, நகராட்சியின் நிதிநிலைமை சரியில்லாத காரணத்தால் உசிலம்பட்டி வடகாட்டுப்பட்டி பகுதிக்கு கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்து தர இயலாது.

[2002 அக்டோபர் 25

21—

## கழிவுநீர் கால்வாய்

**வினா 1175—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சி 7—வது வார்டு போலீஸ் லைன் தெருவில் கழிவுநீர் கால்வாய் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** உசிலம்பட்டி நகராட்சியின் நிதிநிலைமை சரியில்லாத காரணத்தால் உசிலம்பட்டி 7—வது வார்டு போலீஸ் லைன் தெருவில் கழிவுநீர் கால்வாய் வசதி செய்து தர இயலாது.

22—

## தொடக்கப்பள்ளிக்குக் கட்டடம்

**வினா 3642—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், 57 குலமாணிக்கம் ஊராட்சி அன்னக்குடி தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், குலமாணிக்கம் ஊராட்சி அன்னக்குடி தொடக்கப்பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட தற்போது திட்டம் ஏதும் இல்லை. இப்பள்ளி அமைந்துள்ள இடத்தில் கூடுதல் கட்டடம் கட்ட போதிய இடவசதி இல்லை.

23—

## குடிநீர் குழாய் அமைத்தல்

**வினா 3773—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 அக்டோபர் 25]

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சி, சிம்ஸ் பார்க் அருகே சுற்றுலா பயணிகள் வசதிக்காக குடிநீர் குழாய் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சி, சிம்ஸ் பார்க் உட்புறத்தில் பொதுக்குழாய்கள் ஏற்கெனவே அமைக்கப் பட்டுள்ளன. பார்க்கின் வெளிப்புறத்தில் குடிநீர் குழாய் அமைத்தால், சாலையில் செல்லும் வாகனங்களைக் கழுவுவதற்கு பயன்படுத்தவும், சாலை சேதமுறவும் வாய்ப்பிருக்கிறது. சுற்றுலா பயணிகளுக்கு பயன்படாமல் அவர்களுக்கு இடையூறாக இருப்பதால், சிம்ஸ் பார்க் வெளிப்புறத்தில் பொதுக்குழாய் அமைக்கத் தேவை இல்லை.

24—

## குடிநீர் குழாய் இணைப்பு

**வினா 4156—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிக்கு உட்பட்ட வெள்ளாண்டிவலசு சிவகாமி நகர் பகுதியில் புதிதாக குழாய் இணைப்பு அமைத்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட வெள்ளாண்டிவலசு சிவகாமி நகர்ப்பகுதியில் உள்ள 40 குடும்பங்களுக்கு ஒரு பொதுக்குழாய் அமைக்கப்பட்டு அப்பகுதி மக்களுக்கு குடிநீர் சீரான முறையில் வழங்கப்பட்டு வருகிறது.

25—

## கூடுதல் கட்டடம்

**வினா 5078—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி நகராட்சியைச் சேர்ந்த சீரங்குப்பத்தில் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சியைச் சேர்ந்த சீரங்குப்பத்தில் உள்ள பள்ளிக்கூடத்தில் கூடுதல் கட்டடம் கட்டித்தருவது பற்றி பள்ளிக் குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும். சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தால் இப்பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டித் தர ஆவன செய்யப்படும்.

26—

## மின்விளக்கு வசதி

**வினா 5405—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்து கொங்குரார்குட்டை பகுதியில் மின்விளக்கு வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்தில் போதிய நிதி வசதியில்லாத காரணத்தால் கொங்குரார் குட்டை பகுதியில் மின்விளக்கு வசதி செய்துதர தற்போது வாய்ப்பில்லை.





27—

## தெருவிளக்கு அமைத்தல்

**வினா 6442—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம் தெற்கு மடத்தூர் ஊராட்சி, சக்தி நகர் மற்றும் அம்மன்கோயில் தெருவில் தெருவிளக்கு அமைக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி, கடையம் ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சி, சக்தி நகர் மற்றும் அம்மன்கோயில் புதிதாக உருவாகி வருகின்றன. ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் புதிய தெருவிளக்குகள் உடனடியாக அமைக்க தற்போது இயலவில்லை.

28—

## தெரு விளக்கு

**வினா 6813—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன் மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம் தெற்கு மடத்தூர் ஊராட்சி, இராமலிங்கபுரம்–கீழ்த்தெரு கோதண்டராமபுரம் வடக்குத் தெரு மற்றும் முப்புலியூர் தெற்குத் தெருவிலும் தெரு விளக்கு அமைக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி, கடையம் ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சி, இராமலிங்கபுரம் கீழ்த்தெருவில் 1 சோடியம் விளக்கு, 4 குழல் விளக்குகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டு நல்ல முறையில் எரிந்து வருகின்றன. இராமலிங்கபுரம்–கீழ்த்தெரு கோதண்டராமபுரம் வடக்குத் தெரு மற்றும் முப்புலியூர் தெற்குத் தெரு ஆகிய இடங்களில் தற்போது ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் கூடுதல் தெரு விளக்குகள் அமைப்பதற்கு தற்போது சாத்தியம் இல்லை.

**29—**

## தெரு விளக்கு அமைத்தல்

**வினா 6815—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம் தெற்கு மடத்தூர் ஊராட்சி மெயின்ரோடு, அருந்ததியர் காலனி ஆகிய பகுதிகளில் தெரு விளக்கு அமைக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி, கடையம் ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சி மெயின்ரோடு, அருந்ததியர் காலனி ஆகிய பகுதிகளில் ஒரு சோடியம் விளக்கும், மூன்று குழல் விளக்குகளும் ஏற்கெனவே அமைக்கப்பட்டு நல்ல முறையில் எரிந்து வருகிறது. தற்போது ஊராட்சியில் நிதி வசதி இல்லாத காரணத்தால் கூடுதலாக தெரு விளக்குகள் அமைக்க சாத்தியமில்லை.

**30—**

## தொலைக்காட்சிப் பெட்டி அமைத்தல்

**வினா 10964—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், கடலக்குடி ஊராட்சி காலனி தெருவிற்கு தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துத்தர திட்டம் உள்ளதா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், கடலக்குடி ஊராட்சி காலனி தெருவிற்கு தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துத்தர அரசிடம் திட்டம் தற்போது ஏதுமில்லை.

**31—**

## தொலைக்காட்சிப் பெட்டி

**வினா 10966—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், அதம்பார் ஊராட்சியில் பல்லவநத்தம் கிராமத்தில் தொலைக்காட்சிப் பெட்டி அரசு நிதியில் வாங்கித்தர திட்டம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், அதம்பார் ஊராட்சியில் பல்லவநத்தம் கிராமத்தில் 2000–2001–ம் ஆண்டில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் வண்ண தொலைக்காட்சிப் பெட்டி வாங்கப்பட்டுள்ளது.

**32—**

## தெருவிளக்கு அமைத்தல்

**வினா 11135—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாலஜங்கமனஅள்ளி ஊராட்சி, கூன்மாரி கொட்டாய் கிராமத்தில் போதுமான தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாலஜங்கமனஅள்ளி, ஊராட்சியில் போதிய நிதி வசதியில்லை. எனவே, கூன்மாரி கொட்டாய் கிராமத்தில் தெருவிளக்குகள் அமைக்க, தற்போது வாய்ப்பில்லை.

33—

## தெருவிளக்கு வசதி

**வினா 11153—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மளிஞ்சரஅள்ளி ஊராட்சி கொல்லப்பள்ளம் காட்டுக்கொட்டாயில் தெருவிளக்கு வசதி செய்துதர ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மளிஞ்சரஅள்ளி ஊராட்சியில் நிதி வசதியில்லை. எனவே, கொல்லப்பள்ளம் காட்டுக்கொட்டாயில் தற்போது தெருவிளக்கு வசதி செய்து தருவதற்கான வாய்ப்புகள் இல்லை.

34—

## தெருவிளக்கு அமைத்தல்

**வினா 11187—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் தொகுதி, சின்னம்பள்ளி பாலத்து கொட்டாய்க்கு நடப்பாண்டில் தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** பெண்ணாகரம் தொகுதி சின்னம்பள்ளி ஊராட்சியில் போதிய நிதி வசதியில்லை. எனவே, பாலத்துகொட்டாய்க்கு தெருவிளக்கு அமைக்க தற்போது சாத்தியமில்லை.



35—

## கைப் பம்பு அமைத்தல்

**வினா 11210—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஆர்.ஆர். அள்ளி ஊராட்சி, ஆர்.ஆர். அள்ளிக்காட்டு கொட்டாய்க்கு கைப்பம்பு (போர்வெல்) ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஆர்.ஆர். அள்ளி ஊராட்சியில் போதிய நிதி வசதியில்லை. எனவே, ஆர்.ஆர். அள்ளிக்காட்டு கொட்டாய்க்கு கைப்பம்பு அமைக்க தற்போது இயலாது.

36—

## தெருவிளக்கு அமைத்தல்

**வினா 11212—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி மடம் ஒகேனக்கல் சாலையில் தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், சோமேனஅள்ளி ஊராட்சியில் போதிய நிதி வசதியில்லை. எனவே, கூத்தப்பாடி ஊராட்சியிடம் ஒகேனக்கல் சாலையில் தெருவிளக்கு அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

[2002 அக்டோபர் 25

37—

### கூடுதலாக தெருவிளக்கு

**வினா 11218—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி பங்குநத்தம் ஊராட்சி இராஜகொல்ல அள்ளியில் கூடுதலாக தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பங்குநத்தம் ஊராட்சியில் போதுமான நிதிவசதியில்லாத காரணத்தால் இராஜகொல்ல அள்ளியில் கூடுதலாக தெருவிளக்கு அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

38—

### குடிநீர் வசதி

**வினா 12691—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெகுநாதபுரம் கிராம மக்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெகுநாதபுரம் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஒரு இந்தியா மார்க்–2, கைப்பம்பும் அமைக்கப் பட்டுள்ளது. மேலும் தனியார் வீடுகளுக்கு தண்ணீர் இணைப்பும்



2002 அக்டோபர் 25]

வழங்கப்பட்டுள்ளது. குடிநீர் தட்டுப்பாடு ஏதுமில்லை. இதைத்தவிர கூடுதலாக குடிநீர் வசதி செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

39—

### மின் வசதி

**வினா 13791—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டயனஅள்ளி ஊராட்சியில் காட்டாகரத்தான் கொட்டாய்க்கு மின் வசதி இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டயனஅள்ளி ஊராட்சியில் தற்போது போதிய நிதி வசதி இல்லை. எனவே, காட்டாகரத்தான் கொட்டாய்க்கு தற்போது மின்வசதி செய்து தர சாத்தியமில்லை.

40—

### தெருவிளக்கு வசதி

**வினா 13792—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டயனஅள்ளி ஊராட்சியில் வடிவேலு கொட்டாய்க்கு தெருவிளக்கு அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டயனஅள்ளி ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, வடிவேலு கொட்டாய்க்கு தெருவிளக்கு அமைக்க தற்போது சாத்தியமில்லை.

41—

## தெருவிளக்கு

**வினா 13793—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டயனஅள்ளி ஊராட்சியில் பழனிமுத்து கொட்டாய்க்கு தெருவிளக்கு, அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு தெருவிளக்கு அமைக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டயனஅள்ளி ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, பழனிமுத்து கொட்டாய்க்கு தெருவிளக்கு அமைக்க தற்போது சாத்தியமில்லை.

42—

## தெருவிளக்கு அமைத்தல்

**வினா 13855—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி பட்டக்காரன் கொட்டாய் கவுண்டர் தெருவிற்கு தெருவிளக்கு அமைக்க ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சியில் போதிய நிதி வசதியில்லை எனவே, பட்டக்காரன் கொட்டாய் கவுண்டர் தெருவிற்கு தற்போது தெருவிளக்கு அமைக்க சாத்தியமில்லை.



43—

## தெருவிளக்கு அமைத்தல்

**வினா 13857—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, உடையான்காடு பகுதிக்கு தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே உடையான்காடு பகுதிக்கு தற்போது தெருவிளக்கு அமைக்க சாத்தியமில்லை.

44—

## தெருவிளக்கு அமைத்தல்

**வினா 13869—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அரகாசனஅள்ளி ஊராட்சி, பாலிக்காடு கிராமத்திற்கு தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அரகாசனஅள்ளி ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, பாலிக்காடு கிராமத்திற்கு தெருவிளக்கு அமைக்க தற்போது சாத்தியமில்லை.

**45—**

### புதிய கட்டடம்

**வினா 3804—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கோ. அப்பியன்பேட்டை கிராமத்தில் உள்ள கூட்டுறவு அங்காடிக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, சத்திரம் அங்காடியைச் சேர்ந்த கோ.அப்பியன்பேட்டையில் 15–6–1998 முதல் ஒரு பகுதிநேர அங்காடி செயல்பட்டு வருகிறது பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்கும் பொழுது கடைக்கு வேண்டிய கட்டட வசதியை ஊர் பொதுமக்களே செய்து தரவேண்டும் என்ற வரையறையுடன்தான் அமைக்கப்படுகிறது. மேலும் பகுதிநேர அங்காடிக்கு கட்டடம் கட்டித்தர அரசுத் திட்டங்களில் வழிவகையில்லாததால் கோ. அப்பியன்பேட்டையில் உள்ள பகுதிநேர அங்காடிக்கு அரசு கட்டடம் கட்டித்தர வாய்ப்பில்லை.

**46—**

### சொந்தக் கட்டடம்

**வினா 6917—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி திருப்புறம்பியம் ஊராட்சி குடிதாங்கியில் இயங்கிவரும் கிராம கூட்டுறவு அங்காடிக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

பாபநாசம் தொகுதி, திருப்புறம்பியம் ஊராட்சி, குடிதாங்கி பொது விநியோகத் திட்ட அங்காடிக்கு முன்னுரிமை அளித்து சொந்தக் கட்டடம் கட்டித் தரக் கோரி தஞ்சாவூர் பொது விநியோகத் திட்டத் துணைப் பதிவாளரால் தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலருக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**47—**

### நியாய விலைக் கிளைக் கடை

**வினா 9400—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் க. புதூர் ஊராட்சி சொக்கலிங்கபுரம் கிராமத்தில் நியாயவிலைக் கிளைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் சொக்கலிங்கபுரம் பகுதி 455 குடும்ப அட்டைகளைக் கொண்டுள்ள புலிமான்குளம் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இவ்வங்காடியின் கீழ் ஏற்கெனவே இரண்டு பகுதிநேரக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. சொக்கலிங்கபுரம் பகுதி தாய்க்கடையிலிருந்து 1½ கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. அமையவிருக்கும் பகுதிநேரக் கடை தாய் கடையிலிருந்து குறைந்தது 2 கிலோமீட்டர் தொலைவில் இருக்க வேண்டும் மற்றும் பகுதிநேரக் கடை அமைத்தபின் தாய்க்கடையில் குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற வரையறைகள் பொருந்தாததால் சொக்கலிங்கபுரத்தில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

[2002 அக்டோபர் 25

48—

## புதிய கட்டடம்

**வினா எண் 9402—திரு. மு. அப்பாவு;** மாண்புமிகு அமைச்சர் கூட்டுறவு உணவு நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், க.உவரி ஊராட்சி காளிகோயில் கிராமத்தில் உள்ள நியாயவிலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், புளியன்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் மண்டல நியாயவிலைக் கடை அரசுத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கடையின் கீழ் காளிகோயில் பகுதிநேர நியாயவிலைக் கடை இலவசக் கட்டடத்தில் செயல்படுகிறது. பகுதி நேர அங்காடி அமைவதற்கு வாடகை இல்லாமல் இலவசமாக கட்டட வசதி செய்து தரப்படவேண்டும் என்ற வரையறைக்குட்பட்டுத்தான் பகுதிநேரக் கடைக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. எனவே இராதாபுரம் வட்டம், க.உவரி ஊராட்சி காளிகோயில் பகுதியில் உள்ள பகுதி நேர கடைக்கு அரசு திட்டத்தின் கீழ் கட்டடம் கட்டிக்கொடுக்க வழிவகை இல்லை.

49—

## நியாய விலை கிளைக் கடை

**வினா 11083—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு உணவு நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், அணைக்கரை ஊராட்சி—ரம்மதபுரம், உறுமன்குளம் ஊராட்சி ரம்மதபுரம் (நடுவூர்) கிராமங்களை இணைத்து நியாயவிலைக் கிளைக் கடை திறந்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**



2002 அக்டோபர் 25]

திருநெல்வேலி மாவட்டம், அணைக்கரை ஊராட்சி ரம்மதபுரம், மற்றும் உறுமன்குளம் ஊராட்சி ரம்மதபுரம் (நடுவூர்) ஆகிய இரு பகுதிகளின் மக்களிடையே பல ஆண்டுகளாக கருத்து வேறுபாடு இருப்பதால் இவ்விரு பகுதிகளையும் இணைத்து ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

50—

## சொந்தக் கட்டடம்

**வினா 11088—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் நியாயவிலைக் கடைகளை அரசு கட்டடத்தில் இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 532 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 18 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் வாடகை கட்டடங்களில் இயங்குகின்றன. பகுதிநேரக் கடைகளுக்கு அரசு கட்டடம் கட்டித்தர இயலாது. அனைத்து முழுநேர நியாயவிலைக் கடைகளுக்கும் ஒரே நேரத்தில் கட்டடங்கள் கட்ட இயலாது என்பதால் பல்வேறு திட்டங்களின் கீழ் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடுக்கு ஏற்ப திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் படிப்படியாக கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

51—

## பகுதிநேர நியாய விலைக்கடை

**வினா 11134—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இண்டூர் ஊராட்சி, இ.கே.புதூர் கிராமத்திற்கு புதிய பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி, இண்டூர் ஊராட்சியைச் சேர்ந்த இ.கே. புதூர் கிராமத்தில் 74 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், இண்டூரில் இயங்கிவரும் நியாயவிலைக் கடைக்கும், இ.கே.புதூர் கிராமத்திற்குமிடையே 1.2 கி.மீ. தூரமே உள்ளதாலும், இ.கே. புதூர் கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.*

**52—**

## பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா 11169—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், சின்னபங்கு நத்தம் ஊராட்சி, இராஜ கொல்ல அள்ளி நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து சின்னபங்குநத்தம் கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*பங்குநத்தம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள இராஜகொல்ல அள்ளி நியாயவிலைக் கடையில் 752 குடும்ப அட்டைகள் உள்ளன. இராஜகொல்ல அள்ளியிலிருந்து*





*சின்னபங்குநத்தம் விடை 1¾ கி.மீ. தொலைவில் உள்ளது. மேலும் சின்னபங்குநத்தம் கிராமத்தில் 70 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. தொலைவு மற்றும் குடும்ப அட்டைகள் எண்ணிக்கை தொடர்பாக அரசு வகுத்துள்ள வரையறைகள் பொருந்தாததால் சின்னபங்குநத்தம் பகுதியில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*

**53—**

## பகுதி நேர நியாயவிலைக் கடை

**வினா 11190—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டயன அள்ளி ஊராட்சி போடம்பட்டிக்கு புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டயன அள்ளி நியாய விலைக் கடை 450 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இத்தாய்கடைக்கு 365 குடும்ப அட்டைகளுடன் பழைய ஊர் என்ற இடத்தில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையும் செயல்பட்டு வருகிறது. தாய்க்கடையைச் சேர்ந்த போடம்பட்டியில் 75 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதி நேரக் கடை அமைத்தபின் தாய் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்கு குறையாமலும் பகுதி நேரக் கடையில் 200-க்கு குறையாத குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டுமென்று அரசு வகுத்த வரையறைகள் பொருந்தாததால் போடம்பட்டி பகுதிக்கு புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*

54—

## அரிசி கடத்தல் வழக்குகள்

**வினா 11368—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 2000–2001 ஆம் ஆண்டில் வெளிமாநிலங்களுக்கு கடத்தப்படும் நுகர்பொருள் வழங்கல் அரிசியை பிடித்து புலனாய்வுத் துறை எத்தனை வழக்குகள் தொடுத்து உள்ளது?

(ஆ) அந்த வழக்குகளின் மீது தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

| | வருடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| (அ) கடந்த 2000—2001 ஆம் ஆண்டில் வெளி மாநிலங்களுக்கு கடத்தப்படும் நுகர்பொருள் வழங்கல் அரிசியை பிடித்து புலனாய்வுத் துறை பதிவு செய்த வழக்குகள் | 2000 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்/மாவட்ட வருவாய் அலுவலர்களிடம் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 1889 |
| | நீதிமன்றங்களில் பதிவு செய்த வழக்குகள் | 201 |
| | 2001 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்/மாவட்ட வருவாய் அலுவலர்களிடம் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 4547 |
| | நீதிமன்றங்களில் பதிவு செய்த வழக்குகள் | 125 |



| | | |
|---|---|---|
| (ஆ) அந்த வழக்குகள் மீது தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2000 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்/மாவட்ட வருவாய் அலுவலர்களிடம் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டவை | 1849 |
| | நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டவை | 43 |
| | 2001 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்/மாவட்ட வருவாய் அலுவலர்களிடம் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டவை | 3610 |
| | நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டவை | 36 |

55—

## குடிமைப்பொருள் குற்ற வழக்குகள்

**வினா 11369—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கடந்த 2000–2001 ஆம் ஆண்டில் நுகர்பொருள் வழங்கல் புலனாய்வுத் துறை எத்தனை வழக்குகள் தொடுத்து உள்ளது?

(ஆ) அதில் முடிந்த வழக்குகள் எத்தனை?

(இ) அதில் வழங்கப்பட்ட தண்டனை விவரம் என்ன என்பதை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் கடந்த 2000 ஆம் ஆண்டு 184 வழக்குகளும் 2001–ம் ஆண்டு 261 வழக்குகளும் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை தொடுத்துள்ளது.

(ஆ) அதில் 2000–ம் ஆண்டு தொடுத்த வழக்கு[illegible] 76 வழக்குகளும் 2001 ஆம் ஆண்டு தொடுத்த வழக்குக[illegible] 241 வழக்குகளும் முடிக்கப்பட்டுள்ளன.

22/5/1700
Chennai-600 009

(இ) குற்ற வழக்குகளில் கைப்பற்றப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் அரசுக்கு ஆதாயமாக்கிய வகையில் பெறப்பட்ட ரொக்கத்தின் மதிப்பு 2000 ஆம் ஆண்டு ரூ.4,85,552–ம் 2001 ஆம் ஆண்டு ரூ.3,23,225–ம் ஆகும். இதுவே மேற்படி வழக்குகளில் அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகையாகும்.

**56—**

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா 13662—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி கொழமடை நியாய விலைக்கடைக்கு நடப்பு நிதியாண்டில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு உடனடி ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், சேரன் மகாதேவி தொகுதி, சேரன் மகாதேவி கூட்டுறவுப் பண்டகசாலை நடத்தும் கொழமடை நியாய விலைக்கடை மேலச்சேவல் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. நியாய விலைக்கடைகளுக்கு அரசு நேரடியாக கட்டடங்கள் கட்டியளிக்கும் திட்டம் ஏதுமில்லை. ஆனால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் வேலைவாய்ப்புத் திட்டத்தின்படி ஊராட்சி பகுதியிலுள்ள நியாய விலைக் கடைகளுக்கு மட்டுமே கட்டடங்கள் கட்டித் தரப்படுகின்றன. கொழமடை நியாய விலைக்கடை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் செயல்படுவதால் மேற்சொல்லப்பட்ட திட்டத்தின்படி, கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.



**57—**

## சொந்தக் கட்டடம்

**வினா 13667—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி கல்லிடைக்குறிச்சி 6 நியாயவிலைக் கடைக்கு நடப்பாண்டில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு உடனடி ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக் குறிச்சி–6 நியாய விலைக் கடை லட்சுமிபதி கூட்டுறவு பண்டகசாலையால் நடத்தப்பட்டு வருகிறது. இக்கடை கல்லிடைக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. நியாய விலைக்கடைகளுக்கு அரசு நேரடியாக கட்டடங்கள் கட்டியளிக்கும் திட்டம் ஏதுமில்லை. ஆனால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் வேலைவாய்ப்புத் திட்டத்தின்படி ஊராட்சிப் பகுதிகளில் உள்ள நியாய விலைக்கடைகளுக்கு மட்டுமே கட்டடங்கள் கட்டித்தரப்படுகின்றன. கல்லிடைக் குறிச்சி–6 நியாய விலைக்கடை பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் செயல்படுவதால் மேற்சொல்லப்பட்ட திட்டத்தின்படி கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

**58—**

## சொந்த கட்டடம்

**வினா 13679—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி சேரன்மகாதேவி 1 மற்றும் 3 ஆகிய நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் நடப்பு நிதியாண்டில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு உடனடி ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி கூட்டுறவு பண்டகசாலை நடக்கும் சேரன்மகாதேவி 123 ஆகிய நியாய விலைக் கடை சேரன்மகாதேவி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வாடகைக் கட்டடங்களில் செயல்படுத்தப்படுகின்றன. நியாய விலைக்கடைகளுக்கு கூட்டுறவுத் துறை மூலம் நேரடியாக கட்டடங்கள் கட்டி அளிக்கும் திட்டம் எதும் இல்லை. தற்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் வேலை வாய்ப்புத் திட்டத்தின்படி ஊராட்சிப் பகுதியில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு மட்டுமே கட்டடம் கட்டித்தரப்படுகின்றது. சேரன்மகாதேவி 123 ஆகிய நியாய விலைக் கடைகள் பேரூராட்சிப் பகுதியில் இருப்பதால் மேற்சொல்லப்பட்ட திட்டத்தின் கீழ் நியாய விலைக்கடை கட்டடங்கள் கட்டித்தர வாய்ப்பில்லை. இருப்பினும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்படி மேற்காணும் நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**59—**

## நியாய விலைக்கடைக்குக் கட்டடம்

**வினா 13682—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சிக் கல்லிடைக்குறிச்சி 1 நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிச்சி கூட்டுறவு பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் உள்ள கல்லிடைக்குறிச்சி நியாய விலைக் கடை பேரூராட்சிப் பகுதியில் செயல்பட்டு வருகிறது. நியாய விலைக் கடைகளுக்கு அரசு நேரடியாக கட்டடங்கள் கட்டித் தருவதில்லை. ஆனால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம், அரசு நிதியுதவி பெறும் வேலைவாய்ப்புத் திட்டங்களில் ஊரகப் பகுதியில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு மட்டுமே கட்டடங்கள் கட்டித்தரப்படுகின்றன. கல்லிடைக்குறிச்சி நியாய விலைக் கடை பேரூராட்சிப் பகுதியில் உள்ளதால் மேற்சொல்லப்பட்ட திட்டங்களின் கீழ் கட்டடம் கட்டித்தர வாய்ப்பில்லை. இருப்பினும் இக்கடைக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டடம் கட்டித் தருவது பற்றி ஆய்வு செய்யப்படும்.

**60—**

## சொந்தக் கட்டடம்

**வினா 13683—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி, பத்தமடை 1 மற்றும் 2 ஆகிய நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் அவற்றிற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு உடனடி ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அம்பாசமுத்திரம் கூட்டுறவு விற்பனைச் சங்கம் நடத்தும் பத்தமடை 1 மற்றும் 2 ஆகிய நியாய விலைக் கடைகள்

[2002 அக்டோபர் 25

பத்துமடை பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. நியாய விலைக் கடைகளுக்கு கூட்டுறவுத் துறை மூலம் நேரடியாக கட்டடம் கட்டித் தரப்படுவதில்லை. நியாய விலைக்கடைகளுக்கு அரசின் பல்வேறு திட்டங்களின் மூலம் ஊரக வளர்ச்சித் துறையால் கட்டடங்கள் கட்டித்தரப்படுகின்றன. மேலே உள்ள இரு நியாயவிலைக் கடைகளும் பேரூராட்சிப் பகுதியில் செயல்படுவதால் ஊரக நிதியுதவித் திட்டங்களின் கீழ் இக்கடைகளுக்கு கட்டடம் கட்டித்தர வழிவகை இல்லை. ஆயினும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**61—**

### முழுநேர நியாய விலைக் கடை

**வினா 13729—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சியில் கே. புதூர் பகுதி நேர நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்றிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, சின்னப்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் கெண்டயன அள்ளி பழையூரில் உள்ள தாய்க்கடையைச் சேர்ந்த கெண்டயனஅள்ளி புதூர் 363 குடும்ப அட்டைகள் கொண்ட பகுதி நேரக் கடையாக செயல்பட்டு வருகிறது. நடைமுறையிலுள்ள அரசாணை வரையறைகளின்படி 500 குடும்ப அட்டைகள் இருந்தால் மட்டுமே முழு நேரக் கடையாக மாற்ற இயலும். எனவே கெண்டையன அள்ளி புதூர் பகுதி நேரக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற வாய்ப்பில்லை.



2002 அக்டோபர் 25]

**62—**

### நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா 13865—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜன அள்ளி ஊராட்சி, பெரிய வத்தலாபுரத்திற்கு நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜன அள்ளி ஊராட்சியில் மூங்கில் மடுவு நியாய விலைக் கடை 438 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகிறது. இக்கடையினை தாய்க்கடையாகக் கொண்டு அஜ்ஜன அள்ளியில் ஒரு பகுதிநேரக் கடை 389 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகிறது. அஜ்ஜன அள்ளி பகுதி நேரக் கடைக்கும் பெரிய வத்தலாபுரத்திற்கும் இடையே 1 கி.மீ. தொலைவு உள்ளது. பெரிய வத்தலாபுரத்தில் உள்ள 195 குடும்ப அட்டைதாரர்கள் தற்போது அஜ்ஜனஅள்ளி பகுதி நேரக் கடையில் பொருட்கள் பெற்று வருகின்றனர். தொலைவு மற்றும் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை தொடர்பாக அரசு வகுத்த வரையறைகள் பொருந்தாததால் பெரிய வத்தலாபுரத்தில் பகுதிநேரக் கடை திறக்க வாய்ப்பில்லை.

**63—**

### பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா 13866—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, பண்ணவாடியான்காடு என்ற ஊருக்கு புதிய பகுதி நேர நியாய விலைக் கடை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

[2002 அக்டோபர் 25

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, நாகமரை நியாயவிலைக் கடையில் 797 குடும்ப அட்டைகள் உள்ளன. இதிலிருந்து 278 குடும்ப அட்டைகளைப் பிரித்து ஒட்டனூரில் ஒரு பகுதி நேரக்கடை செயல்பட்டு வருகிறது பண்ணவாடியான்காடு பகுதியில் 117 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. அரசு வகுத்த வரையறைகளின்படி பகுதி நேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இல்லாததாலும், பகுதிநேரக் கடை அமைத்தபின் தாய்க்கடையில் 500 குடும்ப அட்டைகள் இல்லாததாலும் பண்ணவாடியான்காடு பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

64—

## நியாய விலைக் கடை தொடங்குதல்

**வினா 13868—திரு ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நலப்பரம்பட்டிக்கு பகுதி நேர நியாய விலைக்கடை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ரங்காபுரம் நியாயவிலைக் கடை 640 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகிறது. இத்தாய்கடைக்கு ஏற்கெனவே பணிஞ்சர அள்ளி பகுதி நேர நியாய விலைக் கடை ஒன்று 375 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. தாய்க்கடை மற்றும் பகுதி நேரக் கடை ஆகிய இரண்டு கடைகளிலிருந்தும் நலப்பரம்பட்டி 1½ கி.மீ. தொலைவில் உள்ளது. நலப்பரம்பட்டி மக்கள் தற்போது பணிஞ்சர அள்ளி பகுதி நேர நியாய விலைக் கடையில் பொருட்கள் பெற்று வருகின்றனர். தொலைவு மற்றும் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை தொடர்பான அரசின் வரையறைகள் பொருந்தாததால் நலப்பரம்பட்டியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.



2002 அக்டோபர் 25]

65—

## சொந்தக் கட்டடம்

**வினா 14187—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், தண்ணீர் தாசனூரில் உள்ள நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் இந்த ஆண்டில் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், தண்ணீர் தாகனூரில் உள்ள நியாய விலைக்கடை தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக்கடைக்கு நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கூட்டுறவுத் துறையிடம் தொகை எதுவும் பெறாது கட்டடம் கட்டித் தருமாறு சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் அவர்களுக்கு சேலம் மண்டல கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

66—

## நியாயவிலைக் கிளைக்கடை

**வினா 15349—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், ஆவரைக்குளம் ஊராட்சி பிள்ளையார் குடியிருப்பு கிராமத்தில் நியாயவிலைக் கிளைக்கடை அமைக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 1-10-2001—ன் நாளிட்ட ஆணைப்படி பிள்ளையார் குடியிருப்பில் சிவசுப்பிரமணியம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடையின் இரண்டாவது பகுதி நேரக் கடை திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

67—

## தனி அதிகாரிகள் சம்பளம்

**வினா 15411—திரு. சோ. இராஜேந்திரன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு சங்கங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள தனி அதிகாரிகளுக்கு அரசே சம்பளம் வழங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

68—

## ரேஷன் கடை தொடங்கும் திட்டம்

**வினா 15426—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி சிறுகுன்றா பகுதியில் ரேஷன் கடை தொடங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் சிந்தாமணி நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலையின் கட்டுப்பாட்டில் ஒரு நியாயவிலைக் கடை 591 குடும்ப அட்டைகளுடன் சிறுகுன்றா கீழ்ப்பகுதியில் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் இணைக்கப்பட்டுள்ள சிறுகுன்றா மேல் பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு வண்டி மூலம் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டு வழங்கப்படுகின்றன. மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் சிறுகுன்றா மேல்பகுதியில் பகுதிநேரக் கடை திறக்க வாய்ப்பில்லை.

69—

## நியாய விலைக் கிளைக் கடை அமைத்தல்

**வினா 15448—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர் குளம் ஊராட்சி நக்கனேரி கிராமத்தில் நியாய விலைக் கிளைக் கடை அமைத்துக் கொடுத்திட அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால் கூட்டுறவு உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர் குளம் ஊராட்சி நக்கனேரி பகுதியில் பகுதிநேரக் கடை அமைப்பதில் புல்வமங்கலம் மற்றும் நக்கனேரி பகுதி மக்களிடையே கருத்து வேறுபாடு வந்து சிக்கல் ஏற்பட்டதைக் கருத்தில் கொண்டு நக்கனேரி பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க தற்போது ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை.

[2002 அக்டோபர் 25

70—

## நியாய விலைக் கிளைக் கடை

**வினா 15488—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி பெத்தரெங்கபுரம் கிராமத்தில் நியாய விலைக் கிளைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், சிவசுப்பிரமணியபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நடத்தும் தனக்கர்குளம் நியாய விலைக் கடையில் 579 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. தாய்க் கடையிலிருந்து 1 1/2 கி.மீ. தொலைவில் உள்ள பெத்தரெங்கபுரம் பகுதியைச் சேர்ந்த 184 குடும்ப அட்டைதாரர்கள் தனக்கர் குளம் நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். அரசு வகுத்த வரையறைகளின்படி 800 குடும்ப அட்டைகள் உள்ள நியாய விலைக் கடைகள் மட்டுமே பகுதிநேரக் கடை பிரித்து அமைக்க ஆய்வு செய்யப்படும். இந்த நியாய விலைக் கடையில் 800 குடும்ப அட்டைகள் இல்லாததால் பெத்தரெங்கபுரம் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

71—

## நியாய விலைக் கிளைக் கடை

**வினா 15501—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, பெத்தரெங்கபுரம் கிராமத்தில் நியாய விலை கிளைக் கடை அமைக்க அரசு முன்வருமா?



2002 அக்டோபர் 25]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால் கூட்டுறவு உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி பெத்தரெங்கபுரம் கிராமத்தில் 184 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், தனக்கர்குளம் தாய்க்கடைக்கும், பெத்தரெங்கபுரம் கிராமத்திற்கும் இடையே 1.5. கிலோ மீட்டர் தூரமே உள்ளதாலும், அரசு நிர்ணயித்துள்ள 2 கிலோ மீட்டர் தூரம் மற்றும் 200 குடும்ப அட்டைகள் என்ற நிபந்தனைகள் பூர்த்தியடையாததால், பெத்தரெங்கபுரம் கிராமத்திற்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

72—

## பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா 15675—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, பேரம்பாக்கம் கிராம காலனி மக்களின் நலனைக் கருதி பகுதி நேர நியாய விலைக் கடை ஒன்று அக்கிராமத்தில் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால் கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, பேரம்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் பேரம்பாக்கம் கடை எண் 1—ல் 706 குடும்ப அட்டைகளோடு செயல்பட்டு வருகிறது. இக்கடையிலிருந்து பேரம்பாக்கம் ஆதிதிராவிடர் குடியிருப்பு 1½ கி.மீ. தொலைவில் உள்ளது. தாய்க் கடையிலிருந்து பகுதிநேரக் கடை கோரும் குடியிருப்புப் பகுதி 2 கிமீட்டருக்கு குறையாமல் இருக்க வேண்டும் என்ற வரையறை பொருந்தாததால் பேரம்பாக்கம் ஆதிதிராவிடர் பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

[2002 அக்டோபர் 25

73—

## பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா 15676—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி வட்டம், அடிக்கல்பட்டு கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக்கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருத்தணி வட்டம், பூனிமாங்காடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் நெமிலி கூட்டுறவு நியாய விலைக் கடை 638 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. அடிக்கல்பட்டு பகுதி மக்கள் 2 கி.மீ. தொலைவில் உள்ள நெமிலி கூட்டுறவு நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். அடிக்கல்பட்டு கிராமத்தில் மொத்தம் 145 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதி நேரக் கடை திறக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும். மற்றும் பகுதிநேரக் கடை திறந்தபின் தாய்க் கடையில் குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்று அரசு வகுத்த வரையறைகள் பொருந்தாததால் அடிக்கல்பட்டு கிராமத்தில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

74—

## வேளாண் விற்பனை மதிப்பு

**வினா 17052—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் 2000–2001 ஆம் ஆண்டு விற்பனை செய்த விளைபொருட்களின் மதிப்பு எவ்வளவு?



2002 அக்டோபர் 25]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் 2000–2001 ஆம் ஆண்டின் விவசாய விளைபொருட்கள் விற்பனை செய்ததின் மொத்த மதிப்பு ரூ.4821.59 இலட்சம் ஆகும்.

75—

## சம்பளக் கடன்

**வினா 17053—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொங்கணாபுரத்திலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 2000–2001 ஆம் ஆண்டு அரசு ஊழியர்களுக்குச் சம்பளக் கடனாக எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கிளை கொங்கணாபுரத்தில் செயல்படுகிறது. இச்சங்கத்தில் அரசு ஊழியர்களுக்கு சம்பளக் கடனாக 2000–2001 ஆம் ஆண்டில் தொகை ஏதும் வழங்கப்படவில்லை.

76—

## நுகர்வோர் கடன்

**வினா 17058—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட கொங்கணாபுரத்திலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 2000–2001 ஆம் ஆண்டு நுகர்வோர் கடனாக நுகர்பொருள் வாங்க எவ்வளவு நபர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கிளை கொங்கணாபுரத்தில் செயல்படுகிறது. சங்கத்தின் பணியாளர்களுக்கு மட்டுமே நுகர்வோர் கடன் வழங்கப்பட்டு வருகிறது. 2000–2001 ஆம் ஆண்டில் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள 3 பணியாளர்களுக்கு ரூ.42,595/–க்கு நுகர்பொருள் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் உள்ள பணியாளர்களுக்கு 2000–2001 ஆம் ஆண்டில் நுகர்பொருள் கடன் ஏதும் வழங்கப்படவில்லை. ஏற்கெனவே வழங்கப்பட்ட தொகையையும் சேர்த்து 31–3–2001–ல் நிலுவையிலுள்ள நுகர்வோர் கடன் தொகை ரூ.3,09,856/– ஆகும்.

77—

## நகை கடன்

**வினா 17060—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரத்திலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 2000–2001 ஆம் ஆண்டில் 'அ' வகுப்பு உறுப்பினர்களுக்கு நகைக் கடன் எவ்வளவு வழங்கப்பட்டுள்ளது?*

*(ஆ) வட்டி வீதம் எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் 2000–2001 ஆம் ஆண்டில் 1,706 உறுப்பினர்களுக்கு ரூ.132.60 இலட்சம் 15% வட்டி விகிதத்தில் நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளது.



78—

## கூட்டுறவு விற்பனைச் சங்கம்

**வினா 17063—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம் கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 'அ' வகுப்பு உறுப்பினர்கள் எவ்வளவு பேர் உள்ளனர்?*

*(ஆ) இவர்களின் பங்குத் தொகை எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) திருச்செங்கோடு கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்று கொங்கணாபுரத்தில் செயல்பட்டு வருகின்றது. இச்சங்கத்தில் 31—3—2001 இல் 43,776 'அ' வகுப்பு உறுப்பினர்கள் உள்ளனர்.

(ஆ) இவர்களின் பங்குத் தொகை ரூ.4,80,648/– ஆகும்.

79—

## தேர்தல் முறைகேடு

**வினா 17144—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*கூட்டுறவு தேர்தல்களில் முறைகேடுகள் நடைபெறாவண்ணம் தடுக்க அரசு என்னென்ன வழிமுறைகள் மேற்கொண்டுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

[2002 அக்டோபர் 25

கூட்டுறவு தேர்தல்களில் முறைகேடுகள் நடைபெறாவண்ணம் தடுக்க, தேவையான அனைத்து விதிமுறைகளும், 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில், விதி 52—ல் வகுக்கப்பட்டுள்ளன.

**80—**

## கூட்டுறவுக் கடைக்குக் கட்டடம்

**வினா 17303—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, கோட்டகரம் ஊராட்சி, கருவேல்பட்டு கிராம கூட்டுறவு கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

இக்கடைக்கு வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்படி திருவண்ணாமலை கட்டட மையத்தால் ரூ.1.46 இலட்சம் மதிப்பில் கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

**81—**

## விதைச் சான்று பயிற்சி

**வினா 15262—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் விதைச்சான்று பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2002 அக்டோபர் 25]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை கிராமத்தில் நெல் பருவம் தொடங்கும் முன் ஏப்ரல் மாத இறுதியில் அல்லது மே மாதவாக்கில் விதைப் பண்ணை விவசாயிகளுக்கு விதைச் சான்று பற்றிய பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**82—**

## ஒட்டுரக அரசி உற்பத்தி

**வினா 15278—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் ஒட்டு ரக அரிசி உற்பத்தி திட்டத்தை அரசு செயல்படுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பகுதி 2 ஒட்டுரக நெல் உற்பத்தி செயல்விளக்க திடல் அமைக்க அம்பாசமுத்திரம் வேளாண் கோட்டத்திற்கு 14 ஹெக்டேர் பரப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செயல்விளக்க திடல் அமைக்க விரும்பும் மேலச்சேவல் பஞ்சாயத்து பகுதி விவசாயிகள் சேரன்மகாதேவி வேளாண்மை வளர்ச்சி அலுவலரைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். இது தொடர்பாக மேலச்சேவல் பகுதி விவசாயிகள் மத்தியில் தகுந்த விளம்பரங்கள் செய்திடவும் அம்பாசமுத்திரம், வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் சேரன்மகாதேவி, வேளாண்மை வளர்ச்சி அலுவலருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

[2002 அக்டோபர் 25

**83—**

## வீரிய விதைகள் விவரம்

**வினா 19583—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* காஞ்சிபுரம் மாவட்டத்தில், தாம்பரம் தொகுதி சிட்லபாக்கம் வேளாண் அலுவலகம் மூலம் கடந்த ஆண்டு எவ்வளவு வீரிய விதைகள் மானியத்தோடு வழங்கப்பட்டுள்ளது?

*(ஆ)* பயன் பெற்ற விவசாயிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* காஞ்சிபுரம் மாவட்டத்தில், தாம்பரம் தொகுதி சிட்லபாக்கம் வேளாண் அலுவலகம் மூலம் கடந்த ஆண்டு வழங்கப்பட்ட வீரிய விதைகள் விவரங்கள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன:

*சிட்லபாக்கம் 2001—2002 இல் விதை விநியோகம் செய்யப்பட்ட விவரம்*

| வ. எண் | நெல் ரகங்கள் | நிலை | சொர்ணவாரி பட்டம் (கிலோவில்) | சம்பா பட்டம் | நவரை பட்டம் (கிலோவில்) | மொத்தம் (கிலோவில்) | மானியம் (கிலோவில்) | பயனடைந்தவர்கள் | பயனடைந்த கிராமங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | IR 50 | சா | 4,850 | — | — | 4,850 | — | 40 | 25 | 15 |
| 2. | ASD 20 | F1 | — | 150 கிலோ | — | 150 | — | 2 | 1 | 1 |
| 3. | MDU 5 | சா | — | 6,520 கிலோ | — | 6,520 | 6,520 | 100 | 30 | 22 |
| 4. | ADT 43 | சா | — | 6,305 கிலோ | 5,000 | 11,305 | 11,305 | 170 | 56 | 42 |
| 5. | TKM 11 | சா | — | 1,550 கிலோ | — | 1,550 | 1,550 | 25 | 6 | 5 |
| 6. | ASD 19 | சா | — | 4,000 கிலோ | — | 4,000 | 4,000 | 56 | 24 | 18 |
| 7. | ADT 44 | F1 | — | 365 கிலோ | — | 365 | 365 | 5 | 2 | 1 |
| 8. | CO 47 | சா1 | — | 300 கிலோ | — | 300 | 300 | 4 | 2 | 2 |
| 9. | ADT 36 | சா | — | 625 கிலோ | 500 | 1125 | — | 15 | 7 | 10 |
| 10. | ASD 16 | சா | — | 50 கிலோ | — | 50 | 50 | 1 | — | 1 |
| | மொத்தம் | | 4,850 | 19,865 கிலோ | 5,500 | 30,215 | 24,090 | 418 | 153 | 117 |



2002 அக்டோபர் 25]

வழங்கப்பட்ட மொத்த விதை மானியம் ரூபாயில் 48,180.

சிறுதானியம்: சிறுதானிய விதைகள் மானியத்தில் விநியோகம் செய்யப்படவில்லை.

*(ஆ)* பயன் பெற்ற விவசாயிகள் 571 பேர்.

**84-**

## விவசாயிகளுக்கு நஷ்டஈடு

**வினா 19592—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்பத்தூர் பகுதியில் அம்பாசமுத்திரம் என்ற ரக விதை நெல்லை பயிரிட்டு பதராகி பாதிப்படைந்த விவசாயிகளுக்கு அரசு நஷ்டஈடு வழங்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருப்பத்தூர் வட்டாரத்தில் 80 எக்டர் பரப்பளவில் அம்பை 19, ரக நெல் குளிர்காலத்தில் பூக்கும் நிலையில், அதிக குளிரினால் பால்பிடிக்காமல் ஓரளவு பதராகிவிட்டது. இதற்கு நிவாரணம் ஏதும் வழங்கப்படவில்லை. வேளாண்மை உதவி இயக்குநர், திருப்பத்தூர் பகுதியில் உள்ள திருப்பத்தூர், கந்திலி, நாட்ராம்பள்ளி மற்றும் ஜோலார்பேட்டை வட்டாரங்கள் பயிர் ஈட்டுறுதி திட்டத்தில் அறிவிக்கப்பட்ட பகுதியாக வராத காரணத்தால், பயிர் காப்பீடு மூலம் நிவாரணம் வழங்க இயலவில்லை. 2002–2003 ஆம் ஆண்டில் நெல் பயிர் காப்பீடு திட்டத்தில், கந்தலி மற்றும் திருப்பத்தூர் பகுதிகள் அறிவிக்கப்பட்ட பகுதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. எனவே, வரும் காலத்தில் பாதிப்பு ஏதும் ஏற்பட்டால் பயிர் காப்பீட்டு மூலம் நிவாரணம் வழங்க இயலும். இது தவிர அரசு நஷ்டஈடு வழங்குவது பற்றி பரிசீலனையில் இல்லை.

85—

## சிறுவர் இல்லம் அமைத்தல்

**வினா 16267—செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி கோயிலில் விழாக் காலங்களில் நெரிசலில் பிரிய நேரிடும் குழந்தைகளை பெற்றோர்களிடத்தில் ஒப்படைக்க முடியாத சூழ்நிலை ஏற்படுவதால், அங்கு சிறுவர்கள் தங்கும் இல்லம் உருவாக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*சமூக பாதுகாப்புத் துறையைச் சார்ந்த கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் இளைஞர் இல்லங்கள் மதுரை, திண்டுக்கல் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. இவ்வில்லங்களில் மேற்படி குழந்தைகளை ஒப்படைத்து அங்கிருந்து அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கவோ அல்லது அவர்களின் மறுவாழ்விற்கோ தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.*

86—

## கல்வி உதவித் தொகை

**வினா 2767—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 2000–2001 ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதியில் மாநில அரசின் கல்வி உதவித் தொகை ஆதிதிராவிடர் மாணவர்கள் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) 2000–2001ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதியில் மாநில*



*அரசின் கல்வி உதவித் தொகை ஆதிதிராவிடர் மாணவர்கள் 560 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*(ஆ) 560 மாணவர்களுக்கு ரூ.0.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.*

87—

## நில ஆர்ஜிதம்

**வினா 6671—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் நில ஆர்ஜிதம் செய்யும்போது நில உரிமையாளரிடம் குறைந்தபட்சம் எவ்வளவு நிலம் இருக்க வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*அரசு ஆணை (நிலை) எண் 363, வருவாய்த் துறை, நாள் 28–4–95—ன்படி அரசு காரியங்களுக்காகவோ அல்லது அரசு மூலம் ஆர்ஜிதம் செய்து பொது நிறுவனங்களுக்கு நிலம் கொடுக்கும் பொழுதும் சிறு விவசாயிகள் பாதிக்காத அளவுக்கு பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும், சிறிய அளவு நிலத்தை மட்டும் கொண்டுள்ள ஏழைகளின் நிலத்தையும், ஆதிதிராவிடர் பழங்குடியின மக்களுக்கு சொந்தமான நிலத்தையும் கையகப்படுத்தக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2 ஹெக்டேர் அல்லது அதற்குக் குறைவான நிலத்தினை பயிரிடுபவர் சிறு விவசாயியாகக் கருதப்படுவார். ஒரு விவசாயி மாநில உச்ச வரம்பு சட்டத்தில் வரையறுத்தபடி இரு ஹெக்டேரோ அல்லது அதற்கு குறைவாகவோ முதல் தர பாசன நிலத்தினை வைத்திருந்தால் அவரும் சிறு விவசாயியாகக் கருதப்படுவார்.*

88—

## குடிநீர் வசதி

**வினா 6740—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி பேரூராட்சியில் உள்ள ஆதி திராவிடர் நலத்துறை மாணவியர் விடுதிக்கு கழிவறை வசதி மற்றும் மாணவியர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அரசு வசதி செய்யும்?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது இது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

89—

## வழிப்பாதை அமைத்தல்

**வினா 10519—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட வேகாக்கொல்லை அருந்ததியர் நகர் மக்களுக்கு வழிப்பாதை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட வேகாக்கொல்லை அருந்ததியர் நகர் மக்களுக்கு தெற்கு அருந்ததியர் காலனியைச் சேர்ந்தாற்போல் வெங்கடாம்பேட்டை கிராம எல்லையில் வேகாக்கொல்லை கிராமத்தினை ஒட்டினாற்போல் பிள்ளைப் பாளையம் அருந்ததியர் காலனி உள்ளது. இக்காலனிக்கும் சாலை வசதியுள்ளது. மேற்படி அருந்ததியர் காலனிகளுக்கு பாதை வசதியுள்ளதால் வேகாக்கொல்லை அருந்ததியர் மக்களுக்கு பாதைக்கென தனியாக நில ஆர்ஜிதம் செய்யத் தேவை ஏற்படவில்லை.



2002 அக்டோபர் 25]

90—

## இலவச மிதிவண்டி

**வினா 12453—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் ஆதிதிராவிடர் மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி எத்தனை வழங்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் 1,509 ஆதிதிராவிடர் மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

91—

## அரசு வருவாய்

**வினா 6971—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் கழகத்தின் தோட்டத்திலிருந்து எத்தனை ரப்பர் மரங்கள் விற்கப்பட்டன. 1996 முதல் 2001 வரை விற்கப்பட்ட மரங்களின் மூலம் அரசு வருவாய் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் கழகத் தோட்டங்களிலிருந்து 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை 23,225 மரங்களை விற்பனை செய்த வகையில் ரூ.1,92,17,286/— வருவாய் கிடைத்துள்ளது.

92—

## பயிர்களைக் காத்தல்

**வினா 9089—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் மலைப்பகுதி, ஆலடியூர் முதல் பாபநாசம் வரையிலான மலை அடிவாரங்களில் உள்ள பயிர்களை காட்டுப்பன்றிகள் அடிக்கடி வந்து அழிப்பதைத் தடுக்க அரசிடம் திட்டம் எதுவும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) பாபநாசம் மலைப்பகுதி, ஆலடியூர் முதல் பாபநாசம் வரையிலான மலை அடிவாரங்களில் உள்ள பயிர்களை காட்டுப்பன்றிகள் வந்து அழிப்பதைத் தடுக்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை. ஏனெனில் அவை வரும் பாதையில் சுவர் எழுப்பித்தான் தடுக்க முடியும். அப்படி சுவர் எழுப்ப வேண்டுமென்றால் சுமார் 7 கி.மீ. தூரத்திற்கு தடுப்புச்சுவர் கட்ட ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும். அச்செலவினம் வனவிலங்குகளால் ஏற்படும் பயிர் சேதத்திற்கு வழங்கப்படவேண்டிய இழப்பீட்டுத் தொகையைவிட மிக அதிகம் என்பதால் பிரேரணை ஏதும் தற்போது இல்லை.

(ஆ) வினா எழாது.

93—

## மங்கி ஃபால்ஸ் அருவி

**வினா 9777—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி மங்கி ஃபால்ஸ் அருவியை விரிவுபடுத்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்குட்பட்ட குரங்கு அருவியில் சுற்றுலா மேம்பாடு தொடர்பாக சட்டமன்ற உறுப்பினர் திரு. கோவை தங்கம், சட்டமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதியில் இருந்து குரங்கு அருவியில், ரூ.2,00,000/—க்கு ஒருங்கிணைந்த மகளிர் துப்புரவு வளாகம் ஒன்று கட்டுவதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணி இந்நிதியாண்டிற்குள் முடிக்கப்படும்.

94—

## இறந்தவர்களின் விவரம்

**வினா 12285—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000–2001–ஆம் ஆண்டில் கோவை மாவட்டம், வால்பாறை வட்டாரத்தில் வன விலங்குகளால் தாக்குண்டு இறந்தவர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

2000–2001 ஆம் ஆண்டில் கோவை மாவட்டம், வால்பாறை வட்டாரத்தில் வன விலங்குகளால் தாக்குண்டு இறந்தவர்கள் மொத்தம் 6 நபர்கள். அதில்—

| | |
|---|---|
| காட்டு யானை தாக்கி இறந்தவர்கள் | 5 பேர் |
| காட்டு எருமை தாக்கி இறந்தவர் | 1 நபர் |

95—

## சந்தன மரக்கட்டைகள் ஏலம்

**வினா 12355—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 2000 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் வனச்சரக அலுவலகத்தில் எத்தனை டன் சந்தனமரக் கட்டைகள் ஏலம் விடப்பட்டன?*

*(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் சந்தனக் கட்டைகளின் ஏலம் திருப்பத்தூர், சேலம் மற்றும் சத்தியமங்கலம் ஆகிய சந்தனமரக் கிடங்குகளில்தான் நடைபெறுகின்றன. தருமபுரி மாவட்ட வனச்சரக அலுவலகத்தில் தனியாக சந்தனக் கட்டைகள் ஏலம் நடத்தப்படுவதில்லை.*

*(ஆ) இக்கேள்வி எழாது.*

96—

## யானைகளின் எண்ணிக்கை

**வினா 12468—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சத்தியமங்கலம் காடுகளிலுள்ள யானைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று அரசு கண்டறிந்துள்ளதா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*1993 ஆம் ஆண்டில் சத்தியமங்கலம் காடுகளில் யானைகளின் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன்படி 222 யானைகள் சத்தியமங்கலம் கோட்டத்தில் இருப்பதாக கண்டறியப்பட்டது.*

97—

## தேக்கு மரக் கன்றுகள்

**வினா 12800—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழக விவசாயிகளுக்கு தேக்கு மரக்கன்றுகள் இலவசமாக வழங்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*தமிழக விவசாயிகளுக்கு தேக்கு மரக்கன்றுகள் இலவசமாக வழங்கும் திட்டம் ஏதும் வனத் துறையில் இல்லை. 2000–2001 ஆம் ஆண்டு மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (முன்னோடி சிறிய நீர் பிடிப்பு திட்டத்தில்) விருதுநகர் மண்டலத்திலுள்ள விவசாயிகளுக்கு 2000 தேக்கு மற்றும் மூங்கில் கன்றுகள் மொத்தம் ரூ.0.40 இலட்சம் செலவில் இலவசமாக விநியோகம் செய்யப்பட்டது. இதைத் தவிர வேறு திட்டம் ஏதுமில்லை.*

98—

## விவசாய சேதம்

**வினா 13426—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி வனப்பகுதியில் விவசாயத்தை விலங்குகள் நாசப்படுத்துவதைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வனப்பகுதியை ஒட்டியுள்ள கிராமங்களைச் சார்ந்த விவசாய விளை நிலங்களுக்கு யானைகள் வர வாய்ப்புள்ள பாதைகளில் வனச் சிப்பந்திகள் மூலம் மிகவும் பாதுகாப்பாக நெருப்பினை மூட்டி புகை ஏற்படுத்தியும், பட்டாசுகள் வெடித்தும், யானை முகாம்கள் அமைத்தும் யானைகள் வராமல் தடுக்க தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் யானைகள் விளை நிலங்களுக்கு வர வாய்ப்புள்ள பகுதிகளில் பாதைகளில் முள் கம்பி வேலி அமைத்து தடுப்புகள் ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதோடு கோடைகாலங்களில் தண்ணீர் கிடைக்க பேவனூர் மற்றும் மசக்கல் காப்புக் காடுகளில் மூன்று கசிவு நீர்க்குட்டைகளும், மசக்கல், பேவனூர், பெண்ணாகரம், ஒட்டப்பட்டி மற்றும் பிலிகுண்டுலு காப்புக் காடுகளில் 11 தடுப்பு அணைகளும் மொத்தம் ரூ.21,99,000/– செலவில் கட்டப்பட்டு வனத்தைவிட்டு வெளியேவந்து பயிர்களை நாசப்படுத்துவது குறைக்கப்பட்டுள்ளது.

**99—**

## மரக் கன்றுகள் நடுதல்

**வினா 15265—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் மரக்கன்றுகள் நடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2002 அக்டோபர் 25]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சிப் பகுதியில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

(ஆ) அதன் விவரம் கீழ்க்கண்டவாறு:

| வ. எண் | தோட்டம் எழுப்பப்பட்ட விபரம் | வருடம் | நிலம்/ | நடப்பட்ட பரப்பு | செலவு செய்யப் பட்ட தொகை ரூபாய் |
|---|---|---|---|---|---|
| 1. | பத்தமடை அம்பா சமுத்திரம் சாலை ஓரத்தோட்டம் | 1980 | 3.00 கி.மீ. | 600 | 15240 |
| 2. | பத்தமடை சேரன்மகாதேவி சாலை ஓரத்திட்டம் | 1986 | 2.5 கி.மீ. | 500 | 33190 |
| 3. | சிவானந்தா ஆசிரமம் பசுமையாக்கும் திட்டம் | 2000 | 8.5 எக்டர் | 7506 | 48020 |

**100—**

## கழிப்பிட வசதி

**வினா 16302—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள டாப் ஸ்லிப்பில் கழிப்பிட வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சட்டமன்ற தொகுதியில் உள்ள டாப் ஸ்லிப்பில் உல்லாச பயணிகளின் உபயோகத்திற்காக டாப் ஸ்லிப் வரவேற்பு மையத்தின் பின்புறம் ஏற்கெனவே கழிப்பிட வசதி செய்யப்பட்டு உபயோகத்தில் உள்ளன. கூடுதல் கழிப்பிட வசதிகள் செய்துதர இந்த நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

## இரண்டாம் பட்டியல்

**1—**

### அடைப்பு ஷட்டர்

**வினா 6208—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், இடைக்கால் கிராமம் தேவர் குளத்திற்கு அடைப்பு ஷட்டர் (Shutter) அமைத்துத் தர அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம் இடைக்கால் கிராமம் தேவர்குளத்திற்கு அடைப்பு ஷட்டர் டிசம்பர் 2001-ல் பொருத்தப்பட்டுள்ளது.





**2—**

### தடுப்புச் சுவர்

**வினா 7248—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, குலமங்கலத்தில் நிரம்பி வழியும் தண்ணீர் முழுவதும் கருவலூர் கண்மாய்க்கு வருவதால் இடையில் தடுப்புச்சுவர் இடிந்து விட்டதை மீண்டும் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குலமங்கலம் கண்மாயில் உபரி நீர் செல்லும் மறுகால் வாய்க்காலின் குறுக்கே கட்டப்பட்டிருக்கும் குலமங்கலம் அணைக்கட்டிடம் இதன் இரு வாய்க்கால்களின் பொதுச்சுவர் மற்றும் கரைகளும் பழுதடைந்துள்ளன. இவற்றை சரி செய்ய சுமார் ரூ.10 இலட்சம் தேவைப்படும். போதிய நிதியின்மையால் தற்பொழுது இதனை நிறைவேற்ற இயலாத நிலை உள்ளது. இருப்பினும் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதியிலிருந்து நிதி கிடைக்கப்பெற்றால், இப்பணி மேற்கொள்ள இயலும்.

**3—**

### சிறைச்சாலை கைதிகள்

**வினா 12383—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக சிறைச்சாலையில் உள்ள கைதிகளில் இளங்கலை பட்டம் மற்றும் முதுகலைப் பட்டம் படித்து வருபவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு சிறை நடைமுறை நூல் தொகுதி 2, விதி எண் 291-ன்படி சிறைவாசிகள் சிறையினுள் உயர்கல்வி கற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி 2001-2002-ம் கல்வி ஆண்டில், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின், சிறைவாசிகளின் சிறப்பு கல்வி திட்டத்தின்கீழ் சிறையிலேயே கல்வி மையம் அமைத்து அதன் மூலம் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பினை 286 சிறைவாசிகளும், இந்திரா காந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தின் தொலைதூர அஞ்சல் வழி பாடத் திட்டத்தின்கீழ் கணினி பட்டயப்படிப்பினை 139 சிறைவாசிகளும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தொலைதூர அஞ்சல் வழி பாடத் திட்டத்தின்கீழ் 1 சிறைவாசி இளங்கலை பட்டப்படிப்பும், 3 சிறைவாசிகள் ஜோதிடவியல் பட்டயப்படிப்பும் தமிழகத்தில் உள்ள அனைத்து சிறைகளிலும் கல்வி பயின்று வருகின்றனர்.

## காலிப் பணியிடம் நிரப்புதல்

[illegible] திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் [illegible] விற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் காலியாகவுள்ள துப்புரவு பணியாளர் பணியிடத்தை உடனடியாக நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் துப்புரவுப் பணியாளர் பணியிடம் 5-4-2002 அன்று நிரப்பப்பட்டுவிட்டது.



5—

## ஆசிரியர் நியமனம்

**வினா 4218—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சந்தைவெளிப்பேட்டை ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளிக்கு கூடுதலாக ஆசிரியர் நியமனம் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

பண்ருட்டி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஒன்றியம் சந்தைவெளிப்பேட்டை ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் 1 முதல் 5 வகுப்புவரை பயிலும் மாணவர் எண்ணிக்கை 1-9-2001 அன்றைய நிலவரப்படி 150.

அரசாணை எண் 525, பள்ளிக் கல்வித் துறை, நாள் 29-12-97-ன்படி

அப்பள்ளிக்குத் தேவையான ஆசிரியர் எண்ணிக்கை - 4

அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை - 4

பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை - 4
(தலைமை ஆசிரியர்-1, இடைநிலை ஆசிரியர்கள்-3)

எனவே, இப்பள்ளிக்கு கூடுதலாக ஆசிரியர் பணி நியமனம் செய்யத் தேவை எழவில்லை.

## காவலர் பணி

**வினா 5357—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, மேல்ஒலக்கூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் அலுவலக உதவியாளர் மற்றும் காவலர் பணி காலியாக உள்ளது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அலுவலக உதவியாளர், காவலர் நியமனம் செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) செஞ்சி தொகுதி, மேல்ஒலக்கூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் காலியாகவுள்ள அலுவலக உதவியாளர் பணியிடம் நிரப்பிட அரசின் தடையாணை உள்ளதால் நிரப்பப்படாமல் உள்ளது. காவலர் காலிப் பணியிடத்தில் முழுநேர காவலர் நியமிக்கப்பட்டு 8-3-2002 முதல் பணியாற்றி வருகிறார்.

(ஆ) கேள்வி எழவில்லை.

7—

## உயர்நிலைப் பள்ளிகள்

**வினா 12202—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்த எந்தவித தகுதிகள் அளவுகோலாக உள்ளன?

(ஆ) அத்தகுதிகள் மலைப்பிரதேசங்களில் தளர்த்தப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் 235, நாள் 24-5-97-ல் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட கீழ்க்கண்ட நிபந்தனைகள் (Criteria and Norms) விதிக்கப்பட்டுள்ளன.





1. இருபாலர் பள்ளிகளுக்கு 5 ஏக்கர் விளையாட்டு இடமும், மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 3 ஏக்கர் விளையாட்டு இடமும் இருக்க வேண்டும்.

2. நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட உயர்நிலைப் பள்ளிக்கென தனி கட்டட வசதி, தளவாட வசதி, ஆய்வக வசதி, நூலக வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்.

3. 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 50-க்கும் குறையாமல் இருக்கப்பட வேண்டும். எனினும், தாழ்த்தப்பட்ட பள்ளிகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும்.

4. அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பங்கு தொகையை ரூ.1.00 இலட்சம் முழுமையாக செலுத்த வேண்டும்

5. பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவங்க முன்னுரிமை அளிக்கப்படும்.

6. புதிய உயர்நிலைப் பள்ளி துவங்க கோரும் இடத்திற்கும் மற்ற பள்ளிகளுக்கும் இடையே 5 கி.மீ. இடைவெளி தூரம் இருக்க வேண்டும்

7. புதிய உயர்நிலைப் பள்ளி தொடங்கும் இடத்தில் ஏற்கெனவே ஊட்டுப் பள்ளிகளும் (Feeder Schools) நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், மக்கள்தொகையில் உயர்நிலைப் பள்ளி செல்லும் வயதில் உள்ள குழந்தைகளுக்கு போதாது என கருதப்பட்டால் முன்னுரிமை வழங்கப்படும்.

8. மலைப் பிரதேசப் பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

9. ஆதிதிராவிடர் மக்கள் தொகை அதிகம் இருக்கும் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

10. ஒவ்வொரு வருடமும் அரசின் நிதி நிலைக்கேற்ப பள்ளிகள் தேர்வு செய்யப்படும்.

11. மலைப் பிரதேசப் பள்ளிகளுக்கு முன்னுரிமை மட்டும் வழங்கப்படுகிறது. மற்றைய விதிகள் தளர்த்தப்படமாட்டாது.

8—

## கட்டட வசதி

**வினா 12275—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசு கலைக் கல்லூரிக்குத் தேவையான கட்டட வசதி (வகுப்பறைகள்) இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், போதுமான கட்டட வசதிகள் மற்றும் பழுதுபட்ட கட்டடங்களை புதுப்பிக்க அரசு சிறப்பு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) இக்கல்லூரியில் தற்போதுள்ள வகுப்பறைகளைக் கொண்டே மாணவர்களின் கல்வி எவ்விதத்திலும் பாதிக்காத அளவில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு வகுப்புகளை இரத்து செய்யாமல் நடத்தும் அளவிற்கு கல்லூரியில் போதுமான வகுப்பறைகள் உள்ளன. மேலும் இக்கல்லூரியில் வகுப்பறை பற்றாக்குறை இருப்பதாக கல்லூரி முதல்வரிடமிருந்து தகவல் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) போதுமான கட்டட வசதிகள் உள்ள நிலையிலும், 2001-2002-ம் நிதியாண்டில் இக்கல்லூரிக்குத் தேவையான பழுதுபார்ப்புப் பணிகளை நிறைவேற்றும் பொருட்டு ரூ.12,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அத்தியாவசியமான பழுதுபார்ப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

9—

## நூலாசிரியர்கள்

**வினா 12341—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புதியதாக புத்தகம் எழுதி வெளியிடும் நூலாசிரியர்களை ஊக்குவிக்க அரசு எவ்வளவு தொகை வழங்கி வருகிறது?

(ஆ) இதை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) தமிழில் புதிதாக புத்தகம் வெளியிட விரும்புவோரை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம்





செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென அமைக்கப்பட்ட குழு பரிந்துரை செய்யும் நூல்களுக்கு ரூ.25,000/-க்கு மிகாமல் விதிமுறைகளின்படி நிதியுதவி வழங்கப்படுகிறது.

(ஆ) கூடுதல் தொகை உயர்த்தி வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

10—

## புதிய நூல்கள்

**வினா 12382—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000 ஆம் ஆண்டு சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலுள்ள கிளை நூலகத்தில் எவ்வளவு மதிப்புள்ள, தரமுள்ள புதிய நூல்கள் அரசு வழங்கியுள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலுள்ள, கிளை நூலகத்திற்கு 2000 ஆம் ஆண்டு ரூ.1,27,513 மதிப்புள்ள 1225 தமிழ் நூல்களும் மற்றும் 705 ஆங்கில நூல்களும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

11—

## உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள்

**வினா 12389—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உதவிபெறும் கலை அறிவியல் கல்லூரிகள் எத்தனை?

(ஆ) எத்தனை நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் தமிழகத்தில் உள்ளன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் உதவிபெறும் கலை அறிவியல் கல்லூரிகள் மொத்தம் 133 உள்ளன.

(ஆ) 1. ஸ்ரீ அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர் கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்.

2. ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மகா வித்யாலயா, காஞ்சிபுரம்.

3. சத்யபாமா பொறியியல் கல்லூரி, பழைய மாமல்லபுரம் சாலை, காஞ்சிபுரம் மாவட்டம்.

4. பாலாஜி பொறியியல் கல்லூரி, ஏனத்தூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

5. வேலூர் பொறியியல் கல்லூரி, வேலூர்.

6. சண்முகா பொறியியல் கல்லூரி, தஞ்சாவூர்.

ஆகிய 6 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் தமிழகத்தில் உள்ளன.

12—

## நிதியுதவி

**வினா 12419—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு தமிழக அரசு நிதியுதவி செய்கிறதா?

(ஆ) ஆம் எனில், அது வருடத்திற்கு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.





(ஆ) வருடத்திற்கு ரூ.53 இலட்சம்.

13—

## நூலகங்கள்

**வினா 12467—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் எத்தனை ஊர்ப்புற நூலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டன?

(ஆ) அதில் எத்தனை நூலகங்கள் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) 2000-2001-ம் நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில், (1) மல்லியக்கரை, (2) மல்லியகுந்தம், (3) தீவட்டிபட்டி மற்றும் (4) உமையாள்புரம் ஆகிய நான்கு இடங்களில் புதிதாக ஊர்ப்புற நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

(ஆ) மல்லியகுந்தம் மற்றும் தீவட்டிபட்டி ஆகிய இரு ஊர்ப்புற நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

(ஆ) மல்லியகுந்தம் மற்றும் தீவட்டிபட்டி ஆகிய இரு ஊர்ப்புற நூலகங்கள் சொந்தக் கட்டடத்திலும், மல்லியக்கரை மற்றும் உமையாள்புரம் ஆகிய இரு ஊர்ப்புற நூலகங்கள் இலவசக் கட்டடத்திலும் செயல்படுகின்றன.

14—

## நூலகம்

**வினா 12627—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிப்பாளையம் கிராமத்தில் நூலகம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிப்பாளையம் கிராம மக்கள் ஒரு நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால், அவ்வூரில் நூலகம் திறக்க இயலவில்லை:

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக் குழு பெயருக்கு இலவசமாக பத்திரப் பதிவு செய்து தரப்படவேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ.2000/- மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

(5) தலா ரூ.1000/- வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**15—**

## ஆலய கும்பாபிஷேகம்

**வினா 10251—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் அண்ணாமலை பேரூராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள பசுபதேஸ்வரர் ஆலயம் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) இருப்பின், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?



விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் அண்ணாமலை பேரூராட்சியில் அமைந்துள்ள திருவேட்களம் அருள்மிகு பசுபதேஸ்வரர் திருக்கோயிலில் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**16—**

## கோயில்களைப் புதுப்பித்தல்

**வினா 12346—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் வருமானம் இல்லாத, கோயில்களை புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் வருமானம் இல்லாத திருக்கோயில்களை படிப்படியாகத் திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**17—**

## அலுவலர்கள் நியமித்தல்

**வினா 12396—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் நகை சரிபார்க்கும் அலுவலர்கள் போதுமானதாக இல்லை என்பது அரசுக்கு தெரியுமா?

[2002 அக்டோபர் 25

(ஆ) ஆம் எனில், அதிகப்படியாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில், 1998-க்கு முன்பு சிறப்புப் பணிக்காக தலைமையிடத்தில் ஒரு நகை சரிபார்ப்பு அலுவலரும் மற்றும் சென்னை, திருச்சி, தஞ்சை, மதுரை, திருநெல்வேலி, கோவை மற்றும் மயிலாடுதுறை ஆகிய ஏழு இணை ஆணையர் மண்டலங்களில் ஏழு நகை சரிபார்க்கும் அலுவலர்களும் பணிபுரிந்து வந்தனர், 1998-ல் வேலூர், சேலம், சிவகங்கை ஆகிய 3 மண்டலங்களில் புதிதாக 3 இணை ஆணையர் மண்டலங்கள் தோற்றுவிக்கப்பட்டு 3 நகை சரிபார்க்கும் அலுவலர்கள் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு தற்போது அனைத்து மண்டலங்களிலும் நகை சரிபார்க்கும் பிரிவு இயங்கி வருகிறது. இவை தற்போதைக்கு போதுமானது.

(ஆ) நிதி ஆதாரத்தின் அடிப்படையிலும், தேவையின் அடிப்படையிலும் புதிய பணியிடங்கள் தோற்றுவிப்பது குறித்து பரிசீலித்து முடிவெடுக்கப்படும். தற்போது புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கும் நிலை எழவில்லை.

**18**—

## கோயில் பழுதுபார்த்தல்

**வினா 12401—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அரசிராமணி குள்ளம்பட்டி சோளீஸ்வரசுவாமி திருக்கோயில் பழுதடைந்துள்ளதை புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது புதுப்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**



2002 அக்டோபர் 25]

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம் அரசிராமணி குள்ளம்பட்டி அருள்மிகு சோளீஸ்வரசுவாமி திருக்கோயில் திருப்பணி செய்ய மேற்படி திருக்கோயிலில் போதிய நிதி வசதியில்லாத காரணத்தால் 2002-2003 ஆம் ஆண்டிற்கான கிராமப்புற திருப்பணித் திட்டத்தின்கீழ், ரூ.25,000 நிதியுதவியுடன் அவ்வாலய திருப்பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**19**—

## குத்தகை

**வினா 12407—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் கிராமத்திலுள்ள இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவு?

(ஆ) அதிலிருந்து கோயிலுக்கு எவ்வளவு குத்தகை பெறப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் கிராமத்திலுள்ள அருள்மிகு இலட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயிலுக்கு புதுப்பாளையம் கிராமத்தில் 1.17 ஏக்கர் நஞ்சை நிலமும், கோணசமுத்திரம் கிராமத்தில் 9.43 ஏக்கர் புஞ்சை நிலமும் சொந்தமாக உள்ளது.

(ஆ) கோணசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த திருவாளர்கள் (1) பழனி (2)பெருமாள் மற்றும் (3) தாத்தி ரெட்டி என்பவர்கள் நிலத்தை அனுபவித்து வருவதால் கோயிலுக்கு எந்த வருமானமும் வருவதில்லை. எனவே, இந்த நிலத்தை திருக்கோயில் சுவாதீனத்தில் கொண்டு வந்து பொது ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்குமாறு தக்காருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

20—

## நில மதிப்பீடு

**வினா 12409—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையத்திலுள்ள இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலுக்கு சொந்தமான நிலத்தின் மதிப்பீடு தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையத்தில் உள்ள அருள்மிகு இலட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தின் மதிப்பு ரூ.11 இலட்சம் ஆகும்.

21—

## திருக்கோயில் நிலம்

**வினா 12410—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், அரசிராமணி கிராமம், குள்ளம்பட்டியில் உள்ள சோளீஸ்வரசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான நிலங்கள் எவ்வளவு, அதன் மதிப்பு என்ன?

(ஆ) அதிலிருந்து பெறப்படும் குத்தகைப் பணம் எவ்வளவு? அதை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**



(அ) சங்ககிரி வட்டம், அரசிராமணி, குள்ளம்பட்டி, அருள்மிகு சோளீஸ்வரசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக 2-13-5 ஹெக்டேர் புன்செய் நிலம் உள்ளது. இந்த நிலங்களின் மொத்த மதிப்பு சுமார் ரூ.5,00,000 ஆகும்.

(ஆ) மேற்படி திருக்கோயில் நிலங்களிலிருந்து குத்தகைப் பணம் ஏதும் வசூலிக்கப்படவில்லை. இத்திருக்கோயில் நிலங்களை பூசாரிகள் திரு. தங்கவேல், திரு. நடேசன் வகையறாக்கள் சாகுபடி செய்து அதன்மூலம் பூஜைசெய்து வருகிறார்கள். எனவே, மேற்படி நிலங்களை பொது ஏலத்தில் விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

22—

## கோயில் நிலம்

**வினா 12413—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளி கிராமம், பசுபதி ஈஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான நிலம் எவ்வளவு உள்ளது?

(ஆ) அதிலிருந்து எவ்வளவு குத்தகை வருடா வருடம் வருகிறது?

(இ) இதை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) பசுபதி ஈஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமாக 2.9.72 ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளது.

(ஆ) அதிலிருந்து நீண்ட கால குத்தகை மூலம் வருடா வருடம் ரூ.6,000 வருமானம் வருகிறது.

(இ) பொது ஏலத்தில் குத்தகைக்கு விடுவதன் மூலம் வருவாயைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

23—

## நல்லதங்காள் கோயில்

**வினா 12524—திரு. இரா. தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் வத்திராயிருப்பு ஒன்றியத்தில் அர்ச்சனாபுரம் கிராமத்திலுள்ள நல்லதங்காள் கோயிலைப் பராமரிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருவில்லிபுத்தூரில் வத்திராயிருப்பு ஒன்றியத்தில் அர்ச்சனாபுரம் கிராமத்தில் உள்ள அருள்மிகு நல்லதங்காள் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் உள்ளது. இந்தத் திருக்கோயிலானது மதுரை உதவி ஆணையர் பிரிவில் உள்ள ஆண்டு வருமானம் ரூ.2000/-உள்ள சிறிய திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் அருகிலுள்ள வத்திராயிருப்பு அருள்மிகு காசிவிஸ்வநாத சுவாமி திருக்கோயில் செயல் அலுவலர் மேற்படி திருக்கோயிலின் தக்காராக நியமிக்கப்பட்டு மேற்படி திருக்கோயிலின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பினைக் கவனித்து வருகிறார். கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு இத்திருக்கோயிலை திருப்பணி செய்வதற்காக மேற்படி கோயிலானது கிராமத்தார் சிலரால் இடிக்கப்பட்டு அவர்களுக்குள் வேற்றுமை இருந்த காரணத்தினால் மேற்படி பணி செய்யப்படாத நிலையில் 10'x10' அளவில் ஒரு கூரை செட் அமைத்து அதில் தற்போது மேற்படி நல்லதங்காள் விக்ரகம் மற்றும் 7 சப்த கன்னிமார்கள் விக்ரகம் வைக்கப்பட்டு தினசரி பூசை நடத்தப்பட்டு வருகிறது.

மேற்படி திருக்கோயிலின் கர்ப்பகிரகம் மற்றும் முன்மண்டபம் 40'x40' விஸ்தீரணத்தில் உள்ளதை மேற்படி கிராமத்தார்கள் மூலமும் உபயதாரர்கள் மூலமும் திருப்பணி செய்ய மேற்படி திருக்கோயிலின் தக்காரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு அது மதுரை உதவி ஆணையரால் கண்காணிக்கப்பட்டும் வருகிறது.





24—

## தேவார திருவாசக பாடசாலை

**வினா 16261—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதியில் தேவார பாடசாலை மற்றும் திருவாசக பாடசாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதியில் தேவார பாடசாலை மற்றும் திருவாசக பாடசாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

25—

## நுழைவுச் சீட்டு

**வினா 16582—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை வடபழனி திருக்கோயிலில் போலியான சிறப்பு நுழைவு சீட்டு அச்சிட்டு விற்பனை செய்ததில் எத்தனை பேர் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) எவ்வளவு மதிப்புள்ள போலி நுழைவுச் சீட்டு கைப்பற்றப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

இளநிலை எழுத்தர்கள் மூன்று நபர்களும், பதிவுறை எழுத்தர் ஒரு நபரும் ஆக நான்கு பணியாளர்கள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேற்படி நான்கு பணியாளர்கள்மீது காவல் துறையின் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள கோரப்பட்டதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு சென்னைப் பெருநகர் பிரிவு குற்றப் பிரிவு புலனாய்வுத் துறையினரால் (C.B.C.I.D.) புலன் விசாரணை நடைபெற்று வருகிறது.

(ஆ) ரூ.40,000 (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) மதிப்புள்ள போலி நுழைவுச் சீட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

**26—**

## பக்தர்கள் தங்கும் விடுதி

**வினா 17264—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்,** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பாளத்தளி அருள்மிகு துர்கை அம்மன் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் தங்கும் விடுதி ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பாளத்தளி அருள்மிகு துர்கை அம்மன் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு ரூபாய் 5 இலட்சம் மதிப்பீட்டில் தங்கும் விடுதி ஏற்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படுகிறது.



**27—**

## நோயாளிகள் விபரம்

**வினா 478—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனைக்கும், மேட்டூர் அரசு மருத்துவ மனைக்கும், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கும் 2000-2001 ஆம் ஆண்டில் வந்த வெளிநோயாளிகள் எத்தனை பேர்?

(ஆ) அதில் சிகிச்சைப் பெற்ற உள் நோயாளிகள் எத்தனை பேர்?

(இ) அவ்வாண்டில் செய்யப்பட்ட மருந்து இதர செலவுகள் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி அரசு மருத்துவமனைக்கும், மேட்டூர் அரசு மருத்துவ மனைக்கும் மற்றும் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் 2000-2001 ஆம் ஆண்டில் வந்த வெளிநோயாளிகள், உள்நோயாளிகள் எண்ணிக்கை கீழ்வருமாறு:

| | 2000-2001 ஆம் ஆண்டில் மருத்துவ மனைக்கு வந்த வெளிநோயாளிகள் | 2000-2001 ஆம் ஆண்டில் மருத்துவ மனைக்கு வந்த உள்நோயாளிகள் |
|---|---|---|
| எடப்பாடி அரசு மருத்துவமனை | 2,77,156 | 6,216 |
| மேட்டூர் அரசு மருத்துவமனை | 3,02,442 | 48,604 |
| அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை | 15,40,694 | 2,66,221 |

| (இ) மருத்துவமனையின் பெயர் | மருந்திற்காக செலவிடப்பட்ட தொகை (ரூபாய்) | இதர செலவுத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| எடப்பாடி அரசு மருத்துவமனை | 1,95,000 | 22,58,000 |
| மேட்டூர் அரசு மருத்துவமனை | 20,94,000 | 1,13,24,000 |
| அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை | 16,17,000 | 53,998 |

**28—**

## மருந்து தயாரிப்பு

**வினா 4772—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி, வண்ணாரப்பேட்டை அரசினர் மண்டல மருந்துசெய் நிலையத்தில் தயாரிக்கப்படும் மருந்து வகைகள் என்ன?

(ஆ) கடந்த 2000-2001-ல் அவற்றின் விற்பனை எவ்வளவு?

(இ) அதில் அதிக அளவில் விற்பனையாகியுள்ள மருந்து வகை எது?

(ஈ) அந்த மருந்தால் குணப்படுத்தப்படும் நோய் எது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி, வண்ணாரப்பேட்டை அரசினர் மண்டல மருந்துசெய் நிலையத்தில் தயாரிக்கப்படும் மருந்து வகைகளின் எண்ணிக்கை 33 ஆகும்.

(ஆ) கடந்த 2000-2001-ம் ஆண்டில் விற்பனையின் மதிப்பு ரூ.52,75,419.67 ஆகும்.





| (இ) அதிக அளவில் விற்பனையாகியுள்ள மருந்துவகைகள் | | (ஈ) குணமாகும் நோய்கள் |
|---|---|---|
| 1. சிவப்புகுக்கில் தைலம் | : | பலவகைப்பட்ட வாத ரோகங்கள் தீரும். பித்த வெடிப்பு, முகத்தில் உண்டாகும் கரும்புள்ளிகள் தீரும். தோலுக்கு வர்ணத்தை கொடுக்கும். |
| 2. கற்பூர தைலம் | : | தலைவலி, நெஞ்சுவலி, கபக்கட்டு தீரும், வாதநோய்கள் தீரும். |

**29—**

## தொழுநோயாளிகள்

**வினா 8484—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொழுநோயாளிகள் எண்ணிக்கையும் அவர்களின் நலன் காக்க அரசு எடுத்த நடவடிக்கையும் என்ன?

(ஆ) திருமணி மற்றும் பரனூரில் உள்ள தொழுநோயாளிகளுக்கு உதவ அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொழுநோயாளிகள் எண்ணிக்கை (31-12-2001 வரை) மொத்தம் 123, தொழு நோயாளிகளுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், தனியார் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றில் இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஊனத்தைத் தடுக்கும் அறுவை சிகிச்சை, கண்ணுக்கு சிறப்பு கண்ணாடி, பிரத்யேக காலணிகள் இலவசமாக வழங்கப்படுகிறது. அரசு மறுவாழ்வு மையங்களில் தொழிற்பயிற்சியும் வழங்கப்படுகின்றன.

(ஆ) திருமணியில் அரசு தொழுநோய் மையமும், மத்திய அரசினால் நடத்தப்படும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையமும் உள்ளன. இவை உணவு, தங்குமிடம், மருத்துவ சிகிச்சை ஆகியவை வழங்கப்படுகிறது. பரனூரில் சமூக நலத் துறையின் கட்டுப்பாட்டில் மிகப் பெரிய மறுவாழ்வு நிலையமும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

**30—**

## தொழுநோய் நிறுவனங்கள்

**வினா 8491—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தொழுநோயாளிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதைக் காரணம் காட்டி தனியாக இயங்கி வந்த தொழுநோய் நிறுவனங்களை பொது சுகாதார மருத்துவமனைகளுடன் இணைக்க அரசு ஏதேனும் ஆணை பிறப்பித்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கூட்டு மருந்து சிகிச்சை *1983* ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட போது, தொழுநோயாளிகள் எண்ணிக்கை *10,000* பேருக்கு *118* ஆக இருந்தது. இச்சிகிச்சையின் காரணமாக *1997*-ல் தொழுநோயாளிகளின் எண்ணிக்கை *10,000* பேருக்கு *7* ஆக குறைந்தது. இச்சிகிச்சை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக தமிழகத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்றடையும் வண்ணம் *1-7-1997*-ல் தொழுநோய் ஒழிப்புத் திட்டம், பொது சுகாதாரத் துறையுடன் ஏற்கெனவே இணைக்கப்பட்டு தீவிரமாக செயல்பட்டு வருகிறது. தற்போது நோயாளிகளின் எண்ணிக்கை *10,000*-க்கு *3.7* ஆக குறைந்துள்ளது.

**31—**

## மருத்துவமனை

**வினா 8617—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) பேரூராட்சிக்கு ஒரு அரசு மருத்துவமனை அமைக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) இல்லை எனில், அரசு மருத்துவமனை அருகில் இல்லாத பேரூராட்சி மக்கள் வசதிக்காக, ஊர்திகளில் மருத்துவர் சென்று வாரம் இருமுறை வைத்தியம் செய்ய அரசு ஆலோசிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) பேரூராட்சிகளில் அரசு மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் ஏற்கெனவே ஒன்றியத்தில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், சிறப்பு மருத்துவர்கள், உபகரணங்கள் மற்றும் *30* படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தற்பொழுது தமிழ்நாட்டில் உள்ள சில மாவட்டங்களில், மருத்துவர்கள் ஊர்திகளில் சென்று, நோயாளிகளுக்கு தக்க சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

**32—**

## ஊட்டச்சத்து உதவித் தொகை

**வினா 10578—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியத்தில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து உதவித் தொகை ரூ*500* கடந்த *2, 3* ஆண்டுகளாக வழங்கப்படாததை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடந்த *2000-2001* ஆம் ஆண்டில் வேலூர்

மாவட்டத்திற்கு, தேசிய மகப்பேறு நல நிதி உதவித் திட்டத்தில் ரூ.46.51 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டன. அவை அனைத்தும் முதுநிலை அடிப்படையில் தகுதியான கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது. மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தே, தகுதியான தாய்மார்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.41.73 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது கர்ப்பிணியாக உள்ள தாய்மார்களுக்கு மட்டும், உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. கூடுதல் நிதி ஒதுக்கீடு மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது. நிதி கிடைத்தவுடன் நிலுவையிலுள்ள மனுக்களுக்கும் வழங்கப்படும்.

33—

## மருத்துவர்கள்

**வினா 11578—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் அரசு பொது மருத்துவமனையில் எத்தனை ஓமியோபதி மற்றும் சித்த மருத்துவர்கள் பணிபுரிகிறார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

| சேலத்தில் உள்ள சித்தா பிரிவு | பணிபுரியும் சித்தா உதவி மருத்துவ அலுவலர் எண்ணிக்கை |
|---|---|
| 1. மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை | 1 |
| 2. மாவட்ட தலைமை மருத்துவமனை | 1 |
| 3. தாலுகா மருத்துவமனை | 6 |
| 4. அரசு சித்தா ஊராட்சி மருத்துவமனை | 2 |
| 5. அரசு சித்த மருந்தகம் | 1 |
| 6. அரசு ஆரம்ப சுகாதார நிலையம் | 14 |



| சேலத்திலுள்ள ஓமியோபதி பிரிவு | பணிபுரியும் ஓமியோபதி உதவி மருத்துவ அலுவலர் எண்ணிக்கை |
|---|---|
| அரசினர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை | 1 |
| தாலுகா மருத்துவமனை | 1 |

34—

## எய்ட்ஸ் நோய்

**வினா 11692—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 2000-2001 ஆம் ஆண்டு மே மாதம் முடிய "எய்டஸ்" நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், மருத்துவம் பெற்றவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் 2000-2001 ஆம் ஆண்டு மே மாதம் முடிய எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட 48 நபர்கள் புற நோயாளிகளாகவும், 12 நபர்கள் உள் நோயாளிகளாகவும் மருத்துவம் பெற்றனர்.

35—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா 13089—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரிய வத்தலாபுரத்தில் விரைவில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், பெரிய வத்தலாபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**36—**

## மருத்துவ ஊர்தி

**வினா 14663—திரு. பி. எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் நடமாடும் மருத்துவ ஊர்தி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் நடமாடும் மருத்துவ ஊர்தி அமைக்க அடுத்த நிதி ஆண்டில் வழிவகை செய்யப்படும்.

**37—**

## மருத்துவப் பணியாளர்கள்

**வினா 16973—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு அரசு மருத்துவமனையில் காலியாகவுள்ள மருத்துவப் பணியாளர்களை நியமிக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு அரசு மருத்துவமனையில் 1 மருந்தாளுநர், 2 செவிலிய உதவியாளர் தரம்-2 மற்றும் 1 துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. மருத்துவமனைப் பணியாளர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையைவிட மிகுதியாக உள்ளதால், காலியாக உள்ள செவிலிய உதவியாளர் மற்றும் துப்புரவுப் பணியாளர் பணியிடங்களை நிரப்ப இயலாது. காலியாக உள்ள மருந்தாளுநர் பணியிடத்தை நேரடி நியமனம் மூலம் நிரப்ப தடையாணை உள்ளதால், விருப்ப மாறுதல் முறையில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) வினா எழாது.

**38—**

## குடிநீர் வசதி

**வினா 1034—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு ஒன்றியம், மீனாட்சிபுரம் பஞ்சாயத்தைச் சேர்ந்த ஆரப்பள்ளம் கிராமத்தில் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், மீனாட்சிபுரம், சொக்கன்பட்டி மற்றும் ஆரப்பள்ளம் குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் மீனாட்சிபுரத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு மேல் நிலைத் தொட்டி கட்டப்பட்டு பகிர்மானக் குழாய் நீட்டிப்பு செய்து இரண்டு பொதுக்குழாய் அமைத்து ஆரப்பள்ளம் குடியிருப்பிற்கு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. 1999-ம் ஆண்டு, திட்டம் முடிக்கப்பட்டு, பராமரிப்புக்காக ஊராட்சிவசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

[2002 அக்டோபர் 25

39—

### குடிநீர்

**வினா 1038—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு ஒன்றியம், மீனாட்சிபுரம் பஞ்சாயத்து பாறைமலையாம்பட்டிக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை கிழக்கு ஒன்றியம், மீனாட்சிபுரம் ஊராட்சி பாறைமலையாம்பட்டிக்கு மீனாட்சிபுரம் ஆதிதிராவிடர் காலனி குடிநீர்த் திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவு நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து, பகிர்மானக் குழாய் நீட்டிப்பு செய்து ஒரு பொதுக் குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது.

40—

### குடிநீர்த் தொட்டி

**வினா 1040—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, களிமங்கலம் பஞ்சாயத்து ஓவலூர் கிராமத்தில் குடிநீர்த் தொட்டி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் ஏற்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், களிமங்கலம் ஊராட்சி, ஓவலூர் குடியிருப்பில் 10,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு, பகிர்மானக் குழாய் பதிக்கப்பட்டு, பொதுக் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. திட்டம் 2000-ம் வருடம் ஊராட்சி வசம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.



2002 அக்டோபர் 25]

41—

### மத்தியக் கூட்டுறவு வங்கி

**வினா 434—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் 2000-2001-க்கான வருமானம் என்ன?

(ஆ) அதன் 2000-2001-க்கான வரவு செலவுக்கான சுருக்கமான தகவலைத் தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் 2000-2001 ஆம் ஆண்டுக்கான வருமானம் (இறுதித் தணிக்கை) ரூ.110.96 கோடி.

(ஆ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் 2000-2001-க்கான சுருக்கமான வரவு செலவு விவரங்கள்:

சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி—
**இறுதித் தணிக்கை 2000-2001**

**வருவாய் 2000-2001**

| வ. எண் | இனங்கள் | ரூபாய் |
|---|---|---|
| 1 | வட்டி மற்றும் கழிவு | 1,08,83,37,497.86 |
| 2 | தரகு மாற்றுதல் | 91,24,578.20 |
| 3 | மானியங்களும் நன்கொடைகளும் | 27,12,434.00 |
| 4 | இதர வருவாய் | 89,54,784.99 |
| 5 | ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டது | 5,22,990.02 |
| | மொத்தம் | 110,96,53,285.07 |
| | | அல்லது ரூ.110.96 கோடி |

**சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி**
**இறுதித் தணிக்கை 2000-2001**

| வ. எண் | செலவினம் | ரூபாய் |
|---|---|---|
| 1 | வைப்பு மற்றும் கடன்கள் மீதான வட்டி | 88,83,15,992.20 |
| 2 | சம்பளம், படி மற்றும் வைப்பு நிதி | 13,22,04,458.36 |
| 3 | இயக்குநர் மற்றும் உட்குழு உறுப்பினர் கட்டணம் மற்றும் படிகள் | 5,925.00 |
| 4 | வாடகை, வரிகள், ஈட்டுறுதி, மற்றும் மின்கட்டணம் | 70,15,568.28 |
| 5 | அஞ்சல், தந்தி மற்றும் தொலைபேசிக் கட்டணம் | 18,555.72 |
| 6 | தணிக்கைக் கட்டணம் | 9,20,090.00 |
| 7 | தேய்மானம் | 5,15,840.92 |
| 8 | எழுதுபொருள், அச்சு மற்றும் விளம்பர செலவினம் | 40,32,530.22 |
| 9 | தவணை தவறிய கடன்களுக்கு ஒதுக்கீடு | 88,92,320.00 |
| 10 | செயலற்ற ஆஸ்திகள் மீதான ஒதுக்கீடு | 1,96,96,261.50 |
| 11 | இதர செலவினங்கள் | 1,31,28,977.30 |
| | மொத்தம் | **1,07,47,46,519.50** அல்லது ரூ.**107.47** கோடி. |

**42**—

## தொழில் தொடங்க கடன்

**வினா 4067—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





சேலம் மாவட்டத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் தொழில் தொடங்க 2000-2001-ல் எவ்வளவு கடன் வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில், சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் 2000-2001-ம் ஆண்டில் 14 பயனாளிகளுக்கு தொழில் தொடங்க கீழ்க்கண்டவாறு ரூ.130.49 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது:

| வ.எண் | கடனின் காரியம் | பயனாளிகளின் எண்ணிக்கை | கடன்தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | விசைத்தறி அமைக்க | 3 | 6.60 |
| 2. | கல்மாவு | 1 | 6.55 |
| 3. | நூற்பாலை அமைக்க | 1 | 75.00 |
| 4. | பேப்பர் பெட்டிகள் தயாரிக்க | 1 | 23.45 |
| 5. | அரிசி ஆலை அமைக்க | 4 | 8.59 |
| 6. | சிமெண்ட் கல் தயாரித்தல் | 1 | 1.25 |
| 7. | வெல்டிங் தொழிற்சாலை அமைக்க | 1 | 3.30 |
| 8. | அச்சுக்கூடம் அமைக்க | 1 | 3.75 |
| 9. | கரும்பு ஆலை அமைக்க | 1 | 2.00 |
| | மொத்தம் | 14 | 130.49 |

**43**—

## நியாய விலை கிளைக்கடை அமைத்தல்

**வினா 11064—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், ஆனைகுடி ஊராட்சி, அருள்நகர் (எ) பொத்தகாயன்விளை கிராமத்தில் நியாய விலை கிளை கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால் கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், ஆனைகுடி ஊராட்சி அருள்நகர் (எ) பொத்தக்காயன்விளை கிராமத்தில் மொத்தம் 54 குடும்ப அட்டைகளே உள்ளதால் பகுதிநேர நியாயவிலைக்கடை திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**44—**

## வழக்குகள்

**வினா 14056—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் நுகர்வோர் பாதுகாப்பு நீதிமன்றத்தில் 2000-2001 ஆம் ஆண்டு வரை நிலுவையில் உள்ள வழக்குகள் எத்தனை?

(ஆ) அவற்றை விரைவில் முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) 31-3-2001 அன்று வரை நிலுவையில் இருந்த வழக்குகள்

| | | |
|---|---|---|
| சேலம் | - | 347 |
| தருமபுரி | - | 146 |
| ஈரோடு | - | 281 |



2002 அக்டோபர் 25]

நாமக்கல் நுகர்வோர் குறைதீர் மன்றம் புதியதாக 24-1-2001 முதல் தொடங்கியது. ஆகையால் 31-3-2001 அன்று நிலுவை ஏதும் இல்லை.

(ஆ) வழக்குகளை விரைவில் முடிக்க மாநில குறைதீர் ஆணையம் அவ்வப்போது தக்க அறிவுரைகளை வழங்கி வருகிறது.

**45—**

## வாகனக் கடன்

**வினா 17077—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் வரை சிறு வாகனம் மற்றும் கனரக வாகனம் வாங்க எத்தனை பேர் கடன் கேட்டு விண்ணப்பித்திருந்தார்கள்?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேருக்கு கடன் வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் வரை 7 பேர் சிறு வாகனம் மற்றும் கனரக வாகனம் வாங்குவதற்கு கடன் அனுமதிக்கக் கோரி விண்ணப்பித்திருந்தனர்.

(ஆ) 7 பேருக்கு ரூ.13.19 இலட்சம் அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

**46—**

## குடும்ப அட்டைகள் வழங்குதல்

**வினா 17114—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் கிராமத்தில் குடும்ப அட்டைகள் விண்ணப்பித்தவர்களுக்கு விரைவாக அவற்றை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை —

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் கிராமத்திலிருந்து புதிய குடும்ப அட்டை கேட்டு பெறப்பட்ட 63 விண்ணப்பங்கள் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு அவற்றில் தகுதி வாய்ந்த ஏழு மனுதாரர்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 56 விண்ணப்பங்களும் தகுதியின்மை காரணமாக நிராகரிக்கப்பட்டு விட்டன.

**47—**

## நியாயவிலைக் கடைக்குக் கட்டடம்

**வினா 17155—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை நியாயவிலைக் கடைகள் சொந்தக் கட்டடம் மற்றும் தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன?

(ஆ) வாடகைக் கட்டடத்தில் செயல்படுவதை சொந்தக் கட்டடத்தில் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் சொந்தக் கட்டடம் மற்றும் வாடகைக் கட்டடத்தில் செயல்படும் நியாயவிலைக் கடைகளின் விவரம் பின்வருமாறு:—



| | முழுநேரக் கடைகள் | பகுதிநேரக் கடைகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. கூட்டுறவுச் சங்கங்களின் சொந்தக் கட்டடங்களில் செயல்படும் நியாயவிலைக் கடைகள் | 131 | 2 | 133 |
| 2. பல்வேறு திட்டங்களின்கீழ் அரசால் கட்டப்பட்டுள்ள கட்டடங்களில் செயல்படுபவை | 385 | 52 | 437 |
| 3. வாடகை இல்லாது தனியார் கட்டடங்களில் செயல்படுபவை | 41 | 94 | 135 |
| 4. வாடகை கட்டடத்தில் செயல்படுபவை | 482 | 28 | 510 |
| மொத்தம் | 1039 | 176 | 1215 |

(ஆ) மேலும், சேலம் மாவட்டத்தில் வாடகை கட்டடங்களில் செயல்படும் நியாயவிலைக் கடைகளுக்கு படிப்படியாக கட்டடம் கட்ட சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**48—**

## நில ஆக்கிரமிப்பு

**வினா 4752—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி கிராமம், தானப்பன்வளவு பகுதியிலுள்ள சுடுகாட்டு நிலத்தை சிலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நில ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி வட்டம், கோரணம்பட்டி கிராமம், புல

எண் 93-ல் உள்ள நிலம் ஓடைப் புறம்போக்காகும். மயான பூமி அல்ல. இந்நிலத்தில் 11 நபர்கள் பருத்தி, சோளம், அவரை பயிர் வைத்து ஆக்கிரமணம் செய்துள்ளனர். இவ்வாக்கிரமணங்களை உடனடியாக அகற்றுமாறு சேலம் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**49—**

## இலவச வேட்டி, சேலை

**வினா 5491—திருமதி. சி. எம். சூரியகலா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்திற்கு 2000 ஆம் ஆண்டு தமிழக அரசு வழங்கும் இலவச வேட்டி, சேலை வழங்கியது எவ்வளவு?

(ஆ) குடியாத்தம் தொகுதிக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000 ஆம் ஆண்டு இலவச வேட்டி/சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம்:

| வேட்டி | சேலை |
| --- | --- |
| 3,41,000 | 3,59,000 |

மேற்படி ஒதுக்கீட்டிலிருந்து குடியாத்தம் தொகுதிக்கு ஒதுக்கப்பட்ட விவரம்:

| வேட்டி | சேலை |
| --- | --- |
| 23,332 | 23,152 |

**50—**

## ஆக்கிரமிப்பு அகற்றல்

**வினா 9139—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம் சிவராமபுரம் செட்டித் தெருவில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தற்போது ஆண்டிமடம் தொகுதி, சிவராமபுரம் செட்டித் தெருவில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**51—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா 9932—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, பி. கொல்லாப்பட்டியில் வீட்டுமனைப் பட்டா வழங்காதவர்களுக்கு விரைவில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பிக்கிலி ஊராட்சி, பி. கொல்லாப்பட்டியில் குடியிருக்கும் நபர்களுக்கு புல எண் 233/1,2-ல் 46 பயனாளிகளுக்கு 13-6-2000-ல் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுவிட்டது.

**52—**

## இலவச குடியிருப்புப் பட்டா

**வினா 9954—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை தொகுதி, காந்தி நகரில் வசித்து வரும் குடியிருப்புவாசிகள் எத்தனை பேருக்கு இலவச பட்டா வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை தாலுகா, புதுக்கோட்டை நகரம், காந்தி நகரில் மொத்தம் எட்டு வீதிகள் உள்ளன. மொத்தம் 612 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதில் 438 குடியிருப்புகளுக்கு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 174 குடியிருப்புகளுக்கு மனைப் பட்டா வழங்க புதுக்கோட்டை மாவட்ட நில அளவை உதவி இயக்குநர் அலுவலகத்திலிருந்து நில அளவைச் சட்டம் பிரிவு 9(2)-ன்படி அறிவிப்பு கொடுக்கப்பட்டு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வறிவிப்பின் பேரில் குடியிருப்பவர்களின் மேல்முறையீடு ஏதும் வரப்பெறின் உரிய அவகாசத்திற்குப் பின் பரிசீலனை முடிந்த பின்னர் மாவட்ட ஆட்சியரால் பட்டா வழங்கப்படும்.

**53—**

## பட்டா

**வினா 9956—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை தொகுதி, அய்யனார்புரம் முதல் வீதி, நடு வீதி, இரண்டு மற்றும் மூன்றாம் வீதிகளில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை தாலுகா மற்றும் நகரம் அய்யனார்புரத்தில் மூன்று வீதிகள் உள்ளன. மொத்தம் 165 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதில் 45 குடியிருப்புகளுக்கு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 120 குடியிருப்புகளுக்கு



2002 அக்டோபர் 25]

மனைப் பட்டா வழங்க புதுக்கோட்டை மாவட்ட நில அளவை உதவி இயக்குநர் அலுவலகத்திலிருந்து நில அளவைச் சட்டம் பிரிவு 9(2)-ன்படி அறிவிப்பு கொடுக்கப்பட்டு நடவடிக்கையில் இருந்து வருகிறது. அவ்வறிவிப்பின் பேரில் குடியிருப்பவர்களின் முறையீடு ஏதும் வரப்பெறின் உரிய அவகாசமளித்து பரிசீலனை முடிவுற்ற பின்னரே பட்டா வழங்க இயலும்.

**54—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 11586—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வசனாங்குப்பம் கிராம மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், புலியூர் (மேற்கு), மதுரா, வசனாங்குப்பம் கிராமத்தில் பிற்பட்ட/ மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்கள் எவருக்கும் மனைப்பட்டா வழங்க வேண்டிய மனுக்கள் நிலுவையில் இல்லை. மனைப்பட்டா வழங்க காலி நத்தமும் இல்லை. வரன்முறை செய்து பட்டா வழங்கப்பட வேண்டிய ஆக்கிரமிப்பாளரும் எவரும் இல்லை. மேலும் வீடற்றவரும் எவருமில்லை. ஆதிதிராவிடர் மக்களைப் பொறுத்தவரை அந்த கிராமத்தில் மொத்தம் 105 குடும்பங்கள் உள்ளன. அவர்களுள் 85 குடும்பத்தினருக்கு நத்தம் நிலவரித் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 20 குடும்பங்களில் 10 குடும்பத்தினருக்கு பட்டா வழங்க போதுமான காலி மனை உள்ளது. மீதமுள்ள பத்து குடும்பத்தினருக்கு மட்டுமே பட்டா வழங்க மனை தேவைப்படுகிறது. இந்த பத்து நபர்களுக்கு மட்டுமே தனியே நில எடுப்பு நடவடிக்கை மேற்கொண்டு பட்டா வழங்க வழிவகை இல்லாததால் கிராமத்தில் உள்ள இதர ஆட்சேபணையற்ற புறம்போக்கு இடங்களில் இவர்களுக்கு பட்டா வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

55—

## பணி நேரம் நிர்ணயித்தல்

**வினா 12941—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் அலுவலர் அலுவலக பணி நேரம் நிர்ணயிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

கிராம நிர்வாக அலுவலர்களுக்கான பணி விதிகளின்படி கிராம நிர்வாக அலுவலராக நியமனம் செய்யப்பட்டவர் அவரது பொறுப்பு கிராமத்திலேயே தங்கி பணிபுரிதல் வேண்டும். மேலும் பொதுமக்கள் நலனுக்காக வாரத்தில் நான்கு நாட்கள் அதாவது திங்கள் முதல் வியாழன் முடிய தினந்தோறும் காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரையில் கண்டிப்பாக தங்களது பொறுப்பு கிராமத்தில் அலுவலகப் பணிகளை கவனிக்க வேண்டும். மேலும் முகாம் செல்வதாக இருப்பின் தங்களது அலுவலகத்தில், தாங்கள் முகாம் செல்லும் கிராமத்தின் விவரம், உத்தேசமாக திரும்பும் நேரம் முதலானவற்றைக் குறிக்கும் தகவல் பலகை ஒன்றையும் பராமரிக்கவேண்டும் என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

2. குறுவட்ட வருவாய் ஆய்வாளர்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு திங்கள் கிழமையும் முழுநேரமும், வியாழகிழமைகளில் முற்பகலிலும் பொதுமக்களின் நலனுக்காக தங்கள் குறுவட்ட தலைமையிடத்தில் இருக்க வேண்டும் என ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

56—

## விட்டுமனைப் பட்டாக்கள்

**வினா 13065—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல் நத்தம் ஊராட்சியில் ஏரியூர், ஈச்சம்பாடி, தண்டா, பட்டக்காரன் கொட்டாய்



ஆகிய கிராமங்களில் புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டி வாழும் ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல் நத்தம் ஊராட்சி ஏரியூர் கிராமத்தில் புல எண் 392-ல் புறம்போக்கு நிலத்தில் 8 நபர்கள் வீடு கட்டி வசித்து வருகிறார்கள். இப்புலமானது கிராமக் கணக்குகளின்படி "பாட்டை" என வகைபாடு செய்யப்பட்டுள்ளது. பிற்காலத்தில் சாலை விஸ்தரிப்புக்கு இந்நிலம் தேவைப்படும் என்பதால் இப்புலத்தில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. ஈச்சம்பாடி கிராமம் புல எண் 556-ல் 12 நபர்கள் வீடுகள் கட்டி வசித்து வருகின்றனர். இப்புலமானது "பாரஸ்ட் பங்களா" என பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இதனை கிராம நத்தமாக நில வகைபாடு மாறுதல் செய்ய முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு வருவதால் கிராம நத்தமாக நில வகைபாடு மாறுதல் செய்யப்பட்ட பின்னர் மேற்சொன்ன 12 குடும்பங்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க மாவட்ட ஆட்சியாளரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் சுஞ்சல் நத்தம் ஊராட்சியில் பட்டக்காரன் கொட்டாயில் புல எண் 685/4-ல் புறம்போக்கு நிலத்தில் 18 குடும்பங்கள் வீடு கட்டி வசித்து வருகின்றனர். இவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா எண் 415 முதல் 432/1409ன்படி வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டது.

57—

## விவசாய நிலம் ஒப்படை

**வினா 13654—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நிலமற்ற ஏழை ஆதிதிராவிடர் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கு விவசாய நிலம் ஒப்படை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி பேரூராட்சி பகுதியைச் சேர்ந்த நிலமற்ற ஏழை ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் இன மக்கள் நில ஒப்படை கேட்டு சமர்ப்பித்த மனு ஏதும் நாளது தேதியில் நிலுவையில் இல்லை. மேற்படி பேரூராட்சி பகுதியைச் சேர்ந்த நிலமற்ற ஏழை நபர்களிடமிருந்து நில ஒப்படை கேட்டு மனு வரப் பெற்றால், சேரன்மகாதேவி கிராமத்திலோ அல்லது சுற்றுப்புறத்திலோ அல்லது வேறு கிராமங்களிலோ ஒப்படை செய்ய தகுதியான நிலங்கள் தேர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் முதுநிலை வரிசைப்படி நில ஒப்படை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**58—**

## மனைப்பட்டா

**வினா 15111—திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் தொகுதி, கீரப்பாளையம், ஒன்றியம், பரதூர் சாவடி கிராம மக்களுக்கு மனைப்பட்டா உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

சிதம்பரம் தொகுதி, கீரப்பாளையம் ஒன்றியம், பரதூர் சாவடி கிராம புல எண் 32/1-ல் உள்ள குளம் புறம்போக்கில் வீடு கட்டி வசித்து வருபவர்களுக்கு 800ச.மீ. நிலப்பரப்பில் 10 நபர்களுக்கும், புல எண் 58-ல் உள்ள குளம் புறம்போக்கில் 1,100 ச.மீ. நிலப்பரப்பில் 18 நபர்களுக்கும் ஆக மொத்தம் 28 நபர்களுக்கு 1,900 ச.மீ. நிலப்பரப்பில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை தவிர பரதூர் சாவடி கிராமத்தில் மனைப்பட்டா



வழங்க வரன்முறை செய்யப்பட வேண்டிய ஆக்கிரமிப்பு ஏதுமில்லையென்றும் மேலும் மனைப் பட்டா வழங்க கிராம நத்தத்தில் காலியிடம் ஏதுமில்லை என்றும், கிராமத்தில் இந்து ஆதிதிராவிடர் அல்லாத இதர பிற்பட்ட அல்லது மிகவும் பிற்பட்ட வகுப்பினர் எவருக்கும் நில எடுப்பு செய்து மனைப்பட்டா வழங்க வேண்டிய நிலையும் இல்லை என்றும் கடலூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். மேற்கூறிய சூழ்நிலையில் பரதூர் சாவடி கிராம மக்களுக்கு மனைப்பட்டா வழங்க வேண்டிய வினா எழவில்லை.

**59—**

## கரும்பு உற்பத்தி

**வினா 7851—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி நல்லம்பள்ளி மற்றும் தருமபுரி ஒன்றியங்களில் எவ்வளவு ஏக்கரில் கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது?

(ஆ) அப்படி உற்பத்தி செய்யப்படும் கரும்பின் மொத்த அளவு எவ்வளவு ?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002ஆம் ஆண்டில் நல்லம்பள்ளி ஒன்றியத்தில் 1,190 எக்டேர் பரப்பிலும், தருமபுரி ஒன்றியத்தில் 1,580 எக்டேர் பரப்பிலும், ஆக மொத்தம் 2,770 எக்டேர் பரப்பில் கரும்பு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.

(ஆ) நல்லம்பள்ளி ஒன்றியத்தில் 14,300 மெட்ரிக் டன்னும், தருமபுரி ஒன்றியத்தில் 18,900 மெட்ரிக் டன்னும் ஆக மொத்தம் 33,200 மெட்ரிக் டன்னாக கரும்பு உற்பத்தி உள்ளது.

**60—**

## விவசாய இடுபொருட்கள்

**வினா 13613—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய இடுபொருட்களான யூரியா, சல்பேட், பாஸ்பேட் போன்றவற்றை விவசாய கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தாராளமாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மூலமாகவும், நீலகிரி மாவட்டத்தில், நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலமாகவும், இதர மாவட்டங்களில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மூலமாகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் விவசாய உறுப்பினர்களுக்குத் தேவையான அனைத்து வகை இரசாயன உரங்களையும் போதிய அளவு இருப்பு வைத்து, விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**61—**

## கடனுதவி

**வினா 13649—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி பாப்பாரப்பட்டி பகுதியில் அதிக அளவில் மலர்களை உற்பத்தி செய்து வரும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு சிறந்த தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்குவதுடன் நபார்டு வங்கி மூலம் கடன்களும் வழங்க நடவடிக்கை அரசு மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மலர் சாகுபடியாளர்கள் நவீன சாகுபடி முறைகள் மூலம் அதிக மகசூல் பெறும் பொருட்டு பயிற்சிகள் தோட்டக்கலைத் துறையின் மூலம் வழங்கப்படுகிறது. தர்மபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி பாப்பாரப்பட்டி பகுதியில் மலர் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் பயனடையும் பொருட்டு மலர் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 4 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு 16-2-2002 முதல் 20-2-2002 முடிய ஓசூர், தேன்கனிக்கோட்டை, கோவை, ஊட்டி, திருவனந்தபுரம் ஆகிய இடங்களுக்கு அழைத்து செல்லப்பட்டு மலர் சாகுபடியின் நவீன தொழில் நுட்பங்கள் குறித்தும், அறுவடைக்குப் பின் கையாள வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. நபார்டு வங்கி மூலம் கடன்கள் பெற முன்வரும் விவசாயிகளுக்கு உரிய வழிகாட்டு முறைகள் வழங்கப்படும்.





**62—**

## புதிய மரக்கன்றுகள்

**வினா 13688—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஒருங்கிணைந்த பண்ணை திட்டத்தின்கீழ் காய்ப்பில்லா மரங்களை அகற்றவும், புதிய கன்றுகள் நடுவதற்கும் அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் தோட்டக் கலைத் துறையால் செயல்படுத்தப்படவில்லை. ஆனால் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தில் பழைய காய்க்காத மரங்களுக்கு புனரமைப்பு மற்றும் மாற்று செடி நடவுத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சேரன்மகாதேவி வட்டாரம் உட்பட 6 வட்டாரங்களிலும் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 20 எக்டர் பரப்பில் பழத்தோட்டம் பயிர்கள் புனரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக எக்டருக்கு ரூ.3000 வீதம் ரூ.60,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சேரன்மகாதேவி வட்டாரத்திற்கென 5 எக்டர் பொருள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**63—**

## தோட்டக்கலைப் பயிர்கள்

**வினா 13689—திரு. பி.எச் பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதியில், தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தியை உயர்த்திடும் நோக்கத்தில் பல்வேறு திட்டங்கள் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் முந்திரி அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின்கீழ் 56 எக்டர் பரப்பு தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிக்குக் கொண்டு வர ரூ.1.27 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த வாசனைத் திரவியப் பயிர் திட்டத்தின்கீழ் புதிய இரகங்கள் அறிமுகப்படுத்தி, உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் 40 எண்ணிக்கை மினி கிட்டுகள் விநியோகம் செய்யப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், விவசாயிகளுக்கு நவீன சாகுபடி தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில், செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றன.

**64—**

## விதைகள் கிடைக்கச் செய்தல்

**வினா 13694—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் சான்று விதை தாராளமாகக் கிடைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைத் துறை அரசின் விதை மாற்று விகிதம் கொள்கையின்படி, ஒவ்வொரு பயிருக்கும் அப்பகுதியின் இயல்பு பரப்பிற்கு அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட விகிதத்தில் வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் விதை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சேரன்மகாதேவி பேரூராட்சியில் அமைந்துள்ள சேரன்மகாதேவி மற்றும் வீரவநல்லூர் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமும், தனியார் நிறுவனங்கள் மூலமும் இப்பகுதிக்குத் தேவையான தரமான விதைகள் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி விரிவாக்க மையத்தில், இந்த ஆண்டு கீழ்க்கண்ட விவரப்படி வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விதை விநியோகம் செய்யப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| நெல் | 34.235 மெ. டன் |
| பயறு வகைகள் | 0.345 மெ. டன் |
| மணிலா | 1.000 மெ. டன் |

மேலும், மேற்படி வேளாண்மை விரிவாக்க மையத்தில் தற்போது போதுமான அளவு நெல் மற்றும் பயறு வகைகளும் இருப்பில் உள்ளன.

**65—**

## உரப் பரிசோதனை நிலையம்

**வினா 14165—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் உரப் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் உரப் பரிசோதனை நிலையம் அமைக்க அரசிடம் தற்போது திட்டம் ஏதுமில்லை.

புதிதாக ஒரு உரப் பரிசோதனை நிலையம் வாடகைக் கட்டடத்தில் அமைக்க, உத்தேசமாக, ஆண்டொன்றுக்கு ரூ.16 இலட்சம் தேவைப்படுகிறது. தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, கோவில்பட்டி, நாகர்கோவில், உதகமண்டலம், திருவாரூர், தர்மபுரி, திண்டுக்கல், பரமக்குடி மற்றும் கும்பகோணம் ஆகிய 14 இடங்களில் உரப் பரிசோதனை நிலையங்கள் பரவலாக செயல்பட்டு வருகின்றன. தற்போதைய தேவைக்கு இவை போதுமானவையாக உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள 14 உரப் பரிசோதனை நிலையங்களிலும் ஆண்டொன்றுக்கு மொத்தம் 17220 உர மாதிரிகள் தரப் பரிசோதனை செய்யப்படுகின்றன. தரமற்ற உரங்களை விற்பனை செய்பவர்கள் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கை விவரம் பின்வருமாறு:

1. விற்பனை உரிமத்தை முடக்கி வைத்தல்

2. விற்பனை உரிமத்தை இரத்து செய்தல்

3. நீதிமன்றங்களில் வழக்குத்தொடர்தல் ஆகிய நடவடிக்கைககள் இத்துறையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) கேள்வி எழவில்லை.



2002 அக்டோபர் 25]

66—

## நிலக்கடலை வித்து உற்பத்தி

**வினா 14322—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டத்தில் நிலக்கடலை வித்து எத்தனை மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் நிலக்கடலை வித்து 372.879 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

67—

## கரும்புப் பயிர் சாகுபடி

**வினா 14356—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் கரும்பு எத்தனை ஏக்கரில் பயிரிடப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 3,15,316 எக்டேரில் கரும்புப் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

68—

## பயிர் சாகுபடி

**வினா 14402—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு

வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடியில் நவீன தொழில் நுட்பத்தை பிரபலமடையச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் விவசாயிகளின் தேவைக்கேற்ப சொட்டு நீர்ப் பாசனம், வீரிய காய்கறி விதைகள் விநியோகம் போன்ற திட்டங்கள் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் நுண்ணூட்ட உரங்கள், தோட்டக்கலைத் துறை மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் தொழில்நுட்பங்கள் விவசாயிகளின் தேவைக்கேற்ப நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

**69—**

## விவசாயிகளுக்கு மானியம்

**வினா 14771—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கும் அரசு மானியத்தை அதிகம் பேருக்கு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) அது எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் முக்கிய வேளாண்மைத் திட்டங்களான தேசிய பயறு பெருக்குத் திட்டம்,





ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டம், தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டம், எண்ணெய் வித்து பெருக்குத் திட்டம், நாபார்ட் போர்ட் திட்டம், தென்னை அபிவிருத்தித் திட்டம், தென்னை காண்டா மிருக வண்டு மற்றும் சிவப்பு கூன் வண்டுகளை இனக்கவர்ச்சிப் பொறி மூலம் கட்டுப்பாடு, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு வயல்வெளிப் பள்ளி போன்ற அனைத்துத் திட்டங்களும் எடப்பாடி தொகுதியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் மூலம் எடப்பாடி வட்டாரத்தில் 2,129 சிறு/மிகச்சிறு விவசாயிகளும், கொங்கணாபுரம் வட்டாரத்தில் 1,741 சிறு/மிகச்சிறு விவசாயிகளும், மகுடஞ்சாவடி வட்டாரத்தில் 1,805 சிறு விவசாயிகளும் பயனடைந்துள்ளார்கள்.

மேலும், அரசின் வேளாண்மைத் திட்டங்கள் அனைத்தும் சிறு/குறு விவசாயிகளுக்கு மட்டுமே வழங்கப்படும். திட்டப்பணி செலவின குறியீடு மாவட்ட வாரியாக மாவட்டங்களுக்குப் பிரித்து அளிக்கப்பட்டு தற்போது வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது குறித்து சேலம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அவர்களுக்கு ஆணை வழங்கி அரசின் பரிந்துரைப்படி சிறு/குறு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

**70—**

## நறுமணப் பயிர்கள்

**வினா 15247—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் நறுமணப் பயிர்களை அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதியில், நறுமணப் பயிர்கள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மூலிகைச் செடிகள் வளர்ப்புத் திட்டம் போன்ற திட்டங்கள் தோட்டக்கலைத் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. *2001-2002* ஆம் ஆண்டில் மேற்படி திட்டங்களுக்காக ரூ.*0.45* இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, *15* செயல்விளக்கத் திடல்களும் *1* எக்டர் பரப்பு கூடுதலாகவும் சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டது. *2002-2003* ஆம் ஆண்டில் பத்தமடை பேரூராட்சி விவசாயிகளுக்கு மேற்படி திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

**71—**

## உற்பத்தியை அதிகரித்தல்

**வினா 15248—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் மலர்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதிக்குட்பட்ட பகுதியில் காய்கறிகள் மற்றும் மலர்கள் உள்ளிட்ட அனைத்து தோட்டக்கலைப் பயிர்களின் அபிவிருத்திக்காக தோட்டக்கலைத் துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடந்த ஆண்டு இலக்கான 225 எக்டர் பரப்பு உயர் ரக காய்கறிகளிலும், 2 எக்டர் பரப்பு மலர்களிலும் கூடுதலாக சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டது. பத்தமடை பேரூராட்சி பகுதி விவசாயிகள் விருப்பம் தெரிவித்தால் முன்னுரிமை அடிப்படையில் மானியங்கள் 2002-2003 ஆம் ஆண்டில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும்.





**72—**

## தோட்டக்கலைப் பயிர்

**வினா 15249—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பினை அதிகரிப்பதற்கென பல திட்டங்களை தோட்டக்கலைத் துறை நடைமுறைப்படுத்தி வருகிறது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், வெப்ப மண்டல பழப்பயிர் அபிவிருத்தித் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டம், மலர் சாகுபடி திட்டம், வேர் மற்றும் கிழங்கு பயிர்கள் அபிவிருத்தித் திட்டம் மற்றும் மூலிகைப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம் போன்ற திட்டங்களின் வாயிலாக திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் *525* எக்டர் பரப்பு ரூ.*10.5* இலட்சம் செலவில் ஆண்டுதோறும் சாகுபடிக்கு கொண்டுவரப்படுகிறது. பத்தமடை பேரூராட்சி பகுதிகளைச் சார்ந்த விவசாயிகளுக்கு *2002-2003* ஆம் ஆண்டில் இத்திட்டங்களின்கீழ் முன்னுரிமை அளிக்கப்படும்.

**73—**

## மானிய விலையில் கருவிகள்

**வினா 15251—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் பண்ணை இயந்திரமாக்கும் திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு மானிய விலையில் கருவிகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பத்தமடை பேரூராட்சி அம்பாசமுத்திரம் வட்டத்தில் வருகிறது. நடப்பாண்டில் நெல்லை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 21 பவர் டில்லர்களில் 5 எண் அம்பாசமுத்திரம் வட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு விநியோகமும் செய்யப்பட்டு விட்டது. மேற்கண்ட பவர் டில்லர்கள் தவிர மேலும் ஒரு கதிரடிக்கும் கருவி ஒரு அறுவடைக் கருவி ஆகியவை அம்பாசமுத்திரம் வட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டும் இன்னமும் வழங்கப்படவில்லை. தேவைப்படும் விவசாயிகள் உடனே அம்பாசமுத்திரம் வேளாண்மை உதவி இயக்குநரைத் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்று கள அலுவலர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**74—**

## தென்னை மேம்பாட்டுத் திட்டம்

**வினா 15255—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் தென்னை மேம்பாட்டுத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**



2002 அக்டோபர் 25]

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் தென்னை மேம்பாட்டிற்கென கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:—

1. கன்றுகள் விநியோகம்

| | |
|---|---|
| நெட்டை | 60,000 எண்கள் |
| நெட்டை x குட்டை | 28,000 எண்கள் |

2. ஒட்டுண்ணிகள் விடுவித்து தென்னை கருந்தலைப் புழுவினைக் கட்டுப்படுத்தல் 600 ஹெக்டேர்

3. தென்னை உற்பத்தியினை அதிகரிக்க ஒருங்கிணைந்த பண்ணையம் மானியத் தொகை ரூ.8.09 இலட்சம்

4. கொச்சியில் உள்ள தென்னை வளர்ச்சி வாரியம், மானிய நிதி உதவித் திட்டத்தில் ரூ.3.425 இலட்சம் ஒதுக்கீடு உள்ளது.

மேற்கண்ட திட்டங்கள் பத்தமடை பேரூராட்சி உட்பட மாவட்டத்தின் முழுப் பகுதிகளிலும் செயல்படுத்தப்படுகின்றன. பத்தமடையில் உள்ள விவசாயிகள் அருகிலுள்ள வேளாண்மைத் துறை களப் பணியாளர்களை அணுகி விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**75—**

## பயிர் உரங்கள்

**வினா 15256—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி பத்தமடை பேரூராட்சியில் பயிர் உரங்கள் தடையின்றிக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம்· எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) பத்தமடை பேரூராட்சிப் பகுதியில் பயிர் உரங்கள் தடையின்றிக் கிடைக்க உரிய நடவடிக்கை வேளாண்மைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2002 அக்டோபர் 25

(ஆ) பத்தமடை பேரூராட்சி பகுதியில் உள்ள தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலமாகவும் மற்றும் இரு தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களின் வாயிலாகவும் பருவந்தோறும் தேவையான உரங்கள் முன் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது இப்பகுதி விவசாயிகளுக்குத் தேவைப்படும் உரங்கள் போதிய அளவு இருப்பில் உள்ளது. ராபி 2001-2002 பருவத்தில் இப்பேரூராட்சிப் பகுதியில் வழங்கப்பட்ட உரங்கள் அளவு விவரம் பின்வருமாறு:

| வ. எண் | உரம் | விநியோகம் செய்த அளவு (அலகு டன்னில்) | | மொத்தம் | இருப்பு |
|---|---|---|---|---|---|
| | | தனியார் உர விற்பனை நிலையங்கள் | தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம் | | |
| 1. | யூரியா | 134 | 60 | 194 | 24 |
| 2. | டிஏபி | 48 | 40 | 88 | 8 |
| 3. | அம்மோனியம்சல்பேட் | 6 | .. | 6 | 10 |
| 4. | 17:17:17 | 46 | 14 | 60 | 16 |
| 5. | 16:20:0 | 25 | 6 | 31 | 15 |
| 6. | 20:20:0 | 16 | .. | 16 | 20 |
| 7. | எம்ஓபி | 125 | 69 | 194 | 25 |

இப்பகுதியில் உள்ள விவசாயிகளிடமிருந்து உரம் கிடைக்கவில்லை என்ற புகார் ஏதும் இல்லாதவாறு உர விற்பனை பிரதிநிதிகள் மூலமாக அனைத்து உரங்களும் இருப்பு வைக்கப்பட்டு, தேவை மாதம் தோறும் ஆய்வு செய்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**76—**

## மூலிகைப் பயிர்கள்

**வினா 15258—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 அக்டோபர் 25]

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் மூலிகைப் பயிர்கள் சாகுபடியை அறிமுகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002-ம் ஆண்டில் ஒருங்கிணைந்த மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டத்திற்கு மூலிகை மற்றும் நறுமணப் பயிர்களுக்கான ஒதுக்கீடு 0.45 இலட்சம் ஆகும். 15 எண்கள் செயல் விளக்கத் திடலும், ஒரு ஹெக்டேர் பரப்பு விரிவாக்கமும் செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் பத்தமடை பேரூராட்சி பகுதியைச் சார்ந்த விவசாயிகள் இப்பயிர்களைச் சாகுபடி செய்ய ஆர்வம் காட்டினால் நிதி ஒதுக்கீடு அதிகம் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

**77—**

## விதைப் பரிசோதனை நிலையம்

**வினா 15261—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் விதைப் பரிசோதனை நிலையம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம் முழுமையாக சேவை செய்ய விதைப் பரிசோதனை நிலையம் ஒன்று தற்போது செயல்பட்டு வருவதால், சேரன்மகாதேவி தொகுதிக்குட்பட்ட பத்தமடை, பேரூராட்சியில் தனியாக மற்றொரு விதைப் பரிசோதனை நிலையம் அமைக்க அவசியமில்லை.

78—

## உழவர் பயிற்சி நிலையம்

**வினா 15267—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் உழவர் பயிற்சி நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் ஏற்கெனவே ஒரு உழவர் பயிற்சி நிலையம் நடைபெற்று வருகிறது. மேலச்சேவல் பேரூராட்சி திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தது. எனவே, அம்மாவட்டத்தில் புதியதாக ஒரு உழவர் பயிற்சி நிலையம் ஆரம்பிப்பதற்கான அவசியம் எழவில்லை என்று கருதப்படுகிறது.

79—

## தோட்டக்கலைப் பயிற்சி

**வினா 15269—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் தோட்டக்கலைப் பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**





(அ) மற்றும் (ஆ) தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கில் தோட்டக்கலைத் துறை மூலம் விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், முந்திரி மற்றும் காளான் சாகுபடி முறைகள் மற்றும் முந்திரி பயிர் பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. 2001-2002ம் ஆண்டில் ரூ.20,000 செலவில் 40 விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. 2001-2002-ம் ஆண்டில் ரூ.20,000 செலவில் 40 விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு பற்றிய பயிற்சியும் ரூ.18,750 செலவில் 125 விவசாயிகளுக்கு முந்திரி சாகுபடி பற்றிய பயிற்சியும் அளிக்கப்பட்டன. மேலச்சேவல் பேரூராட்சி பகுதி விவசாயிகள் விருப்பம் தெரிவித்தால், 2002-03-ம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் மேற்படி திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

80—

## நறுமணப் பயிர்கள்

**வினா 15273—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் நறுமணப் பயிர்கள் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் அரசு செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தோட்டக்கலைத் துறை தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரித்திடும் வகையில் ஒருங்கிணைந்த வாசனைப் பயிர் அபிவிருத்தித் திட்டம், மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் அபிவிருத்தி திட்டம் ஆகிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

2001-2002 ஆம் ஆண்டிற்கு திருநெல்வேலி மாவட்டத்திற்கு மருத்துவம் மற்றும் நறுமணப் பயிர்கள் திட்டத்தின்கீழ் ரூ.0.45 இலட்சம், செயல்

விளக்க பாத்திகள் மற்றும் பரப்பு விரிவாக்கம் செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உற்பத்தியாளர்களுக்கு பயிற்சியளித்திடும் வகையில் 15 செயல் விளக்கப் பாத்திகளும் ஒரு எக்டர் பரப்பில் பரப்பு விரிவாக்கமும் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலச்சேவல் பேரூராட்சிப் பகுதி விவசாயிகள் விருப்பம் தெரிவித்தால், 2002-03ம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் நறுமணப் பயிர்கள் திட்டம் அப்பகுதியில் செயல்படுத்தப்படும்.

81—

## தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி

**வினா 15274—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தோட்டக்கலை முன்னேற்றத்திற்காக திருநெல்வேலி மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறையினரால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், முந்திரி அபிவிருத்தித் திட்டம், மேற்குத் தொடர்ச்சி அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த வெப்ப மண்டல அபிவிருத்தித் திட்டம், மருத்துவப் பயிர் அபிவிருத்தித் திட்டம், நறுமணப் பயிர்கள் திட்டம், வேர் மற்றும் கிழங்குகள் அபிவிருத்தித் திட்டம், மலர்கள் அபிவிருத்தித் திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஆதாரங்களைக் கொண்டு சுமார் 525 எக்டர் அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2002-2003-ம் ஆண்டில் மேலச்சேவல் பேரூராட்சிப் பகுதி விவசாயிகள் தோட்டக்கலைப் பயிர்களைப் பயிரிட முன் வருவார்களேயானால், அப்பகுதியில் முன்னுரிமையின் அடிப்படையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இது சம்பந்தமாக திருநெல்வேலி தோட்டக்கலை உதவி இயக்குநர் தகுந்த உதவிகளை மேற்கொள்ளுமாறு அறிவுத்தப்பட்டுள்ளார்.



82—

## மரங்களைக் காத்தல்

**வினா 15283—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் தென்னை மரத்தினை தாக்கும் கருந்தலைப் புழுவை ஒட்டுண்ணிகள் கொண்டு கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையினை தலைமையிடமாகக் கொண்டு அங்குள்ள ஒட்டுண்ணி ஆய்வகத்தில் தென்னையில் தோன்றும் கருந்தலைப் புழுவினை கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆண்டுதோறும் திருநெல்வேலி மாவட்டத்திற்கு 600 ஹெக்டேர் அளவிற்கு ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. சேரன்மகாதேவி தொகுதி பத்தமடை பேரூராட்சியில் உள்ள தென்னை வளர்ப்போரும் இந்த வசதியினை பயன்படுத்திக்கொள்ளலாம், அருகிலுள்ள ஊராட்சி ஒன்றிய வேளாண்மை வளர்ச்சி அலுவலரை அணுகி தேவையான ஒட்டுண்ணியினைப் பெற்றுக்கொள்ளலாம். ஹெக்டேர் ஒன்றுக்கு சேவைக் கட்டணமாக ரூ.35/- வசூல் செய்யப்படுகிறது.

83—

## தோட்டக்கலைப் பயிற்சி

**வினா 15285—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் தோட்டக்கலைப் பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தோட்டக்கலைத் துறையால் ஒவ்வோர் ஆண்டும், பழங்கள், காளான், முந்திரி, காய்கறிகள், மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் மற்றும் கோகோ போன்ற தோட்டக்கலைப் பயிர்களில் உயர் தொழில்நுட்பம் பற்றி விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் நிதி ஒதுக்கீட்டிற்குத் தக்கவாறு பயிர்ப் பாதுகாப்பு முகாம்கள் நடத்தப்பட்டு தோட்டக்கலைப் பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களைத் தடுக்கும் முறைகள் குறித்து கற்பிக்கப்படுகிறது. நடப்பு நிதி ஆண்டில் வீரவநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட விவசாயிகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு மேற்கண்ட பயிற்சிகள் அளிக்கப்படும்.

**84—**

## சேமிப்புக் கிடங்கு

**வினா 17109—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் விதைகள் சேமிப்புக் கிடங்கு ஒன்று புதிதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் அரசு கட்டடத்தில் விதைகள் சேமிப்புக் கிடங்கு (வேளாண்மை விரிவாக்க மையம்) ஒன்று செயல்பட்டு வருகிறது.

**85—**

## விதைகள் சேமிப்புக் கிடங்கு கட்டுதல்

**வினா 17842—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேலம் மாவட்டம், இடைப்பாடி தொகுதி இடைப்பாடியில் விதைகள் சேமிப்புக்கிடங்கு ஒன்று புதிதாக கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், இடைப்பாடி தொகுதி இடைப்பாடியில் (எடப்பாடி) அரசுக் கட்டடத்தில் விதைகள் சேமிப்புக் கிடங்கு (வேளாண்மை விரிவாக்க மையம்) ஒன்று செயல்பட்டு வருகிறது.

**86—**

## மானிய விலையில் மண்வெட்டி, கடப்பாரை

**வினா 17859—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், இடைப்பாடி தொகுதியில் உள்ள இடைப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் மண்வெட்டி, கடப்பாரை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் மண்வெட்டி, கடப்பாரை ஆகியவற்றை மானிய விலையில் வழங்க அரசிடம் திட்டம் ஏதும் தற்போது இல்லை. 50 சதவீத மானிய விலையில் விவசாய தொழிலாளர்களுக்கு கடப்பாரை மற்றும் மண்வெட்டி வழங்கும் திட்டம் ரூ.28 இலட்சம் செலவில் 44680 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் 1996-1997 ஆம் ஆண்டில் எல்லா மாவட்டங்களிலும்

[2002 அக்டோபர் 25

செயல்படுத்தப்பட்டது. அந்த வகையில் சேலம் மாவட்டத்தில் ரூ.72,417 மானிய உதவியுடன் 1395 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**87—**

### சத்துணவுப் பணியாளர்

**வினா 5392—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, அரிகேசவநல்லூர் பஞ்சாயத்திலுள்ள தென்திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் சத்துணவு பணியாளரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், அரிகேசவநல்லூர் ஊராட்சி, தென்திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி சத்துணவு மையத்தில் உள்ள சத்துணவு உதவியாளர் காலியிடத்தினை உடனடியாக நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**88—**

### சத்துணவு உருண்டை

**வினா 10222—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூவிருந்தவல்லி தொகுதியில் பால்வாடிகளில் சத்துணவு உருண்டை எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**



2002 அக்டோபர் 25]

பூவிருந்தவல்லி தொகுதியில் பால்வாடிகளில் இணை உணவு (சத்துணவு உருண்டை) வழங்கப்பட்டு வருகின்றது.

**89—**

### மானியம்

**வினா 12368—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-ம் ஆண்டில் தன்னார்வு தொண்டு நிறுவனங்களிலுள்ள குழந்தைகளுக்கு உணவு, உடை போன்றவற்றிற்கு அரசு எவ்வளவு மானியம் வழங்கி உள்ளது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சமூக நல ஆணையரகம் மற்றும் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரகம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவுச் செலவினம் மட்டும் சமூக நலத்துறை மூலம் மானியமாக வழங்கப்படுகிறது. ஆனால் உடைக்காக மானியம் எதுவும் சமூக நல ஆணையரகம் மற்றும் ஊனமுற்றோர்க்கான மாநில ஆணையரகம் ஆகியவற்றால் வழங்கப்படுவதில்லை.

2. மேலும் 2000-2001 ஆம் ஆண்டில், 95 தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களில் உள்ள 6958 ஊனமுற்ற குழந்தைகள் பயனடையும் வகையில் உணவூட்டுச் செலவினமாக ரூ.137.06 இலட்சம் ஊனமுற்றோர் மாநில ஆணையரகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. சமூக நல ஆணையரகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 1999-2000-ம் ஆண்டில் தன்னார்வு தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வரும் 535 குழந்தைகள் இல்லங்களில் உள்ள 13127 ஆதரவற்ற குழந்தைகள் பயன் பெறும் வண்ணம் ரூ.276.94 இலட்சமும், 2000-2001 ஆம் ஆண்டில் 531 குழந்தைகள் இல்லங்களில் உள்ள 11702 குழந்தைகள் பயனடையும் வகையில் ரூ.274.14 இலட்சமும் உணவூட்டுச் செலவினமாக அளிக்கப்பட்டுள்ளது.

3. சமூக பாதுகாப்புத் துறையின் மூலம் 2000-2001-ம் ஆண்டில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு உணவின

[2002 அக்டோபர் 25

வகையில் ரூ.29.56 இலட்சமும், உடையின வகையில் ரூ.10,000/- மும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

90—

## கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு கல்வி

**வினா 13958—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு சத்தியா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகத்தின் மூலம் கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு கல்வி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் என்ற இடத்தில் சமுதாயத்தில் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட நிலையில் உள்ள குழந்தைகளின் நலத்திற்காக, சத்தியா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகம் இயங்கி வருகின்றது. இக்காப்பகங்களில் 5 வயது முதல் 18 வயது வரையிலான குழந்தைகள் பராமரிக்கப்பட்டு அவர்களுக்கு இலவச உறைவிடம், உணவு, மருத்துவ வசதி ஆகியவற்றுடன் இலவச கல்வியும் அளிக்கப்பட்டு வருகின்றது. சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து கைவிடப்பட்ட சிறார்கள் மேற்படி காப்பகத்தில் சேர்க்க கோரிக்கை ஏதும் பெறப்பட்டால் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்படும். இது தவிர, திருநெல்வேலி மாவட்டத்தில் ஏழு தொண்டு நிறுவனங்களுக்கு 915 ஆதரவற்ற குழந்தைகளை பராமரிக்க தலா ரூ.200/- வீதம் மாதம் ஒன்றுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு தொண்டு நிறுவனங்களில் சேர்க்கை கோரி கல்வியாண்டின் தொடக்கத்தில் கோரிக்கை பெறப்பட்டால் பரிசீலனை செய்யப்படும்.



2002 அக்டோபர் 25]

91—

## சிறப்பு இல்லங்கள்

**வினா 14514—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை இளம் குற்றவாளிகள் சிறப்பு இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்?

(ஆ) அவர்களை திருத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் இத்துறையின் கீழுள்ள சிறப்பில்லங்களில் சேர்க்கப்பட்ட இல்லவாசிகளின் விவரம் வருமாறு:—

| வருடம் | செங்கல்பட்டு அரசினர் சிறப்பில்லம் | சென்னை-10, அரசினர் பெண்கள்/சிறப்பு/ இளைஞர் இல்லம் |
|---|---|---|
| 1997 | 35 | 5 |
| 1998 | 32 | 5 |
| 1999 | 21 | 3 |
| 2000 | 23 | 1 |
| 2001 | 24 | 4 |
| 2002 (நாளது வரை) | 3 | 2 |

(ஆ) இல்லவாசிகள், இல்லத்தில் தங்கியிருக்கும் காலத்தில், இவர்களுக்கு உளவியல் ரீதியான அணுகுமுறையுடன் கல்வி மற்றும் தொழில்கல்வி பயிற்றுவிக்கப்பட்டு இவ்வில்லவாசிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், வளர்ச்சி மேம்பாட்டிற்கும் வழிவகை செய்யப்படுகிறது.

92—

## உதவித் தொகை

**வினா 14711—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஆதரவற்ற அனாதைகளுக்கு பிரதி மாதம் அரசு வழங்கி வரும் உதவித்தொகையினை அதிகரிக்க அரசு திட்டம் கொண்டு வருமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

அரசு (நிலை) ஆணை எண் 86, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 2-6-2002-ல் 1-4-2000 முதல் மாத ஓய்வூதியத்தொகை ரூ.150/-லிருந்து ரூ.200/- ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளதால், இதனை அதிகரிக்கத் திட்டம் ஏதுமில்லை.

93—

## உதவித் தொகை

**வினா 16271—செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதியோர், விதவை, ஊனமுற்றோர் உதவித்தொகை பெற ஆண் வாரிசு இருக்கக்கூடாது என்ற நிபந்தனையை மாற்ற அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம் மற்றும் முதியோர் உதவித்தொகை (கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள்) திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் அரசு (நிலை) ஆணை எண் 92, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 2-6-1998-ன்படி 18 வயது நிரம்பிய வாரிசுகள் இருந்தாலும் தகுதியின் அடிப்படையில் உதவித்தொகை வழங்கலாம் என வரையறுக்கப்பட்டுள்ளது. பிற திட்டங்களான முதியோர் உதவித்தொகை (பொது) திட்டம், முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற



உடல் ஊனமுற்றோர்) திட்டம் மற்றும் முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்) திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மேற்காணும் நிபந்தனையை மாற்ற இயலாது.

94—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 17031—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியிலுள்ள சாந்தபுத்தூர் ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியிலுள்ள சாந்தபுத்தூர் ஆதிதிராவிடர்கள், எடக்குடி வடபாதி கிராமத்தில் புல எண் 190/2-ல் நத்தம் புறம்போக்கில் வசித்து வருவதால் இவர்களுக்கு வருவாய் வட்டாட்சியரால் வீட்டுமனைப் பட்டாக்கள் முன்பே வழங்கப்பட்டுள்ளன.

95—

## சாலை அமைத்தல்

**வினா 7540—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம் பாலமடை பஞ்சாயத்து கண்ணாம்பூச்சியிலிருந்து செல்வதற்கு சாலை போட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

[2002 அக்டோபர் 25

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கண்ணாம்பூச்சியிலிருந்து பாலமலைக்கு செல்ல பாலமலைக் காப்புக்காட்டில் இரண்டு கிலோ மீட்டர் நீள கால்நடைப் பாதை மட்டுமே உள்ளது. 2 கி.மீ. நடைபாதைக்குப் பதில் சாலை அமைப்பதானால் 5 கி.மீ. நீளத்துக்கு மேல் காப்பு வனப்பகுதியினை அழிக்க வேண்டும். இப்பகுதி செங்குத்தாகவும், விலை உயர்ந்த மரங்கள், புதர்கள் உள்ள பகுதியாகவும் உள்ளதாலும், இங்கு சாலை அமைக்கவேண்டுமெனில் இங்குள்ள 80 சதவிகித மரங்களை அழிக்கவேண்டும் என்பதாலும், இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கும் என்பதாலும், இப்பகுதியில் சாலை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**96—**

## காடுகளைப் பாதுகாத்தல்

**வினா 13388—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சிப் பகுதியில் காடுகள் அழிந்து வருவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மேற்படி வனப் பகுதியில் காடுகள் அழிந்து வருவதாகத் தகவல்கள் ஏதும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**97—**

## தொலைபேசி வசதி

**வினா 13403—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 அக்டோபர் 25]

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வன அலுவலகத்திற்கு தொலைபேசி வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் சரகம், வேலூர் மண்டல கட்டுப்பாட்டிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு தருமபுரி மண்டலத்தில் கொண்டுவரப்பட்டது. தருமபுரி மண்டலத்தில் கம்பியில்லாத் தந்தி வசதி உள்ளது. பெண்ணாகரம் தருமபுரியிலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ளதால் இச்சரகத்தில் உள்ள காடுகளில் சமூக விரோதிகளால் மரம் கடத்தல், வன விலங்குகளை வேட்டையாடுதல் போன்ற செய்திகள் கம்பியில்லா தந்தி மூலம் உடன் அறியப்பட்டு, நடவடிக்கைகள் உடனுக்குடன் நடைபெற்று வருகிறது. மேலும் தருமபுரி வனப் பாதுகாவலர் மற்றும் மாவட்ட வன அலுவலர் கட்டுப்பாட்டில் அலுவலகம் மற்றும் இல்லங்களுக்கு தொலைபேசிகள் இயங்கி வருகின்றன. இந்நிலையில் பெண்ணாகரம் சரகத்திற்கு உடனடியாக புதிய தொலைபேசி வசதி செய்து தரவேண்டிய அவசியம் எதுவும் தற்போது எழவில்லை.

**98—**

## ஈப்பு வழங்குதல்

**வினா 13424—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வன அலுவலகத்திற்கு புதிய ஈப்பு (ஜீப்) வழங்க அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரியை தலைமையிடமாகக் கொண்டு தருமபுரி வன மண்டலம் மே 1999 முதல் இயங்கி வருகிறது. தருமபுரியிலிருந்து சிறிது தொலைவில்தான் பெண்ணாகரம் சரகம் உள்ளது. தற்போதைய நிலையில் தருமபுரி வனப் பாதுகாவலரின் அருகில் வனப் பாதுகாப்பு படை ஒன்று தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. அத்தியாவசியம் மற்றும் அவசரமான சூழ்நிலை ஏற்படும் நிலையில் தருமபுரி வனப் பாதுகாவலர் தனது சார்நிலை அலுவலர்களுடன் கம்பியில்லா தந்தி மற்றும் தொலைத் தொடர்பு கருவிகளைப் பயன்படுத்தி தகவல்களை உடனுக்குடன் பரிமாற்றம் செய்து அவர்களது வாகனங்களைப் பயன்படுத்தி துரித நடவடிக்கை எடுக்க தேவையான வாய்ப்புகள் உள்ளன. எனவே இச்சரகத்திற்கு தற்சமயம் தனியாக வாகனம் எதுவும் வழங்கவேண்டிய அவசியமில்லை.

**99—**

## தொழிற்பேட்டைகள்

**வினா 2409—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் நடைபெற்று வரும் அரசு தொழிற்பேட்டைகள் எத்தனை?

(ஆ) அதில் நடைபெற்று வரும் தொழிற்சாலைகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் மூன்று சிறுதொழில் பேட்டைகளும் நான்கு குறுந்தொழில் கூடங்களும் இயங்கி வருகின்றன.

(ஆ) அவற்றில் நடைபெற்று வரும் தொழிற்சாலைகள் மொத்தம் 425 ஆகும்.



**100—**

## கடனுதவி

**வினா 13073—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊரகத்தொழில் செய்ய பயிற்சி நிலையங்களில் குறுகிய கால பயிற்சியளிப்பதுடன் உரிய கடன் உதவி வழங்கி அவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட உரிய சூழ்நிலையினை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) படித்த இளைஞர்கள் சுயமாக தொழில் தொடங்க முன்வந்தால் அவர்களுக்கு பாரதப் பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டு, பின் வங்கிக் கடன் பெற்று தன்னம்பிக்கையுடன் தொழில் செய்யும் சூழ்நிலை உருவாக்கித் தரப்படுகிறது. தவிர தற்போது 5 ஆண்டுகளில் 5 இலட்சம் மகளிருக்கு பல்வேறு துறைகள் மூலம் தொழில் முனைவோர் பயிற்சியளிப்பதற்கான மாநில அரசின் முன்னோடித் திட்டத்தின்கீழ் மகளிருக்கு குறுகிய கால பயிற்சியளிக்கப்பட்டு தன்னம்பிக்கையுடன் தொழில் தொடங்குவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டு வருகின்றது.

## மூன்றாம் பட்டியல்

1—

### வட்ட மருத்துவமனைகள்

**வினா 476—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் இயங்கி வரும் வட்ட மருத்துவமனைகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றில் பணியாற்றும் பணியாளர்கள் எத்தனை பேர்?

(இ) அதில் காலியாக உள்ள பணியிடங்கள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், ஓமலூர், சங்ககிரி, எடப்பாடி, ஏற்காடு மற்றும் கெங்கவள்ளி ஆகிய 6 இடங்களில் வட்ட மருத்துவமனைகள் உள்ளன.

(ஆ) அம்மருத்துவமனைகளில் மொத்தம் 137 பணியாளர்கள் பணி புரிகின்றனர்.

(இ) அம்மருத்துவமனைகளில் 5 பணியிடங்கள் காலியாக உள்ளன.

2—

### மருந்து வகைகள்

**வினா 4773—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை திருமயம் அரசினர் மண்டல மருந்துசெய் நிலையத்தில் தயாரிக்கப்படும் மருந்துவகைகள் எத்தனை?

(ஆ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் அவற்றின் விற்பனை எவ்வளவு?





(இ) அதில் அதிக அளவில் விற்பனையாகியுள்ள மருந்து வகை எது?

(ஈ) அந்த மருந்தால் குணப்படும் நோய் எது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) புதுக்கோட்டை திருமயம் அரசினர் மண்டல மருந்து செய் நிலையத்தில் தயாரிக்கப்படும் மருந்து வகைகளின் எண்ணிக்கை 12 ஆகும்.

(ஆ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் விற்பனையின் மதிப்பு ரூ. 11,45,859 ஆகும்.

| (இ) அதிக அளவில் விற்பனையாகியுள்ள மருந்து வகைகள் | (ஈ) குணப்படும் நோய்கள் |
|---|---|
| (1) அமுக்கார சூரணம் | : குன்மம், மேகவெட்டை, வெள்ளை, விக்கல், பாண்டு, தாதுஷ்ணம், ஜுரம், காங்கை, கைகால்எரிவு, கபம், இரைப்பு, விந்துநஷ்டம், ஈரல் நோய். |
| (2) தாளிசாதி சூரணம் | : வயிற்றெரிச்சல், சூலை, அஸ்திஜுரம், தாகம், பொருமல், அஜீரணம். |
| (3) திரிபலா சூரணம் | : மலச்சிக்கல், இருமல், வாய்ப்புண், நீரும் பீளையும், வடியும் கண்நோய், கஷாயம்புண், இரணங்களைக் கழுவவும், வாய்ப்புண்ணில் கொப்பளிக்கவும், கண் நோயில் கண்ணைக் கழுவவும். |

3—

### மருந்து செலவினம்

**வினா 8572—திரு. ஐ. கணேசன்** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நோய்த் தடுப்பு ஊசி, மருந்துக்காக 1999-2000 ஆம் ஆண்டு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) அதில் மைய அரசின் மானியம் எவ்வளவு பெறப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) நோய்த் தடுப்பு ஊசி மருந்துக்காக 1999-2000 ஆம் ஆண்டு செலவிடப்பட்ட தொகை ரூ.1,400.01 இலட்சம் ஆகும்.

(ஆ) தடுப்பூசி மருந்துகளின் மொத்த செலவினத்தையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. எனவே, அதற்குரிய மானியம் என்ற பிரச்சினை எழவில்லை.

**4—**

## சித்த மருத்துவர்

**வினா 8574—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சித்த மருத்துவம் சிறந்த மருத்துவமாக உள்ளதால் மருத்துவமனைதோறும் சித்த மருத்துவரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விரைவாக நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) இதுவரை 6 மருத்துவக் கல்லூரியிலும், 27 மாவட்ட சித்த மருத்துவமனைகளிலும், 202 தாலுகா மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகளிலும், 281 அரசினர் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 45 அரசு மருந்தகங்களிலும் சித்தா பிரிவுகள் தொடங்கப்பட்டு சித்த மருத்துவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். படிப்படியாக எல்லா மருத்துவமனைகளிலும்/ஆரம்ப சுகாதார



நிலையங்களிலும் சித்தா பிரிவுகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு சித்தா பிரிவுகள் தொடங்கப்பட்டவுடன் உதவி மருத்துவ அலுவலர்கள் பணி நியமனம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) புதிய சித்தா பிரிவுகள் தொடங்கப்பட்டவுடன் பணி நியமனம் குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**5—**

## செவிலியர்கள் நியமனம்

**வினா 8578—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மருத்துவமனையில் குழந்தைகள் நலப் பிரிவில் போதுமான செவிலியர்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதிகப்படியான செவிலியர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) ஆம். 679 படுக்கைகள் கொண்ட சேலம் மருத்துவமனையில் அனைத்து செவிலியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு முழுமையான அளவில் பணிபுரிகின்றனர். மேலும் இம்மருத்துவமனையில் குழந்தைகள் நலப் பிரிவு மற்றும் இதரப் பிரிவில் பணியாற்றுவதற்காக 16 செவிலியர்கள் ஒப்பந்த தொகுப்பூதிய செவிலியர்கள் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு 10 பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன. மீதமுள்ள 6 பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்.

**6—**

## அவசர சிகிச்சை முகாம்

**வினா 9876—செல்வி சி. கனகதாரா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

(அ) விபத்துகளில் காயம்பட்டோருக்கு அவசர சிகிச்சை அளிக்க பேரணாம்பட்டு ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அவசர சிகிச்சை முகாம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை**—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. தற்போது பேரணாம்பட்டில் உள்ள அரசு மருத்துவமனை 30 படுக்கைகள் கொண்ட வட்டஞ்சாரா (Non-Taluk) அரசு மருத்துவமனையாகும். தற்போது அவசர சிகிச்சை முகாம் அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதுமில்லை.

7—

## தடுப்பூசி போடுதல்

**வினா 14126—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் தடுப்பூசித் திட்டத்தின்கீழ் தடுப்பூசி போடுவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரதி புதன்கிழமைதோறும் தடுப்பூசித் திட்டத்தின்கீழ் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.



2002 அக்டோபர் 25]

8—

## மருத்துவப் பரிசோதனை

**வினா 15909—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் மருத்துவர் மருத்துவப் பரிசோதனை செய்ய தனி அறை அமைத்துத்தர அரசு முன்வருமா?

**விடை**—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதியில் 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. இவற்றில் ஒன்று தனியார் கட்டடத்திலும், மற்றொன்று வனத் துறையினர் கட்டடத்திலும் செயல்படுகின்றன. மீதமுள்ள 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு கட்டடங்களில் செயல்படுகின்றன. இவையாவும் ஆரம்ப சுகாதார நிலையப் பணிகள் செவ்வனே நடைபெற அனைத்து வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டு பொதுப் பணித் துறையினரால் கட்டப்பட்டதாகும். பெண் மருத்துவர் மருத்துவப் பரிசோதனை செய்ய வசதிகள் உள்ளன. அதனால் தனி அறை வசதி, தனியாகக் கட்டித் தர அவசியமில்லை. தற்போதுள்ள வசதிகள் நோயாளிகளைப் பரிசோதிக்க போதுமானதாகும்.

9—

## வேப்ப மரங்கள் வளர்த்தல்

**வினா 16140—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருத்துவ குணங்கள் கொண்ட வேப்ப மரங்களை அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் வளர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அரசுக் கட்டடங்களில் செயல்படும் போதுமான இடவசதி உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிழல்தரும் மரங்கள், குறிப்பாக வேப்ப

மரங்கள் வளர்க்க அனைத்து சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**10—**

### சுற்றுச்சுவர்

**வினா 16169—திரு. நா. சந்திரமோகன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், வள்ளுவக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசால் தற்போது நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படாததால் சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம் வள்ளுவக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**11—**

### மகப்பேறு மருத்துவ மையம்

**வினா 16204—திரு. நா. சந்திரமோகன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம் வள்ளுவக்குடியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மகப்பேறு மருத்துவ மையம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வள்ளுவக்குடி ஆரம்ப





சுகாதார நிலையத்தில் ஒரு மகப்பேறு மருத்துவ மையம் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் இல்லை. பயனடையும் உள் மற்றும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தற்போதுள்ள வசதிகள் போதுமானதாகும்.

**12—**

### குடியிருப்புகள்

**வினா 16645—திரு. நா. சந்திரமோகன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட தற்போது அரசால் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படாததால் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் இல்லை

**13—**

### பான் மசாலா

**வினா 19998—திரு. இ. கணேசன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சுகாதார அதிகாரிகள் பான்மசாலா சோதனை மேற்கொண்டதில் எவ்வளவு ரூபாய் மதிப்புள்ளவை அரசு கைப்பற்றி உள்ளது?

(ஆ) மாவட்ட வாரியாக அதாவது கோயம்புத்தூர், மதுரை, சென்னை, சேலம் ஆகிய இடங்களில் எவ்வளவு மதிப்புள்ளவை கைப்பற்றப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) தமிழ்நாட்டில் 19-11-2001 முதல் மெல்லுவதற்கான புகையிலை, பான்மசாலா, குட்கா புகையிலையுடனோ அல்லது உடலுக்கு தீங்கு விளைவிக்கும் எந்த சேர்மான பொருளைச் சேர்த்தோ விற்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் பேரில் தமிழ்நாட்டில் 19-11-2001 முதல் 31-12-2001 ஆண்டு முடிய ரூ. 13,03,570 மதிப்புள்ள மெல்லுவதற்கான புகையிலை, பான்மசாலா மற்றும் குட்கா கைப்பற்றப்பட்டுள்ளது.

(ஆ) மாவட்ட வாரியாக அதாவது கோயம்புத்தூர், மதுரை, சென்னை, சேலம் ஆகிய இடங்களில் 19-11-2001 முதல் 31-12-2001 முடிய கைப்பற்றப்பட்ட விவரம் பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| (1) | கோயம்புத்தூர் | - | ரூ4,98,628 |
| (2) | மதுரை | - | ரூ2,00,000 |
| (3) | சென்னை | - | ரூ10,500 |
| (4) | சேலம் | - | ரூ3,22,400 |

14—

## சாக்கடை வசதி

**வினா 106—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், இடைப்பாடி தொகுதி, எடங்கணசாலை பேரூராட்சியில் பாப்பாபட்டி காட்டுவளவு பகுதியில் சாக்கடை வசதி செய்து மக்கள் சிரமத்தையும் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடங்கணசாலை பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் காட்டுவளைவு பகுதியில் சாக்கடை வசதி செய்து கொடுக்கும் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.



15—

## தெரு விளக்குகள்

**வினா 498—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடங்கணசாலை பேரூராட்சிப் பகுதிகளில் பல வீதிகளில் தெரு விளக்குகள் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடங்கணசாலை பேரூராட்சியில் மொத்தம் 542 தெரு விளக்குகள் உள்ளன. அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் மின் வாரியத்தின் வாயிலாக சீர் செய்யப்பட்டு 100 சதவீத தெரு விளக்குகள் எரிகின்றன. அனைத்து தெரு விளக்குகளும் சீர் செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளன.

16—

## தொகுப்பு வீடுகள்

**வினா 930—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பெரிய வத்தலாபுரம், சின்ன வத்தலாபுரம், அஜ்ஜனஅள்ளி, பொச்சாரம்பட்டி, கூத்தப்பாடி, கோளப்பாடி, கிராமகொண்டஅள்ளி, ஏர்கோல்பட்டி, குருக்கனைவானூர், நாகமரை, நட்டனூர், நெருப்பூர் ஆகிய கிராமங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு நடப்பாண்டில் தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பெரிய வத்தலாபுரம், சின்ன வத்தலாபுரம், அஜ்ஜனஅள்ளி,

பொச்சாரம்பட்டி, கூத்தப்பாடி, கோளப்பாடி, கிராமகொண்டஅள்ளி, ஏர்கோல்பட்டி, குருக்கனைவானூர், நாகமரை, நட்டனூர், நெருப்பூர் ஆகிய கிராமங்களில் நடப்பு நிதியாண்டில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர வாய்ப்பில்லை.

**17—**

## குடிநீர் வசதி

**வினா 1196—திரு. லா. சந்தானம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, தொட்டப்பநாயக்கனூர் பஞ்சாயத்து, சேர்வைபட்டிக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தொட்டப்பநாயக்கனூர் ஊராட்சி, சேர்வைப்பட்டி குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் (2001-2002) சிறு மின்விசைத் திட்டம் அமைத்து மக்களின் பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**18—**

## குடிநீர் வசதி

**வினா 1197—திரு. லா. சந்தானம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, தொட்டப்பநாயக்கனூர் பஞ்சாயத்து குறிஞ்சி நகர் பகுதியில் குடிநீர் வசதி செய்து தரப்படுமா?

**விடை:—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தொட்டப்ப நாயக்கனூர் ஊராட்சி, குறிஞ்சி நகர் குடியிருப்பிற்கு ஒரு கையிறைப்பான் மூலம் அத்தியாவசியத் தேவைக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. வரும்





நிதியாண்டுகளில் தகுதி, தேவை மற்றும் நிதி ஆதார அடிப்படையில் புதிய குடிநீர்த் திட்டம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**19—**

## குடிநீர் வசதி

**வினா 1200—திரு. லா. சந்தானம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, மேக்கிழார்பட்டி பஞ்சாயத்து, எம்.புதூர் பகுதிக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், மேக்கிழார்பட்டி ஊராட்சி, எம். புதூர் குடியிருப்பிற்கு தற்சமயம் மேக்கிழார்பட்டி குடிநீர்த் திட்டத்திலிருந்து அத்தியாவசிய தேவைக்குப் போதுமான அளவு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தகுதி, தேவை மற்றும் நிதி ஆதார அடிப்படையில் வரும் நிதியாண்டுகளில் இக்குடியிருப்பிற்கு புதிய குடிநீர் திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**20—**

## இந்திரா நினைவு குடியிருப்பு

**வினா 1338—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை?

(ஆ) ஊராட்சி ஒன்றியம் வாரியாக விபரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில்

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் மொத்தம் 1088 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்கள் வாரியான விபரம் கீழ்வருமாறு:-

தருமபுரி 64, நல்லம்பள்ளி 52, பெண்ணாகரம் 62, அரூர் 120, மொரப்பூர் 120, பாப்பிரெட்டிப்பட்டி 38, கிருஷ்ணகிரி 46, காவேரிப்பட்டினம் 40, காரிமங்கலம் 38, பாலக்கோடு 40, வேப்பனப்பள்ளி 28, பர்கூர் 67, மத்தூர் 40, ஊத்தங்கரை 73, ஒசூர் 58, சூளகிரி 54, கெலமங்கலம் 48, தளி 100.

**21—**

## அடி பம்புகள் பழுதுபார்த்தல்

**வினா 4277—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலம் 25-வது வார்டு பகுதியிலுள்ள அடி பம்புகள் (எண் 7, 8) பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலம், 25-வது வார்டு பகுதியில், டேனியல் தாமஸ் தெருவில் உள்ள அடி பம்பு எண் 7 தற்பொழுது நல்ல நிலையில் இயங்கி வருகிறது. அடி பம்பு எண் 8 போதிய நீர் ஊற்று இல்லாத காரணத்தால் இயங்கவில்லை.

**22—**

## மயானக் கொட்டகை

**வினா 6389—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பண்ருட்டி தொகுதி, மானடிக்குப்பத்தில் மயானக் கொட்டகை கட்டித்தர இயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மயானக் கொட்டகை அமைக்க அரசு திட்டம் ஏதும் இல்லை.

**23—**

## தொகுப்பு விடுகள்

**வினா 8334—திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூராட்சிகளில் தொகுப்பு வீடுகளை மீண்டும் கட்டிக் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேரூராட்சிகள் துறை 1-6-1994 முதல், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிச் சட்டத்தின் கீழ் இயங்கி வருவதால் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்படவில்லை.

**24—**

## திண்காரை சாலை

**வினா 8437—திரு. பிஎச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி வீரவநல்லூர் பேரூராட்சி, 4-வது வார்டு பத்தரகாளி அம்மன் கோயில் தெருவின் நடுவில், வடக்கு தெரு, ஆகிய இடங்களில் வாறுகால் கட்டி திண்காரை சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி, வீரவநல்லூர் பேரூராட்சி, 4-வது வார்டு பத்ரகாளி அம்மன் கோயில் தெருவின் நடுவில் வடக்குத் தெரு ஆகிய இடங்களில் வாறுகால் கட்டி திண்காரை சாலை அமைக்கும் கருத்துரு ஏதுமில்லை.

**25—**

### தார் சாலை

**வினா 8769—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, ஆதித்தனார் நகர் களக்காடு பிரதான சாலை உள்ளே கீழ்ப்பக்கம் வரை உள்ள பகுதிகளில் மேல 4-ஆம் தெரு, மேல நடுத்தெரு ஆகிய இடங்களில் தார் சாலை அமைக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சி, ஆதித்தனார் நகர் களக்காடு பிரதான சாலை உள்ளே கீழ்ப்பக்கம் வரையில் உள்ள பகுதிகளில் மேல 4 ஆம் தெரு, மேல நடுத்தெரு ஆகிய இடங்களில் தார் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**26—**

### மராமத்து பணி

**வினா 8794—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி தேர்வுநிலைப் பேரூராட்சிக்குட்பட்ட சூரபுரம்-செல்விபுரம், மேல்புற ரயில்வே கேட் வைத்தி வடக்குவீதி, தபால்நிலைய எதிர்புற சந்து ஆகிய படித்துறைகளை மராமத்து பணிச்செய்ய அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சிக்குட்பட்ட சூரபுரம்-செல்விபுரம் மேல்புற ரயில்வே கேட் வைத்தி வடக்குவீதி, தபால்நிலைய எதிர்புறம் ஆகிய இடங்களில் உள்ள படித்துறைகளில் மராமத்து பணி செய்ய கருத்துரு ஏதுமில்லை.

**27—**

### சொத்து வரி

**வினா 9179—திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் கட்டப்பட்டுள்ள நீதிமன்ற கட்டடங்களுக்கான சொத்து வரியினைச் செலுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 25 ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் கட்டப்பட்டுள்ள நீதிமன்ற கட்டடங்களுக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு சொத்து வரி நிலுவையில் உள்ளது.

| வ.வி. எண் | நிலுவை காலம் | வரித் தொகை |
|---|---|---|
| (1) 216261அ | 2000-2001 I & II<br>2001-2002 I & II | ரூ. 23,16,236.00 |
| (2) 216260 | 2001-2002 I & II | ரூ. 90,196.00 |
| (3) 216261 | 2001-2002 I & II | ரூ. 68,478.00 |
| | மொத்தம் | ரூ. **24,74,910.00** |

[2002 அக்டோபர் 25

மேற்குறிப்பிட்ட சொத்து வரி நிலுவைத் தொகையினை செலுத்தக் கோரி கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களுக்கு 22-1-2002 மற்றும் 14-2-2002 ஆகிய தேதிகளில் கடிதம் அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**28—**

## துப்புரவு பணியாளர்கள்

**வினா 10329—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் எத்தனை துப்புரவுப் பணியாளர்கள் பணி புரிகிறார்கள்?

(ஆ) அவர்களுக்கு வழங்கும் மாத ஊதியம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகராட்சியில் துப்புரவுப் பணிக்கு நிரந்தரப் பணியாளர்கள் மற்றும் தொகுப்பூதியப் பணியாளர்கள் சேர்த்து 1,872 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

(ஆ) நிரந்தரப் பணியாளர் மற்றும் தொகுப்பூதியப் பணியாளர்கள் சேர்த்து மாதம் ரூ.58.85 இலட்சம் ஊதியமாக வழங்கப்படுகிறது.

**29—**

## வாகனங்கள்

**வினா 10330—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி துப்புரவுப் பணிக்கு எத்தனை வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன?



2002 அக்டோபர் 25]

(ஆ) அதில் வாடகை வாகனங்கள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியின் துப்புரவுப் பணிக்காக மொத்தம் 74 வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதில் வாடகை வாகனங்களின் எண்ணிக்கை 12.

**30—**

## வீடுகளை சீர்செய்தல்

**வினா 10821—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல் நத்தம் ஊராட்சி, பட்டக்காரன் கொட்டாய் காலனியில் மிகவும் பழுதடைந்துள்ள வீடுகளை சீர்செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிதியில் கட்டித் தரப்பட்ட காலனி வீடுகளைப் பழுதுபார்க்கும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, சுஞ்சல் நத்தம் ஊராட்சி, பட்டக்காரன் கொட்டாய் காலனியில் மிகவும் பழுதடைந்துள்ள வீடுகளைச் சீர்செய்யும் பணி மேற்கொள்ள தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**31—**

## சுய வேலைவாய்ப்புத் திட்டம்

**வினா 13701—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தொழில் தொடங்க அரசு உடனடி ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரூராட்சிகளில் மத்திய மற்றும் மாநில அரசின் நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டமான சுவர்ண ஜெயந்தி திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ள பயனாளிகளுக்கு மட்டுமே சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் தொழில் தொடங்க மானியம் மற்றும் கடன் நிதி உதவி வாயிலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது.

**32—**

## தொகுப்பு விடுகள்

**வினா 13805—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நிதி நிலைப் பற்றாக்குறை உள்ள பேரூராட்சிகளில் பாகுபாடின்றி ஏழை மக்களுக்கு தொகுப்பு வீடுகள் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரூராட்சிகள் துறை 1-6-1994 முதல் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் இயங்கி வருவதால் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்படவில்லை.



2002 அக்டோபர் 25]

**33—**

## அரசு பொருட்காட்சி

**வினா 14792—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆம் ஆண்டுகளில் சேலம் நகரில் நடந்த அரசு பொருட்காட்சியில் வந்த இலாபத்தின் பங்குத் தொகை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாடாளுமன்ற தேர்தல் காரணமாக சேலம் மாநகராட்சி போஸ் மைதானத்தில் நடைபெறவிருந்த 1999-2000 ஆம் ஆண்டின் அரசு பொருட்காட்சி அரசால் இரத்து செய்யப்பட்டுவிட்டது.

**34—**

## கான்கீரிட் சாலைகள்

**வினா 15208—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி, பேரூராட்சியில் வீதிகளுக்கு கான்கீரிட் சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

35—

## மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம்

**வினா 9262—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சியில் ஒரு மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் புதியதாக தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) அரசு நிர்ணயித்துள்ள விதிமுறைகளின்படி, ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் தற்சார்புடன் இயங்க, அது மாதம் ஒன்றுக்கு 50,000 லிட்டர் வரை மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட வாய்ப்புள்ளதாக இருக்க வேண்டும். அதே போல் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேற்பட்ட பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைகளை அந்நிலையத்துடன் இணைக்கக்கூடாது. எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சியில் 2 கிலோ மீட்டர் தூரத்தில், ஐந்து நியாயவிலைக் கடைகள் உள்ளன. அவைகளுடன் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் மொத்த எண்ணிக்கை 3,161 ஆகும். அவற்றிற்கு விநியோகிக்க தேவையான மண்ணெண்ணெய் அளவு 16,010 லிட்டர் மட்டுமே ஆகும். மேலும், ஒவ்வொரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்க சம்பந்தப்பட்ட சங்கம் தனது நிதியிலிருந்து ரூ. 2.25 இலட்சம் செலவு செய்ய வேண்டும். இத்தொகையினை செலவிட கூட்டுறவு நிதி நிறுவனங்களின் நிதிநிலை இடந்தராத சூழ்நிலை உள்ளது. எனவே, எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சியில் புதியதாக மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் தொடங்கத் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



36—

## தமிழ்ச்சொல் பயன்பாடு

**வினா 16737—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

Area of operation என்ற சொற்றொடரை 'விவகார எல்லை' என்று குறிப்பிடாமல் 'செயல் எல்லை' என்று குறிப்பிடுமாறு கூட்டுறவு அலுவலர்கள் அறிவுறுத்தப்படுவார்களா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால் கூட்டுறவு, உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

Area of Operation என்ற ஆங்கில வார்த்தைக்கு ஈடான தமிழ் வார்த்தையாக 'செயற்பாட்டுப் பகுதி' என்று தமிழ் வளர்ச்சித் துறையால் தொகுக்கப்பெற்ற ஆட்சிச் சொல் அகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, "விவகார எல்லை" என்ற சொல்லுக்குப் பதிலாக "செயற்பாட்டுப் பகுதி" என்ற சொல்லைப் பயன்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

37—

## மண்ணெண்ணெய் விநியோகம்

**வினா 17295—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யும் தனியார் ஏஜென்சியில் மக்களுக்கு விநியோகம் செய்யும் மானியத்துடன் கூடிய மண்ணெண்ணெயை முறையாக விநியோகம் செய்யாமல் கள்ள மார்க்கெட்டில் விற்பனை செய்வதை அரசு அறியுமா?

(ஆ) அதை தடுக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

[2002 அக்டோபர் 25

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் தனியார் ஏஜென்சி ஏதும் சில்லறையாக மண்ணெண்ணெய் விற்பனை செய்ய உரிமமோ அல்லது ஒதுக்கீடோ வழங்கப்படவில்லை. எனவே, கள்ள மார்க்கெட்டில் விற்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லை. நாகை மாவட்டம், சீர்காழி வட்டத்திலுள்ள மூன்று மண்ணெண்ணெய் மொத்த வணிகர்களுக்கு மாதந்தோறும் பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கும் பொருட்டு ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. அதன்படி மொத்த வணிகர்கள் எண்ணெய் நிறுவனங்களிலிருந்து மண்ணெண்ணெய் பெற்று நியாய விலைக் கடைகளுக்கு விநியோகம் செய்து வருகிறார்கள். அதற்குரிய பதிவேடுகளும், கணக்குகளும் பராமரிக்கப்படுவது அவ்வப்போது சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர் மூலம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**38—**

## புதிய கட்டடம்

**வினா 6096—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம் புலிக்காடு ஊராட்சியில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம், இரண்டாம் புலிக்காடு கிராம முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. மா. குமாரசாமி என்பவர் அலமாதிக்காடு கிராமம் சர்வே எண் 27/2-ல் உள்ள தனக்கு சொந்தமான



2002 அக்டோபர் 25]

21 செண்ட் புஞ்சை நிலத்தில் 15 செண்ட் நிலத்தை மட்டும் பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம், இரண்டாம் புலிக்காடு சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு கட்டடம் கட்ட எந்தவித பிரதிபலனும் இன்றி இலவசமாக பதிவுத் துறைக்கு 9-10-2001 அன்று இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் நிலத்தை தானமாக வழங்கியுள்ளார். மேலும் பதிவுக் கட்டணமாக ரூ. 100 செலுத்தி பத்திரம் பதிவு செய்து கொடுத்துள்ளார். இரண்டாம் புலிக்காடு பொதுமக்கள் நன்மை அடையவேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன், மேற்படி நிலத்தை இலவசமாக பதிவுத் துறைக்கு வழங்கியுள்ளார். மேற்படி சார் பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு ஏற்ற இடம் எனப் பொதுப் பணித் துறையும் சான்றளித்துள்ளது. தற்போதைய அரசின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு இப்பொழுது அரசிடம் ஏதுமில்லை.

**39—**

## மயானக் கொட்டகை

**வினா 8313—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், நத்தகுழி கிராமத்திற்கு மயான இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி மயானக் கொட்டகை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செந்துறை வட்டம், நத்தகுழி கிராமத்தில் மயானப் புறம்போக்கில் மொத்தமுள்ள 0.39.5 ஹெக்டேர் விஸ்தீரணத்தில், 0.20.0 ஹெக்டேர் நிலம் துவரை சாகுபடி மூலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்வாக்கிரமிப்பு ஒரு மாத காலத்தில் காலி செய்யப்படும். இவ்விடத்தில் மயானக் கொட்டகை அமைக்கும் திட்டம் இல்லை.

[2002 அக்டோபர் 25

40—

## நில ஆக்கிரமிப்பு

**வினா 9832—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, வெள்ளிரவெளி கிராமத்தில், சாலைப் புறம்போக்கு நிலத்தை, தனியார் ஆக்கிரமிப்பு பட்டா பெற்று அனுபவித்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை இரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளிரவெளி கிராமம் புல எண் 226/1-ல் உள்ள 52 சதுரமீட்டர் நிலம் திரு. பொ. பெரியசாமி என்பவருக்கு நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் மனைப்பட்டா வழங்க அங்கீகாரம் செய்யப்பட்டது. இதனை ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலரும் புலத் தணிக்கைக்குப் பிறகு ஊர்ஜிதம் செய்துள்ளார். இதனை எதிர்த்து திரு. கோபால்சாமி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது. வழக்கின் தீர்ப்புக்குப் பின்னர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

41—

## வீட்டுமனைப் பட்டா

**வினா 13030—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, ஒட்டனூர்தாசன் கொட்டாயில் வசிக்கும் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 அக்டோபர் 25]

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, ஒட்டனூர்தாசன் கொட்டாய் பகுதியில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் நாகமரை கிராம புல எண் 958 பாட்டை புறம்போக்கு நிலத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுவிட்டது.

42—

## கூடுதல் கட்டடம்

**வினா 13053—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சார்—பதிவாளர் அலுவலகங்களுக்கு பக்கத்திலேயே ஆவண எழுத்தாளர்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆவண எழுத்தர்களுக்கு, சார்—பதிவாளர் அலுவலகங்களின் வளாகத்தில் இடவசதி செய்து தருவது குறித்து கொள்கை முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை. தற்போதைய நிதிநிலையினைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

43—

## அரசு மைய அச்சகம்

**வினா 11430—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு மைய அச்சகத்திற்கு போதிய பணியாளர்கள் இல்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் போதிய பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(இ) இதில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் எவ்வளவு பேர் பணிபுரிந்து வருகிறார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தற்போதுள்ள இயந்திரங்களின் செயல்திறன் மற்றும் பணிச்சுமை ஆகியவற்றிற்கேற்ப போதிய பணியாளர்கள் அரசு மைய அச்சகத்தில் உள்ளனர்.

(ஆ) வினா எழவில்லை.

(இ) ஒப்பந்தத் தொழிலாளர்கள் எவரும் பணிபுரியவில்லை.

**44—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா 12954—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் வேட்டைக்காரன்புதூர் பஞ்சாயத்து பகுதிகளில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்ற ஏழை, எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் கிராம நத்தம் புல எண் 1355/2, 1356/1, 1356/4, 979/1எ1, 979/1சி2 ஆகிய புலங்களில் வீடற்ற ஏழை எளிய மக்கள் 69 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. இது தவிர வீடற்ற ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நத்தத்தில் இடம் இல்லாததால் நில எடுப்பு செய்து வீட்டுமனைப் பட்டா மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.





**45—**

## அரசு மைய அச்சகம்

**வினா 13739—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசின் மைய அச்சகத்திற்கு போதிய பணியாளர்களை உடனடியாக நியமனம் செய்ய வேண்டிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) அரசு மைய அச்சகத்தில் தற்போதுள்ள இயந்திரங்களின் செயல்திறன் மற்றும் பணிச்சுமைக்கேற்ப போதிய பணியாளர்கள் உள்ளனர். புதிதாக பணியாளர்கள் நியமனம் செய்ய அவசியம் ஏற்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**46—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 17767—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் 25-வது வார்டில் வாழும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், பண்ருட்டி நகரம், 25-வது வார்டில், படவட்டம்மன் கோயில் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்து 10 நபர்கள் மெத்தை வீடு கட்டியும், 10 நபர்கள் ஓட்டு வீடு கட்டியும், 5

நபர்கள் கூரை வீடுகள் கட்டியும் அனுபவித்து வருகிறார்கள். மேலே குறிப்பிட்டுள்ள இடம் கோயில் புறம்போக்கு என்பதால் மேற்படி ஆக்கிரமிப்புதாரர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

47—

## வீட்டுமனைப் பட்டா

**வினா 17972—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, அமுடூர் ஊராட்சி, குளக்கரை புறம்போக்கில் உள்ளவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

வந்தவாசி வட்டம், அமுடூர் கிராம புல எண் 161, 1.90.0 எக்டேர் பரப்புடைய நல்ல தண்ணீர் குளம் புறம்போக்கு உள்ளது. இதில் 3 நபர்கள் மட்டுமே வீடுகள் கட்டி குடியிருந்து வருகின்றனர். இவர்களிடமிருந்து வீட்டுமனைப் பட்டா கோரி மனுக்கள் ஏதும் வரப்பெறவில்லை. மேலும் இப்புலனை ஒட்டினாற்போல தென்புறமாக புல எண் 139, 140 ஏரிப் புறம்போக்காகும். கிழக்குப்புறமாக புல எண் 125 பாட்டை புறம்போக்கும் அமைந்துள்ளது. இவற்றில் 17 நபர்கள் வீடுகள் கட்டியுள்ளனர். நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களில் பட்டா வழங்க அரசு தடை விதித்துள்ளது. மேலும் பாட்டையில் கட்டப்பட்டுள்ள வீடுகள் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதால் இந்த புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

48—

## சிறு விவசாயிகளுக்குப் பட்டா

**வினா 25340—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதிக்குட்பட்ட வட்டுவனஅள்ளி ஊராட்சியிலுள்ள மொரப்பூர்காடு கிராமப் பகுதிகளில் நீண்டகாலமாகப் புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்துவரும் ஏழை சிறு விவசாயிகளுக்குப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?





(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சியிலுள்ள மொரப்பூர் காடு புல எண் 121-ல் அமைந்துள்ள இடமாகும். இப்புலம் மாரியம்மன் கோவில் மானிய நிலம் என்பதால் இதில் விவசாயம் செய்துவரும் நபர்களுக்கு நிலப் பட்டா வழங்க இயலாது.

49—

## ஆழ்குழாய்க் கிணறு

**வினா 12520—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயப் பொறியியல் துறை மூலம் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு தொகுதியிலும் ஆழ்துளைக் கிணறு அமைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் தமிழகத்தில் தொகுதிவாரியாக ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் பணிகளுக்கு இலக்கு நிர்ணயிக்கப்படுவதில்லை ஆனால், துறையின் உபகோட்ட தேவைகளைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு முழுவதற்கும் இலக்கு ஆண்டுதோறும் நிர்ணயிக்கப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டிற்கு இலக்கு நிர்ணயிக்க துறை தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

50—

## விதை விநியோகம்

**வினா 13694—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் சான்று விதை தாராளமாக கிடைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைத் துறை மூலம் அரசின் விதை மாற்று விகிதம் கொள்கையின்படி ஒவ்வொரு பகுதிக்கும் அப்பகுதியின் இயல்பு பரப்பிற்கு அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட விகிதத்தில் வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் விதை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சேரன்மகாதேவி பேரூராட்சியில் அமைந்துள்ள சேரன்மகாதேவி மற்றும் வீரவநல்லூர் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமும், தனியார் நிறுவனங்கள் மூலமும் இப்பகுதிக்கு தேவையான தரமான விதைகள் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி விரிவாக்க மையத்தில், இந்த ஆண்டு கீழ்க்கண்ட விவரப்படி வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விதை விநியோகம் செய்யப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| நெல் | - | 34.235 மெ.டன் |
| பயறு வகைகள் | - | 0.345 மெ.டன் |
| மணிலா | - | 1.000 மெ.டன் |

மேலும், மேற்படி வேளாண்மை விரிவாக்க மையத்தில் தற்போது போதுமான அளவு நெல் மற்றும் பயறு வகைகளும் இருப்பில் உள்ளது.

**51—**

## தேசிய பயறு பெருக்குத் திட்டம்

**வினா 13698—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தேசிய பயறு பெருக்குத் திட்டத்தின்கீழ் செயல்படுத்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2002 அக்டோபர் 25]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேசிய பயறு பெருக்குத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வருகிறது. அதன்படி சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**52—**

## விடுதிகள்

**வினா 8888-அ—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதியில் ஆதி திராவிடர்களுக்கு விடுதிகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி சட்டமன்ற தொகுதியில் உள்ள மூன்று மாணவ/மாணவியர் விடுதிகளும் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருவதால் புதிதாக விடுதிக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**53—**

## முறைசாரா மின் தயாரிப்பு

**வினா 1307—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 'முறைசாரா மின் தயாரிப்பு' எத்தனை மையங்களில் தயாரிக்கப்பட்டு வருகிறது?

(ஆ) இதில் தனியார் மற்றும் அரசுத் துறை மையங்கள் எத்தனை?

(இ) எத்தனை மெகாவாட் மின்சாரம் கிடைக்கிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் :**

(அ) தமிழ்நாட்டில் மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் காற்று, சூரியன், உயிரியல் ஆகிய மூன்று ஆதாரங்களின் மூலம் மின்சாரத் தயாரிப்பு கீழ்க்கண்ட விவரப்படி மையங்களில் தயாரிக்கப்பட்டு வருகிறது :

| | காற்று* | உயிரியல் | சூரியன் |
|---|---|---|---|
| மையங்களின் எண்ணிக்கை | 9 | 11 | 4 |

(ஆ) அரசு மற்றும் தனியார் துறை மையங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| | காற்று* | உயிரியல் | சூரியன் |
|---|---|---|---|
| 1. அரசு | 6 | 3 (கூட்டுறவு) | 1 |
| 2. தனியார் | 7 | 8 | 3 |

*4 மையங்கள் அரசு மற்றும் தனியார் துறையில் பொதுவாக உள்ளது. ஆகையால் மொத்த மையங்கள் 9 ஆகும்.

(இ) இவற்றின் மூலம் மின்சாரம் கீழ்க்கண்டவாறு கிடைக்கிறது :—

| | காற்று | உயிரியல் | சூரியன் |
|---|---|---|---|
| 1. அரசு (மெகாவாட்டில்) | 19.355 | 20 | 0.015 |
| 2. தனியார் (மெகாவாட்டில்) | 793.275 | 134 | 0.15 |



2002 அக்டோபர் 25]

54—

## மின் தடை

**வினா 1593—டாக்டர் சி. விஜயபாஸ்கர் :** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், மேட்டுப்பட்டி கேட் பகுதியில் அடிக்கடி ஏற்படும் மின் தடையை சரிசெய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை நகரில் முக்கிய அலுவலகங்கள் மற்றும் வர்த்தகப் பிரிவுகள் மேட்டுப்பட்டி கேட் பகுதியில் இயங்குவதால் மேட்டுப்பட்டி கேட் பகுதியின் மேல்புறம் வரை புதுக்கோட்டை நகர் 110/22 கே.வி. மண்ணூரட்டி மூலம் 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேட்டுப்பட்டி கேட் பகுதிக்கு கீழ்புறம் முதல் கோவிலூர் வரை புதுக்கோட்டை 110/22 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து 22 கே.வி. அம்மையாப்பட்டி கிராமிய பீடர் வழியாக மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சில சமயங்களில் மின் பற்றாக்குறையைச் சரிசெய்யும்பொருட்டு மதுரை மின் விநியோக மையத்திலிருந்து கொடுக்கப்படும் அறிவிப்பின்படி அவ்வப்பொழுது மின் நிறுத்தம் செய்யப்படுகிறது. மற்ற நேரங்களில் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மின் கோளாறு பராமரிப்பு பணிகளுக்கான மின் நிறுத்தம் மற்றும் மின்பற்றாக்குறையைச் சரி செய்வதற்கான மின் நிறுத்தம் ஆகியவற்றாலும் சில சமயங்களில் மேட்டுப்பட்டி கேட் பகுதியில் மின் தடை ஏற்பட்டது. மேலும், மின் கோளாறு காரணமாக ஏற்பட்ட மின் தடைகள் பருவகால ஆய்வு மற்றும் பழுதுநீக்கும் பணிகள் மூலம் குறைக்கப்பட்டுள்ளன.

55—

## மின் கம்பம்

**வினா 8789—திரு. பி. எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், ஓடைமறிச்சான்-வேதக்கோவில் தெருவில் உள்ள மின் கம்பம் எண் எஸ்.எஸ்.ஐ. 9/2 போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதால் இதை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், ஓடைமறிச்சான் ஊராட்சி ஒன்றியம் வேதக்கோவில் தெருவில் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் மின் கம்பம் எண் எஸ்.எஸ்.ஐ.9/2 மாற்றித்தரக் கோரும் விண்ணப்பம் எதுவும் ஓடைமறிச்சான் ஊராட்சி மன்றத்திலிருந்து பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டு பதிவுக் கட்டணம் ரூ.500/-ம் செலுத்தப்பட்டவுடன் மின் கம்பத்தை மாற்றி அமைக்கும் பணி முடித்துத் தரப்படும்.

**56—**

## வேலை வழங்கல்

**வினா 10092—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்பாக்கம் அணுமின் நிலையத்திற்கு நிலம் கொடுத்த குடும்பங்களின் 170 பிள்ளைகளுக்கு மட்டும் வேலை கொடுத்துள்ளதால், இனிவரும் காலங்களில் 25% வேலைவாய்ப்பை நிலம் கொடுத்துள்ளவர்களுக்கும், 25% சுற்றுப்புற படித்த கிராம இளைஞர்களுக்கும் வேலை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**



2002 அக்டோபர் 25]

170 நபர்கள் என்பது 1994 ஆம் ஆண்டு முதல் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்ட நபர்கள் ஆகும். நிலம் கையகப்படுத்தப்பட்டோருக்கு வேலை வாய்ப்பு என்ற வகையில் இல்லாமல் 1994 ஆம் ஆண்டுக்கு முன்னரும் கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் இந்தப் பகுதி மக்கள் நிறையபேர் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அத்தகையோர் பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டபடியால் அவர்கள் பற்றிய விவரங்கள் இல்லை. வேலைவாய்ப்பில் 25 சதவிகிதம் நிலம் கொடுத்த வகையினருக்கும் 25 சதவிகிதம் சுற்றுப்புற கிராமங்களில் உள்ள படித்த இளைஞர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்ற அரசாணை ஏதும் இல்லாத நிலையில் இக்கருத்து கல்பாக்கம் அணுமின் நிலையத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனினும், நல்லெண்ண அடிப்படையில் பிற தகுதிகள் இருக்கும்பட்சத்தில் நிலம் கொடுத்தோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றது.

**57—**

## மின் இணைப்பு

**வினா 10325—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் தமிழக அரசு கொண்டு வந்த உடனடி மின் இணைப்புப்படி சேலம் மாநகராட்சிப் பகுதியில் வீட்டு உபயோகத்திற்காக மின் இணைப்பு எத்தனை பேர் பெற்றனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழக அரசு கொண்டு வந்த உடனடி மின் இணைப்பு திட்டத்தின்படி சேலம் மாநகராட்சிப் பகுதியில் 10,864 பேர்கள் வீட்டு உபயோகத்திற்கான மின் இணைப்பு பெற்றுள்ளனர்.

**58—**

## மின்சார வசதி

**வினா 10555—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

(அ) பண்ருட்டி தொகுதியில் மேல்காங்கேயன் குப்பம் கிராமத்தில் மயான பாதை செல்லும் வழியில் மின் கம்பங்கள் புதிதாக போட்டு மின் வசதி செய்து தர இயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி, தொகுதி, மேல்காங்கேயன் குப்பம் கிராமத்தில் குறிப்பிட்டுள்ள மயானப் பகுதியில் தற்போது தெரு விளக்கு மின் வசதி கோரி விண்ணப்பம் ஏதும் இதுவரை பெறப்படவில்லை.

(ஆ) தெருவிளக்கு மின்வசதி கோரி விண்ணப்பம் அளிக்கப்படாமல் பங்களிப்பு வைப்புத் தொகையின்கீழ் மதிப்பீடு தயார் செய்து தொகை செலுத்தப்பட்டவுடன் ஒரு மாத காலத்திற்குள்ளாக பணிகள் முடிக்கப்பட்டுவிடும்.

**59—**

## மின்சார வசதி

**வினா 10702—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஊராட்சி சோமசேகரபுரம் தெருவிற்கு மின்சார வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம் கோட்டூர் ஊராட்சி சோமசேகரபுரம் தெருவிற்கு, மின்சார வசதி செய்ய அரசு குறியீடு ஏதும் இல்லை.



2002 அக்டோபர் 25]

மேலும், செலவுத் தொகையினை தாங்களே ஏற்றுக் கொண்டு ஊராட்சி செலவில் அமைத்துக் கொள்ளும் வகையிலான விண்ணப்பம் ஏதும் ஊராட்சியிலிருந்து பெறப்படவில்லை. உரிய விண்ணப்பம் மேற்படி ஊராட்சியிடமிருந்து பெறப்பட்டால் மின் இணைப்பு வழங்குவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**60—**

## மின்சார வசதி

**வினா 10707—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் நகராட்சி ஒன்றியம் அக்கரை கோட்டகம் ஊராட்சி, மேலகோட்டகம், வாட்டார் கிராமம் ஆகிய இடங்களிலுள்ள ஆதிதிராவிடர் பகுதிகளுக்கு மின்சார வசதி செய்யும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் நகராட்சி ஒன்றியம் அக்கரை கோட்டகம் ஊராட்சி, மேலகோட்டகம், வாட்டார் கிராமம் ஆகிய இடங்களிலுள்ள ஆதிதிராவிடர் மக்கள் பகுதியில் தற்போது உள்ள மின் இணைப்புகளாவன:

| மின் இணைப்பு வகைகள் | கிராமங்கள் | |
|---|---|---|
| | மேலகோட்டகம் | வாட்டார் |
| 1. வீட்டு மின் இணைப்புகள் | 3 | 27 |
| 2. குடிசை மின்னிணைப்புகள் | 15 | 42 |
| 3. தெருமின் இணைப்பு விளக்குகள் | 3 | 22 |

(ஆ) மீதம் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு ஒரு விளக்கு மின் இணைப்பு மற்றும் அப்பகுதிகளில் கூடுதல் தெருவிளக்கு அமைக்க விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை. உரிய விண்ணப்பம் பெறப்பட்டால் ஏப்ரல் 2000-க்கு மேல் 2002-2003 ஆம் ஆண்டு குறியீட்டில் ஒரு விளக்கு மின் இணைப்பு மற்றும் தெருவிளக்கு அமைத்துத்தர தக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு வீட்டிற்கு ஒரு விளக்கு அமைக்கும் திட்டத்தின் 2001-2002 குறியீடு முன்னரே முடிவு பெற்றுவிட்டது.

**61—**

## தெரு விளக்கு

**வினா 10800—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி பளிஞ்சரஅள்ளி ஊராட்சி கொம்பாலம் என்ற இடத்தில் தெருவிளக்கு மற்றும் மின்சார வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பளிஞ்சரஅள்ளி ஊராட்சி, கொம்பாலம் கிராமத்திற்கு தெருவிளக்கு கேட்டு விண்ணப்பங்கள் எதுவும் நிலுவையில் இல்லை. ஊராட்சித் தலைவர் மூலமாக விண்ணப்பங்கள் பதிவு செய்யப்படின் அப்பகுதிக்கு தெரு விளக்கு மின்னிணைப்பு வழங்க வாரிய விதிமுறைகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**62—**

## மின் விளக்கு

**வினா 10689—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், பள்ளிவர்த்தி ஊராட்சி எஸ்.ஜி.எம். ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அரசினால் வழங்கப்படும் வீட்டிற்கு ஒரு விளக்கு மின் இணைப்பு திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், பள்ளிவர்த்தி ஊராட்சி எஸ்.ஜி.எம். ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு ஒரு விளக்கு மின் இணைப்பு அமைக்க விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை. உரிய விண்ணப்பம் பெறப்பட்டால் ஏப்ரல் 2002-க்கு மேல் 2002-2003 ஆம் ஆண்டு குறியீட்டில் ஒரு விளக்கு அமைத்துத்தர தக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு வீட்டிற்கு ஒரு விளக்கு அமைக்கும் திட்டத்தின் 2001-2002 குறியீடு முன்னரே முடிவு பெற்றுவிட்டது.

**63—**

## மின் வசதி

**வினா 11194—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை அடுத்த மேச்சேரி சாலையில் கோணபாதை என்ற இடத்திலுள்ள 20 வீடுகளுக்கு மின்சார வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் :**

[2002 அக்டோபர் 25

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியைச் சேர்ந்த கோணப்பாதை என்ற இடத்திலிருந்து வீட்டு மின்னிணைப்பு கேட்டு விண்ணப்பம் எதுவும் நிலுவையில் இல்லை. விண்ணப்பம் பெறப்படின் 6 மின் கம்பங்கள் அமைத்து உடனடியாக மின்னிணைப்பு வழங்க வாரிய விதிமுறைக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

64—

## மின்சாரம்

**வினா 12504—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமகுண்டத்தில் எத்தனை மெகாவாட் மின்சாரம் தமிழ்நாட்டிற்கு முறையாக கிடைக்கிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் :**

இராமகுண்டம் தேசிய அனல் மின் நிலையத்தின் உற்பத்தித் திறன் 2,100 மெகாவாட் ஆகும். அதில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட பங்கு 470 மெகாவாட் ஆகும். இதை தமிழ்நாடு மின்சார வாரியம் முறையாக பெற்று வருகிறது.

65—

## தெரு விளக்கு

**வினா 13646—திரு. ஜி. கே. மணி :** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி பிக்கிலி ஊராட்சி புதுசாம்பு கிராமத்திற்கு கூடுதலாக தெரு விளக்கு வசதி கம்பம் அமைத்து செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?



2002 அக்டோபர் 25]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி பிக்கிலி ஊராட்சியில் மின் பயனீட்டுத்தொகை ரூ. 96,013 நிலுவையில் உள்ளதால் அணி ஊராட்சியில் உள்ள புதுசாம்பு கிராமத்திற்கு கூடுதல் தெரு விளக்கு அமைக்க இயலாத நிலை உள்ளது. நிலுவையில் உள்ள தொகை செலுத்தப்பட்டவுடன், இப்பகுதிகளுக்கு உடனடியாக தெரு விளக்கு வசதி செய்துதர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

66—

## இரப்பர் பயிர்

**வினா 18960—திரு. டி. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமாக ரப்பர் பயிரிட எத்தனை ஹெக்டேர் நிலம் அரசு வழங்கியுள்ளது?

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் எத்தனை டன் ரப்பர் உற்பத்தியாகியுள்ளது?

(இ) இதுவரையிலும் குத்தகை பணமாக எத்தனை கோடி ரூபாய் ரப்பர் கழகத்திலிருந்து வனத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) 4279.78 ஹெக்டேர் நிலம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 2000-2001-ல், 2,511 மெட்ரிக் டன் ரப்பர் உற்பத்தியாகியுள்ளது.

(இ) இதுவரை குத்தகை தொகையாக ரூ.16.45 கோடி வனத்துறைக்கு அரசு ரப்பர் கழகத்தால் செலுத்தப்பட்டுள்ளது.

67—

## தொழில் முனைவோர் மையம்

**வினா 15885—திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதி மகளிர் தொழில் முனைவோர் மையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதியில் மகளிருக்காக தனியாக தொழில் முனைவோர் மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. ஐந்து ஆண்டுகளில் ஐந்து இலட்சம் மகளிருக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கும் திட்டத்தின்கீழ் திருச்சி மாவட்டத்தில் எல்லா தொகுதிகள்/வட்டாரங்கள் வாரியாக 2001-2002 இல் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சித் திட்டம் 2002-2003 ஆம் ஆண்டிலும் தொடரும். தொட்டியம் தொகுதியைச் சேர்ந்த மகளிர் இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெறலாம்.

68—

## வீடுகள் பழுதுபார்த்தல்

**வினா 16588—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) 2000-2001ஆம் ஆண்டில் குடிசைமாற்று வாரியத்திற்குட்பட்ட வீடுகள் பழுதுபார்க்க அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியது?

(ஆ) எத்தனை வீடுகள் பழுதுபார்க்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால், சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.221.16 இலட்சங்கள் சென்னை நகரில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள 2000-2001 ஆம் ஆண்டில் பெறப்பட்டது.

(ஆ) இந்நிதியுதவியினைக் கொண்டு 5460 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூ.172.88 இலட்சங்கள் செலவில் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் 2001-2002 ஆம் ஆண்டில் மீதமுள்ள தொகையில் ரூ.47.81 இலட்சங்கள் செலவில் மேலும் 960 குடியிருப்புகளுக்கு பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

69—

## கால்நடை மருந்தகங்கள்

**வினா 12191—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001 ஆம் நிதியாண்டில் கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்ட மருந்தகங்கள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஏதுமில்லை.

70—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 927—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராமங்களிலும் வாழும் ஏழை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் குடும்பங்களுக்கு விரைந்து நடப்பாண்டில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கவும், தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கீழ்க்கண்ட கிராமங்களில் வசிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கு ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன:

| கிராமத்தின் பெயர் | வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. நாகனூர் | புல எண் 579-ல் 90 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |
| 2. ஜங்கமையனூர் | புல எண் 366-ல் 72 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |
| 3. சின்னபள்ளத்தூர் | புல எண் 31/1-ல் 96 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |
| 4. பெரியபள்ளத்தூர் | புல எண் 81/2-ல் 42 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |
| 5. செல்லமுடி | புல எண் 134/1-ல் 92 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |
| 6. நாச்சாகவுண்டனூர் | புல எண் 240/2-ல் 65 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |
| 7. நாகனூர் | புல எண் 578/1-ல் 60 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |
| | புல எண் 578/2-ல் 60 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |
| 8. செங்கானூர் | புல எண் 581/சி.பி. 83 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |



மேலும் தமிழ்நாடு முழுவதும், கிராமப்புற பகுதிகளில் ஏற்கெனவே இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட பகுதிகளில் சாலை வசதி, மின்விளக்கு, குடிநீர், கழிவுநீர்ப் பாதை ஆகிய வசதிகளை அமைக்கும் திட்டம் நடப்பு ஆண்டில் அரசினரால் முன்னுரிமை அளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கென, புதிதாக நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஆனால், ஏற்கெனவே நிலம் கையகப்படுத்தப்பட்ட பகுதிகளில் மட்டும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் மூலம் செயல்படுத்தப்படவில்லை. தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் மாவட்ட வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்தப்படுகின்றது.

**71—**

## நுழைவுத் தேர்வு இலவசப் பயிற்சித் திட்டம்

**வினா 13373—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவம், தொழிற் கல்விக்கான நுழைவுத் தேர்வு இலவச பயிற்சி திட்டத்தில் மிகவும் பிற்பட்டோரையும் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பள்ளி மையங்களில் மருத்துவம், தொழிற் கல்விக்கான நுழைவுத் தேர்வு இலவச பயிற்சித் திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி சிறப்புப் பயிற்சி பெற்ற பயிற்றுநர்களால்

பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர், ஆசிரியர் சங்கங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றது.

**72—**

## தொகுப்பு வீடுகள்

**வினா 13772—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராமங்களிலும் வாழும் ஏழை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கவும், தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கீழ்க்கண்ட கிராமங்களில் வசிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கு ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன:

| கிராமத்தின் பெயர் | வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. நாகனூர் | புல எண் 579-ல் 90 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |
| 2. ஜங்கமையனூர் | புல எண் 366-ல் 72 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |
| 3. சின்னபள்ளத்தூர் | புல எண் 31/1-ல் 96 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் |
| 4. பெரியபள்ளத்தூர் | புல எண் 81/2-ல் 42 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |
| 5. செல்லமுடி | புல எண் 134/1-ல் 92 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |
| 6. நாச்சாகவுண்டனூர் | புல எண் 240/2-ல் 65 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |
| 7. நாகனூர் | புல எண் 578/1-ல் 60 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |
| | புல எண் 578/2-ல் 60 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |
| 8. செங்கானூர் | புல எண் 581/சி. 83 மிகவும் பிற்படுத்தப்பட்டோர். |
| 9. சேஷம்பட்டி, குரும்பட்டி | புல எண் 287/2ஏ, 60 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (நடவடிக்கையில் உள்ளது) |



தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையால் செயல்படுத்தப்படவில்லை. தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் மாவட்ட வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்தப்படுகின்றது.

**73—**

## விடுதி காப்பாளர் நியமித்தல்

**வினா 15186—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் தொகுதி, கழுகுமலை அரசு பிற்பட்டோர் மாணவியர் இல்லத்திற்கு விடுதி காப்பாளரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

கழுகுமலை அரசு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக்கு காப்பாளினி பணியிடம் அரசால் ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்ட போதிலும் இப்பணியிடம் 12-4-1999லிருந்து காலியாக இருந்தது. எனவே, 12-4-1999 முதல் 2-1-2002 வரை சொக்கம்மாள்புரம் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி இடைநிலை காப்பாளினி கூடுதல் பொறுப்பில் நியமிக்கப்பட்டு கழுகுமலை அரசு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி பராமரிக்கப்பட்டு வந்தது. தற்போது இவ்விடுதிக்கு இடைநிலை காப்பாளினி ஒருவரை முழுப் பொறுப்பில் 3-1-2002 முதல் நியமிக்கப்பட்டு விடுதி பராமரிக்கப்பட்டு வருகிறது.

**74—**

## காலி பணி இடம் நிரப்புதல்

**வினா 18506—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், பாப்பாபட்டி அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளியில் தாவரவியல் முதுகலைப் பட்டதாரி பணி இடம் காலியாக உள்ளதை விரைவில் நியமனம் செய்து நிரப்ப அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், பாப்பாபட்டி அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளியில் தாவரவியல் முதுகலைப் பட்டதாரி பணியிடம் ஏதும் இல்லை. அப்பள்ளியில் மொத்தமுள்ள 5 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் கணிதம் மற்றும் வரலாறு பாடப்பிரிவுகளில் இரண்டு பணியிடங்களே காலியாக உள்ளன. அவ்விரு



பணியிடங்களுக்கும் ஆசிரியர்களை ஒதுக்கீடு செய்யுமாறு ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு கோரிக்கை ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாரியத்திலிருந்து ஆசிரியர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டதும் அவ்விரு பணியிடங்களும் நிரப்பப்படும்.

**75—**

## சலவைத் தொழிலாளிகள்

**வினா 12903—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்டுள்ள சலவைத் தொழிலாளிகள் எவ்வளவு பேர் உறுப்பினர்களாக உள்ளனர்?

(ஆ) அவர்களுக்கு வழங்கப்படும் நலத் திட்டங்கள் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 124 பேர்

(ஆ) தனி நபர் குழு காப்பீட்டுத் திட்டம், இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை, ஈமச்சடங்கு உதவித் தொகை, பிள்ளைகளின் கல்வி உதவித் தொகை, பதிவு பெற்ற தொழிலாளர் மற்றும் அவர்கள் பிள்ளைகளின் திருமண உதவித் தொகை மற்றும் பெண் தொழிலாளர்களின் மகப்பேறு அல்லது கருச்சிதைவு அல்லது கருக்கலைப்புக்கான உதவித் தொகை முதலியன ஆகும்.

**76—**

## தொழிற் பயிற்சி நிலையம்

**வினா 13258—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ாய்முடை தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க அரசு உடனடியாக ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**டை—**

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சிப் ரிவில் அளிக்கப்படும் தொழிற் பயிற்சியில் பொறியியல் மற்றும் பொறியியல் ரரா தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் பாய்முடைதல் டம் பெறவில்லை. மேலும், இம்மாதிரி தொழிற் பயிற்சி அளிப்பதற்கான டிப்படை வசதி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் இயங்கும் தாழிற் பயிற்சி நிலையங்களில் இல்லை.

**7—**

## தொழிற்பயிற்சி நிலையம்

**வினா 14535—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு தாழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு டையளிப்பாரா—

(அ) சேரன் மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் மூங்கில் கைத்திறன் பொருள் தயாரிப்பு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**டை—**

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் ளிக்கப்படும் தொழிற் பயிற்சியில் பொறியியல் மற்றும் பொறியியல் ரரா தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் மூங்கில்





கைத்திறன் பொருள் தயாரிப்பு இடம் பெறவில்லை. இம்மாதிரியான பயிற்சி சம்பந்தமாக தொழில் வணிகத் துறை மற்றும் காதி மற்றும் கிராமத்தொழில் வாரியத்தை அணுகலாம். மேலும், இம்மாதிரி பயிற்சி அளிப்பதற்கான அடிப்படை வசதி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் இயங்கும் தொழிற் பயிற்சி நிலையங்களில் இல்லை. இந்நிலையில் சேரன்மகாதேவி தொகுதி பாப்பாக்குடி ஒன்றியத்தில் மூங்கில் கைத்திறன் பொருள் தயாரிப்பு தொழிற் பயிற்சி நிலையம் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் இல்லை.

**78—**

## ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை

**வினா 18101—திரு. சோ. இராஜேந்திரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இதுவரை நடந்த விபத்துகள் எத்தனை?

(ஆ) அதனால் பாதிக்கப்பட்டோர் எத்தனை பேர்?

(இ) நிர்வாகம் வழங்கிய நஷ்டஈடு விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தூத்துக்குடி, ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து, இதுவரை மொத்தம் ஆறு விபத்துகள் நடந்துள்ளன.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட ஆறு விபத்துகளில், பாதிக்கப்பட்ட மொத்தம் 18 தொழிலாளர்களில், 6 தொழிலாளர்கள் மரணம் அடைந்துள்ளனர். ஏனைய 12 தொழிலாளர்கள் காயம் அடைந்துள்ளனர்.

(இ) 3-5-1997 அன்று ஏற்பட்ட விபத்தில் மரணமடைந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு ரூ.60,000 ஒப்பந்தக்காரராலும், ரூ.1,86,000 இன்சூரன்ஸ் கம்பெனி மூலமும், ரூ.1,00,000 கருணைத் தொகையாக நிர்வாகத்தினராலும் நஷ்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது.

30-8-1997 அன்று ஏற்பட்ட விபத்தில் மரணம் அடைந்த இரு தொழிலாளர்களுக்கு, ஒவ்வொரு தொழிலாளிக்கும், ரூ.1,00,000 கருணைத்

தொகையாக நிர்வாகத்தினரால் வழங்கப்பட்டுள்ளதுடன், தொழிலாளர் ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகத்தின் மூலமும் நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

16-4-1998 அன்று ஏற்பட்ட விபத்தில் மரணம் அடைந்த இரு தொழிலாளிகளில், ஒரு தொழிலாளிக்கு ரூ.1,50,000-மும், மற்றொரு தொழிலாளிக்கு ரூ. 1,00,000-மும், நிர்வாகத்தினரால் கருணைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொழிலாளர் ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகத்தின் மூலமும் நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

25-7-2001 அன்று ஏற்பட்ட விபத்தில் மரணம் அடைந்த ஒரு தொழிலாளிக்கு, தொழிலாளர் ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகத்தின் மூலம் நஷ்டஈடு வழங்க தொழிலாளர் ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மரணம் அடைந்தவர்கள் இல்லாமல் ஏனைய காயம் அடைந்தவர்கள் அனைவரும் இ.எஸ்.ஐ. தனிநபர் விபத்து பாதுகாப்பு மறறும் மெடி-க்ளைம் திட்டத்திற்கு உட்பட்டவர்கள் என்பதால் நிர்வாகம் இழப்பீடு வழங்க வேண்டிய வினா எழவில்லை.

**79—**

## ஹஜ் பயணம்

**வினா 18603—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இந்த ஆண்டு எவ்வளவு பேர் ஹஜ் பயணம் செய்ய உள்ளனர்?

(ஆ) இதற்கு மாநில அரசு எந்த வகையில் உதவி உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வது. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2002 ஆம் ஆண்டு ஹஜ் பருவத்தின்போது தமிழ்நாட்டிலிருந்து 2688 பேர் புனிதப் பயணம் மேற்கொண்டனர்.

(ஆ) (1) புனிதப் பயணிகள் சவூதி அரேபியாவில் தங்குவதற்கு ஏற்ப கட்டடங்களைத் தேர்வு செய்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் மாநில அரசு



இரண்டு பிரதிநிதிகளை அனுப்பி வைக்கிறது. இதற்காக ஹஜ் 2002-ல் அரசு ரூ.1.00 இலட்சம் மானியமாக வழங்கியது.

(2) தமிழ்நாட்டிலிருந்து செல்லும் புனிதப் பயணிகளுக்குச் சவூதி அரேபியாவில் உதவிடும் வகையில் மாநில அரசு ஒவ்வோர் ஆண்டும் 6 முதல் 7 வரை ஹஜ் தொண்டர்களை அனுப்புகிறது. ஹஜ் 2002-ல் அரசு இதற்காக ரூ.6.30 இலட்சம் மானியமாக வழங்கியது.

(3) ஹஜ் குழுவின் நிர்வாகச் செலவிற்காக ஆண்டுதோறும் மாநில அரசு ரூ.7.00 இலட்சம் மானியமாக வழங்கி வந்தது. ஆனால் 2001-2002 முதல் இம்மானியத் தொகையைத் தமிழ்நாடு அரசு ரூ.7.00 இலட்சத்திலிருந்து ரூ.10.00 இலட்சமாக உயர்த்தி வழங்கியுள்ளது.

(4) தற்போது, அரசு ஹஜ் குழுவினை மாற்றியமைத்துள்ளது. மேலும், ஹஜ் புனிதப் பயணிகளுக்குத் தேவையான ஆலோசனை வழங்குதல், பயிற்சி அளித்தல், தடுப்பு ஊசி போடுதல், தங்கும் வசதி, விமான நிலையத்திற்கு இலவச போக்குவரத்து வசதி செய்தல் போன்ற பல்வேறு உதவிகளையும் ஹஜ் குழுவின் மூலமாக அரசு மிகச் சிறப்பாகச் செய்து வருகிறது.

**80—**

## பால் பொருட்கள்

**வினா 1369—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் விற்பனைத் தொகை எவ்வளவு?

(ஆ) பால் விற்பனை எவ்வளவு? பால் உப பொருட்கள் விற்பனை எவ்வளவு?

(இ) அது இலாபத்தில் இயங்குகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் மொத்த விற்பனைத் தொகை ரூ.102.58 கோடியாகும்.

[2002 அக்டோபர் 25

(ஆ) பால் விற்பனை

| | லிட்டர் | தொகை |
|---|---|---|
| (1) உள்ளூர் | 3,89,95,741 | ரூ.40.82 கோடி |
| (2) சென்னை (இணையத்திற்கு) | 2,89,76,955 | ரூ.20.05 கோடி |
| பால் உபபொருள் விற்பனை | | ரூ.48.21 கோடி |

(இ) மேற்படி ஒன்றியம் நட்டத்தில் இயங்கி வருகிறது.

**81—**

**பால் கொள்முதல்**

**வினா 10608—திரு. எஸ். நடராசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்றம்பள்ளி தொகுதிக்குட்பட்ட கந்திலி ஒன்றியத்தில் பால் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கம் பாலை தனியார் குளிரூட்டும் நிறுவனத்திற்கு கொண்டு செல்வதால், மீண்டும் அரசே கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களின் மூலம் பால் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர்:**

நாட்றம்பள்ளி தொகுதிக்குட்பட்ட கந்திலி ஒன்றியத்தில் உள்ள பால் கூட்டுறவு சங்கங்கள் உள்ளூர் விற்பனை போக அனைத்துப் பாலையும் வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் ஆம்பூர் பிரிவிற்கு அனுப்பி வருகின்றன. தனியாருக்கு பால் அனுப்புவதில்லை.

**82—**

**பால்பண்ணை**

**வினா 10831—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2002 அக்டோபர் 25]

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் பெட்டைகுளம் கிராமத்தில் பால்பண்ணை மீண்டும் செயல்படுத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பெட்டைகுளம், பால் உற்பத்தியாளர் கிராமச் சங்கம் பால் உற்பத்தியில்லாத காரணத்தால் செயலிழந்து மார்ச் 2002-ல் கலைக்கப்பட்டுள்ளது. அச்சங்கத்தை உறுப்பினர்கள் செயல்படுத்திட முன்வந்தால் அச்சங்கம் புத்துயிர் ஊட்டப்பட்டு செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**83—**

**பால் உற்பத்தியாளர்கள் சங்கம்**

**வினா 12289—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்குக் கட்டடம் கட்ட நிலம் வழங்கக் கோரி அரசுக்கு எத்தனை விண்ணப்பங்கள் வந்துள்ளன?

(ஆ) அதில் எத்தனை சங்கத்திற்கு நிலம் வழங்கப்பட்டுள்ளது?

(இ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்கள் எழவில்லை.

**84—**

**பால் உற்பத்தியாளர் சங்கம்**

**வினா 12483—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் இயங்கிவரும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு கட்டடம் கட்ட அரசிடம் நிலம் கோரி ஏதேனும் மனுக்கள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை சங்கங்களுக்கு நிலம் வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**85—**

## பால் பண்ணை

**வினா 12544—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை பால்பண்ணையை நவீனமயமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு விடை எழவில்லை.

**86—**

## பால் உற்பத்தியை அதிகரித்தல்

**வினா 13960—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சோழவந்தான் தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) தற்சமயம், செயலிழந்த சங்கங்களைப் புதுப்பிக்கவும், பாலின் தரம் குறித்து சிறப்புப் பணிகள் தொடங்கப்பட்டும், நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகிறது. இதனைத் தொடர்ந்து கடையம் ஒன்றியம் பகுதியில் பால் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு உருவாகும்.

**87—**

## பால் பண்ணை

**வினா 14476—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் பால் பண்ணையைப் போல் எடப்பாடியிலும் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர் :**

சாத்தியகூறுகள் இல்லை.

**88—**

## பால் உற்பத்தியாளர் சங்கம்

**வினா 14849—திரு ஜி.கே. மணி:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகதாசம்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு கட்டட வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, த.பி.டி. 582. நாகதாசம்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு கட்டடம் கட்ட அடிமனை இல்லை. கட்டடம் கட்ட அடிமனை வாங்க சங்கத்திடம் போதிய நிதி ஆதாரம் இல்லை. எனவே சங்கத்திற்குக் கட்டடம் கட்ட சங்கம் விண்ணப்பம் செய்யவில்லை. நிதி ஆதாரம் சங்கத்திற்கு பெருகும்போது அடிமனை வாங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**89—**

## பால் கொள்முதல்

**வினா 16574—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் எம்.எஸ். 912-ல் எத்தனை லிட்டர் பால் தினந்தோறும் கொள்முதல் செய்யப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் எம்.எஸ். 912-ல் சராசரியாக நாளொன்றுக்கு 2.68 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

**90—**

## கடனுதவி

**வினா 4068—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் சேலம் மாவட்ட விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு 2000-2001 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

(ஆ) அந்த கடன் பெற்ற விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் தொழில் நலிவடைந்துள்ளதால், அவர்களுக்கு அரசின் மூலம் என்ன விதமாக உதவி செய்ய கருத்துரு உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலம் சேலம் மாவட்ட விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு எடப்பாடி தொகுதியில் 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.2.20 இலட்சம் (SSI), சிறுதொழில் நிதி உதவி மூலம் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், சேலம் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி, எடப்பாடி தொகுதியை தவிர திருச்செங்கோடு சரகத்தில் இயங்கும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், சேலம் சரகத்தில் இயங்கும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் நபார்டு வங்கியின் மூலம் அனுமதிக்கப்படும் காசுக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் தொழில் நலிவடைந்து இருப்பின், அவர்கள் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி (TUFS) மூலம் சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்களை அணுகி நிதியுதவி பெற்று தொழிலினை மேம்படுத்தலாம்.

**91—**

## தொழிற் பயிற்சி நிலையம்

**வினா 13246—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நெசவுத் தொழில் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நெசவுத் தொழில் பயிற்சி நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**92—**

### மீனவர்களுக்கு உதவித் தொகை

**வினா 12452—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக மீனவர் விபத்துக் குழு காப்புறுதி திட்டத்தில் பக்கவாதத்தால் முழுமையாக செயல்பாட்டை இழந்த மீனவர்களுக்கு உதவித்தொகை வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டத்தின்கீழ் விபத்தின் காரணமாக உயிர் இழந்தாலோ, ஊனம் அடைந்தாலோ காப்புறுதி நிவாரணத் தொகை மீனவர்களுக்கு பெற்று அளிக்கப்பட்டு வருகிறது. அரசு உதவித்தொகை ஏதும் வழங்குவதில்லை. பக்கவாதம் விபத்தினால் ஏற்படுவதில்லை. எனவே, இத்திட்டத்தின்கீழ் பக்கவாதத்தால் முழுமையாக செயல்பாட்டை இழந்த மீனவர்களுக்கு உதவித் தொகையினை காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்று வழங்குவதற்கு, காப்புறுதி நிவாரணத்தின் விதிகளின்படி வழிவகை இல்லை.



**93—**

### மீன்பிடி வலைகள்

**வினா 12692—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் பகுதி மீனவர்களுக்கு அரசு மானிய விலையில் மீன்பிடி வலைகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ் பாரம்பரிய மீன்பிடி கலன்களில் பொருத்தப்படும் உட்பொருத்தும்/ வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் மானியம் வழங்கப்படுகிறது. இதற்கான செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசு 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கிறது. உட்பொருத்தும் இயந்திரத்தின் விலையில் 50% அல்லது அதிகபட்சம் ரூ.12,000 மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரத்தின் விலையில் 50% அல்லது அதிகபட்சம் ரூ.10,000 தற்போது மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இயந்திர மானியம் பெற தகுதியுடைய மீனவ பயனாளிகள் வாங்கும் மீன்பிடி சாதனங்களின் விலையில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ.6,000 வரை மானியம் ஒரே ஒரு முறை மட்டும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்திட மத்திய அரசின் பங்கு ரூ.117.25 இலட்சம் மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.117.25 இலட்சம் ஆக மொத்தம் ரூ.234.50 இலட்சம் செலவின ஒப்பளிப்பு 27-12-2001 ஆம் நாளைய கால்நடை பராமரிப்பு (ம) மீன்வளத் துறையின் 191 ஆம் எண்ணிட்ட அரசாணையில் வழங்கப்பட்டு இத்திட்டம் அரசினால் தற்போது செயல்படுத்தப்பட உள்ளது.

**94—**

### மீனவர்களுக்கு ஓய்வுக் கூடம்

**வினா 12699—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வெளிவயல்

[2002 அக்டோபர் 25

கிராம மீனவர்களுக்கென ஓய்வுக் கூடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வெளிவயல் கிராம மீனவர்களுக்கென ஓய்வுக் கூடம் கட்ட அரசிடம் தற்போது திட்டம் ஏதும் இல்லை.

**95—**

## மீனவர்களுக்கு அடையாள அட்டை

**வினா 12716—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் கிராம மீனவர்களுக்கு அரசு அடையாள அட்டை வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் கிராமத்தின் 568 மீனவர்களுக்கு மீனவர் அடையாள அட்டைகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. தஞ்சை மாவட்ட அளவில் இதுவரை 8,240 மீனவர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வப்போது மீனவர்கள் கேட்கும்போது விவரங்களை சரிபார்த்து அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது.

**96—**

## மீன் ஏற்றுமதி

**வினா 13172—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த ஆண்டு வெளிநாடுகளுக்கு எவ்வளவு டன் மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது?



2002 அக்டோபர் 25]

(ஆ) இதனால் அரசுக்கு கிடைத்த வருமானம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த 2001 ஆம் ஆண்டு தமிழகத்திலிருந்து சென்னை துறைமுகம் மூலமாக 39,545 டன்னும், தூத்துக்குடி துறைமுகம் மூலமாக 15,615 டன்னும் ஆக மொத்தம் 55,160 டன் மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

(ஆ) சென்னை துறைமுகத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட 39,545 டன் மீன்களுக்கு ரூ.1576.33 கோடியும், தூத்துக்குடி துறைமுகத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட 15,615 டன் மீன்களுக்கு ரூ.439.15 கோடியும் ஆக மொத்தம் ரூ.2015.48 கோடி அரசுக்கு அன்னிய செலாவணியாக பெறப்பட்டுள்ளது.

**97—**

## மீனவர்களுக்கு தங்கும் வசதி

**வினா 13538—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கோனேரிப்பட்டியில் காவிரி ஆற்றங்கரையோரம் பாதுகாப்பில்லாமல் குடியிருக்கும் மீனவர்களுக்கு தங்கும் வசதி (ஷெட்) செய்து தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கோனேரிப்பட்டியில் காவிரி ஆற்றங்கரையோரம் பாதுகாப்பில்லாமல் குடியிருக்கும் மீனவர்களுக்கு தங்கும் வசதிக்காக ஷெட் வசதி செய்து தரும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

98

## பனிக்கட்டி நிலையம் அமைத்தல்

**வினா 14739—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா

சேலம் மாவட்டத்தில் காவிரி கரையோரம் அமைந்துள்ள பூலாம்பட்டி முதல் ஊராட்சிக்கோட்டை முடிய உள்ள மீனவர்கள் மீன்களை கெடாமல் பாதுகாக்க மேட்டூர் அல்லது ஈரோடு சென்று ஐஸ் வாங்கி வருவதைத் தவிர்க்க இந்த பகுதியில் ஐஸ் நிலையம் (பேக்டரி) ஏற்படுத்த அரசு உதவி செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் பூலாம்பட்டி முதல் ஊராட்சிக்கோட்டை முடிய உள்ள பகுதியில் பனிக்கட்டி நிலையம் (பேக்டரி) அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**99—**

## சுற்றுலா சிறப்புத் திட்டம்

**வினா 9247—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தமிழகத்தில் சுற்றுலாத் தொழிலை ஊக்குவிக்க அரசின் சிறப்புத் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) ஆம், தமிழகத்தில் சுற்றுலாத் தொழிலை ஊக்குவிக்க அரசிடம் சிறப்பு திட்டம் உள்ளது.

(ஆ) சென்னை, மதுரை, கோவை மாநகர எல்லையைத் தவிர வேறு



இடங்களில் ரூ.1 கோடி செலவில் (நில மதிப்பு தவிர்த்து) கட்டப்படும் 1,2 மற்றும் 3 நட்சத்திர தரம் உள்ள உணவகங்களுக்கு மூலதன ஊக்குதவித் தொகை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தகுதியுள்ள உணவகத்திற்கும் அதிக பட்சமாக ரூ.10.00 இலட்சம் ஊக்குதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

இத்தகைய மூலதனம் பொழுதுபோக்கு பூங்கா மற்றும் கோல்ப் மைதானம் அமைக்கவும் வழங்கப்படும்.

சுற்றுலாத் திட்டங்களுக்கு மின் ஆக்கி வாங்க 15 சதவீதம் மின் ஆக்கி மூலதனம் (அதிகபட்சம் ரூ.5.00 இலட்சம்) தகுதியின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. சென்னை, சேலம், கோவை, மதுரை போன்ற நகரங்களில் ஆண்டுதோறும் நடைபெறும் பொருட்காட்சிகள் சுற்றுலாத் தொழிலை ஊக்குவிக்க உதவுகிறது.

மேலும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும் அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யவும் கீழ்க்கண்ட பணிகளுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது:-

முக்கிய நகரங்களான திருவண்ணாமலை, பழனி, வேளாங்கண்ணி நாகூரில் நட்சத்திர தரம் வாய்ந்த ஓட்டல்கள் கட்டுதல், சாகச சுற்றுலாத் தொடங்குதல், புதிய படகு குழாம் தொடங்குதல், வன விடுதிகள் கட்டுதல். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக விடுதிகளை தனியார்மயமாக்குதல். கன்னியாகுமரி மற்றும் மாமல்லபுரத்தை சர்வதேச தரம் வாய்ந்த சுற்றுலா மையமாக மாற்ற நடவடிக்கை எடுத்தல்.

வெளிநாட்டு சுற்றுலா சந்தைகளில் பங்கேற்றல், சுற்றுலா எழுத்தர்களுக்கு சுற்றுலாச் சிறப்புகளை அறிந்துகொள்ளும் வகையில் விரிவாக தகவல் தளம் அமைத்தல் ஆகிய திட்டங்கள் படிப்படியாக மேற்கொள்ளப்பட உள்ளன.

**100—**

## தரமான உணவு

**வினா 14340—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஏற்காடு சுற்றுலா மையம் ஏழைகளின் மையமாக [illegible], கோடைக்கால [illegible] தரமான உணவு குறைந்த விலையில்

கிடைக்க சுற்றுலாத் துறை மூலம் நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்காட்டில் ஓட்டல் தமிழ்நாடு விடுதி நடத்தி வருகிறது. கோடைக்காலங்களிலும், ஆண்டுதோறும் ஓட்டல் தமிழ்நாடு மூலம் தரமான உணவு சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. உணவு விலையும் நியாயமானதாக உள்ளது.

## நான்காம் பட்டியல்

1—

### ஊதியமில்லா விடுப்பு

**வினா 9639—திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு அலுவலர்கள் வெளிநாட்டில் பணிபுரிய ஐந்து ஆண்டுகள் விடுப்பு (சம்பளமில்லாமல்) அளிக்கப்படுவதுபோல் உள் நாட்டில் சொந்தக் காரணங்களுக்காக ஊதியம் இல்லாத விடுப்பு ஐந்து ஆண்டுகள் வரை அளிப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா?

விடை—

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்:**

இது அரசால் ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டு அவசியமில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளதால் தற்பொழுது மீண்டும் இதனை பரிசீலிக்கத் தேவை இல்லை.





2—

### ஈமச்சடங்கு வசதி

**வினா 12519—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப் பணியாளர்கள் இறந்தால் அவர்களுக்கு ஈமச்சடங்கு செய்ய ரூ.5000/- வழங்குவது போல் ஓய்வூதியம் பெறுபவர் குடும்பத்திற்கும் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதியமைச்சர்:**

அரசு ஊழியர்கள் இறந்தால் அவர்களின் குடும்பத்தினருக்கு இறுதிச் சடங்கிற்காக வழங்கப்பட்டு வரும் ரூ.5000/- அவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் குடும்ப நலநிதி ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை அவர்களின் வீட்டு முகவரி மற்றும் வாரிசுதாரர்களின் பெயர்கள் முதலிய விபரங்கள், அவர்கள் பணியாற்றும் அலுவலகத்தில் உள்ள பணிப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டு இருக்கும். மேலும் அரசுத் துறையில் ஓர் அரசு அலுவலர் இறக்க நேரிட்டால் அவரது குடும்ப விபரங்கள் அலுவலகத் தலைமைக்குத் தெரிய வாய்ப்பு இருக்கிறது. அதனால் அவர்களை இனங்கண்டு, உரிய நேரத்தில் வழங்கப்படுகிறது. ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தமட்டில் அவர்களின் வாரிசுதாரர்களின் பெயர்கள் பற்றிய விவரங்கள் தெரியாது. மேலும், ஓய்வூதியதாரர்கள் பல்வேறு மாநிலங்களில் தங்கி அங்கு உள்ள கருவூலங்கள் மற்றும் வங்கிகள் மூலம் ஓய்வூதியத்தைப் பெறுவதாலும், அவர்களின் வாரிசுதாரர்களும் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலும்/வெளிநாடுகளிலும் வசித்து வருவதாலும் ஓய்வூதியதாரர் காலமாகும் பட்சத்தில் தகுந்த வாரிசுதாரர்களை உடனடியாக இனங்காண வாய்ப்பு இல்லை. எனவே, அரசு பணியாளர்கள் இறந்தால் அவர்களுக்கு ஈமச்சடங்கு செய்ய அரசு ரூ.5,000/- வழங்குவது போன்று ஓய்வூதியம் பெறும் அரசு ஊழியர்கள் இறந்தால் அவர்களுக்கு ஈமச்சடங்கு செய்ய உதவித் தொகை வழங்க இயலாததாகக் கருதப்படுகிறது.

[2002 அக்டோபர் 25

3—

## நிதி விபரம்

**வினா 14520—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2000-2001 ஆம் ஆண்டு மத்திய நிதிக் குழு தமிழகத்திற்கு அளித்த நிதி எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

பதினோராவது நிதிக் குழு 2000-01 ஆம் ஆண்டிற்கு தமிழகத்திற்கு பரிந்துரைத்த மானியங்களும், தமிழக அரசிற்கு உள்ளபடியான வரவும் (Actual Receipt) கீழ்வருமாறு:

| விவரம் | பதினோராவது நிதிக்குழுவின் பரிந்துரை | தமிழக அரசிற்கு உள்ளபடியான வரவு (Actutal Receipt) |
|---|---|---|
| | ரூபாய் | கோடியில் |
| 1. வரிப் பகிர்வில் பங்கு | 2911.00 | 2852.45 |
| 2. நிர்வாக மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டங்களுக்கான மானியம் | 101.30 | 36.28 |
| 3. உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியம் | 131.90 | 131.90 |
| 4. இயற்கை சீற்ற நிவாரண நிதிக்கு மத்திய அரசின் பங்கு | 76.98 | 76.98 |
| மொத்தம் | 3221.18 | 3097.61 |

4—

## நடுநிலைப் பள்ளி

**வினா 71357—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 அக்டோபர் 25]

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சி, புதூர் காடம்பட்டியில் ஆரம்ப தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதூர் காடம்பட்டி தொடக்கப் பள்ளியின் அருகில் ஓர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஓர் அரசு உயர்நிலைப் பள்ளி, ஓர் அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய 3 பள்ளிகள் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளேயே இருப்பதால் புதூர் காடம்பட்டி தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த வாய்ப்பு இல்லை.

5—

## பணியிடம்

**வினா 10086—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் காலியாகவுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் பணி இடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை விரைவில் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) 2002-2003 கல்வியாண்டில் மேற்காண் பணியிடங்களை நிரப்ப ஆவன செய்யப்படும்.

[2002 அக்டோபர் 25

6—

## நெசவு ஆசிரியர்

**வினா 12366—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு உயர்நிலைப் பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி பிரிவுக்கு நெசவு ஆசிரியர் பணியிடம் காலியாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக பணியிடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நெசவு, விவசாயம் மற்றும் மரவேலை உள்ளிட்ட கைத்தொழிலாசிரியர் பணியிடங்கள் நிரப்ப அரசின் "Zero Based Budgetting for accelerated Growth" கொள்கையின்படி தடையுள்ளதால் நெசவாசிரியர் பணியிடங்களை நிரப்ப இயலவில்லை. தடை நீக்கப்படும்போது அப்பணியிடங்களை நிரப்ப ஆவன செய்யப்படும்.

7—

## உள் விளையாட்டு மற்றும் விளையாட்டு அரங்கம்

**வினா 12394—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் வரும் நிதியாண்டில் உள் விளையாட்டு மற்றும் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த இடத்தில் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**



2002 அக்டோபர் 25]

(அ) நாமக்கல் மாவட்டத்தில் உள் விளையாட்டு மற்றும் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளது.

(ஆ) நாமக்கல்லில் விளையாட்டு வளாகம் அமைக்க இட ஒதுக்கீடு பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

8—

## தேசிய மாணவர் படை திட்டம்

**வினா 12430—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் தமிழக பள்ளிகளிலுள்ள தேசிய மாணவர் படை திட்டம் செயல்பட அரசு செலவிட்ட தொகை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் தமிழக பள்ளிகளிலுள்ள தேசிய மாணவர் படை திட்டம் செயல்பட அரசு செலவிட்ட தொகை ரூ.12,71,38,000/- ஆகும்.

9—

## நூலகம்

**வினா 12647—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அழகப்பசமுத்திரம் ஊராட்சியில் நூலகம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

[2002 அக்டோபர் 25

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியிலுள்ள அழகப்பசமுத்திரம் ஊராட்சியின் மக்கள்தொகை 2,365 ஆகும். மக்கள் தொகையின் அடிப்படையில் இவ்விடத்தில் பகுதிநேர நூலகம் திறக்கலாம். ஆனால், இவ்வூர் மக்கள் ஒரு நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் இவ்வூரில் நூலகம் திறக்க இயலவில்லை:

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) பின்னர் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை இலவசமாக கடலூர் மாவட்ட நூலக ஆணைக்குழு பெயருக்கு பத்திரப்பதிவு செய்து கொடுக்க வேண்டும்.

(3) ரூ.2000/- மதிப்புள்ள தளவாடப் பொருட்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

(4) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(5) ரூ.1000 செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

10—

## பணியிடம்

**வினா 13368—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, இண்டூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் தற்போது பி.எட். பட்டதாரி ஆசிரியர் பணியிடம் காலியாகவுள்ளது அரசு கவனத்திற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இக்காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**



2002 அக்டோபர் 25]

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, இண்டூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் தற்போது பி.எட். பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன.

11—

## பட்டதாரி ஆசிரியர் பணியிடம்

**வினா 13372—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பண்டஅள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் தற்போது பி.எட். பட்டதாரி ஆசிரியர்களின் பணியிடங்கள் காலியாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இக்காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பண்டஅள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் தற்போது பி.எட். பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன.

12.

## இடைநிலை ஆசிரியர் பணியிடம்

**வினா 13502—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி பி. அக்ரகாரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் இடைநிலை ஆசிரியர் பணியிடம் காலியாக உள்ளதை நடப்பாண்டில் நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

[2002 அக்டோபர் 25

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பி. அக்ரகாரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் தற்போது இடைநிலை ஆசிரியர் பணியிடம் ஏதும் காலியாக இல்லை. காலிப் பணியிடங்கள் யாவும் நிரப்பப்பட்டு விட்டன.

13—

## தொல்லியல் சின்னங்களைப் பராமரித்தல்

**வினா 15060—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள தொல்லியல் சின்னங்களைப் பராமரிக்க இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறை பராமரிப்பது போக தமிழக தொல்லியல் துறை பராமரிப்பில் உள்ளவையின் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை பராமரிப்பது போக தமிழக தொல்லியல் துறையால் 86 தொல்லியல் சின்னங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. (மாவட்டம் வாரியாக அதன் விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.)

### பாதுகாக்கப்பட்ட சின்னங்களின் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் மாவட்டம் | 13 |
| 2. | வேலூர் மாவட்டம் | 5 |
| 3. | திருவண்ணாமலை மாவட்டம் | 5 |
| 4. | விழுப்புரம் மாவட்டம் | 8 |
| 5. | கடலூர் மாவட்டம் | 4 |
| 6. | சேலம் மாவட்டம் | 1 |
| 7. | கோயம்புத்தூர் மாவட்டம் | 1 |
| 8. | தருமபுரி மாவட்டம் | 3 |
| 9. | திருச்சி மாவட்டம் | 11 |
| 10. | நாகப்பட்டினம் மாவட்டம் | 2 |
| 11. | தஞ்சாவூர் மாவட்டம் | 4 |
| 12. | மதுரை மாவட்டம் | 16 |
| 13. | திண்டுக்கல் மாவட்டம் | 2 |
| 14. | இராமநாதபுரம் மாவட்டம் | 2 |
| 15. | சிவகங்கை மாவட்டம் | 1 |
| 16. | தூத்துக்குடி மாவட்டம் | 4 |
| 17. | திருநெல்வேலி மாவட்டம் | 3 |
| 18. | கன்னியாகுமரி மாவட்டம் | 1 |
| | | 86 |



2002 அக்டோபர் 25]

### தமிழ்நாடு அரசு

### தொல்லியல் துறை

தொல்லியல் துறையின் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டில் உள்ள சின்னங்களின் பட்டியல்

**காஞ்சிபுரம் மாவட்டம்**

| வ எண் | சின்னத்தின் பெயர் | கிராமம் | வட்டம் |
|---|---|---|---|
| 1. | பிள்ளைச் சத்திரம் | செல்வழிமங்கலம் | திருப்பெரும்புதூர் |
| 2. | சிவன் கோயில் | சிவபுரம் | திருப்பெரும்புதூர் |
| 3. | ஆலம்பரைக்கோட்டை | ஆலம்பரை | செய்யூர் |
| 4. | விட்டலார் கோயில் | விட்டலாபுரம் | செங்கல்பட்டு |
| 5. | சிவன்கோயில் | சிவன்கூடல் | திருப்பெரும்புதூர் |
| 6. | கருங்குழிகோட்டை | கருங்குழி | மதுராந்தகம் |
| 7. | வழிப்போக்கர் மண்டபம் | தாங்கி | காஞ்சிபுரம் |
| 8. | மகாதேவர் கோட்டை | இடையார்பாக்கம் | திருப்பெரும்புதூர் |
| 9. | திருலோகநாத ஜீனசுவாமி கோயில் | திருப்பருத்திக்குன்றம் | காஞ்சிபுரம் |
| 10. | விசாலீஸ்வரர் கோயில் | விளக்கணாம்பூண்டி | திருத்தணி |
| 11. | சொக்கீஸ்வரர் கோயில் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 12. | சிவன் கோயில் | கூரம் | காஞ்சிபுரம் |
| 13. | சந்திரபிரபா கோயில் | திருப்பருத்திக்குன்றம் | காஞ்சிபுரம் |

[2002 அக்டோபர் 25

**வேலூர் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அரிமா மலைக்குகை | மலையம்பட்டு | குடியாத்தம் |
| 2. | சப்தமாதர்கள் சிலை | பெருங்காஞ்சி | வாலாஜாப்பேட்டை |
| 3. | சிங்கள மன்னர் கல்லறை | வேலூர் | வேலூர் |
| 4. | வாலீஸ்வரர் ஆலயம் | தக்கோலம் | அரக்கோணம் |
| 5. | கஞ்சா சாஹிப் கல்லறை | சோளிங்கர் | வாலாஜா |

**திருவண்ணாமலை மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | வந்தவாசிக் கோட்டை | வந்தவாசி | வந்தவாசி |
| 2. | சின்னையன் குளம் | சின்னையன்பேட்டை | செங்கம் |
| 3. | பூண்டி அருகர் ஆலயம் | இரும்பேடு | ஆரணி |
| 4. | கங்கைகொண்டசோழிஸ்வரர் ஆலயம் | கூழம்பந்தல் | செய்யாறு |
| 5. | தடாகபுரிஸ்வரர் ஆலயம் | மடம் | வந்தவாசி |

**விழுப்புரம் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | மலைக்கோட்டைச்சுவர்கள் | தியாகதுர்க்கம் | கள்ளக்குறிச்சி |
| 2. | கபிலர் குன்று | பெண்ணாறு | திருக்கோயிலூர் |
| 3. | சிவன் கோயில் | கண்டமங்கலம் | விழுப்புரம் |
| 4. | பாறை ஓவியங்கள் | செத்தவரை | செஞ்சி |
| 5. | திருமூலநாதர் ஆலயம் | பேரங்கியூர் | உளுந்தூர்பேட்டை |
| 6. | முத்திலேஸ்வரர் ஆலயம் மற்றும் சீதாகுகை | பெருமுக்கல் | திண்டிவனம் |
| 7. | பாறை ஓவியங்கள் | கிழ்வாலை | திருக்கோயிலூர் |
| 8. | பாறை ஓவியங்கள் | ஆலம்பாடி | திருக்கோயிலூர் |

**கடலூர் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | ருத்ராதி ஆலயம் | கீழக்கடம்பூர் | சிதம்பரம் |
| 2. | சிவன் கோயில் | உலகாபுரம் | வானூர் |
| 3. | விஷ்ணு கோயில் | உலகாபுரம் | வானூர் |
| 4. | குடம்பவனேஸ்வரர்கோயில் | எறும்பூர் | சிதம்பரம் |

**சேலம் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாறைக்கிணறு மற்றும் பண்டைத் தமிழ் கல்வெட்டு | பெரிய ஏரிப்பட்டி | ஓமலூர் |



2002 அக்டோபர் 25]

**கோயம்புத்தூர் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பண்டைய ஓவியங்கள் | வேட்டைக்காரன் | நரசிம்மபுரம் மலை |

**தர்மபுரி மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அதியமான் பெருவழிக்கல் | பக்கிரிமேடு | தர்மபுரி |
| 2. | இராமசாமிகிருஷ்ணசாமி கோயில் | மல்லப்பாடி | கிருஷ்ணகிரி |
| 3. | ஜகதேவிக்கோட்டை | ஜகதேவிப்பாளையம் | கிருஷ்ணகிரி |

**திருச்சி மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்வஸ்திக் கிணறு | திருவெள்ளறை | லால்குடி |
| 2. | இரட்டைக்கோயில் | கீழையூர் | அரியலூர் |
| 3. | அகஸ்தீஸ்வரர் கோயில் | பெருங்குடி | திருச்சி |
| 4. | கல்வெட்டுகள் மற்றும் பாறை ஓவியங்கள் | வேலாயுதபாளையம் | கரூர் |
| 5. | சிவன் கோயில் | ஆலம்பாக்கம் | லால்குடி |
| 6. | கலிங்கா சிற்பங்கள் | செங்கமேடு | உடையார்பாளையம் |
| 7. | மாளிகைமேடு | உள்கோட்டை | உடையார்பாளையம் |
| 8. | சிவன் கோயில் | பழூர் | லால்குடி |
| 9. | சிவன் கோயில் | அழகியமணவாளம் | லால்குடி |
| 10. | பாச்சில் அமலீஸ்வரம் கோயில் | அழகியமணவாளம் | லால்குடி |
| 11. | அமராவதி ஆற்றுப்படுகை | தாந்தோனி | கரூர் |

**நாகப்பட்டினம் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | டச்சுக் கோட்டை | தரங்கம்பாடி | மயிலாடுதுறை |
| 2. | டச்சுக் கோட்டை | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் |

**தஞ்சாவூர் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | சடையார் கோயில் | திருச்சினாம்பூண்டி | தஞ்சாவூர் |
| 2. | தஞ்சாவூர் அரண்மனை | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 3. | நெற்களஞ்சியம் | திருப்பாலைத்துறை | பாபநாசம் |
| 4. | மனோரா | சாரபேந்திரராஜ பட்டினம் | பட்டுக்கோட்டை |

**மதுரை மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமலை நாயக்கர் அரண்மனை | மதுரை | மதுரை |
| 2. | பத்து தூண்கள் | மதுரை | மதுரை |
| 3. | சிவன் கோயில் | அரிட்டாபட்டி | மேலூர் |
| 4. | உதயகிரீஸ்வரார் கோயில் | வரிச்சூர்மலை | மதுரை வடக்கு |
| 5. | அஸ்தகிரீஸ்வரார் கோயில் | வரிச்சூர்மலை | மதுரை வடக்கு |
| 6. | கல் வெட்டு படுக்கைகள் முருகன்கோயில் | வரிச்சூர் மலை | மதுரை வடக்கு |
| 7. | கோவலன் பொட்டல் | மாடக்குளம் | மதுரை |
| 8. | சிவன் கோயில் | அய்யாப்பட்டி | மேலூர் |
| 9. | திருமலைநாயக்கர் மண்டபம் | வலையப்பட்டி | மேலூர் |
| 10. | ஓவாமலைக் கல்வெட்டு | மீனாட்சிமண்டபம் | மேலூர் |
| 11. | பிராமிக் கல்வெட்டு | கொங்கர்புளியங்குளம் | திருமங்கலம் |
| 12. | திருவாதவூர் கல்வெட்டு | திருவாதவூர் | மேலூர் |
| 13. | கருங்காலங்குடி கல்வெட்டு | கருங்காலங்குடி | மேலூர் |
| 14. | லாடன் கோயில் | ஆனைமலை | மதுரை |
| 15. | பிராமிக் கல்வெட்டு | ஆனைமலை | மதுரை |
| 16. | தீர்த்தங்கரர் சிற்பங்கள் | ஆனைமலை | மதுரை |

**திண்டுக்கல் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாண்டியன் கல்வெட்டுபடுக்கை | இராமநாதபுரம் | வேடச்சந்தூர் |
| 2. | குகைக்கோயில் சின்ன ஐவர் மலைச்சிற்பங்கள் | தாதநாயக்கன்பட்டி | பழனி |

**இராமநாதபுரம் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | இராமலிங்கவிலாசம் | சூரங்கோட்டை | இராமநாதபுரம் |
| 2. | கட்டபொம்மன்கோட்டை | கமுதி | முதுகுளத்தூர் |

**சிவகங்கை மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | மருதுபாண்டியர் கோட்டை | அரண்மனை சிறுவயல் | காரைக்குடி |

**தூத்துக்குடி மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரிட்டிஷ் கல்லறைகள் | பாஞ்சாலங்குறிச்சி | ஒட்டப்பிடாரம் |
| 2. | பிரிட்டிஷ் கல்லறைகள் | ஒட்டப்பிடாரம் | ஒட்டப்பிடாரம் |



| | | | |
|---|---|---|---|
| 3. | கட்டபொம்மன் கோட்டை | பாஞ்சாலங்குறிச்சி | ஒட்டப்பிடாரம் |
| 4. | வெட்டுவான்கோயில் | கழுகுமலை | கோவில்பட்டி |

**திருநெல்வேலி மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பூலாவுடையார் கல்வெட்டு | சீவலப்பேரி | பாளையங்கோட்டை |
| 2. | இராஜக்கல்மங்கலம் சிற்பங்கள் (இரணியர் குடியிருப்பு) | இராஜக்கல்மங்கலம் | நாங்குனேரி |
| 3. | திருநீலகண்டம் | பனஞ்சாடி | அம்பாசமுத்திரம் |

**கன்னியாகுமரி மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | உதயகிரிகோட்டைச் சுவர் மற்றும் டிலெனாய் கல்லறை | பத்மநாபபுரம் | டவுன் கல்குளம் |

**14—**

## வகுப்பறைகள்

**வினா 15421—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், பாதூர் கிராம நடுநிலைப் பள்ளிக்கு போதிய வகுப்பறைகள் இல்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இக்கிராமப் பள்ளிக்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி ஒன்றியம், பாதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தற்போது மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நல்ல கட்டடங்கள் போதுமானவையாக உள்ளன. எனவே, கூடுதல் கட்டடங்களுக்குத் தேவை எழவில்லை.

15—

## நூலகம்

**வினா 16504—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) சீர்காழி தொகுதி, காளரமேடு ஊராட்சியில் கிளை நூலகம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிதி நிலைமை காரணமாக சீர்காழி தொகுதி, காளரமேடு ஊராட்சியில் தற்போது கிளை நூலகம் திறக்க இயலாது. இருப்பினும் காளரமேடு ஊராட்சியைச் சார்ந்த பொது மக்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவு செய்யும் பட்சத்தில், மேற்குறிப்பிட்ட பகுதியில் ஒரு பகுதி நேர நூலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

1) நூலகம் இயங்க வாடகை இல்லாத உறுதியான இலவசக் கட்டடம் அளிக்கப்படவேண்டும்.

2) எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை இலவசமாக நாகப்பட்டினம் மாவட்ட நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப் பதிவு செய்து தரப்படவேண்டும்.

3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4) ரூ.2000/- மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

5) தலா ரூ.1000/- வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.





16—

## வினா வங்கி

**வினா 16555—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெற்றோர் ஆசிரியர் கழகம் வெளியிடும் 10 ஆம் வகுப்பு ப்ளஸ் 2 வினா வங்கி மாதிரி வினாப் புத்தகங்கள் விலை அதிகமாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதன் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகம் வெளியிடும் வினா வங்கி ஏடுகள் தயாரிப்பு செலவு, காகிதம் மற்றும் அச்சுக் கூலி போன்றவற்றைக் கணக்கிட்டு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகப் பொதுக் குழுவில் விலை நிர்ணயம் செய்து வழங்கப்படுகிறது. வெளிச் சந்தையை விட இக்கழகம் வெளியிடும் புத்தகங்கள் குறைவான விலைக்கே விற்கப்படுகின்றன. விலையைக் குறைப்பது பற்றி பொதுக் குழுவில் பரிசீலிக்கப்படும்.

17—

## கிளை நூலகங்கள்

**வினா 16616—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் தமிழகத்திலுள்ள கிளை நூலகங்களுக்கு எவ்வளவு மதிப்புள்ள புத்தகங்களை அரசு வழங்கியுள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

பொது நூலகத் துறையின்கீழ் இயங்கும் 1,580 கிளை நூலகங்களுக்கு

2000-2001 ஆம் ஆண்டில் ரூ.4,66,00,380/- (ரூபாய் நான்கு கோடியே அறுபத்து ஆறு இலட்சத்து முன்னூற்று எண்பது மட்டும்) மதிப்புள்ள நூல்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

**18—**

## நாட்டு நலப் பணித் திட்டம்

**வினா 16617—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் எத்தனை மாணவர்கள் நாட்டு நலப் பணித் திட்டத்தில் (என்.எஸ்.எஸ்) சேர்ந்துள்ளார்கள்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

தமிழகத்திலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் 62,500 மாணவர்கள் நாட்டு நலப் பணித் திட்டத்தில் (என்.எஸ்.எஸ்) சேர்ந்துள்ளார்கள்.

**19—**

## ஊர்ப்புற நூலகங்கள்

**வினா 16619—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் கிராமப்புறங்களில் புதிதாக எத்தனை ஊர்ப்புற நூலகங்கள் அரசு திறந்துள்ளது?

(ஆ) எந்தெந்த மாவட்டங்களில் ஊர்ப்புற நூலகங்கள் புதிதாக திறக்கப்பட்டன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001-ம் ஆண்டில் கிராமப்புறங்களில் 122 ஊர்ப்புற நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. மாவட்ட வாரியான விவரம் பின்வருமாறு:





| | | |
|---|---|---|
| 1. | கடலூர் | 3 |
| 2. | திருவண்ணாமலை | 8 |
| 3. | சேலம் | 4 |
| 4. | நாகப்பட்டினம் | 16 |
| 5. | திருவள்ளூர் | 1 |
| 6. | திண்டுக்கல் | 5 |
| 7. | திருவாரூர் | 2 |
| 8. | தருமபுரி | 15 |
| 9. | வேலூர் | 7 |
| 10. | மதுரை | 2 |
| 11. | சிவகங்கை | 7 |
| 12. | கோயம்புத்தூர் | 5 |
| 13. | காஞ்சிபுரம் | 2 |
| 14. | தூத்துக்குடி | 1 |
| 15. | திருநெல்வேலி | 2 |
| 16. | நாமக்கல் | 2 |
| 17. | புதுக்கோட்டை | 5 |
| 18. | கரூர் | 2 |
| 19. | தஞ்சாவூர் | 3 |
| 20. | நீலகிரி | 2 |
| 21. | திருச்சிராப்பள்ளி | 2 |
| 22. | விழுப்புரம் | 8 |
| 23. | தேனி | 2 |
| 24. | விருதுநகர் | 2 |
| 25. | ஈரோடு | 11 |
| 26. | இராமநாதபுரம் | 2 |
| 27. | கன்னியாகுமரி | 1 |
| | | 122 |

**20—**

## இலங்கை அகதிகள் முகாம்கள்

**வினா 19883—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் எத்தனை இடங்களில் அகதிகள் முகாம்கள் உள்ளன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தில் இலங்கை அகதிகளின் முகாம்கள் எட்டு இடங்களில் உள்ளன. அதாவது

சேலம் மாவட்டத்தில் ஓமலூர் தாலுகா

1. ஸ்டீல் பிளான்ட் (சேலம்)
2. அத்திக் காட்டனூர்
3. குறுக்குப்பட்டி
4. பவளத்தானூர்

கெங்கவள்ளி தாலுகா

5. செந்தாரப்பட்டி (தெற்கு)
6. செந்தாரப்பட்டி (வடக்கு)
7. தம்மம்பட்டி
8. நாசியாம்பட்டி

ஆகிய எட்டு இடங்களில் அகதிகள் முகாம்கள் உள்ளன.

**21—**

## கட்டடம்

**வினா 12971—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பென்னாகரத்தில் குற்றவியல் நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) இது குறித்து செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**22—**

## சுரங்கப் பாதை

**வினா 10457—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் அருள்மிகு தேனுபுரிஸ்வரர் ஆலயத்திலுள்ள சுரங்கப்பாதை எங்கே முடிகிறது என அரசு கண்டுபிடிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் அருள்மிகு தேனுபுரிஸ்வரர் திருக்கோயிலில் முருகன் சன்னதி பக்கத்தில் 10' x 6 'x 6' அளவுள்ள செவ்வக வடிவத்தில் இரகசிய அறை ஒன்று தரை மட்டத்தில் திறந்த இடத்திலுள்ளது. அதில் இரகசிய சுரங்கப் பாதை ஏதும் இல்லை என்று இந்திய அரசு தொல்பொருள் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கண்டுபிடிக்க வேண்டியது ஏதுமில்லை.

**23—**

## அம்மன் கோவில் தேர் செப்பனிடல்

**வினா 10903—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், ஏர்வாடி அருள்மிகு திருவழுதீஸ்வரர் பெரியநாயகி அம்மன் கோயில் தேரின் நான்கு சக்கரங்களும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், ஏர்வாடியில் உள்ள அருள்மிகு திருவழுதீஸ்வரர் திருக்கோயில் நான்காம் நிலை செயல் அலுவலர் பொறுப்பில் உள்ள சட்டப்பிரிவு 46(1)-ன் கீழ் அறிவிக்கப்பட்ட திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயில் தேரின் நான்கு சக்கரங்களும் ஓடாத நிலையில் பழுதடைந்துள்ளது. மேற்படி திருக்கோயிலின் மரத்தேர் சுமார் 60 வருடங்களுக்கு மேலாக ஓடாத நிலையில் நான்கு சக்கரங்களும் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. நான்கு வெளிச்சக்கரத்தின் அச்சுத் தாங்கிகள் இரண்டும் புதிதாக பொருத்தப்பட வேண்டும். தேரின் பொம்மைகள் ஓரளவு நல்ல நிலையில் உள்ள போதிலும் தேரின் பழுதடைந்துள்ள இதர பாகங்கள் அனைத்தையும் முழுமையாக சரிசெய்ய சுமார் 250 கன அடி தேக்கு மரம் வேண்டும். தேரினை செப்பனிட்டு வார்னிஸ் பூசிட கூலி உட்பட மொத்தத்தில் சுமார் 5 இலட்சம் செலவு ஆகும் என இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் உதவி கோட்டப் பொறியாளரால் மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திருக்கோயிலின் நன்செய் நிலம் 64 ஏக்கர், புன்செய் நிலம் 148 ஏக்கர் 10 சென்ட் நிலங்கள் குறித்து நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்குக் காரணமாக ஏலத்தில் விடப்படாமல் உள்ளது. மேற்படி திருக்கோயிலின் சிப்பந்திகள் சம்பளம் மற்றும் மின்கட்டணம், படித்தரம் முதலானவைகள் கூட வழங்க முடியாத நிலையில், நிதிநிலைமை பற்றாக்குறையாகவுள்ளது. மேற்படி திருக்கோயிலில் போதுமான நிதிவசதி இல்லாததாலும், இதுவரை உபயதாரர்கள் எவரும் மேற்படித் தேரின் மராமத்துப் பணியினை உபயமாக செய்து தருவதற்கு முன்வராததாலும் மேற்படி தேரினை செப்பனிட முடியாமல் உள்ளது.

மேற்படி திருத்தேரை பொதுமக்கள் நன்கொடை மூலம் திருப்பணி செய்வதற்கு முன்வந்தால் பொதுமக்களிடம் நன்கொடை



2002 அக்டோபர் 25]

பெறும்பொருட்டு தேர்த் திருப்பணிக் குழு அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படலாம்.

**24—**

## சாலையை சீரமைத்தல்

**வினா 12210—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்கு தீபம் பண்டிகையை காண வரும் பக்தர்கள் ஆங்காங்கே அமர்ந்து தரிசிக்க நகரில் உள்ள சாலையை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இத்திருக்கோயிலின் திருக்கார்த்திகை தீபம், பிரம்மோற்சவம், கும்பாபிஷேகம் முதலிய முக்கிய திருவிழாக்கள் நடைபெறும் காலங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரால் சம்பந்தப்பட்ட துறைகளின் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தி வருகின்ற பக்தர்களுக்கு சௌகர்யமாக இறைவழிபாடு செய்ய, கிரிவலம் வர சாலைகளைப் பராமரிக்க சம்பந்தப்பட்ட துறையான நெடுஞ்சாலைத் துறை, நகராட்சி மற்றும் தொடர்புடைய பஞ்சாயத்துகளின் நிர்வாகத்துக்கு அறிவுரை வழங்கி அதன்படி சாலைகள் செப்பனிடப்பட்டு வருகின்றன.

**25—**

## நிதி வழங்கல்

**வினா 12376—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் ஆலயத்தின் சுற்றுப்புறத்தில் கடைகள் கட்ட, கோயில் பராமரிப்பு நிதியிலிருந்து நிதி வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி, அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயிலில் ஏற்கெனவே மண் சுவரால் கட்டப்பட்ட 10 கடைகள் பழுதடைந்ததனால் வேறு கடைகள் கட்டப்பட்டு வருகின்றன. எனவே, திருக்கோயிலைச் சுற்றி வேறு கடைகள் கட்ட இடவசதி இல்லாத நிலையில் கோயில் பராமரிப்பு நிதியிலிருந்து மேற்படி திருக்கோயிலைச் சுற்றி கடைகள் கட்ட நிதியுதவி வழங்க அவசியமில்லை.

**26—**

## தங்கத் தேர்

**வினா 16606—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு கார்த்திகை தீபத் திருநாளில் பழனி முருகன் கோயிலில் தங்கத் தேர் இழுக்க எத்தனை பக்தர்கள் பணம் கட்டினார்கள்?

(ஆ) இவற்றின் மூலம் எவ்வளவு வருமானம் கிடைத்தது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், மலைக்கோயிலில் நவராத்திரி திருவிழாவில் 9 நாட்களும், கந்த சஷ்டி திருவிழாவில், சூரசம்ஹாரம், தீபக் கார்த்திகை, தைப்பூச திருவிழாவில் 5 நாட்கள், பங்குனி உத்திர திருவிழாவில் 5 நாட்கள் சுவாமி புறப்பாடு நடைபெறுவதில்லை. அதன்படி 2001 கார்த்திகை தீபத் திருநாள் அன்று திருக்கோயில் மலைக் கோயிலில் தங்கரதத்தில் சுவாமி புறப்பாடு நடைபெறவில்லை. தங்கரத புறப்பாடு கார்த்திகை தீப திருநாளன்று நடைபெறாத நிலையில் வருமானம் ஏதும் கிடைக்கப்பெறவில்லை.





**27—**

## திருக்கோயிலின் தங்கும் விடுதி

**வினா 17020—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) பழனி அருள்மிகு பால தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுள்ள தங்கும் விடுதிகளில் தைப்பூசம் போன்ற விழாக் காலங்களில் பக்தர்கள் ஒரு நாள் தங்கினால் கூட மூன்று தினங்களுக்கான விடுதி கட்டணம் வசூலிப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை மேற்கொண்டு ஒழுங்குமுறைப்படுத்தி சரிசெய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் சார்பில் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகளில் மொத்தம் 403 அறைகள் உள்ளன. இவ்வறைகளுக்கு சாதாரண நாட்களில் முன்பதிவு கிடையாது. தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற திருவிழாக் காலங்களுக்கு மட்டுமே குறைந்தபட்சம் 30 நாட்களுக்கு முன்பே முன்பதிவு செய்யப்படுகிறது. தைப்பூசத்திற்கு கால்நடையாக வரும் பக்தர்கள் தங்கி ஓய்வெடுத்து வழிபாடு செய்வதற்கு வசதியாக திருவிழாவின் முன்தினம், திருவிழா நாள் மற்றும் மறுதினம் ஆகிய மூன்று தினங்களுக்கு முன்பதிவு மூலம் அனுமதிக்கப்பட்டு, மூன்று தினங்களுக்கு தொகையும் வசூலிக்கப்படுகிறது. ஆணையர் முன்

அனுமதியுடன் திருவிழா நாட்களுக்கு இரட்டிப்பு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மூன்று நாட்களுக்கு முன்பதிவு மூலம் ஒதுக்கீடு செய்யப்படும் அறைகள் வேறு நபர்களுக்கு ஒதுக்கப்படாத நிலையில் அவர்களே மூன்று தினங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் அறைகளுக்கு வாடகை செலுத்தவேண்டுமென்பதாக உள்ளது. இது தவிர ஒதுக்கீடு செய்யப்படாமல் காலியாக உள்ள அறைகளில் அவ்வப்போது தங்க விரும்பும் நபர்களுக்கு அறைகள் காலியாக இருந்தால் அவர்களுக்கு ஒரு நாள் வாடகை மட்டுமே வசூலிக்கப்படுகிறது. இதுபோன்ற தினங்களில் மூன்று நாள் வாடகை வசூலிக்கப்படுவதில்லை.

2. எனவே, தங்கும் விடுதிகளில் தைப்பூசம்/பங்குனி உத்திர விழா நாட்களில் பெரும்பாலான பக்தர்களின் விருப்பப்படி அறைகள் மூன்று நாட்களுக்கு முன்பதிவு செய்யப்பட்டு, மூன்று நாட்களுக்கு வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது என்பதாலும் முன்பதிவு செய்யாமல் சாதாரணமாக அறைகள் கோருபவர்களுக்கு ஒரு நாள் மட்டுமே வாடகை வசூலித்து அறைகள் தரப்படுகிறது என்பதாலும் இம்முறையினை ஒழுங்குபடுத்தி சரிசெய்யும் அவசியம் எழவில்லை.

**28**—

## மனநலக் காப்பகம்

**வினா 8224—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மனநோயாளி காப்பகத்தில் எத்தனை நோயாளிகள் உள்ளனர்?

(ஆ) மனநோயாளிகளுக்கு போதிய வசதி அளிக்கப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் அரசால் நடத்தப்படும் மனநலக் காப்பகம் ஒன்றுதான் உள்ளது. இது சென்னையில் உள்ளது. இங்கு தற்சமயம் 1496 உள் மன நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மனநல மருத்துவப் பிரிவு



இயங்கி வருகிறது. அவற்றில் புறநோயாளி மற்றும் உள்நோயாளி சிகிச்சை வசதிகள் உள்ளன.

(ஆ) சென்னையில் உள்ள இந்த அரசு மனநலக் காப்பகத்தில் மன நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க போதிய வசதி உள்ளது. அவர்களுக்கு தேவையான இருப்பிடம், உடை, மருத்துவம், உணவு போன்றவை வேண்டிய அளவு அளிக்கப்படுகிறது. சமீப காலத்தில் அரசின் பொருள் உதவியுடன் பல மேம்பாட்டுப் பணிகள் மனநலக் காப்பகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**29**—

## புதிய கட்டடம்

**வினா 11519—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஆரம்ப சுகாதார நிலைய பழைய கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி பெரும்பாலையில் செயல்பட்டு வந்த ஊராட்சி ஒன்றிய மருந்தகம் 1-4-1990 முதல் ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வந்தது. இந்த மருந்தக கட்டடத்திற்கு அருகிலேயே ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டிடம் கட்டப்பட்டு 1-5-2000 முதல் புதிய கட்டடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பழைய ஊராட்சி ஒன்றிய கட்டடம் இத்துறைக்கு ஒப்படைக்கப்படவில்லை. புதிய அரசு கட்டடம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட போதிய வசதிகள் கொண்டுள்ளதால் பழைய கட்டடத்தைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

30—

## கட்டட வசதி

**வினா 13080—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சியில் உள்ள துணை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இது செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சியில் உள்ள துணை சுகாதார நிலையம் தற்போது வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. நபார்டு வங்கி உதவியுடன் துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் அல்லது வரும் ஆண்டுகளில் இந்த துணை சுகாதார நிலையம் கட்ட அரசு ஆவன செய்யும்.

31—

## சுற்றுச்சுவர்

**வினா 17784—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பேரம்பாக்கம் கிராமத்தில் செயல்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையம் சுற்றுச்சுவர் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சுற்றுச்சுவர் எப்பொழுது கட்டப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசால் தற்போது நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே, திருத்தணி தொகுதி, பேரம்பாக்கம் கிராமத்தில் செயல்பட்டுவரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் இல்லை.

32—

## பணியிடங்கள் நிரப்புதல்

**வினா 2727—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி நகராட்சியில் நிரப்பப்படாமல் உள்ள துப்புரவுப் பணியாளர்கள் இடங்கள் மற்றும் பிற பணியிடங்கள் எத்தனை?

(ஆ) இப்பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வந்தவாசி நகராட்சியில் 9 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களும் 5 பிற பணியிடங்களும் காலியாக உள்ளன.

(ஆ) பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 27-12-2001 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 212-ல் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு முற்றிலும் தடை விதித்துள்ளதால் அவற்றை தற்போது நிரப்ப இயலாத நிலை உள்ளது.

33—

## கூடுதல் துப்புரவுப் பணியாளர்கள்

**வினா 13369—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சியில் கூடுதலாக துப்புரவுப் பணியாளர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் நகராட்சியில் 147 துப்புரவுப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். துப்புரவுப் பணியாளர் நியமனத்துக்கான திருத்தியமைக்கப்பட்ட அளவுகோலின்படி கூடுதலாக 18 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அவற்றில் 1-6-1998 முதல் பணியாளர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். நகராட்சியில் நிதிப் பற்றாக்குறை இருந்து வருவதால் கூடுதலாக துப்புரவுப் பணியாளர்கள் நியமனம் செய்யும் உத்தேசம் ஏதுமில்லை.

**34—**

## நியாய விலைக் கிளைக் கடை

**வினா 15339—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், அடங்கார்குளம் கிராமத்தில் நியாய விலைக் கிளைக் கடை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால் கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வடக்கு ஊரல், வாய்மொழி நியாய விலைக் கடையில் 403 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இக்கடையைச் சேர்ந்த அடங்கார்குளம் பகுதியில் 130 குடும்ப அட்டைகள் உள்ளன. பகுதிநேரக் கடை அமைத்தபின் தாய்க் கடையில் குறைந்தது 500 குடும்ப அட்டைகளும் பகுதி நேரக் கடையில் குறைந்தது 200 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும் என்கிற வரையறைகள் பொருந்தாததால் அடங்கார்குளம் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.



**35—**

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா 15455—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, சிவசுப்பிரமணியபுரம்/பத்தியநாதபுரம் கிராமத்தில் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சியில், சிவசுப்பிரமணியபுரம் பத்தியநாதபுரம் நியாய விலைக் கடை சிவசுப்பிரமணியபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில், அவ்வங்கியின் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே இந்நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித்தர வேண்டிய தேவை இல்லை.

**36—**

## பொது விநியோகக் கடை

**வினா 15516—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, தென்தண்டலம் கிராமத்தில் பொது விநியோகக் கடைக்குக் கட்டடம் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இக்கிராமத்தில் பொது விநியோகக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், அனக்காவூர் ஒன்றியத்தில் தென்தண்டலம் முழு நேர நியாய விலைக் கடை 319 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் அனக்காவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. தென்தண்டலம் ஊராட்சிக்குப்பட்ட பகுதியில் தகுதியான நிலம் தேர்வு செய்து நியாய விலைக் கடை கட்டடம் கட்ட இவ்வங்கியின் தனி அலுவலருக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**37—**

## பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா 16913—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், செவ்வாத்தூர் ஊராட்சியிலுள்ள கரம்பூர் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை ஏற்படுத்தித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் நாட்ராம்பள்ளி தொகுதியைச் சேர்ந்த கந்திலி ஒன்றியத்தில் கரக்கங்கரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் செவ்வாத்தூர் கூட்டுறவு நியாய விலைக் கடைக்கு புதூர் மற்றும் கவுண்டப்பனூர் பகுதிகளில் இரண்டு பகுதிநேரக் கடைகள் உள்ளன. 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கரம்பூர் கிராமத்தைச் சார்ந்த 150 குடும்ப அட்டைதாரர்கள் புதூர் பகுதி நேரக் கடையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். மேலும் கரம்பூர் பகுதியில் 200க்குக் குறைவான குடும்ப அட்டைகள் உள்ளதால் அரசு வகுத்த வரையறைகளின்படி அங்கு பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.



**38—**

## பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடி

**வினா 17056—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலுள்ள பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடி 2000-2001 ஆம் ஆண்டு எவ்வளவு விற்பனை செய்துள்ளது?

(ஆ) அந்த வருடத்தின் நிகர இலாபம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம், பொன்னி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.3222.67 இலட்சம் மதிப்புள்ள கட்டுப்பாடற்ற பொருட்களை விற்பனை செய்துள்ளது.

(ஆ) மேற்சொன்ன வகையில் ரூ.10.48 இலட்சம் மொத்த இலாபம் ஈட்டியுள்ளது.

**39—**

## வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்ப அட்டைகள்

**வினா 17299—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்கள் எவ்வளவு பேர் என்று அரசு கண்டறிந்துள்ளது?

(ஆ) வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்ப அட்டைகள் எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

[2002 அக்டோபர் 25

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்கள் என்றும், வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்கள் என்றும் வேறுபாடின்றி, அனைத்துக் குடும்பங்களுக்கும் ஒரே விலையில் நுகர்பொருட்கள் வழங்கப்படுகின்றன. அரிசி வேண்டாதோருக்கு அதற்குப் பதிலாக கூடுதல் மண்ணெண்ணெய்யோ சர்க்கரையோ வழங்கப்படுகின்றது. சேலம் மாவட்டத்தில் குடும்பத் தலைவர்கள் விருப்பம் தெரிவித்தபடி அரிசி அட்டைகள் வழங்கப்பட்டவர்கள் மற்றும் அரிசிக்குப் பதிலாக மண்ணெண்ணெய் அல்லது சர்க்கரை அட்டைகள் வழங்கப்பட்டவர்களின் விவரம் 31-5-2002 நிலவரப்படி பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| (1) அரிசி அட்டைகள் | - | 5,37,411 |
| (2) சர்க்கரை அட்டைகள் (கூடுதல் சர்க்கரை) | - | 86,963 |
| (3) மண்ணெண்ணெய் அட்டைகள் (கூடுதல் மண்ணெண்ணெய்) | - | 1,64,394 |
| (4) காவலர் அட்டைகள் (மண்ணெண்ணெய் அட்டைகள்) | - | 682 |
| மொத்தம் | .. | 7,89,450 |

40—

## பொருட்களை எடைபோடுதல்

**வினா 18921—திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நியாய விலைக் கடைக்கு வந்து இறங்கும் உணவுப் பொருட்களை நியாய விலைக் கடையில் இறங்கும் சமயத்தில், பொருட்களை எடைபோட்டு கடை விற்பனையாளர்களிடம் கொடுக்கும் நடைமுறையைப் பின்பற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?



2002 அக்டோபர் 25]

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை நியாய விலைக் கடைகளுக்கு எடுத்துச்செல்ல, சம்பந்தப்பட்ட முதன்மைச் சங்கங்களின் லாரிகளில் ஏற்றுவதற்குமுன் இக்கிடங்குகளில் கூட்டுறவு நிறுவனங்களின் சார்பில் பணியமர்வு செய்யப்பட்டுள்ள கிடங்கு ஒருங்கிணைப்பாளர்கள் அத்தியாவசியப் பொருட்களின் எடை மற்றும் தரத்தினை சரிபார்த்த பின்னரே லாரிகளில் ஏற்றி நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. அவ்வாறு அனுப்பப்படும் அத்தியாவசியப் பொருட்கள் எடை குறைவு ஏற்படாமல் நியாய விலைக் கடைகளில் இறக்கப்படுவதையும் உறுதி செய்து கொள்ள, முதன்மைச் சங்கங்களின் பணியாளர் ஒருவர் லாரியுடன் சென்று சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களை இறக்கி, அவ்விவரத்தை நியாய விலைக் கடைகளில் இருப்புப் பதிவேட்டில் பதிந்து கையொப்பமிட உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இது தவிர துறை அலுவலர்கள் அவ்வப்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளை திடீர் ஆய்வு செய்து எடையளவினை சரிபார்த்தும் வருகின்றனர். இத்துடன் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிச் செல்லும் லாரிகளை இடைமறித்து ஆய்வு செய்து அத்தியாவசியப் பொருட்களின் எடை குறைவு ஏற்படுவதைத் தவிர்த்தும் வருகின்றனர்.

நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் எடை குறைவாக வழங்கப்படுவதைத் தவிர்க்க கூட்டுறவுத் துறை அலுவலர்கள் மூலம் அவ்வப்போது முறையான ஆய்வும், திடீர் ஆய்வும் மேற்கொண்டு தவறு இழைக்கும் நியாய விலைக் கடை பணியாளர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

41—

## மண்ணெண்ணெய் விவரம்

**வினா 18927—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

(அ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் எடப்பாடி நகர மண்ணெண்ணெய் விநியோக மையத்திற்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் எவ்வளவு?

(ஆ) அதில் வாங்காமல் விடுபட்டு நின்ற இருப்பு மண்ணெண்ணெய் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி நகராட்சியில் செயல்படும் எடப்பாடி மண்ணெண்ணெய் விநியோக மையத்திற்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் அளவு விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| 2000-ம் ஆண்டில் வழங்கப்பட்டது | 733 | கி.லி. |
| 2001-ம் ஆண்டில் வழங்கப்பட்டது | 705 | கி.லி. |
| மொத்தம் | 1438 | கி.லி. |

(ஆ) அதில் வாங்காமல் விடுபட்டு நின்ற இருப்பு மண்ணெண்ணெய் அளவு விவரம்:—

| ஆண்டு | ஆரம்ப இருப்பு | ஒதுக்கீடு | ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டது | விற்பனை அளவு | இறுதி இருப்பு |
|---|---|---|---|---|---|
| | | | (அனைத்தும் | கிலோ | லிட்டரில்) |
| 2000 | 4 | 733 | 733 | 728 | 9 |
| 2001 | 9 | 705 | 705 | 712 | 2 |
| | மொத்தம் | 1438 | 1438 | 1440 | |

42—

## உணவுப் பொருள் வழங்கல் துறை

**வினா 19137—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 அக்டோபர் 25]

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் உணவுப் பொருள் வழங்கல் துறை குற்றப் புலனாய்வுப் பிரிவு மூலம் 2000-2001 ஆம் ஆண்டு பிடிக்கப்பட்ட வழக்குகள் எத்தனை?

(ஆ) அவை என்ன கடத்தலுக்காக பிடிக்கப்பட்டது என்பதை அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் உணவுப் பொருள் வழங்கல் குற்றப் புலானய்வுப் பிரிவு மூலம் 2000-ம் ஆண்டில் 377 வழக்குகளும், 2001-ஆம் ஆண்டில் 664 வழக்குகளும் தொடுக்கப்பட்டன.

(ஆ) அவை பொது விநியோகத் திட்டத்திற்காக அளிக்கப்பட்ட அரிசி, வெளிச்சந்தை அரிசி மற்றும் நெல் கடத்தல் ஆகியவற்றிற்காகப் பிடிக்கப்பட்டன.

43—

## நியாய விலைக் கடை

**வினா 22909—திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாயவிலைக் கடைகளில் அரிசி வழங்கப்படாத அட்டைதாரர்களுக்கு ரவை, மைதா மற்றும் கோதுமை மாவு. பாக்கெட்டுகளில் வழங்க ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நியாய விலைக் கடைகளில் அரிசி வழங்கப்படாத அட்டைதாரர்களுக்கு ரவை, மைதா மற்றும் கோதுமை மாவு ஆகியவற்றை பாக்கெட்டுகளில் வழங்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

44—

## குடும்ப அட்டைகள் வழங்குதல்

**வினா 26482—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்ப அட்டை இல்லாத குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்க நடப்பாண்டில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குடும்ப அட்டை இல்லாத குடும்பங்களில் குடும்பத் தலைவர்கள் சம்பந்தப்பட்ட உணவுப் பொருள் வழங்கல் துறை அலுவலர்களுக்கு விண்ணப்பித்தால், அம்மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டு, தகுதி இருப்பின், உடனுக்குடன் குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

45—

## வீட்டு மனைப் பட்டா

**வினா 10743—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சின்னபெரமனூர் அருந்ததியர் குடியிருப்பிற்கு நடப்பாண்டில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

பெண்ணாகரம் வட்டம், சின்னபெரமனூர் கிராமம், புல எண் 240/5-ல் 0.14 ஏக்கர் நிலம் திரு. முதலாளி (எ) பெருமாள் பெயரில் பட்டா எண் 1038-ல் கூட்டுப் பட்டாவாக கிராமக் கணக்குகளில் பதிவாகி உள்ளது. இந்த நிலம் தற்போது காலியாக உள்ளது. இந்நிலத்தில் அரசு வீடுகட்டிக் கொடுக்க வேண்டும் என அருந்ததியர்கள் விசாரணையில் தெரிவித்தனர். எனவே, இந்நேர்வு குறித்து தர்மபுரி தனி வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்) மூலமாக உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.





46—

## ஜெராக்ஸ் இயந்திரம்

**வினா 11511—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள எல்லா சார்—பதிவாளர் அலுவலகங்களுக்கும் (ஜெராக்ஸ்) நகல் எடுக்கும் இயந்திரம் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) பதிவுத் துறையில் மொத்தம் 601 சார்-பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் ரொக்கத்தில் 30 ஜெராக்ஸ் இயந்திரம் வாங்கப்பட்டு சார்-பதிவாளர் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் 2000-2001 ஆம் நிதியாண்டில், வாடகை அடிப்படையில் 10 சார்-பதிவாளர் அலுவலகங்களுக்கு ஜெராக்ஸ் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை மொத்தம் 40 சார்-பதிவாளர் அலுவலகங்களுக்கு ஜெராக்ஸ் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) பொதுமக்கள் நலன் கருதி உடனடியாக நகல் வழங்கிட அரசின் நிதிநிலைக்கு ஏற்ப பகுதி பகுதியாக வருங்காலத்தில் அனைத்து சார்-பதிவாளர் அலுவலகங்களுக்கும் மேற்படி (ஜெராக்ஸ்) நகல் எடுக்கும் இயந்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

47—

## கணினி வழங்குதல்

**வினா 11574—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

(அ) சேலம் மாவட்டத்தில் பதிவாளர், சார்-பதிவாளர் அலுவலகங்களுக்கு அரசு கணினி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சேலம் பதிவு மாவட்டத்திலுள்ள மாவட்டப் பதிவாளர் மற்றும் சார்-பதிவாளர் அலுவலகங்கள் 12-ம் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

(ஆ) 1-1-2002 முதல் சேலம் பதிவு மாவட்டத்தில் கீழ்க்கண்ட மாவட்டப் பதிவாளர் மற்றும் சார்-பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன:-

1. மாவட்டப் பதிவாளர் அலுவலகம், சேலம் (கிழக்கு)
2. சார்-பதிவாளர் அலுவலகம், ஆத்தூர்
3. சார்-பதிவாளர் அலுவலகம், வாழப்பாடி
4. சார்-பதிவாளர் அலுவலகம், பெத்தநாயக்கன்பாளையம்
5. சார்-பதிவாளர் அலுவலகம், தாதகாபட்டி
6. சார்-பதிவாளர் அலுவலகம், அயோத்தியாபட்டினம்
7. சார்-பதிவாளர் அலுவலகம், வீரபாண்டி
8. சார்-பதிவாளர் அலுவலகம், ஓமலூர்
9. சார்-பதிவாளர் அலுவலகம், சங்ககிரி
10. 3 நிர் இணை சார்-பதிவாளர் அலுவலகம், சேலம் (மேற்கு)
11. சார்-பதிவாளர் அலுவலகம், சூரமங்கலம்
12. சார்-பதிவாளர் அலுவலகம், எடப்பாடி.

**48**

## பட்டா வழங்குதல்

**வினா 13038—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சி, துமக்கல், மொரப்பூர்காடு, எரிமலை, கோட்டூர்மலை, அலக்காடு, தோடும்பட்டி, மருக்காரம்பட்டி ஆகிய கிராமங்களில் புறம்போக்கு நிலங்களை நீண்டகாலமாக விவசாயம் செய்துவரும் விவசாயிகளுக்கு



2002 அக்டோபர் 25]

பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சி, துமக்கல் கிராமம், புல எண்கள் 455, 456, 457, 458, 471, 472, 480, 484, 485, 503, 386, 387, 390, 394 மற்றும் 399 ஆகிய நிலங்களில் நீண்டகாலமாக விவசாயம் செய்துவரும் நபர்களுக்கு நிலப்பட்டாக்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டது. மொரப்பூர்காடு, புல எண் 121-இல் அமைந்துள்ள இடமாகும். இப்புலம் மாரியம்மன் கோவில் மானிய நிலம் என்பதால் இதில் விவசாயம் செய்துவரும் நபர்களுக்கு நிலப்பட்டா வழங்க இயலாது. மீதமுள்ள எரிமலை, கோட்டூர்மலை, அலக்காடு, தோடும்பட்டி மற்றும் மருக்காரம்பட்டி ஆகிய கிராமங்களில், விவசாயம் செய்து வரும் நிலங்கள் 'அனாதீனம்' மற்றும் தீர்வை ஏற்படாத தரிசு நிலங்களாகும். இவற்றை நில ஒப்படை செய்ய அரசு விதிமுறைகளின்படியும், தகுதியின் அடிப்படையிலும் பரிசீலனை செய்து, நிலவகை மாறுதல் செய்து தகுதியுள்ள நபர்களுக்கு நிலப் பட்டா வழங்க வட்டாட்சியரால் உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**49**—

## சார்-பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா 13052—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் சார்-பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

[2002 அக்டோபர் 25

(அ) சேலம் மேற்கு பதிவு மாவட்டத்தைச் சேர்ந்த கொளத்தூர் சார்-பதிவாளர் அலுவலகம், முகாம் அலுவலகம் ஆனதால் வாரத்தில் 2 நாட்கள் மட்டுமே பதிவுப் பணி மேற்கொள்ளப்படுகிறது. மேற்படி அலுவலகத்திற்கு நில ஒதுக்கீடு செய்யப்படாத நிலையில் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. ஆவணங்கள் பாதுகாப்பு, ஆவணங்கள் ஆண்டு பதிவு, ஆண்டு வருவாய், கட்டடம் கட்டும் இடவசதி, பொது மக்கள் வசதி ஆகியவற்றின் அடிப்படையிலும் இச்சார்-பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

**50—**

## பட்டா

**வினா 15899—திரு. டி. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், அண்டுகோடு வருவாய் கிராமத்தில் முல்லையாறு கால்வாய் ஓரத்தில் குடியிருக்கும் ஏழை பாமர மக்களுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், அண்டுகோடு கிராமம், புல எண் 163 மற்றும் 164/1 முறையே 0.43.5 மற்றும் 1.47.5 எக்டேர் பரப்பளவு கொண்ட 'வாய்க்கால்' புறம்போக்காகும். இது முல்லையாறு வாய்க்கால் என அழைக்கப்படுகிறது. இவ்வாய்க்கால் புறம்போக்கு நிலத்தினை 42 நபர்கள் ஆக்கிரமித்து குடிசை கட்டி வாழ்ந்து வருகின்றனர். அரசாணை (நிலை) எண் 41, வருவாய்த் துறை, நாள் 20-1-1987-ன்படி நீர்நிலைப் புறம்போக்குகளில் குடியிருப்பவர்களுக்கு ஒப்படை வழங்கக்கூடாது என அரசு ஆணை பிறப்பித்துள்ளது. நீர்நிலைகளை ஆக்கிரமிப்பு செய்தல் ஆட்சேபகரமானது. இந்நிலையில் மேற்படி வாய்க்கால் புறம்போக்கில் குடியிருக்கும் நபர்களுக்குப் பட்டா வழங்க இயலாது.



2002 அக்டோபர் 25]

**51—**

## கட்டடம்

**வினா 16650—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடத்தில் உள்ள சார்-பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மயிலாடுதுறை பதிவு மாவட்டத்தைச் சேர்ந்த கொள்ளிடம் சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்படாத நிலையில் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**52—**

## பட்டா வழங்குதல்

**வினா 17766—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் திருவதிகை, திடீர்குப்பம் பகுதி மக்களுக்குப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், பண்ருட்டி நகரத்தில் திருவதிகை, திடீர்குப்பம் பகுதி வார்டு பி, பிளாக் 42, டி.எஸ்.எண்

10/4-இல் 1.0800 சதுர மீட்டர் ஸ்ரீரங்கநாதசாமி தேவஸ்தான சத்திரம் புறம்போக்கு மற்றும் வார்டு-பி பிளாக் 42, டி.எஸ்.எண் 11/2-இல் 0.2700 சதுர மீட்டர் கோயில் புறம்போக்கு ஆகிய இடங்களில் 19 நபர்கள் கூரை வீடுகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்து அனுபவித்து வருகிறார்கள். பிரஸ்தாப இடம் கோயில் புறம்போக்கு என்பதால் ஆக்கிரமிப்புதாரர்களுக்குப் பட்டா வழங்க இயலாது.

**53—**

### பட்டா

**வினா 17970—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, தென்மாவந்தல் ஊராட்சியில் உள்ள மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

தென்மாவந்தல் கிராம பாட்டை புறம்போக்கு புல எண் 119/1-ல் 13 நபர்கள் வீடு கட்டியும், சாகுபடி செய்தும் தலா 0.01.0 எக்டேர் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். மேற்படி நபர்களுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொண்டபோது ஆட்சேபணை இருந்ததால் பட்டா வழங்க இயலவில்லை.

**54—**

### கிராமச் சாவடி பழுதுபார்த்தல்

**வினா 19727—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரத்தில் இடிந்துவிழும் நிலையில் உள்ள கிராம நிர்வாக அதிகாரி அலுவலகம் (கிராமச் சாவடி) பழுதுபார்க்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**



(அ) மற்றும் (ஆ) இல்லை.

**55—**

### கிராமச் சாவடி அமைத்தல்

**வினா 20176—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் குடியிருப்பு வசதியுடன் கூடிய கிராமச் சாவடி அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் மொத்தம் 12,506 கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளனர். அனைவருக்கும் குடியிருப்புடன் இணைந்த அலுவலகம் கட்டித்தர அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. அதன்படி மலைப் பிரதேசங்களில் 60 கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் குடியிருப்புடன் இணைந்த அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 11-வது நிதிக் குழுவின் மானியத்திலிருந்து மேலும் சுமார் 166 குடியிருப்புகள் வரும் ஆண்டுகளில் கட்டப்படவுள்ளன. ஒரு குடியிருப்பு கட்ட சுமார் ரூ.5.08 இலட்சம் செலவாகும். மீதிக் குடியிருப்புகள், வரும் ஆண்டுகளில் படிப்படியாக நிதிநிலைக்கேற்பவும் அவசர அவசிய நிலைக்கேற்பவும் கட்டப்படும். எப்போது மொத்தமும் கட்டி முடிக்க முடியும் என்பதை அறுதியிட்டுக் கூறுவது இயலாததாகும்.

**56—**

### பட்டாக்கள் வழங்குதல்

**வினா 25341—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட வட்டுவனஅள்ளி ஊராட்சியிலுள்ள தும்மக்கல் கிராமப் பகுதிகளில் நீண்டகாலமாக புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்துவரும் ஏழை சிறு விவசாயிகளுக்குப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, வா நிலஅள்ளி ஊராட்சியிலுள்ள தும்பக்கல் கிராமம், புல எண்கள் 455, 456, 457, 458, 471, 472, 480, 484, 485, 503, 386, 387, 390, 394 மற்றும் 399 ஆகிய நிலங்களில் நீண்ட காலமாக விவசாயம் செய்துவரும் நபர்களுக்கு நிலப் பட்டாக்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. எரிமலை, கோட்டூர்மலை, அலக்காடு, தோகும்பட்டி மற்றும் மருக்காரம்பட்டி ஆகிய கிராமங்களில் விவசாயம் செய்து வரும் நிலங்கள், 'அனாதீனம்' மற்றும் தீர்வை ஏற்படாத தரிசு நிலங்களாகும். இவற்றை நில ஒப்படை செய்ய விதிமுறைகளின்படியும் தகுதியின் அடிப்படையிலும் பரிசீலனை செய்து, நிலவகை மாறுதல் செய்தும் நிலப்பட்டா வழங்க உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு நிலப்பட்டா வழங்க உரிய நடவடிக்கை மாவட்ட வருவாய் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

57—

## விளைபொருட்களுக்கு பணம் பட்டுவாடா

**வினா 2887அ—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்பனை செய்யப்படும் விளைபொருட்களுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை விற்பனை குழு கட்டுப்பாட்டில் இயங்கிவரும் வந்தவாசி விற்பனைக் கூடத்தில் வரத்து வரும் அனைத்து விளைபொருட்களுக்கும் விற்பனை செய்த அன்றே பணம் பட்டுவாடா செய்வதற்கான நடைமுறைகள் உள்ளன. வரத்து அதிகமாக வரும் காலத்தில் கொள்முதல் செய்யும் வெளியூர் வியாபாரிகளால் அன்றே பணம் பட்டுவாடா செய்ய இயலாத நிலையில் விவசாயிகள் அன்றே



பணம் பெறாமல் செல்லும் நிலையில் காலதாமதமாகிறது. இக்காலதாமதத்தைத் தவிர்க்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

58—

## தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

**வினா 13693—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை, ஆலங்குளம், மானூர், மேலநீலிதநல்லூர் ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. எனவே வரும் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் சேரன்மகாதேவி தொகுதியில் உள்ள சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி, தேர்வு செய்ய பரிசீலிக்கப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

59—

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

**வினா 15270—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேலச்சேவல் பேரூராட்சி திருநெல்வேலியிலிருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருநெல்வேலியில் ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், உலர் களம், கிட்டங்கி முதலிய அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. மேலச்சேவல் பேரூராட்சி பகுதியிலிருந்து விவசாயிகள் தங்கள் விளைப் பொருட்களை திருநெல்வேலி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வருவதற்கு சாலை வசதியும் போக்குவரத்து வசதியும் போதுமான அளவு உள்ளது. எனவே, மேலச்சேவல் பேரூராட்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பதற்கான அவசியம் தற்போது எழவில்லை.

**60—**

## விதைகள் உற்பத்தி

**வினா 17839—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியிலுள்ள டேனிஷ்பேட்டை விதைப் பண்ணையில் என்னென்ன விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதியிலுள்ள டேனிஷ்பேட்டை விதைப் பண்ணையில் நெல், சிறுதானியம், எண்ணெய் வித்துக்கள், பயறு வகை மற்றும் காய்கறி ஆகிய பயிர்களின் ஆதார விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**61—**

## விதைப் பண்ணை

**வினா 17840—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேலம் மாவட்டம், டேனிஷ்பேட்டையில் செயல்படும் விதைப் பண்ணையில் விவசாயிகளுக்குப் பயிற்சிகள் அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், டேனிஷ்பேட்டை அரசு விதைப் பண்ணையில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் எதுவும் இல்லை. ஆனால், டேனிஷ்பேட்டை உள்ளடக்கியப் பகுதியில் செயல்படும் உழவர் பயிற்சி நிலையம் மூலம் உழவர்களுக்கு வேளாண் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**62—**

**வினா 17844—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், டேனிஷ்பேட்டையில் செயல்படும் விதைப் பண்ணையில் 2000-2001 ஆம் ஆண்டு எத்தனை டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், டேனிஷ்பேட்டையில் செயல்படும் அரசு விதைப் பண்ணையில் 2000-2001 ஆம் ஆண்டில், மொத்தம் 66.650 மெ.டன் நெல் ஆதார விதை உற்பத்தி செய்யப்பட்டது.

**63—**

## சத்துணவுக் கூடம் அமைத்தல்

**வினா 3208—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, நடுக்குப்பம் ஊராட்சி நடுமேட்டுக்குப்பம் பள்ளிக்குச் சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2002 அக்டோபர் 25

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, நடுக்குப்பம் ஊராட்சி, நடுமேட்டுக் குப்பம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் சமையற்கூடம் உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

**64—**

**ஊனமுற்ற, மூளை வளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கு உதவி**

**வினா 12569—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, செம்மேடு கிராமத்தில் உடல் ஊனமுற்றவர்கள் மற்றும் மூளை வளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கு அரசு, சமூக நலத் துறை மற்றும் மறுவாழ்வுத் துறை மூலம் உதவி செய்திட முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, செம்மேடு கிராமத்திற்கு கடலூர் மாவட்ட ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு அலுவலர் நேரில் சென்று அங்குள்ள உடல் ஊனமுற்ற மற்றும் மூளை வளர்ச்சி குன்றிய 12 பேருக்குத் தேவையான உதவிகளை ஏற்கெனவே செய்துள்ளார்.

**65—**

**சத்துணவு மையம்**

**வினா 12605—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 அக்டோபர் 25]

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட நடுக்காட்டுப்பாளையம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்குச் சத்துணவு மையம் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட நடுக்காட்டுப் பாளையம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சத்துணவு மையம் 1-9-2001 முதல் துவக்கப்பட்டு 53 பிள்ளைகளுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

**66—**

**சத்துணவுக் கூடம் கட்டுதல்**

**வினா 12708—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சீகன்காடு கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்குச் சத்துணவுக் கூடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், சீகன்காடு கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி இல்லாததால் சத்துணவுக் கூடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**67—**

**கருப்புக் கண்ணாடி மற்றும் மடக்கு ஊன்றுகோல்கள் வழங்குதல்**

**வினா 13178—திரு. செ. வெங்கடாஜலம்:** சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடந்த ஆண்டில் சேலம் மாவட்டத்தில் பார்வையற்றோருக்கு கருப்புக் கண்ணாடி மற்றும் மடக்கு ஊன்றுகோல் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் பார்வையற்றவர்களுக்கு 2000-2001 மற்றும் 2001-2002-ம் ஆண்டுகளில் முறையே 118 மற்றும் 50 கருப்புக் கண்ணாடி மற்றும் மடக்கு ஊன்றுகோல்கள் வழங்கப்பட்டுள்ளது.

**68—**

## ஊனமுற்றோர் இல்லம்

**வினா 14750—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதியில் ஊனமுற்றோர் இல்லம் அமைக்க அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சங்ககிரி தொகுதியில் ஊனமுற்றோர் இல்லம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**69—**

## மதிய சத்துணவுக் கூடங்கள்

**வினா 16436—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மதிய சத்துணவுக் கூடங்கள் எத்தனை உள்ளன? அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு எந்தத் துறையிடம் உள்ளது?

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டத் தொகை எவ்வளவு?

(இ) அதில் எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டுள்ளது?



விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உள்ள மதிய சத்துணவுக் கூடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றைப் பராமரிக்கும் துறைகளின் விவரம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்படுகிறது:

| | |
|---|---|
| ஊரக வளர்ச்சி இயக்க கட்டுப்பாட்டில் உள்ள மையங்கள் | 38,925 |
| நகராட்சி ஆணையரின் கட்டுப்பாட்டில் உள்ள மையங்கள் | 2,087 |
| சமூக நல ஆணையரின் கட்டுப்பாட்டில் உள்ள மையங்கள் (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் 113) | 10,420 |

(ஆ) 2001-2002-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.2510.28 இலட்சம்.

(இ) அதில் இதுவரை செலவழிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்படுகிறது.

| | |
|---|---|
| நகராட்சி நிர்வாக ஆணையரால் | ரூ. 180.33 இலட்சங்கள் |
| தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் | ரூ. 90.07 இலட்சங்கள் |
| சமூக நல ஆணையரால் | — |
| ஊரக வளர்ச்சி இயக்குநரால் | — |
| மொத்தம் | ரூ. 270.40 இலட்சங்கள் |

**70—**

## மயானக் கொட்டகை வசதி

**வினா 5424அ—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஆதிதிராவிடர் கிராமத்திற்கு மயானக் கொட்டகை வசதி அமைத்துத் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, நெப்பத்தூர் ஆதிதிராவிடர் கிராமத்திற்கு மயானக் கொட்டகை அமைத்துத் தருவது தொடர்பான திட்டம் ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

**71—**

**மயானக் கொட்டகை வசதி**

**வினா 5426அ—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வேதராஜபுரம் ஊராட்சி, மேல்பாதி கூனங்கரும்பு கிராமத்திற்கு மயானக் கொட்டகை வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, வேதராஜபுரம் ஊராட்சி, மேல்பாதி கூனங்கரும்பு கிராமத்திற்கு மயானக் கொட்டகை வசதி அமைப்பது தொடர்பாக திட்டம் அரசிடம் இல்லை.

**72—**

**சாதிச் சான்று**

**வினா 8870—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் காட்டுநாயக்கன் இனத்தவர் உள்ளனர் என்று மீண்டும் அரசு சான்று வழங்குமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்தில் வசிக்கும் காட்டுநாயக்கன் இனத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் சாதிச் சான்று கோரி மனு செய்து அம்மனுவின் மீதான விசாரணையின்போது சாதிக்கு ஆதாரமான ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் நிலையில், அவ்வாவணங்களின் அடிப்படையில் ஆய்வு செய்து உண்மையான காட்டுநாயக்கன் இனத்தவர்களுக்கு நிரந்தர சாதிச் சான்றுகள் தாமதமின்றி வழங்கப்படும்.

**73—**

**தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்**

**வினா 10191—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் ஏழை, எளிய ஆதி திராவிடப் பெண்களுக்கு நடப்பு நிதியாண்டில் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச தையல் இயந்திரங்கள் உள்ளிட்ட தொழிற்கருவிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை.

**74—**

**இலவச வீட்டுமனைப் பட்டா**

**வினா 12717—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொள்ளுக்காடு ஊராட்சியில் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதிக்குட்பட்ட கொள்ளுக்காடு ஊராட்சியைச் சேர்ந்த ஆதிதிராவிடர் மக்களால் வீட்டுமனைப்பட்டா வழங்கிடக் கோரி எவ்விதமான கோரிக்கை மனுக்களும் கொடுக்கப்படவில்லை என்பதால் மேற்படி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் இல்லை.

75—

## மயான வசதி

**வினா 12757—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், அம்மையாண்டி ஊராட்சி ஆதிதிராவிட மக்களுக்கு மயான வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், அம்மையாண்டி கிராமம் புல எண் 1 கண்டியன்குளம் வட பகுதியில் ஆதிதிராவிடர்களின் மயானம் உள்ளது. பேராவூரணி—புதுக்கோட்டை மெயின் ரோட்டிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் செருவாவிடுதி தார்ச் சாலை வழியாக இப்பகுதி மக்கள், மயானத்தை அடைகின்றனர். மயானத்திற்குச் செல்ல போதுமான இட வசதி உள்ளது. எனவே, இது குறித்து அரசிடம் செயற்குறிப்பு ஆய்வில் இல்லை.



76—

## இலவச விட்டு மனைப் பட்டா

**வினா 17029—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியிலுள்ள வடபாதி ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம், அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியிலுள்ள வடபாதி ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது.

77—

## இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 17199—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, செருவாவிடுதி வடக்கு மற்றும் தெற்கு ஊராட்சிகளில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி செருவாவிடுதி வடக்கு மற்றும் தெற்கு ஊராட்சிகளில் உள்ள ஆதிதிராவிட மக்களிடமிருந்து இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கக் கோரி மனுக்கள் பெறப்படவில்லையாதலால், மேற்சொன்ன கிராம மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

**78—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 17201—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சோலைக்காடு ஊராட்சி கல்லாம்பொறை குடியிருப்பில் உள்ள ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சோலைக்காடு ஊராட்சி, கல்லாம்பொறை குடியிருப்பில் உள்ள ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கக்கோரி மனுக்கள் பெறப்படவில்லையாதலால், மேற்சொன்ன கிராம மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் ஆய்வில் இல்லை.





**79—**

**வினா 17202—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் பேரூராட்சியில் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் பேரூராட்சியில் வாழும் ஆதிதிராவிட மக்களிடமிருந்து இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கக் கோரி மனுக்கள் பெறப்படவில்லையாதலால், மேற்சொன்ன கிராம மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

**80—**

## மயானக் கொட்டகை, சாலை அமைத்தல்

**வினா 17577—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்குடி ஊராட்சியிலுள்ள கோடங்குடி (சத்திரம்) கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு மயானக் கொட்டகை அமைத்து சாலை போட்டுக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

[2002 அக்டோபர் 25

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்குடி ஊராட்சியிலுள்ள கோடங்குடி (சத்திரம்) கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு மயானக் கொட்டகை அமைத்துத் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. சாலை வசதி ஏற்படுத்தித் தரும் நடவடிக்கை மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது.

**81—**

## கல்விக் கடன் உதவித் தொகை

**வினா 19040—திரு. க. பாரமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பட்டப்படிப்பு-பட்ட மேற்படிப்பு மற்றும் தொழில் கல்வி (Professional course) படிக்கும் மாணவர்களுக்கு 1999-லிருந்து 2002 ஆம் ஆண்டு வரை ஆண்டு வாரியாக எத்தனை ஆதிதிராவிடர் மாணவர்களுக்குக் கல்விக் கடன் உதவித் தொகை (Loan Scholarship) வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

1999 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை ஆண்டு வாரியாக ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த கல்விக் கடன் உதவித் தொகை (Loan Scholarship) மற்றும் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை குறித்த விவரம் வருமாறு:

| ஆண்டு | பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | செலவிடப்பட்டுள்ள தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1999-2000 | 6733 | 454.50 |
| 2000-2001 | 14102 | 960.60 |
| 2001-2002 | 6424 | 437.70 |



2002 அக்டோபர் 25]

**82—**

## பணியாளர்கள் பதவி உயர்வு

**வினா 12224—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார வாரியத்தில் ஒரே பதவியில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக களப் பணியாளர்கள் மற்றும் அட்டைப் பட்டியல் பணியாளர்கள் பதவி உயர்வு இல்லாமல் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பதவி உயர்வு வழங்க செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தெரியும்.

(ஆ) இதுகுறித்து பல்வேறு தொழிற் சங்கங்களுடன் அட்டைப் பட்டியல் பணியாளர்களுக்கான பணி வரையறையை (வேலைப்பளுவை) மாற்றியமைப்பது குறித்த கோரிக்கை பேச்சு வார்த்தையில் உள்ளது.

15 ஆண்டு பணிக் காலம் முடிக்கப்பட்ட மதிப்பீட்டாளர்கள் மற்றும் 10 ஆண்டு பணிக்காலம் முடிக்கப்பட்ட மதிப்பீட்டு ஆய்வாளர்கள் ஆகியோருக்குப் பதவி உயர்வு வழங்குவதற்கான கோரிக்கையின்மீது மிகைப் பதவிகளை உருவாக்குவது வாரியத்தின் தீவிர பரிசீலனையில் உள்ளது. இது தொழிற்சங்கங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியபின் இறுதியாக்கப்பட்டு முடிக்கப்படும்.

**83—**

## வாகனம் வழங்குதல்

**வினா 12232—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் துணை மின் நிலையங்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு வாகனம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் துணை மின் நிலையங்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களுக்குத் தகுதிகள் அறிந்து மண்டல தலைமைப் பொறியாளர் (விநியோகம்), தலைமைப் பொறியாளர்/மின் தொடர் அமைப்பு, காவல் துறை தலைவர்/விழிப்புப் பணி அவர்களது முறையீடுகளின்பேரிலும் வாகனக் குழு பரிந்துரையின் பேரிலும் ஒப்பந்தப்புள்ளிக் குழுவினரால் கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடுகள் தீர்மானிக்கப்படுகின்றன:

சென்னை மண்டலத்தில் இரண்டு உதவி செயற்பொறியாளர்களுக்கு ஒரு ஈப்பும், மற்ற மண்டலங்களில் மூன்று உதவி செயற்பொறியாளர்களுக்கு ஒரு ஈப்பும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

230 கே.வி. மற்றும் 110 கே.வி. துணை மின் நிலையங்களுக்கு எனத் தனி ஒதுக்கீடு வழங்கப்படுவதில்லை. செயற்பொறியாளர்/இயக்கம் 230 கே.வி துணை மின் நிலையம் அவர்களுக்கு ஒரு இலகு வாகனம் ஒதுக்கப்படுகிறது. மின் பாதைகள்/உட்கோட்டத்திற்கு ஒரு கனரக வாகனமும் ஒரு இலகு வகை வாகனமும் ஒதுக்கப்படுகின்றன. மேற்கூறிய இலகு வாகனங்களும் கனரக வாகனமும் துணை மின் நிலையங்களில் எப்போதும் நிறுத்தப்படுகின்றன. எனவே அவை துணை மின் நிலையங்களின் அவசர வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

110 கே.வி. துணை மின் நிலையம் பொறுப்பிலிருக்கும் உதவி செயற்பொறியாளர்களுக்கு ஒதுக்கப்படும் வாகனங்கள் அந்தந்த துணை மின் நிலையங்களில் இரவு நேரங்களில் நிறுத்தப்படுகின்றன. அவையும் அவசரக் காலங்களுக்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. மேலும்,





1. புழக்கத்திலிருக்கும் மேற்படி வாகனங்கள் பயன்படுத்த இயலாதவாறு பழுதடையும்போதும்;

2. புதியதாக துணைக் கோட்டங்கள் உருவாகும்போதும் வாரிய சட்ட திட்டங்களுக்குட்பட்டு வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

**84**—

## ஒப்பந்தத் தொழிலாளர்களின் நிரந்தரம்

**வினா 16516—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மின் பகிர்மான திட்டத்தில் பணியாற்றிய ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உச்ச நீதிமன்றத்தில் சில மின் வாரிய தொழிற் சங்கங்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்யக் கோரி தொடுக்கப்பட்ட S.L.P. No. 1820/90 வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதிபதி காலித் கமிஷனின் 11-2-1991 நாளிட்ட அறிக்கையின் பரிந்துரையின்பேரில், அவ்வறிக்கையில் இடம் பெற்றிருந்த 18,006 ஒப்பந்தத் தொழிலாளர்களில், கமிஷனின் அறிக்கையின்படி பணி நிரந்தரம் செய்ய தகுதியான 13,054 ஒப்பந்தத் தொழிலாளர்கள் 31-3-1998-க்கு முன்பாக பணி நிரந்தரம் செய்யப்பட்டனர்.

பின்னர், மின் வாரியத் தொழிற்சங்கங்களுடன் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி நீர் மின் திட்டம், அனல் மின் திட்டம் மற்றும் எரிவாயு சுழலி ஆகியவற்றில் பணிபுரிந்த ஒப்பந்தத் தொழிலாளர்களில் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த சுமார் 8,560 தகுதி

வாய்ந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் முறையே 1-5-1999 மற்றும் 29-1-2001 முதல் கள உதவியாளர்களாகப் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர்.

தற்போது சில வாரிய தொழிற்சங்கங்கள், மின் பகிர்மான வட்டங்கள் உள்ளடக்கிய பல்வேறு வட்டங்களில் பணிபுரியும் 41,098 ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்யக்கோரி தொழிலாளர் தீர்ப்பாயத்தில் தொடரப்பட்ட தொழிற் தாவா எண் 106/2000 நிலுவையில் உள்ளது.

மேலும், இப்பொருள் குறித்து உயர் நீதிமன்றம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்களிலும், தொழிலாளர் ஆய்வாளர்கள் முன்பும் வழக்குகள் தாவாக்கள் நிலுவையில் உள்ளன. தவிர, தற்சமயம் மின் வாரியத்தில் இருக்கின்ற நிதி நெருக்கடியாலும், ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் குறித்த வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளதாலும், மின் பகிர்மான வட்டங்களில் உள்ள ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய இயலாது.

**85—**

## சுற்றுச்சூழல் பாதுகாத்தல்

**வினா 13429—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுச்சூழல் கேட்டினால் வரும் நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த அரசு பாதுகாப்பு அமைப்புகளை உருவாக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**





(அ) மற்றும் (ஆ) சுற்றுச்சூழல் பாதுகாப்புபற்றி மாவட்ட அளவில் கவனம் செலுத்தும்வகையில், அரசு அரசாணை எண் 272, சுற்றுச்சூழல்-வனத் துறை, நாள் 1-7-1990ன் மூலம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டந்தோறும் சுற்றுச்சூழல் குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் கருத்தரங்குகளை நடத்தி அதன்மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றவகையில் செயல்பட்டு வருகிறது.

**86—**

## சோப்பு உற்பத்தி

**வினா 5616—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உண்ணா எண்ணெய் சோப்பு அலகுகள் நலிவடைந்துள்ளதால் மீண்டும் அங்கு உற்பத்தி துவக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

ஆம். வாரிய சலவை சோப்பு மற்றும் டிடர்ஜென்ட் வகைகளுக்கு தேவை மற்றும் விற்பனை வாய்ப்பு அதிகரிக்கும்பட்சத்தில் நலிவுற்ற அனைத்து சோப்பு அலகுகளுக்கும் மூலப்பொருட்கள் வழங்கி விற்பனைக்கேற்ற உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**87—**

## தேன் பதப்படுத்தும் மையம்

**வினா 12461—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றிய பகுதிகளில் கதர் வாரியத்தின்மூலம் தேன் பதப்படுத்தும் மையம் ஒன்று துவக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜவ்வாது மலையிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம் மற்றும் அம்சியில் இயங்கிவரும் தேன் பதப்படுத்தும் நிலையங்கள் மூலம் வாரியத்தின் விற்பனைக்குத் தேவையான தேன் பதப்படுத்தப்படுவதால் புதியதாக எடப்பாடி தொகுதி கொங்கணாபுரத்தில் ஒரு தேன் பதப்படுத்தும் மையம் துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**88—**

**கடன் வழங்குதல்**

**வினா 15984—திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் பயன்பெற்றவர்கள் எத்தனை பேர்? இவ்வாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்கள் எவ்வளவு பேருக்கு கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் (*1998-99—2000-2001*) *947* நபர்கள் பயன் பெற்றுள்ளனர். இவ்வாண்டு (*2001-2002*) *400* நபர்களுக்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. *31-5-2002* வரை *200* நபர்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மைய அரசு நிர்ணயித்துள்ளவாறு, *2001-2002*-க்கான கடன் *30-9-2002* வரை வழங்கப்படும்.



**89—**

**இட ஒதுக்கீடு**

**வினா 10212—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூவிருந்தவல்லி தொகுதியில் அமைந்துள்ள குடிசைமாற்று வாரிய அடுக்குமாடி வீடுகளில் எளிய மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) பூவிருந்தவல்லி தொகுதியில் குடிசைமாற்று வாரியத்தால் அடுக்குமாடி வீடுகள் ஏதும் கட்டப்படவில்லை.

(ஆ) எழவில்லை.

**90—**

**கோழிகளுக்கு தடுப்பு ஊசி**

**வினா 14549—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் கோழிகளுக்கு தடுப்பூசி போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

[2002 அக்டோபர் 25

(அ) மற்றும் (ஆ) பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், முக்கூடல், மருதம்புத்தூர், பள்ளக்கால் ஆகிய கால்நடை மருந்தகத்திலும் ரெங்கசமுத்திரம், நாயகிபுரம், ஊர்க்காடு ஆகிய கிளை நிலையங்களில் பிரதிவாரம் சனிக்கிழமைதோறும் கோழிகளுக்கு கோழிக்கழிச்சல் நோய் வராமல் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

கால்நடை பராமரிப்புத் துறை மூலம் நடத்தப்படும் மக்கள் தொடர்பு முகாம் மற்றும் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களில் கோழிக்கழிச்சல் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. மேலும் 1998-ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் கோழிக்கழிச்சல் நோய்த் தடுப்பூசி பிப்ரவரி மாதத்தில் இரு வாரம் (2 முதல் 14 தேதி வரை) நடத்தப்பட்டு வருகிறது. அக்காலங்களிலும் கோழிக்கழிச்சல் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

பாப்பாக்குடி ஒன்றியத்தில் 1999-ஆம் ஆண்டு முதல் 2002-ஆம் ஆண்டு முடிய பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற கோழிக்கழிச்சல் தடுப்பூசி முகாமில் தடுப்பூசி போடப்பட்ட கோழிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1999 | .. | 16263 |
| 2000 | .. | 15792 |
| 2001 | .. | 7190 |
| 2002 | .. | 7899 |

91—

**கலப்பின ஆடுகள் வளர்த்தல்**

**வினா 16839—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரியில் கலப்பின ஆடுகள் வளர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?



2002 அக்டோபர் 25]

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது மேச்சேரியில் கலப்பின ஆடுகள் வளர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எதுவும் இல்லை.

92—

**மீன் விற்பனைக் கூடம்**

**வினா 10185—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, முழுக்குதுறை, எம்.ஜி.ஆர். திட்டு மீனவ கிராமப் பகுதியில் மீன்விற்பனைக்கூடம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

93—

**கோரையாற்றை ஆழப்படுத்துதல்**

**வினா 10728—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கோரையாறு முதல் ஜாம்புவானோடை வரை நூற்றுக்கணக்கான

[2002 அக்டோபர் 25

மீன்கூடைகள் கோரையாற்று மூலமாக முத்துப்பேட்டை நகரத்திற்கு கரையேற்றப்படும்போது படகுப் போக்குவரத்து தடைபடுவதால் கோரை ஆற்றை ஆழப்படுத்த அரசிடத்தில் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**94—**

## மீன் விற்பனை நிலையம்

**வினா 13575—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரில் மேட்டூர் அணை 'மீன் விற்பனை நிலையம்' துவக்க அரசு இந்நிதியாண்டில் முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

**95—**

## கூட்டுறவு மீன் விற்பனை அங்காடி

**வினா 14483—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, ஒகனேக்கல் சுற்றுலா



2002 அக்டோபர் 25]

மையத்தில் மேட்டூர் கூட்டுறவு மீன் விற்பனை அங்காடி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

ஒகனேக்கல் சுற்றுலா மையத்தில் ஏற்கெனவே மேட்டூர் மீன் விற்பனை கூட்டுறவுச் சங்க அங்காடி ஒன்று இயங்கி வருகிறது. புதிதாக கூட்டுறவு மீன் விற்பனை அங்காடி அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**96—**

## மீன் விற்பனை நிலையம்

**வினா 14484—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மீன்விற்பனை நிலையம் எத்தனை உள்ளன?

(ஆ) அதை அதிகப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் நகரில் 3 மீன் அங்காடிகளும் ஒகனேக்கல் சுற்றுலா மையத்தில் ஒரு மீன் அங்காடியும் உள்ளன. இது தவிர எடப்பாடி நகராட்சிக்கு சொந்தமான கட்டடத்தில் தனி நபர்கள் கூட்டாக 4 மீன் கடைகளை நடத்தி வருகின்றனர்.

(ஆ) இல்லை.

**97—**

## மீனவர்கள்

**வினா 14486 திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

1998 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் எத்தனை பேர் சுட்டுக் கொல்லப்பட்டதாக அரசிடம் கணக்கு உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

1998 முதல் 2001 வரையிலான நான்கு ஆண்டுகளில் இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள்மீது நிகழ்த்திய 12 துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் 19 பேர் இறந்துள்ளனர்.

**98—**

**மீன்பாசி குத்தகை**

**வினா 15005—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏரியில் மீன்பிடிக்கும் குத்தகையை அப்பகுதி மீன் பிடிப்போர் சங்கத்திற்கு தொடர்ந்து அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் 332, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் துறை, நாள் 17-11-1993-ன்படி அரசுடைமையாக்கப்பட்ட நீர் நிலைகளில் மீன்பாசி குத்தகை மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகிறது. எனவே, ஏரிகளில் மீன்பாசி குத்தகை பெற விரும்புவோர் அந்தப் பகுதி மீனவர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்ந்து பயன் பெறலாம்.

**99—**

**மீன் விற்பனை அங்காடி**

**வினா 15026—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 அக்டோபர் 25]

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி, பெண்ணாகரம் மற்றும் இண்டூரில் மீன் விற்பனை அங்காடி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**100—**

**மீன் அங்காடி**

**வினா 16512—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சி, தொடுவாய் கிராமத்தில் மீன் அங்காடி கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

## ஐந்தாம் பட்டியல்

1—

### நடுநிலைப் பள்ளியாக உயர்த்துதல்

**வினா 1323—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி ஆரம்பப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அந்தப் பள்ளியை தரம் உயர்த்தி நடுநிலைப் பள்ளியாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் 408 பேர்.

(ஆ) அந்தப் பள்ளி 1990-91 ஆம் கல்வியாண்டு முதல் நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2—

### ஆசிரியை நியமித்தல்

**வினா 3239—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி, பத்திரக்கோட்டை ஊராட்சி, எஸ். புதுக்குப்பத்தில் ஆரம்பப் பள்ளிக்கு ஒரு ஆசிரியை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**





(அ) பண்ருட்டி, பத்திரக்கோட்டை ஊராட்சி, எஸ்.புதுக்குப்பம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாணவர் எண்ணிக்கை 43, அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் 2. அப்பள்ளியில் இரு ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். கூடுதலாக ஆசிரியை நியமிக்க விதிகளில் இடமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

3—

### இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள்

**வினா 4150—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடியில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள 5 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இன்றைய நிலவரப்படி இடைநிலை ஆசிரியர் காலிப் பணியிடம் ஏதுமில்லை.

4—

### கூடுதல் ஆசிரியர்கள், கூடுதல் கட்டடம்

**வினா 5089—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மேல்காங்கேயன்குப்பம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் கூடுதல் ஆசிரியர்கள் நியமிக்கவும் மற்றும் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2002 அக்டோபர் 25

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மேல்காங்கேயன்குப்பம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 1 முதல் 5வது வகுப்பு வரை மாணவர் எண்ணிக்கை 55, தகுதியுள்ள ஆசிரியர் பணியிடங்கள் 2, இப்பள்ளியில் இரு ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். எனவே, கூடுதல் ஆசிரியர் நியமிக்க தேவை எழவில்லை. மேலும் தற்போதுள்ள பள்ளிக் கட்டடம் அப்பள்ளிக்கு போதுமானதாகும்.

5—

### தலைமை ஆசிரியர் நியமனம்

**வினா 6731—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், சோழங்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு தலைமை ஆசிரியர் நியமனம் எப்போது செய்யப்படும்?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், சோழங்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் காலியாக இருந்த தலைமை ஆசிரியர் பணியிடம் கடந்த ஆகஸ்ட் 2001-ல் பதவி உயர்வின் மூலம் நிரப்பப்பட்டுவிட்டது.

6—

### ஆரம்பப் பள்ளிகள்

**வினா 10141—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் இக்கல்வி ஆண்டில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ள ஆரம்பப் பள்ளிகள் எத்தனை?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



2002 அக்டோபர் 25]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 கல்வியாண்டில் சர்வ சிக்சா அபியான் திட்டத்தின்கீழ் ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 32 தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் 6 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப் பட்டுள்ளன.

7—

### பூந்தோட்டம் அமைத்தல்

**வினா 10477—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி வளாகத்தில் மாணவிகள் மூலமாக பூந்தோட்டம் அமைத்து பராமரிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

புதுக்கோட்டை அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி வளாகத்தில் தற்போது சிறிய அளவில் பூந்தோட்டம் உள்ளது. அது நாட்டு நலப் பணித் திட்ட மற்றும் கல்லூரி வளாக விரிவாக்கத் திட்ட மாணவிகளின் ஒத்துழைப்பினாலும், தாவரவியல் ஆசிரியர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலினாலும் பராமரிக்கப்பட்டு வருகிறது. கூடுதலாக பூந்தோட்டம் அமைப்பது குறித்து கருத்துரு ஏதும் இல்லை.

8—

### நடுநிலைப் பள்ளியாக்குதல்

**வினா 10587—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, தகரகுப்பம் கிராமத்திலுள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

[2002 அக்டோபர் 25

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

சர்வ சிக்சா அபியான் திட்டத்தின்கீழ் நாட்ராம்பள்ளி ஒன்றியம், தகரகுப்பம் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளியாக 2001-2002 கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

**9—**

**புதிய ஆரம்பப் பள்ளிகள்**

**வினா 12272—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில், கொங்கணாபுரம் ஒன்றியம், மகுடஞ்சாவடி ஒன்றியம், எடப்பாடி ஒன்றியத்தில் இந்தக் கல்வி ஆண்டில் எத்தனை ஆரம்பப் பள்ளிகள் புதிதாக தொடங்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2001-2002 கல்வியாண்டில் சேலம் மாவட்டத்தில் எடப்பாடி தொகுதியில் சர்வ சிக்சா அபியான் திட்டத்தின்கீழ் கொங்கணாபுரம் ஒன்றியத்தில் எட்டிக்கோட்டைமேடு என்ற கிராமத்திலும், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் பண்டிதக்காரனூர் என்ற கிராமத்திலும் புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**10—**

**கிளை நூலகங்கள்**

**வினா 12273—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் பகுதி நேர நூலகம் எத்தனை இயங்கி வருகின்றன?

(ஆ) அவற்றை கிளை நூலகங்களாக மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2002 அக்டோபர் 25]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 24 பகுதி நேர நூலகங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) நூலக நிதிநிலை கருதி இப்பகுதி நேர நூலகங்களை கிளை நூலகங்களாக தற்போது மாற்ற இயலாது.

**11—**

**மனுக்கள்**

**வினா 12361—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 2001-2002 ஆம் கல்வி ஆண்டிற்கு தனியார் மற்றும் அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளியாக்க அரசிடம் எத்தனை மனுக்கள் வரப்பெற்றன?

(ஆ) அதில் எத்தனை மனுக்கள் பரிசீலனை செய்து மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ் நாட்டில் 2001-2002 ஆம் கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தக் கோரி பெறப்பட்ட மனுக்கள்—

| | | |
|---|---|---|
| தனியார் பள்ளிகள் | - | 51 |
| நகராட்சிப் பள்ளி | - | 1 |
| மாநகராட்சிப் பள்ளிகள் | - | 11 |
| அரசுப் பள்ளிகள் | - | 113 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மனுக்களில் கீழ்க்குறிப்பிட்டவாறு மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| தனியார் பள்ளிகள் (சுயநிதி அடிப்படையில்) | - | 46 |
| நகராட்சிப் பள்ளி | - | 1 |
| மாநகராட்சிப் பள்ளிகள் | - | 11 |
| அரசுப் பள்ளிகள் | - | 113 |

**12—**

### பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள்

**வினா 12404—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1996 முதல் 2000 ஆம் ஆண்டு வரை பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேரை அரசு அமர்த்தியது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2956 பள்ளி உதவி ஆசிரியர்கள் 1996 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை நேரிடையாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**13—**

### நடுநிலைப் பள்ளியாக உயர்த்துதல்

**வினா 12702—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கல்யாண ராமநாதபுரம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?





**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2001-2002 கல்வியாண்டில் சர்வ சிக்சா அபியான் திட்டத்தின்கீழ் தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கல்யாண ராமநாதபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**14—**

### ஆசிரியர் பணியிடங்கள்

**வினா 13195—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் கணிதப் பாட பிரிவுக்கு காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்கள் எத்தனை?

(ஆ) காலியாகவுள்ள பணியிடங்கள் நிரப்பப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) அரசு மேல்நிலை/உயர்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள கணிதப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் - 241 ஆகும்.

(ஆ) 2002-2003 ஆம் கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் தேர்ந்தெடுக்கும் ஆசிரியர்கள் மற்றும் பதவி உயர்வு பெறும் ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

**15—**

### நூலகம் அமைத்தல்

**வினா 15039—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கோனூர் ஊராட்சி, சந்தாணம்பட்டியில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கோனூர் ஊராட்சி, சந்தாணம்பட்டி கிராம மக்கள் ஒரு நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால், அவ்வூரில் நூலகம் திறக்க இயலவில்லை.

(1) பகுதி நேர நூலகம் செயல்பட வாடகை இல்லாத உறுதியான இலவசக் கட்டடம் அளிக்கப்படவேண்டும்.

(2) எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக்குழு பெயருக்கு பத்திரப் பதிவு செய்து தரப்படவேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ.2000/- மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

(5) தலா ரூ.1000/- வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**16—**

## நூலகம் அமைத்தல்

**வினா 16274—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதிக்குட்பட்ட ரெட்டிமாங்குப்பம் கிராமத்தில் பொது நூலகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**





(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதியிலுள்ள ரெட்டிமாங்குப்பம் கிராமத்தின் மக்கள் தொகை 3020 ஆகும். மக்கள் தொகையின் அடிப்படையில் அவ்வூரில் பகுதி நேர நூலகம் திறக்கலாம். ஆனால் அக்கிராம மக்கள் ஒரு நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் அக்கிராமத்தில் நூலகம் திறக்க இயலவில்லை:

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத உறுதியான கட்டடம் இலவசமாக அளிக்கப்படவேண்டும்.

(2) பின்னர் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக்குழு பெயருக்கு பத்திரப் பதிவு செய்து தரப்படவேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ.2000/- மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

(5) தலா ரூ.1000/- வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**17—**

## இலவசக் கல்வித் திட்டம்

**வினா 16556—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கட்டாய இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் மத்திய அரசு 8 ஆம் வகுப்பு வரை கல்வி அளிக்கும் நோக்கம் கொண்ட இத்திட்டம் எத்தனை மாவட்டங்களில் செயல்படுத்தப்படவுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

தமிழகத்தில் கட்டாய இலவசக் கல்வி திட்டத்தின்கீழ் மத்திய அரசு 8 ஆம் வகுப்பு வரை கல்வி அளிக்கும் நோக்கம் கொண்ட சர்வ சிக்சா அபியான் என்ற பெயர் கொண்ட திட்டம் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 29 மாவட்டங்களிலும் செயல்படுத்தப் படுகிறது. ஏற்கெனவே மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம் செயல் படுத்தப்படும் மாவட்டங்களில் (DPEP Districts) ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்படும் 1-5 வகுப்புகளின் விரிவாக்கமாக 6-8 வகுப்புகளுக்கும் மீதம் உள்ள 22 மாவட்டங்களில் 1-8 வகுப்புகளுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**18—**

**மருத்துவர் பணியிடங்கள்**

**வினா 1965—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 350 பெண் மருத்துவர்கள் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் பதிவு மூப்பின் அடிப்படையில் தற்காலிக பணி நியமனம் செய்யப்பட்ட மருத்துவர்களைக் கொண்டு தமிழகத்தில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அரசு மருத்துவமனைகளிலும் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு விட்டன. மற்றும் தற்காலிகப் பணி நியமனம் மூலம் பணியமர்த்தப்பட்ட பணியிடங்கள் மற்றும் இனிவரும் காலங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் அனைத்தையும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்படும் மருத்துவர்களைக் கொண்டு நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.





**19—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா 4779—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் பிறந்த குழந்தைகள் எத்தனை?

(ஆ) அங்கு பணியாற்றும் பணியாளர்கள் எத்தனை பேர்?

(இ) அங்கு காலியாகவுள்ள பணியிடங்கள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஏப்ரல் 2000 முதல் மார்ச் 2001 வரை பிறந்த குழந்தைகள் 161 (ஆண் 67, பெண் 94 =161).

(ஆ) அங்கு பணியாற்றும் பணியாளர்கள் 31 பேர்.

(இ) அங்கு காலியாக உள்ள பணியிடங்கள் 6.

**20—**

**மனநோய் காப்பகங்கள்**

**வினா 16131—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தனியார் மூலம் நடத்தப்பட்டு வரும் மனநோய் காப்பகங்கள் எத்தனை என்பதனை அரசு அறிவிக்குமா?

(ஆ) மனநோய் காப்பகங்களை அரசே எடுத்து நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) இந்திய மனநலச் சட்டம் 1987-ன் விதிமுறைகளுக்குட்பட்டு, தமிழகத்தில் மனநல மருத்துவமனைகள்/இல்லங்கள் நடத்துவதற்கு உரிமங்கள் அளிக்கும் பணி நடந்து வருகிறது. இது வரை 32 உரிமங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இரண்டு தனியார் மனநல மருத்துவமனைகளை பற்றிய ஆய்வுக் குறிப்பு இன்னும் பெறப்படாததால் அவற்றைப் பற்றிய நிலை இன்னும் முடிவு செய்யப்படவில்லை. 6 தனியார் மனநல மருத்துவமனைகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இல்லை.

**21—**

**மகப்பேறு மருத்துவ நிலையம்**

**வினா 16199—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசலில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மகப்பேறு மருத்துவ நிலையம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருமுல்லைவாசல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மகப்பேறு மருத்துவ நிலையம் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் இல்லை. பயனடையும் உள் மற்றும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கை அடிப்படையில் தற்போதுள்ள வசதிகள் போதுமானதாகும்.



**22—**

**மகப்பேறு மருத்துவ மையம் அமைத்தல்**

**வினா 16203—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், குன்னம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு மகப்பேறு மருத்துவ மையம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், குன்னம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பயனடையும் உள் மற்றும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கை அடிப்படையில் தற்போதுள்ள வசதிகள் போதுமானதாக உள்ளது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவம் பார்ப்பதற்கான வசதிகள் உள்ளன. எனவே இங்கு ஒரு மகப்பேறு மருத்துவ மையம் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**23—**

**மகப்பேறு மருத்துவ மையம்**

**வினா 16205—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மகப்பேறு மருத்துவ மையம் ஒன்று கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மகப்பேறு மருத்துவ நிலையம் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் இல்லை. பயனடையும் உள் மற்றும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கை அடிப்படையில் தற்போது வசதிகள் போதுமானதாகும்.

**24—**

**முழுநேர சுகாதார நிலையம்**

**வினா 16642—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடத்தில் உள்ள பகுதிநேர சுகாதார நிலையத்தை முழுநேர சுகாதார நிலையமாக மாற்றிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொள்ளிடம் ஆரம்ப சுகாதார நிலையம் பகுதிநேர சுகாதார நிலையமல்ல. முன்னாளில் அரசு மருந்தகமாக இருந்ததை உள்ளன உள்ளபடியே முறையில் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டதாகும்.

கொள்ளிடம் ஆரம்ப சுகாதார நிலையத்தை முழுநேர ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த வேண்டுமானால் கூடுதலாக ஒரு மருத்துவ அலுவலரும் ஒரு துணை செவிலியர் பணியிடமும்



தோற்றுவிக்கப்பட வேண்டும். மருந்துகளுக்கென கூடுதல் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட வேண்டியுள்ளது. அரசின் தற்போதுள்ள நிதி நிலையில் ஆரம்ப சுகாதார நிலையங்களை முழுநேர 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் செயல்திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**25—**

**குடும்பக் கட்டுப்பாடு**

**வினா 16817—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழகத்தில் எத்தனை பேர் குடும்பக் கட்டுப்பாடு (அறுவைச் சிகிச்சை) செய்து கொண்டனர்?

(ஆ) இதில் ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழகத்தில் மொத்தம் 3,75,654 பேர் குடும்பக் கட்டுப்பாடு (அறுவைச் சிகிச்சை) செய்து கொண்டனர்.

| | |
|---|---|
| (ஆ) ஆண்கள் | 378 பேர் |
| பெண்கள் | 3,75,276 பேர் |

**26—**

**குடும்பக் கட்டுப்பாடு**

**வினா 16818—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் எந்த மாவட்டத்தில் அதிகமான நபர்கள் குடும்பக் கட்டுப்பாடு (அறுவைச் சிகிச்சை) செய்து கொண்டனர் என அரசு கண்டறிந்துள்ளது?

[2002 அக்டோபர் 25

(ஆ) குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்பவர்களுக்கு அரசு வழங்கும் உதவிகள் என்னென்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் நிதியாண்டில் சென்னை மாவட்டத்தில் தான் அதிகமான நபர்கள் (51,517 நபர்கள்) குடும்பக் கட்டுப்பாடு (அறுவைச் சிகிச்சை) செய்து கொண்டுள்ளனர்.

(ஆ) குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்களுக்கு ரூ.200-ம், ஆண்களுக்கு ரூ.175-ம் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தாய்மார்கள், அதன் விளைவாக ஒரு மாத காலத்திற்குள் மருத்துவமனைகளில் இறக்க நேரிட்டால் ரூ.2.00 இலட்சமும், வீட்டில் இறக்க நேரிட்டால் ரூ.25,000-ம் காப்பீட்டுத் தொகையாக அத்தாய்மார்களின் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகிறது. கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தாய்மார்கள் மீண்டும் கருத்தரிக்க நேர்ந்தால் கருணைத் தொகையாக ரூ.5,000 வழங்கப்படுகிறது.

**27—**

## துணை பொது சுகாதார நிலையம்

**வினா 17763—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பத்திரக்கோட்டை துணை பொது சுகாதார நிலையம் முழுவதுமாக பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**



2002 அக்டோபர் 25]

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பத்திரக்கோட்டை துணை சுகாதார நிலையம் மருங்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது. இக்கட்டடம் 1983-ல் டேனிடா திட்டத்தின்கீழ் கட்டப்பட்டது. இக்கட்டடத்தில் சிறிய பழுதுகள் இருப்பினும் துணை சுகாதார செவிலியர் தங்கி பணிபுரிந்து வருகிறார். பழுதுகளைச் சீர் செய்ய இந்த நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

**28—**

## சுற்றுச் சுவர்

**வினா 18073—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, கோவிலூர் ஊராட்சியில் மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசால் தற்போது நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே கோவிலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**29—**

## வங்கிக் கணக்குகள்

**வினா 9260—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000 ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள கூட்டுறவு வங்கிகளில் எத்தனை வங்கிகளில், வங்கி கணக்குகளில் முறைகேடுகள் நடந்ததாக அரசு கண்டறிந்துள்ளது?

(ஆ) இத்தகைய முறைகேடுகள் நடவாமல் இருக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள கூட்டுறவு வங்கிகளில் 257 கூட்டுறவு வங்கிகளில் வங்கிக் கணக்குகளில் முறைகேடுகள் நடந்துள்ளன. இத்தகைய முறைகேடுகள் நடவாமல் இருக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் பின்வருமாறு:

1. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் காலாண்டு ஆய்வு மேற்கொள்வது கண்காணிக்கப்படுகிறது.

2. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதி 20ல் குறிப்பிட்டுள்ளவாறு வங்கிக் கணக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனவா என கண்காணிக்கப்படுகிறது.

3. ஒவ்வொரு மாத இறுதியிலும் வங்கியிலும் மாதாந்திர வரவு செலவு பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு வங்கியின் தனி அலுவலர்/நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்கு வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

4. துறை அலுவலர்களால் முன்னறிவிப்பின்றி வங்கிகளை திடீர் ஆய்வும் முனைப்பான ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

5. வங்கிகளில் முறைகேடுகள் கண்டறியப்படின் சட்டபூர்வ விசாரணைக்கு உத்திரவிடப்பட்டும், இதில் தொடர்பான குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டும், கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**30—**

## தலைவர்கள் பெயர் சூடுதல்

**வினா 9474—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகாத்மா காந்தி, பாரதியார் போன்ற தலைவர்கள் பெயரால் இயங்கிவரும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நடத்தப்படும் மதுபான கடைகளுக்கு அந்தத் தலைவர்கள் பெயரை வைத்து இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வடசென்னையில் செயல்பட்டு வரும் பாரதியார் கூட்டுறவு பண்டகசாலை மட்டுமே இரண்டு மதுபானக் கடைகளை நடத்தி வருகிறது. இம்மதுபான விற்பனை கடைகளில் வைக்கப்பட்டுள்ள பெயர்ப் பலகையில் பாரதியார் கூட்டுறவு பண்டகசாலை மதுபான பிரிவு என்ற பெயர்ப் பலகை வைக்கப்பட்டுள்ளது. மதுபான கடைகளுக்கு தலைவர்கள் பெயர் சூட்டப்படவில்லை. பண்டகசாலைகளுக்கு தலைவர்கள் பெயர் சூட்டப்பட்டு அப்பண்டக சாலையில் ஒரு பகுதியாக மதுபானக் கடை செயல்பட்டு வருகிறது. எனவே, பண்டக சாலையின் பெயரை மாற்ற வேண்டிய தேவை ஏற்படவில்லை.

**31—**

## பணியிடங்கள் நிரப்புதல்

**வினா 4297—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத் துறையில் நிரப்பப்படாமல் உள்ள பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தற்போது பெரும்பான்மையான கூட்டுறவு நிறுவனங்கள் நட்டத்தில்/குவிந்த நட்டத்தில் இயங்கி வருகின்றன. கூட்டுறவு நிறுவனங்களின் நிதிநிலை/வியாபார நிலை போன்றவற்றின் அடிப்படையில் பணியாளர்கள் தேவையை மதிப்பீடு செய்து ஒவ்வொரு கூட்டுறவு நிறுவனத்திற்கும் பணி நிலைத்திறன் நிர்ணயம் செய்ய மண்டல இணைப்பதிவாளர் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பணி முடிந்தவுடன் கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள காலிப்பணியிடங்கள் கணக்கிடப்பட்டு, அவற்றை நிறைவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

32—

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**வினா 4299—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பாதுகாப்பு அறையுடன் கூடிய பாதுகாப்பு கதவு அமைக்கப்பட்டுள்ளது?

(ஆ) அதுபோன்று மற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 216 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள் 144 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு பாதுகாப்பு அறையுடன் கூடிய பாதுகாப்பு கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன.



(ஆ) மற்ற வங்கிகளைப் பொறுத்தவரை, மேற்படி வசதி கோரி முன்மொழிவுகள் பெறப்பட்டால் அவற்றைத் தகுதியின் அடிப்படையில் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

33—

## சொந்தக் கட்டடம்

**வினா 13665—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி, வீரவநல்லூர் மற்றும் கல்லிடைக்குறிச்சி, 4 நியாயவிலைக் கடைக்கு நடப்பு ஆண்டில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு உடனடியாக ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

நியாய விலைக் கடைகளுக்கு அரசு நேரடியாகக் கட்டடங்கள் கட்டியளிக்கும் திட்டம் ஏதுமில்லை. ஆனால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஊராட்சிப் பகுதியிலுள்ள நியாயவிலைக் கடைகளுக்கு மட்டுமே கட்டடங்கள் கட்டித் தரப்படுகின்றன. வீரவநல்லூர் மற்றும் கல்லிடைக்குறிச்சி, 4 நியாய விலைக் கடை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் செயல்படுவதால் மேற்சொல்லப்பட்ட திட்டத்தின்கீழ் கட்டடங்கள் கட்ட வாய்ப்பில்லை. ஆயினும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்டடங்கள் கட்ட வாய்ப்புள்ளது.

34—

## சொந்தக் கட்டடங்கள்

**வினா 14302—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

எடப்பாடி தொகுதியிலுள்ள நியாயவிலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 95 நியாயவிலைக் கடைகள் செயல்படுகின்றன. இவற்றில் 66 கடைகள் சொந்தக் கட்டடங்களில் செயல்படுகின்றன மீதமுள்ள 29 கடைகளும் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. இந்த 29 கடைகளுக்கும் இடம் ஒதுக்கப்பெற்று மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

35—

**கூட்டுறவு வங்கி அமைத்தல்**

**வினா 15301—திரு. பி. எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் கூடுதல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் கூடுதல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்கக் கோரும் முன்மொழிவு ஏதும் பரிசிலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



2002 அக்டோபர் 25]

36—

**கடன்**

**வினா 15312—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் 1996-2001 ஜனவரி வரை எத்தனை வியாபாரிகளுக்கு கடன் வழங்கியது?

(ஆ) யார் யாருக்கு கடன் வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) செஞ்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் 1996 முதல் ஜனவரி 2001 வரை 481 வியாபாரிகளுக்கு ரூ.50.52 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) தேனீர் விடுதி, பெட்டிக் கடை, காய்கறிக் கடை, சைக்கிள் மார்ட் கடை, டைலர் கடை, பழக் கடை, சிற்றுண்டி விடுதி, மளிகைக் கடை, ஜவுளி வியாபாரம், கடிகாரம் விற்பனை, பேன்சி ஸ்டோர்ஸ், பல்பொருள் சிறப்பங்காடி, அச்சகம், ஆகியவற்றிற்காக 484 வியாபாரிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

37—

**திருமணக் கடன்**

**வினா 17051—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் உறுப்பினர்களுக்குத் திருமணக் கடன் 2000-2001 ஆம் ஆண்டு எவ்வளவு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் உறுப்பினர்கட்கு 2000-2001 ஆம் ஆண்டு திருமணக் கடன் ஏதும் வழங்கப்படவில்லை.

**38—**

## நுகர்வோர் கடன்

**வினா 17075—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் வரை எவ்வளவு நபர்களுக்கு வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்க நுகர்வோர் கடன் வழங்கப்பட்டது?

(ஆ) கடன் வழங்கிய தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியானது 436 பேருக்கு வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவதற்கு 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல்' அக்டோபர் மாதம் வரை கடன் வழங்கியுள்ளது.

(ஆ) ரூ.109.65 இலட்சம் அளவிற்கு கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**39—**

## பகுதி நேர நியாய விலைக் கடைகள்

**வினா 17137—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு,





நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 2001 ஆம் ஆண்டு கிராமப்புறங்களில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் கேட்டு எத்தனை விண்ணப்பங்கள் அரசுக்கு வந்தன?

(ஆ) அதில் எத்தனை விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு புதிய பகுதி நேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் கோரி 10 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. அவற்றில் நான்கிற்கு அனுமதி வழங்கப்பட்டு தொடங்கப்பட்டுள்ளன. ஒரு முன்மொழிவு ஆய்வு செய்யப்படுகிறது மற்ற 5 இனங்களில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் திறக்க அரசு விதிகளின்படி வாய்ப்பு இல்லை என்பதால் கோரிக்கைகள் மறுக்கப்பட்டன.

**40—**

## நியாய விலைக் கடை

**வினா 17736—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதியில் அன்னகாரன் குப்பம் கிராமத்தில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

[2002 அக்டோபர் 25

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டித் தொகுதியில் அன்னகாரன் குப்பம் பகுதியை உள்ளடக்கிய தாய் அங்காடியில் மொத்தம் 418 குடும்ப அட்டைகள் உள்ளன. அன்னகாரன் குப்பம் பகுதியில் 170 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடை பிரிக்கப்பட்ட பின்னர் தாய் அங்காடியில் குறைந்தது 500 குடும்ப அட்டைகளும், பகுதி நேரக் கடையில் குறைந்தது 200 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும் என்கிற அரசின் வரையறைகள் பொருந்தாததால் அன்னகாரன் குப்பத்தில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**41—**

**பகுதி நேர நியாய விலைக் கடை**

**வினா 21033—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பேடரஅள்ளி ஊராட்சி, பூச்செட்டி அள்ளியிலிருந்து பிரித்து மூக்கனஅள்ளியில் ஒரு புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஓ.சி.அள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் உள்ள பேடர அள்ளி நியாய விலைக் கடையைச் சேர்ந்த பூச்செட்டி அள்ளி பகுதிநேரக் கடை 390 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. அரசு வரையறைகளின்படி தாய்க் கடையிலிருந்துதான் பகுதிநேரக் கடை பிரித்து அமைக்கப்பட வேண்டும். ஆயினும், இரண்டாவது பகுதிநேரக் கடை அமைக்கப்பட வேண்டுமானால் ஒவ்வொரு பகுதிநேரக் கடையிலும் 200 குடும்ப



2002 அக்டோபர் 25]

அட்டைகளுக்கு குறையாமலும், 2 கி.மீ. தொலைவுக்கு குறையாமலும் இருக்க வேண்டும். மூக்கன அள்ளி பகுதியில் 143 குடும்ப அட்டைகளே இருப்பதால் அங்கு பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**42—**

**மண்ணெண்ணெய் சிற்றங்காடிகள்**

**வினா 21647—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் ஆண்டில் தமிழகத்தில் எத்தனை கூட்டுறவு மண்ணெண்ணெய் சிற்றங்காடிகள் திறக்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் நிதி ஆண்டில் தமிழகத்தில் 8 கூட்டுறவு மண்ணெண்ணெய் சில்லறை விற்பனை வழங்கு நிலையங்கள் (Kerosene Bunks) கூட்டுறவுத் துறை மூலம் திறக்கப்பட்டன.

**43—**

**நியாய விலைக் கடைக் கட்டடம்**

**வினா 23306—திரு. ல. சந்தானம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், அ. புதுப்பட்டி பஞ்சாயத்து, ஏ. கிருஷ்ணாபுரத்திற்கு பகுதிநேர நியாய விலை குடிமைப் பொருள் கடைக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் வாலாந்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் ஏ. கிருஷ்ணாபுரம் பகுதிநேரக் கடை இயங்கி வருகிறது. ஊர்மக்கள் இலவசமாக கட்டட வசதி செய்து தர முன்வரும் இடங்களில் மட்டுமே பகுதி நேரக் கடை அமைக்க அரசு அனுமதி அளிக்கின்றது. எனவே,' அரசு திட்டங்களின் மூலம் பகுதி நேரக் கடைக்குக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

44—

**கட்டடம்**

**வினா 23308—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், கல்லூத்து பஞ்சாயத்து, கல்லூத்துக்கு நியாய விலைக் குடிமைப் பொருள் கட்டடம் கட்டித் தர அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் கல்லூத்து நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட 2-7-2002 அன்று மதுரை மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரைக்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

45—

**புறம்போக்கு நிலம்**

**வினா 24477—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உலிக்கல் பேரூராட்சி, ட்ருக் பகுதியில் வருவாய்த் துறை புறம்போக்கு நிலத்தை மீட்க அரசு முன்வருமா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டம், உலிக்கல் பேரூராட்சி, ட்ருக் பகுதியில் உள்ள அரசுப் புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை.

(ஆ) எனவே, மேற்படி நிலங்களை ஆக்கிரமிப்புதாரர்களிடமிருந்து மீட்கும் பிரச்சினை எழவில்லை.

46—

**கற்றாழை வளர்த்தல்**

**வினா 13751—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் கற்றாழை வளர்க்க வாய்ப்புகள் மற்றும் சூழ்நிலைகள் உள்ளதால், கற்றாழை வளர்க்க அரசு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தில் தற்போது பெண்ணாகரம் ஒன்றியத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் கற்றாழை வளர்ப்புத் திட்டம் 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கு மேல் தொடங்கும் மழைக் காலங்களில் தொன்னகுட்லஹள்ளியில் 35 ஹெக்டேரிலும், பிக்கிலியில் 50 ஹெக்டேரிலும், கடைமடையில் 12 ஹெக்டேரிலும் மற்றும் பெரும்பாலையில் 20 ஹெக்டேரிலும், ஆக மொத்தம் 117 ஹெக்டேரில் ரூபாய் 3.14 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

47—

## நிலக்கடலை வித்து உற்பத்தி

**வினா 14265—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் நிலக்கடலை வித்து எத்தனை மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் 93,297 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், இம்மாவட்டத்தில் நிலக்கடலை வித்துக்கள் 437 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டது.

48—

## தேங்காய் கொள்முதல் மையம்

**வினா 14321—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி ஒன்றியத்தில் ஆடையூர், பதிகநாடு ஜலகண்டாபுரம் பகுதிகளில் தென்னை மரங்கள் அதிக அளவில் இருப்பதால், தேங்காய் கொள்முதல் மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தேங்காய் கொள்முதல் நிலையம் அமைப்பது தொடர்பாக வேளாண் துறைவசம் திட்டம் ஏதும் இல்லை.





49—

## விவசாயக் கருவிகள் விற்பனை மையம்

**வினா 17108—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் விவசாயக் கருவிகள் விற்பனை மையம் ஒன்று ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடியில் விவசாயிகளுக்குத் தேவையான விவசாயக் கருவிகள் மற்றும் இடுபொருட்கள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு விற்க(வழங்க)ப்பட்டு வருகிறது. எனவே, விவசாயக் கருவிகளை விற்பனை செய்வதற்கு மட்டும் இத்தொகுதியில் விற்பனை மையம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

50—

## அடையாள அட்டை

**வினா 17154—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கொப்பரை தேங்காய் அரசுக்கு வழங்குவதற்கு எத்தனை விவசாயிகளுக்கு அரசு அடையாள அட்டைகள் வழங்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் கொப்பரை தேங்காய் அரசுக்கு வழங்குவதற்கு விவசாயத் துறையின் பரிந்துரையின் பேரில் டான்பெட் (TANFED) மூலம் இதுவரை 30,608 விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

51—

## நிலச்சமன் செய்பொறி

**வினா 17845—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு நிலம் மேம்பாடு செய்வதற்கு அரசு குறைந்த வாடகையில் நிலச்சமன் செய்பொறி (புல்டோசர்) வழங்குமா?

(ஆ) ஆம் எனில், ஒரு மணி நேரத்திற்கு எவ்வளவு வாடகையில் வழங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில், சேலம், மேட்டூர், ஆத்தூர் மற்றும் சங்ககிரி ஆகிய இடங்களில் வேளாண்மைப் பொறியியல் துறையின் உபகோட்டங்கள் உள்ளன. அந்த உபகோட்டங்களின் மூலம் 6 நிலச்சமன் செய்பொறிகள் (புல்டோசர்) விவசாயிகளின் உபயோகத்திற்காக வாடகைக்கு விடப்படுகின்றன. எனவே, எடப்பாடி தொகுதியில் உள்ள விவசாயிகள் சங்ககிரி உபகோட்டத்தில் உள்ள அலுவலகத்தில் நிலச்சமன் செய்பொறிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) வேளாண் மற்றும் வேளாண் அல்லாத பணிகளுக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ. 625/- வீதம் வசூலிக்கப்படுகிறது.

52—

## கதிர் அடிக்கும் இயந்திரம்

**வினா 17846—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு கதிர் அடிக்கும் இயந்திரம் வழங்க அரசு கடன் வசதி செய்து தருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பொதுவாக விவசாயிகளுக்கு கதிர் அடிக்கும் இயந்திரம் வழங்க அரசால் கடன் வசதி அளிக்கப்படுவதில்லை. எனினும், விவசாயிகளுக்கு அவர்கள் விரும்பும் வங்கியில் கடன் பெற தேவையான பரிந்துரையை அரசு வழங்கும்.

53—

## இலவச பழக்கன்றுகள்

**வினா 17850—திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் விவசாயிகளுக்கு இலவசமாகப் பழக்கன்றுகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி விவசாயிகளுக்கு மத்திய சார்புத் திட்டத்தின் மூலமாக இலவசமாக அதாவது 100 சதவீத மானியத்தில் மா, கொய்யா, சப்போட்டா போன்ற பழக்கன்றுகள் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாகவும் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்குப் பழக் கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

54—

## இடிதாங்கி அமைத்தல்

**வினா 19600—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னை அதிகம் பயிரிடும் கிராமங்களில் இடிதாங்கி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) தென்னை அதிகம் பயிரிடும் கிராமங்களில் இடிதாங்கி அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**55—**

**மானியத் தொகை**

**வினா 21654—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு உரமானியமாக மத்திய அரசு வழங்கிய தொகை எவ்வளவு?

(ஆ) அந்த மானியத் தொகையை முழுமையான முறையில் அரசு செலவிட்டு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் மைய அரசுக்கு மாநில வேளாண்மைத் துறை மூலம் கட்டுப்பாடற்ற உரங்களுக்கான சலுகைத் தொகை ரூ.300.145 கோடிக்கு சிபாரிசு செய்து அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) கட்டுப்பாடற்ற உரங்கள் உர தயாரிப்பாளர்/ இறக்குமதியாளர் மூலம் உர விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்ட அளவீடுகளை இவ்வுர விற்பனை நிலைய பதிவேடுகளையும், இருப்பினையும் சரிபார்த்து அதன் அளவுகள் மைய அரசுக்கு நிறுவன வாரியாக மாதந்தோறும் சிபாரிசு செய்யப்படுகின்றது. இச்சிபாரிசின் அடிப்படையில் மைய அரசு சலுகைத்தொகை வழங்கி வருகிறது.

மைய அரசு மாநில அரசிற்கு இத்திட்டத்தின்கீழ் தொகை ஏதும் வழங்குவதில்லை. மேலும், இவ்வாறு பரிந்துரை செய்த உரங்கள் அனைத்தும் முழுமையாக விவசாயிகளின் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.





**56—**

**விவசாயம்**

**வினா 22911—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழு உரங்களை மட்டும் பயன்படுத்தி விவசாயம் செய்ய வேண்டும் என அரசு விவசாயிகளுக்கு அறிவுரை வழங்குமா?

(ஆ) தொழு உரங்களைப் பயன்படுத்தி பயிரிடும் விவசாயிகளுக்கு சலுகைகள் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தொழு உரத்தில் தழைச் சத்து 1.0% முதல் 1.5%, மணி மற்றும் சாம்பல் சத்து 0.75% மட்டுமே உள்ளது. எனவே, இதனை மட்டும் பயிருக்குப் பயன்படுத்த வேண்டும் எனக் கருதினால் தொழு உரம் மிக அதிக அளவில் உற்பத்தி செய்யப்படல் வேண்டும். தற்போதுள்ள கால்நடைகளைக் கொண்டு பெருமளவில் உரம் தயாரித்திடுதல் என்பது செயல்முறைக்கு இயலாத ஒன்றாகும். மேலும் தொழு உரத்தில் உள்ள சத்துக்கள் மக்கி பயிர்களுக்குக் கிடைப்பது என்பது வெகு காலதாமதமாகும். இதனால் கிடைக்க வேண்டிய சத்துக்கள் உரிய காலக்கட்டத்தில் பயிருக்கும் கிடைக்காமல் போக நேரிடும். மேலும் மகசூலும் பாதிக்கும். ஆனால் நீண்ட கால அளவில் தொழு உரத்தை வயல்களுக்கு தொடர்ச்சியாக இட்டு மண்ணின் வளத்தைப் பெருக்குவதுடன் மகசூலையும் அதிகரிக்கலாம். எனவே, தொழு உரத்துடன் இரசாயன உரங்களையும் இடுவது என்பது மிகவும் அவசியமாகின்றது.

(ஆ) தற்போது, தொழு உரங்களைப் பயன்படுத்தி பயிரிடும் விவசாயிகளுக்கு அரசு மூலம் சலுகைகள் ஏதும் வழங்குவது இல்லை. இருப்பினும் இயற்கை சார்ந்த வேளாண்மை என்ற புதிய திட்டம் ரூ.7.82 இலட்சம் செலவில் செயல்படுத்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் நன்கு மக்கிய குப்பை உரங்கள் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

[2002 அக்டோபர் 25

57—

## உயர்நிலைப் பள்ளிகள்

**வினா 317—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி, நாமக்கல், சேலம் ஆகிய மாவட்டங்களில் 2000-2001ல் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டு உள்ளன?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் தருமபுரி, நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டங்களில் நடுநிலைப் பள்ளிகள் எதுவும் உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்படவில்லை.

58—

## ஆட்டோ வழக்கு

**வினா 4795—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டு சேலத்தில் பெட்ரோலுக்குப் பதில் மண்ணெண்ணெய் கலந்து வாகனம் ஓட்டுவதில் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படும் காரணத்திற்காக எவ்வளவு ஆட்டோ மீது வழக்கு தொடுக்கப்பட்டது?

(ஆ) லைசென்ஸ் இல்லாமல் ஆட்டோ ஓட்டியதாக எத்தனை பேர் மீது வழக்கு தொடுக்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**



2002 அக்டோபர் 25]

(அ) வழக்கு ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

(ஆ) ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஆட்டோ ஓட்டியதாக 435 ஓட்டுநர்கள் மீது வழக்கு தொடுக்கப்பட்டு ரூ.97,000/- இணக்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது.

59—

## மினி பேருந்துகளை இயக்குதல்

**வினா 9457—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டராம்பள்ளி தொகுதியில் விடப்பட்டுள்ள மினி பேருந்துகளை முறையாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிராமப்புற பொதுமக்களின் போக்குவரத்து நலனை முன்னிட்டு நாட்டராம்பள்ளி பகுதியில் 6 சிற்றுந்துகள் இயக்க அனுமதிக்கப்பட்டன. அவற்றில் ஒரு சிற்றுந்து போதிய வருவாய் இல்லாததால் அனுமதிச் சீட்டுதாரரால் அனுமதிச் சீட்டு 29-6-2001 அன்று சரண் செய்யப்பட்டது. ஒரு சிற்றுந்து பழுது ஏற்பட்டதன் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 2 சிற்றுந்துகள் தொடர்ந்து அனுமதிக்கப்பட்ட வழித்தடத்தில் முறையாக இயக்கப்பட்டு வருகின்றன. 2 சிற்றுந்துகளை அனுமதிச் சீட்டுகளின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இயக்காததால் மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

60—

## மினி பேருந்துகள்

**வினா 14039—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் இயக்கப்படும் மினி பேருந்துகளுக்கு உரிமம் வழங்குவதை எளிதாக்கி மேலும் கிராமப்புறங்களிலும் மலைப் பகுதிகளிலும் மினி பேருந்துகள் இயக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் கிராமப்புறங்கள், மலைப் பகுதிகள் ஆகிய இடங்களில் சிற்றுந்துகளை (Mini bus) இயக்குவதற்கு அனுமதிச் சீட்டுகள் மோட்டார் வாகனச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள முறைமைகளின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. இதனை மாற்ற அரசிடம் திட்டம் ஒன்றுமில்லை.

**61—**

### வழித்தடம்

**வினா 15693—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதியில் இயக்கப்படும் விடையூர்-டோல்கேட் மினிப் பேருந்து வழித்தடத்தை விடையூர்-திருவள்ளூர் சிவி. நாயுடு சாலை சந்திப்பு காமராசர் சிலை வரையில் நீட்டித்து இயக்க அரசு ஆவன புரியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

விடையூர் முதல் டோல்கேட் வரை இயக்கப்படும் சிற்றுந்து வழித்தடத்தை நீட்டித்து இயக்கும் திட்டம் தற்பொழுது ஏதுமில்லை.

**62—**

### அன்னியச் செலாவணி

**வினா 4416—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் நிதியாண்டில் கிரானைட் கற்கள் வெளிநாடுகளுக்கு தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதில் அன்னியச் செலாவணி எவ்வளவு கிடைக்கப் பெற்றுள்ளது?



**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 2000-2001 ஆம் நிதியாண்டில் 1209014.978 கன மீட்டர் அளவு கிரானைட் கற்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இதில் அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலமாக 8483.848 கன மீட்டர் அளவு கிரானைட் கற்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. தமிழ்நாடு கனிம நிறுவனம் 2000-2001 ஆம் நிதியாண்டில் கிரானைட் கற்கள் ஏற்றுமதி மூலம் ரூ.26.54 கோடி அன்னியச் செலாவணியை ஈட்டியுள்ளது.

**63—**

### இரும்புத் தாதுப் பொருட்கள்

**வினா 9976—திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வெல்லம்பட்டி கிணற்றில் இரும்புத் தாதுப் பொருட்கள் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை கனிம வள அதிகாரிகள் மூலம் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதி, வெல்லம்பட்டி கிணற்றில் இரும்புத் தாதுப் பொருட்கள் இருப்பதை அறிந்து திண்டுக்கல் மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத் துறை உதவி இயக்குநர் மற்றும் உதவி புவியியலாளர் மேற்காணும் இடத்திற்குச் சென்று புவியியல் ஆராய்ச்சி செய்துள்ளனர். இக்கிணற்றில் உள்ள தாதுப்பொருட்கள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இக்கிணற்றிலிருந்து 20 மீட்டர் ஆழத்திலிருந்து எடுக்கப்பட்ட இரும்புத் தாது மாதிரிகள் வேதியியல் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மற்ற கிணறுகளில் எடுக்கப்பட்ட மாதிரிகளில் இரும்புத் தாது ஏதுமில்லை.

**64—**

**துணை மின் நிலையங்கள்**

**வினா 12293—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் புதியதாகத் தொடங்கப்பட்ட துணை மின் நிலையங்கள் எத்தனை?

(ஆ) அந்த ஆண்டில் துணை மின் நிலைய கட்டுமானப் பணிகள் எத்தனை எடுத்துக் கொள்ளப்பட்டன?

(இ) அதில் முடிக்கப்படாமல் உள்ள பணிகள் எத்தனை? அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் 60 துணை மின் நிலையங்கள் தொடங்கப்பட்டன.

(ஆ) 60.

(இ) ஏதும் இல்லை.

**65—**

**சந்தன மரக் கட்டைகள்**

**வினா 10500—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1997 முதல் 2000 வரை ஏற்பட்ட தீ விபத்தில் சந்தனக் கிடங்கில் அழிந்து போன சந்தன மரக் கட்டைகளின் மதிப்பு என்ன?





**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் 1997 முதல் 2000 ஆம் ஆண்டு முடிய இடைப்பட்ட காலத்தில் 16-3-1997 அன்று திருப்பத்தூர் கூடுதல் சந்தன மரக் கிடங்கில் தீ விபத்து ஏற்பட்டது. அதன் மதிப்பு அப்போதைய மாவட்ட வன அலுவலரால் ரூ.68.45 கோடி எனவும், வேலூர் மாவட்ட வனப் பாதுகாவலர் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு மேற்படி தீ விபத்தினால் ஏற்பட்ட இழப்பு ரூ.190.41 கோடி எனவும் அறிக்கை செய்துள்ளது. இவை தவிர வேறு எந்த சந்தன மரக் கிடங்குகளிலும் தீ விபத்து மேற்படி கால கட்டத்தில் ஏற்படவில்லை.

**66—**

**சந்தனக் கட்டைகளின் மதிப்பு**

**வினா 12354—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மே மாதம் முடிய சந்தன மரக் கட்டைகள் கடத்தலில் எத்தனை வாகனங்கள் வனத் துறை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன?

(ஆ) கடத்தப்பட்ட சந்தனக் கட்டைகளின் மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மே மாதம் வரை சந்தன மரக் கடத்தலில் ஈடுபட்ட 24 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.

(ஆ) கைப்பற்றப்பட்ட சந்தனக் கட்டைகளின் எடை 3.91 டன். அவற்றின் மதிப்பு ரூ.16.83 இலட்சம் ஆகும்.

67—

## விளம்பரங்கள்

**வினா 13428—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்களாலும், பல்வேறு தொழிற்சாலைகளினாலும் சுற்றுச்சூழல் பாதிப்புக்குள்ளாவதை விளம்பரங்களின் மூலம் உணர்த்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மையம், பொதுமக்கள் பங்கேற்பு மற்றும் அரசு சாரா அமைப்புகள் குழு ஆகியவற்றின் மூலம் மாசினால் விளையும் தீமைகளையும் மற்றும் அம்மாசினைக் களைவதற்கும், தடுப்பதற்கும் உரிய வழிமுறைகளை மேற்கொண்டு வருகிறது. மக்களால் ஏற்படுகின்ற வரைமுறையற்ற உபயோகங்கள், தொழிற்சாலைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் கேடுகள் மற்றும் வெளியேற்றப்படும் பிளாஸ்டிக் பொருட்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் அனைத்தையும் உணர்ந்து மேற்கூறிய நிறுவனங்களின் மூலமாக வாரியம் மாசினைக் கட்டுப்படுத்தும் பல்வேறு முகாம்கள் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன. தவிர சென்னை பெருநகரப் பேருந்துகளில் பிளாஸ்டிக் குறித்து விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் அவ்வப்போது பத்திரிகைகள் மூலமாகவும் வாரியம் இதுகுறித்த செய்திகளை வெளியிட்டு வருகிறது.

இதைத்தவிர வானொலியில் சுற்றுச்சூழல் பற்றிய "பசுமை நிறைந்த உலகத்திலே" என்னும் நிகழ்ச்சி வானொலி மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்ககம் போன்ற தன்னார்வு நிறுவனங்களோடு இணைந்து 2001 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் ஒலி பரப்பப்பட்டு வருகிறது.



இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் பற்றி ஞாயிறுதோறும் மாலை 3.30 மணி முதல் 4.00 மணி வரை ஒலிபரப்பப்படுகிறது.

பங்கேற்புக் குழுக்கள் மற்றும் தமிழகத்தில் ஏற்கெனவே 14 மாவட்டங்கள் மற்றும் 6 மாநகராட்சிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள சுமார் 200 சுற்றுச்சூழல் மையங்கள் ஆகியவற்றின் பங்கேற்புடன் இந்நிகழ்ச்சி தயாரித்து அளிக்கப்படுகிறது. பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சினைகளான பிளாஸ்டிக் பொருட்களின் கழிவுகளைத் தடுத்தல், திடக்கழிவுகள் மேலாண்மை, வாகனப்புகை, மழைநீர் சேமிப்பு முதலியவை இந்நிகழ்ச்சியில் முக்கியத்துவம் பெறுகின்றன. மேலும் மேற்கூறிய நிகழ்ச்சிகள் சுமார் 325 சுற்றுச்சூழல் மையங்களுடன் தமிழகத்தில் 30 மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு வாரியம் தொடர்ந்து செயல்படுத்திவருகிறது. மக்களாலும், பல்வேறு தொழிற்சாலைகளினாலும் சுற்றுச்சூழல் பாதிப்புக்குள்ளாவதை விளம்பரங்கள் மூலம் உணர்த்த சுற்றுச்சூழல் துறை ஆண்டுதோறும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. உலக சுற்றுச்சூழல் தினம் மற்றும் உலக வனநாள் ஆகிய சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த நாட்களில் வானொலி மற்றும் தொலைக்காட்சி வாயிலாக விழிப்புணர்வுக்கான சொற்பொழிவுகளை சுற்றுச்சூழல் துறை இயக்குநர் நிகழ்த்துவார். மேலும் போகிப் பண்டிகை மற்றும் தீபாவளிப் பண்டிகையின் போது புகை மாசுபற்றி துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் ஒலிபெருக்கி வாயிலாகவும் மக்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து விளக்கப்படுகிறது. இதுவன்றி தமிழகத்தில் சுமார் 1200 சுற்றுச்சூழல் மன்றங்கள் பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ளன. தேசிய பசுமைப் பாதுகாப்புப் படை மாவட்டந்தோறும் 100 பள்ளிகளில் அமைக்கப்பட்டு வருகிறது. இம்மன்றங்கள் வாயிலாக பல்வேறு சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து நாட்டு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

68—

## முன் உதவித் தொகை

**வினா 16305—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கொடிய விலங்குகளால் அடித்துக் கொல்லப்பட்ட குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு அரசு கொடுத்த

[2002 அக்டோபர் 25

முன் உதவித் தொகை ரூ.25,000 போக மீதித் தொகை இன்னும் வழங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) உடனடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு பணம் வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் மொத்தம் 8 நபர்கள் காட்டு யானை மற்றும் சிறுத்தையினால் தாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் காட்டு யானைகளால் தாக்கப்பட்ட 6 நபர்களுக்கு ரூ.1,00,000 வீதம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) முழுமையான நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. சிறுத்தையால் தாக்கப்பட்ட இரு நபர்களுக்கு ரூ.25,000 வீதம் உடனடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில் புலிகள் திட்டத்தின்கீழ் நிவாரணத்திற்காக நிதி ஒதுக்கீடு ஏதும் கிடைக்கப்பெறாததால் பட்டுவாடா செய்யப்படவில்லை. நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும் மீதமுள்ள நிவாரணம் வழங்கப்படும்.

**69—**

## தள்ளுபடி தொகை

**வினா 3679—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சர்வோதய சங்கங்கள் மற்றும் கதர் நிறுவனங்களுக்கு அரசு கொடுக்க வேண்டிய தள்ளுபடி தொகை எத்தனை ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது?

(ஆ) 31-3-2001 முடிய கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**



2002 அக்டோபர் 25]

(அ) பொதுவாக சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களின் தள்ளுபடி மானியக் கோரிக்கைகள் துறைத் தணிக்கையரால் சரி பார்க்கப்பட்டு அவர்களின் சான்றொப்பம் பெறப்பட்ட பின்னர் வாரியத்தில் பெறப்பட்டு அரசுக்கு அனுமதி வேண்டி வாரியத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும். அரசும் சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களின் தள்ளுபடி மானியக் கோரிக்கைகள் தொகையினை அனுமதித்து, ஆணை வழங்கிய பின்னர் வாரியத்தின் மூலம் தொகை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அவ்வாறே மேற்படி சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட 1996-97 முதல் 1999-2000 வரையிலான ஆண்டுகளுக்கான தள்ளுபடி மானியக் கோரிக்கைகளை வாரியம் அரசின் பரிசீலனைக்கு சமர்ப்பித்தது.

இதனிடையில், சில சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் விற்பனை மீது சில முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டிருந்த அறிக்கையின் அடிப்படையில் மேற்படி வருடங்களுக்கான (1996-97 முதல் 1999-2000 ஆண்டு வரை) சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களின் தள்ளுபடி மானியக் கோரிக்கைகளை மிகத் துல்லியமாக மறு தணிக்கை செய்ய வேண்டுமென அரசாணை (நிலை) எண் 36, கைத்தறி, கைவினைப்பொருட்கள், துணிநூல் மற்றும் கதர் (எப்.2) துறை, நாள் 29-3-2001-ன் வழி ஆணையிட்டது.

அதன் அடிப்படையில் மேற்படி நிறுவனங்களின் 1996-97 முதல் 1999-2000 ஆம் ஆண்டு வரையிலான தள்ளுபடி மானியக் கோரிக்கைகளை மறு தணிக்கை மேற்கொள்ள வேண்டி அனைத்து நிறுவனங்களுக்கும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. அவை மறு தணிக்கை செய்து மீள பெறப்பட்டவுடன் தணிக்கை சான்றின் அடிப்படையில் தள்ளுபடி மானியத் தொகைகளை அரசு அனுமதித்து ஆணை வழங்கும்.

(ஆ) சான்றளிக்கப்பட்ட சர்வோதய சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட மானியக் கோரிக்கைகளில் 31-3-2001 முடிய மொத்த பாக்கித் தொகை ரூ33,52,67,758/-.

**70—**

## பனைத் தொழில்கள் துவக்குதல்

**வினா 12532—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 25

(அ) தருமபுரி மாவட்டத்தில் பனை மரங்கள் அதிகமுள்ளதால், பனைப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு தொழில்களைத் துவக்க, ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் 40 ஆரம்ப பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. மேலும் தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டில், தருமபுரி மாவட்டத்தில் மத்தூரை தலைமையிடமாகக் கொண்டு தருமபுரி மாவட்ட பனைபொருள்கள் விற்பனை கூட்டுறவு சம்மேளனம் ஒன்றும், மத்தூரில் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் பனைப்பண்ணை ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. இவை மூலம் பதநீர், கருப்பட்டி மற்றும் பிரஷ் வகைகள் ஆகியவை உற்பத்தியும்/ விற்பனையும் செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் இம்மாவட்டத்தில் பனைமரத் தொழிலாளர்கள் பயனடைந்து வருகின்றனர். இதனைத் தவிர புதியதாக பனைத் தொழில்கள் தொடர்பான புதிய திட்டங்கள் தருமபுரி மாவட்டத்தில் துவக்கிட திட்டம் ஏதுமில்லை.

**71—**

**தறி உபகரணங்கள்**

**வினா 13287—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கதர் நெசவுத் தொழில் செய்பவர்களுக்கு கதர்த் துறை மூலம் அச்சு, நாடா தளி போன்ற இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கி கதர் நெசவை ஊக்கப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**



2002 அக்டோபர் 25]

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் பணிபுரியும் நெசவாளர்களுக்கு அச்சு, நாடா, தளி போன்ற இயந்திரங்கள் பகுதி-2 திட்டத்தின்கீழ், அரசிடமிருந்து பெறப்படும் மானியத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகிறது. 1998-99 ம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ், தறிகளை நவீனப்படுத்தும் பொருட்டு 200 பட்டு நெசவாளர்களுக்கும், 500 கதர் நெசவாளர்களுக்கும் அச்சு மற்றும் விழுதுகள் ரூ.5.25 இலட்சம் மதிப்பிற்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 600 பட்டு நெசவாளர்களுக்கு தலா இரண்டு ஜக்கார்டு பெட்டிகள் வீதம் 1200 ஜக்கார்டு பெட்டிகள் வழங்குவதற்கு ரூ.7.20 இலட்சம் மானியம் பெறப்பட்டு தற்போது 162 நெசவாளர்களுக்கு ஜக்கார்டு பெட்டிகள் வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 438 நெசவாளர்களுக்கும் ஜக்கார்டு பெட்டிகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்துடன் 400 பட்டு நெசவாளர்களுக்கு தறியினை நவீனப்படுத்தி உற்பத்தியினை மேம்படுத்தும் பொருட்டு தலா ரூ.2,500 வீதம் தறி உபகரணங்களுக்கென ரூ.10.00 இலட்சம் மானியத்தில் பெற்று அவற்றினை வழங்குவதற்கும், இவ்வாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**72—**

**கூட்டுறவு முதல் தொழிற்பேட்டை**

**வினா 14117—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியத்தில் கூட்டுறவு மூலம் தொழிற்பேட்டை தொடங்க அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியத்தில் கூட்டுறவு மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் இத்துறையின் ஆய்வில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[2002 அக்டோபர் 25

73—

## கால்நடை துணை மருத்துவமனை

**வினா 10721—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், வடசங்கத்தி ஊராட்சியில் கால்நடை துணை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

74—

## கால்நடை மருந்தகங்களை மருத்துவமனையாக்குதல்

**வினா 12211—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் நிதியாண்டில் சேலம் மாவட்டத்திலுள்ள எத்தனை கால்நடை மருந்தகங்களை மருத்துவமனையாக உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஏதுமில்லை.



2002 அக்டோபர் 25]

75—

## மருந்தகங்கள்

**வினா 12491—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனைகளாக உயர்த்தப்படவுள்ள மருந்தகங்கள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஏதுமில்லை.

76—

## கூடுதல் மருத்துவர்கள் நியமித்தல்

**வினா 12682—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

பொங்கலூர் தொகுதியிலுள்ள கால்நடை கிளை மருந்தகங்களில் தனித் தனியாக மருத்துவர்கள் நியமிக்கப்படாமல் ஒரே மருத்துவரே இரண்டுக்கும் மேற்பட்ட மருந்தகங்களை கவனிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதால், கூடுதலாக மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், திருப்பூர் கோட்டத்தில் உள்ள பொங்கலூர் தொகுதியில் காலியாக உள்ள கால்நடை மருத்துவ கிளை நிலையத்தில் தற்போது, கால்நடை ஆய்வாளர் பயிற்சி பெற்ற, கால்நடை ஆய்வாளர்கள் இல்லாததால், ஒவ்வொரு கிளை நிலையங்களுக்கும்

தனித்தனியாக கால்நடை ஆய்வாளர் நியமிக்க இயலாத நிலை உள்ளது. ஆகவே, தற்போது அக்கோட்டத்தில் உள்ள கால்நடை ஆய்வாளர்களைக் கொண்டு கூடுதல் பொறுப்பில் காலியாக உள்ள கால்நடைக் கிளை நிலையங்களின் பணிகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. கால்நடை ஆய்வாளர் பயிற்சி துவக்கப்பட்டு அப்பயிற்சி முடித்த நபர்களை காலியாக உள்ள கால்நடை கிளை நிலையங்களில் நியமிக்க இயலும்.

**77—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா 13157—செல்வி சி. கனகதாரா :** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் மேல்மிட்டாளம் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் :**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**78—**

**மாணவியர் விடுதிக்கு அடிப்படை வசதிகள்**

**வினா 8893—திரு. க. முருகவேல் ராஜன் :** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகாவில் உள்ள கூடக்கோவிலில் உள்ள அரசினர் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி சொந்தக் கட்டடத்தில் இயங்கவும் குடிநீர், கழிவறை ஏற்படுத்தவும் அரசு முன் வருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் :**

2001-2002 பகுதி—2 திட்டத்தின்கீழ் 100 விடுதிகளுக்குக் கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டது. அவற்றில் மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி, கூடக்கோவில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதியும் ஒன்றாகும். இக்கட்டடத்தில் குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள் அளிக்கப்படும். விடுதிக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**79—**

**வீட்டுமனைப் பட்டா**

**வினா 13747—திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள பாப்பட்டி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசிடம் திட்டம் தற்போது இல்லை.

**80—**

### இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 13748—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள கரும்பட்டி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசிடம் திட்டம் தற்போது இல்லை.

**81—**

### வீட்டுமனை

**வினா 13767—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள ஈச்சம்பட்டி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசிடம் திட்டம் தற்போது இல்லை.

**82—**

### இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 13768—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள பள்ளிபட்டி, நாகர்கூடல் கிராமங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசிடம் திட்டம் தற்போது இல்லை.

**83—**

### வீட்டுமனைப் பட்டா

**வினா 13769—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள கழனிகாட்டூர் கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்

வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசிடம் திட்டம் தற்போது இல்லை.

**84—**

**இலவச வீட்டுமனைப் பட்டா**

**வினா 13770—திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள பால்கெங்கமனஅள்ளி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசிடம் திட்டம் தற்போது இல்லை.



**85—**

**பட்டா**

**வினா 13771—திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள கெங்கலாபுரம் கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசிடம் திட்டம் தற்போது இல்லை.

**86—**

**இலவச வீட்டுமனைப் பட்டா**

**வினா 13773—திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள இ.கே. புதூர் கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2002 அக்டோபர் 25

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசிடம் திட்டம் தற்போது இல்லை.

**87—**

**வீட்டுமனைப் பட்டா**

**வினா 13775—திரு. ஜிகே. மணி :** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள பாலவாடி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க அரசிடம் திட்டம் தற்போது இல்லை.

**88—**

**பட்டா**

**வினா 13776—திரு. ஜிகே. மணி :** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட



2002 அக்டோபர் 25]

நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள மூக்கனஅள்ளி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசிடம் திட்டம் தற்போது இல்லை.

**89—**

**மனைப் பட்டா**

**வினா 13777—திரு. ஜிகே. மணி :** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள நெக்குந்தி, அனுமந்தபுரம் ஆகிய கிராமங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசிடம் திட்டம் தற்போது இல்லை.

90—

## வீட்டுமனைப் பட்டா

**வினா 13826—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள பங்குநத்தம் கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்காமலிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசிடம் திட்டம் தற்போது இல்லை.

91—

## உலமா ஓய்வூதியம்

**வினா 22542—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரத்தில் முஸ்லீம் உலமா ஓய்வூதியம் பெற வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்துள்ளவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் அனைவருக்கும் ரூ.500/- மாதமொன்றுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. வது. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகரத்தில் உலமா ஓய்வூதியம் பெற தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் 18 முஸ்லீம்கள் பதிவு செய்துள்ளனர்.

(ஆ) அவர்களில் 10 நபர்களுக்கு மாதம் ரூ.500/- வீதம் உலமா ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. ஏழு விண்ணப்பங்கள் மீது விசாரணை அறிக்கை பெறப்பட்டு உலமா ஓய்வூதிய ஒப்பளிப்புக் குழுவின் பரிசீலனையில் உள்ளது. ஒரு விண்ணப்பத்தின் மீது விசாரணை அறிக்கை கோரப்பட்டுள்ளது.

92—

## அரசு தொழிற் பயிற்சி நிலையம்

**வினா 23897—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் இளநிலை பயிற்சி அலுவலர் (Junior Training Officer) பதவிக்கு Craft-Instructor பயிற்சி பெற்றவர்களை பணிக்கு அமர்த்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வது. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப் பணியின் கீழ் வரும் இளநிலை பயிற்சி அலுவலர் பதவிக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்பு விதிகளின்படி கைவினைஞர் பயிற்றுநர் (Craft Instructor Training) பயிற்சி முடிக்கப்பட்டவர்களை நேரடி நியமனத்தின்போது பரிசீலிக்க வேண்டும் என விதி நிர்ணயிக்கப்படவில்லை. கைவினைஞர் பயிற்றுநர் பயிற்சி, இளநிலை பயிற்சி அலுவலர் நேரடி நியமனத்திற்கு அத்தியாவசிய தகுதியாக நிர்ணயிக்கப்படவில்லை. இளநிலை பயிற்சி அலுவலர் பணி விதிகளுக்குப் புறம்பாக கைவினைஞர் பயிற்றுநர் பயிற்சி முடித்தவர்களை இளநிலை பயிற்சி அலுவலர் பதவிக்கு பரிசீலிக்க இயலாது.

93—

### பால் குளிரூட்டும் நிலையம்

**வினா எண் 2859—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மொரப்பூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், மொரப்பூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

94—

### பால் உற்பத்தியாளர்கள் சங்கம்

**வினா 16475—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், இருளஞ்சேரி கிராமத்திற்கு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் கோரியுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், இருளஞ்சேரி கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கக் கோரி மனு ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு விடை எழவில்லை.



95—

### ஆவின் பால் பண்ணை

**வினா 16572—திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் ஆவின் பால் பண்ணையில் விற்பனை செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) இலாபம் எவ்வளவு கிடைத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் பால் பண்ணையில் பால் பொருட்கள் விற்பனை செய்யப்பட்ட தொகை ரூ.1,13,01,47,674/-

(ஆ) இலாபம் ஈட்டவில்லை. நட்டம் ரூ.1,51,27,312/-

96—

### சொந்தக் கட்டடம்

**வினா 18936—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் கட்டடம் இல்லாத பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவனச் செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) சங்கங்கள் கட்டட நிதி உதவி கோரிக்கைகளை ஒன்றியங்களுக்குச் சமர்ப்பிக்கும்போது உள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டு பரிசீலனை செய்து நிதி உதவி செய்வதற்கு அரசு வழி வகுத்துள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

97—

## பால் பெருக்குத் திட்டம்

**வினா 20258—திரு. செ. வெங்கடாஜலம் :** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் பெருக்குத் திட்டம் 1-ன்கீழ், சேலம் பால் பண்ணைக்கு பால் வழங்கும் பால் உற்பத்தியாளர்களுக்கு இந்த ஆண்டின் முடிவில் எவ்வளவு ரூபாய், எத்தனை பேருக்கு ஒரு பகுதி விலையை வித்தியாசமாகவும் மற்றும் இலாப பங்கீடாகவும் வழங்கப்பட்டது?

(ஆ) இதனால், விவசாயிகள் அதிகமாக கூட்டுறவுச் சங்கத்தில் புதிதாகச் சேர்ந்துள்ளார்களா? ஆம் எனில், எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர் :**

(அ) சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் இலாபமின்றி நட்டத்தில் இயங்குவதால், சேலம் பால்பண்ணைக்கு பால் வழங்கும் உறுப்பினர் சங்கங்களுக்கு இந்த ஆண்டின் முடிவில் விலை வித்தியாசமோ மற்றும் இலாப பங்கீடோ எதுவும் வழங்கப்படவில்லை.

(ஆ) புதியதாக உறுப்பினர்கள் சேரவில்லை.

98—

## கறவை மாடுகளுக்கான கடன்

**வினா 20259—திரு. செ. வெங்கடாஜலம் :** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை விவசாயிகளுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்கு கடன் வழங்கியுள்ளது?





(ஆ) தற்போது எத்தனை லிட்டர் பால் விவசாயிகளிடம் வாங்கப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர் :**

(அ) பிற்படுத்தப்பட்டோர் நலத் திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 200 பயனாளிகளுக்கு தலா இரண்டு கறவை மாடுகள் வீதம் 400 கறவை மாடுகளுக்கான கடன் வழங்கப்பட்டது.

(ஆ) தற்போது ஜூன் 2002 சேலம் மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்படும் பாலின் சராசரி அளவு நாளொன்றுக்கு 3,03,239 லிட்டராகும்.

99—

## கேபிள் டி.வி. ஆபரேட்டர்களுக்கு தனி வாரியம்

**வினா 14155—திரு. என். நன்மாறன் :** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேபிள் டி.வி. ஆபரேட்டர்களுக்கு தனியே வாரியம் அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்பிரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**100—**

**மக்கள் தொடர்பு சாதனம்**

**வினா 15241—செல்வி க. பாலபாரதி :** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்கள் தொடர்பு சாதனங்கள் கதை, நாடகம், திரைப்படக் காட்சிகள் முதலிய பாலியல் வன்முறைகளையும், வக்கிரங்களையும் தூண்டும் விதமாக அமைந்து வருவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்பிரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :**

(அ) மக்கள் தொடர்பு சாதனமான திரைப்பட காட்சிகளில் பாலியல் வன்முறைகளையும், வக்கிரங்களையும் தூண்டும் விதமாக அமையும் காட்சிகளை கட்டுப்படுத்துவது மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தணிக்கைக் குழுவாகும். கதைகள் மற்றும் நாடகங்களை தணிக்கை செய்திட தணிக்கை முறை ஏதுமில்லை.

(ஆ) எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்

### (அ) அரசு ஊழியர்களில் ஒரு பிரிவினர் 23-10-2002 முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன, இத்தனை பேர் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடு) சரி. திரு. துரைமுருகன் சொல்லுங்கள். மற்றவர்கள் உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆசிரியர், அரசு ஊழியர்கள் சங்கங்களுடைய கூட்டுக் குழு, கடந்த 23-10-2002 முதல் தமிழ்நாட்டில் ஒரு போராட்டத்தை நடத்தி வருவதைத் தாங்களும் நன்றாக அறிவீர்கள். பெரும்பாலோர் அதில் ஈடுபட்டு அலுவலகங்களுக்குச் செல்லமுடியாத நிலைமை உருவாகியிருக்கிறது. நாட்டில் பல போராட்டங்களும் நடைபெறுகிறபோது, இந்தப் போராட்டமும் நடைபெறுகிற காரணத்தால், பொதுவாக தமிழ்நாட்டில் பள்ளிக்கூடங்கள் நேற்று மூடப்பட்டிருந்தன. அலுவலகங்களும் மூடப்பட்டிருப்பதால் அரசு நிர்வாகமே ஸ்தம்பிக்கக்கூடிய ஒரு நிலை உருவாகியிருக்கிறது. இதுகுறித்து உடனடியாகப் பேசி, அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக எதிர்க்கட்சிகளின் சார்பில் அவையை ஒத்திவைக்கவேண்டும் என்னும் தீர்மானத்தைத் தங்களிடம் தந்திருக்கிறோம். எனவே, அதிமுக்கியத்துவம் வாய்ந்த, அவசரம் வாய்ந்த, நாட்டில் நிகழ்ந்துகொண்டிருக்கிற, அரசாங்கத்திற்கு நேரடி பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இந்தப் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்காக இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிப்பதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையில் அதை எடுத்த பிறகுதான் அதைப்பற்றிச் சொல்ல வேண்டும். நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அரசுத் தரப்பிலிருந்து கேட்டு, பதில் வந்ததற்குப் பிறகு அதைப்பற்றி இங்கு பேசலாம். வருகிற திங்கள்கிழமைக்குமேல் ஒவ்வொன்றாக அவையில் எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டத்தினாலே மக்கள் பாதிக்கப்படுகிற...

**திரு. ஜி.கே. மணி:** இதுவரையிலே எப்போதும் இல்லாத அளவுக்குத் தமிழ்நாட்டில் பரவலாக எல்லாத் தரப்பு மக்களிடையேயும் அவர்கள் ஒரு போராட்டத்தில் ஈடுபடக்கூடிய ஓர் உணர்வின் அடிப்படையில் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னது மாதிரி, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நீங்கள் என்னுடைய அறையில் வந்து பேசுங்கள். திங்கள்கிழமைக்குமேல், அரசுத் தரப்பிலிருந்து பதில் வந்ததும், நாம் பேசி ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளலாம். இப்போது உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து 3 நாட்கள் ஆகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டப் பேரவையே நேற்றுதானே கூடியது, உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி விலை உயர்வினால் கடுமையான பாதிப்பு; மதமாற்றத் தடைச் சட்டத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, சட்டமன்றத்திற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. எல்லாப் பிரச்சினைகளும் முக்கியமான பிரச்சினைகள்தான், நான் ஒப்புக்கொள்கிறேன். சட்டமன்ற நடைமுறைப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்ததாகவோ, அல்லது சிறப்புக் கவன ஈர்ப்பாகவோ எடுத்துக்கொள்வதைப் பற்றி அரசுத் தரப்பிலிருந்து பதிலைக் கேட்டு, திங்கள்கிழமைக்குமேல் அவற்றின் முக்கியத்துவம் கருதி ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். உடனடியாக எப்படி பதில் சொல்லமுடியும்? உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆசிரியர், அரசு ஊழியர்களின் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு, அதாவது JACTTEO-GEO என்ற அமைப்பின் பிரதிநிதிகள், என்னைச் சந்திக்க வேண்டுமென்று நேரம் ஒதுக்குமாறு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களைச் சந்தித்தபிறகு, இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இப்போது அவையின் அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 உள் விதி (1)-ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:

1. திரு. அ. பாப்பா சுந்தரம்
2. டாக்டர் தே. குமாரதாஸ்
3. திரு. லா. சந்தானம்
4. திரு. அ. அன்வர் ராஜா
5. திரு. சி. சிவசாமி
6. திரு. வி. ஜெயராமன்

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும்

அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

*முற்பகல் 11—10*

**THIRU J. HEMACHANDRAN:** Hon. Speaker Sir, I raise a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, சமீபத்தில் 18-10-2002 அன்று நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இப்போது வருவாய்ப் பற்றாக்குறை காரணமாக அரசு ஊழியர்களுக்குப் பஞ்சப்படிகூட கொடுக்க முடியவில்லை என்று சொல்லியிருக்கிற இந்த நேரத்திலே, இப்படி ஓர் உயர்ந்த அதிகாரியினுடைய பதவியை create பண்ணக்கூடிய ஒருமுறையில், ஒரு சட்டத்தை அனுமதிப்பது சரிதானா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக்கூட....(குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்தை நானும் வலியுறுத்துகிறேன். இப்போதுள்ள பொருளாதார நெருக்கடியிலே இருக்கிறவர்களுக்கே வேலை கொடுக்கமுடியாத ஒரு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. பணியிலே இருப்பவர்களையே வேலையைவிட்டு வீட்டுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஒருவருக்கு, அவர் பதவி ஓய்வு பெற்ற பின்னாலே, அவருக்கு மீண்டும் பதவி அளிப்பதற்கு வாய்ப்பு கொடுப்பது சரிதானா? இது எந்தவகையிலே பொருத்தமானது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக எந்தப் பொறுப்புக்கும் அறநிலையத் துறையின் மூலமாகப் பணி நியமனம் செய்யப்படவில்லை. இப்போதுகூட முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற 1 இலட்சத்து 70 ஆயிரம் ஏக்கருக்குமேல் இருக்கிற நிலங்களைச் சரியாகத்து, அவற்றை எடுப்பதற்காகத்தான் இப்படிப்பட்ட ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரியை அங்கே நியமித்து இருக்கிறார்களே தவிர, புதிய பொறுப்பிற்குப் புதிய பணிகளில் யாரும் நியமிக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், சட்டமுன்வடிவை அறிமுகம் செய்யுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, ஆய்வு செய்யும்போது நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்துவிட்டீர்கள். எதிர்ப்புத் தெரிவித்துவிட்டீர்கள். ஆய்வுக்கு வரும்போது உங்களுடைய கருத்தைப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், என்ன?

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை அறிமுக நிலையிலேயே நாங்கள் எதிர்க்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி அலுவலர்களுடைய பதவி நீட்டிப்பைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்க வேண்டும் என்று நான் சபைக்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். இந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்க வேண்டும் என்கிற தீர்மானம் இருக்கிறபோது, முதலிலே பேசுகின்ற உரிமை, அவசரச் சட்டத்தை நிராகரிக்க வேண்டும் என்று யார் தீர்மானம் கொடுத்திருக்கிறாரோ



அவருக்குத்தான் அந்த உரிமை உண்டு. என்னை நீங்கள் அழைத்திருக்கவேண்டும். இருந்தாலும் பரவாயில்லை. நான் இப்போது சொல்கிறேன். இந்தக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில், தனி அதிகாரிகளை மீண்டும், மீண்டும் நியமிப்பதற்காக, அதற்குக் கால நீட்டிப்புக் கொடுத்துக் கொண்டிருப்பது நிச்சயமாக ஏற்றுக் கொள்ளமுடியாத ஒன்று. தேர்தல்களை நிர்வாகக் காரணங்களுக்காகவும் மற்ற காரணங்களுக்காகவும் நிறுத்திவைப்பது என்று..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு விதிமுறைகள் தெரியும். அதாவது அறிமுக நிலையிலே நீங்கள் எதிர்க்கிறீர்கள். அவ்வளவுதானே?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் எதிர்க்கிறேன். அதாவது, விதி 166-ன்கீழ் இந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்க வேண்டும் என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆய்வுக்கு வரும்போது பேசுங்கள். ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிற நேரத்திலே உங்களுடைய கருத்தைப் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** முதலிலே தீர்மானம் கொடுத்தவர்தான் பேச வேண்டும். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது விவாதத்தில் பேசலாம். ஆனால், "இந்தப் பேரவை இதை நிராகரிக்கிறது" என்கிற நேரத்தில், முதலிலே அதைக் கொடுத்த உறுப்பினர்தான் பேசவேண்டும். பிறகு, அதைப் பேரவை ஏற்றுக் கொள்கிறதா, இல்லையா என்பதைப் பொறுத்து, அமைச்சர் அவர்கள் நிச்சயமாக, அவர்களுடைய சட்டமுன்வடிவை முன்மொழியலாம். முதலிலே நாங்கள்தான் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** என்னைப் பொறுத்தவரையில், தனி அதிகாரிகள் நியமனம், தொடர்ந்து பல ஆண்டு காலமாக மீண்டும் மீண்டும் நீட்டிப்புச் செய்யப்பட்டு வருகிறது. ஏன் இந்த நீட்டிப்புச் செய்யப்படுகிறது என்று கேட்டால், நிர்வாகக் காரணங்களுக்காகவும், மற்ற காரணங்களுக்காகவும் தேர்தல்கள் நிறுத்தி வைக்கப்படுகின்றன என்று விளக்கக் குறிப்புகளிலே கூறியிருக்கிறார்கள். ஆனால் தேர்தல்களையே நடத்திவைக்க முன்வரவில்லை என்பதுதான் உண்மை. எந்தக் காரணங்களுக்காக நடத்த முடியவில்லை என்பதைத்

தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். இப்போதாவது அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். நிச்சயமாக இதுபோல கூட்டுறவுச் சங்கங்களில் தனி அதிகாரிகள் ஆதிக்கத்தைத் தொடர்ந்து நீட்டிக்க அனுமதிக்க முடியாது. மாநிலங்களைப் பொறுத்தவரையிலே, குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்திலே கெடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் வைத்திருக்கமுடியாது. முதலிலே 6 மாதம்; இன்னும் ஒரே ஒருமுறை நீட்டிக்கலாம். 6 மாதம், 6 மாதம் என்று ஒவ்வொரு வருடமாகக் கொண்டுவர முடியும். ஆனால், இந்தக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில், எத்தனை காலம் வேண்டுமானாலும் மீண்டும், மீண்டும் அதை நீட்டித்துக் கொண்டே போவது முறையாக இருக்காது; அது முறையானதல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுடைய கைகளிலேதான் கூட்டுறவுச் சங்க நிர்வாகம் நிச்சயமாக இருக்கவேண்டும். ஆளுநர் ஆட்சியை நாம் வரவேற்க முடியவில்லை. அப்படி இருக்கும்போது இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் மட்டும் நிரந்தரமாகத் தனி அதிகாரிகள் ஆதிக்கத்தை நாம் எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும் என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், (குறுக்கீடு) இதில் நிறைய பேசலாம்...

*முற்பகல் 11—45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீங்கள் நிறைய பேசலாம்; அதாவது விதிமுறைப்படி ஆய்வுக்கு வரும்போது நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லலாம்; இப்போது எதிர்க்கிறேன் என்றுதான் சொல்ல வேண்டும். அவ்வளவுதான் சொல்ல வேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்**: This is a Motion. இது ஒரு தீர்மானம். நான் கொடுத்திருப்பது ஒரு தீர்மானம். இந்தத் தீர்மானத்தின்மீது தாராளமாகப் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இது ஆய்வுக்கு வருகிற நேரத்தில் நீங்கள் பேசலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதில் நான் ஓட்டெடுப்பு கேட்கலாம்; அதற்கு உரிமை இருக்கிறது. நான் பேசலாம். பேசிய பிறகு அமைச்சர் பதில் அளிக்கலாம். அமைச்சர் பதில் அளித்த பிறகும் மீண்டும் நான் பதிலளிக்க எனக்கு உரிமை இருக்கிறது. டிவிஷன் கேட்கலாம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் எப்போது பேசினாலும் இதையேதான் பேசப் போகிறீர்கள், அதில் ஒன்றுமில்லை. ஆய்வுக்கு எடுத்தாலும் இதைத்தான் பேசப் போகிறீர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** என்னுடைய எண்ணங்களைப் பதிவு செய்வதற்கு இது ஒரு வாய்ப்பு. இதை நீங்கள் மறுப்பது முறையாக இருக்காது. (குறுக்கீடு) நான் ஒன்றும் அதிகம் பேசவில்லை, முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆனால் இதை நான் முன்னுதாரணமாக நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டேன். இந்த அவசரச் சட்டத்தின்மீது குறைவாக நான் பேசுகிற காரணத்தாலே, மற்ற அவசரச் சட்டங்களை நிராகரிக்க வேண்டும் என்று தீர்மானங்கள் வருகின்ற நேரத்தில், இதையே முன்னுதாரணமாகக் கொண்டு குறைவாகப் பேச வேண்டுமென்று தயவுசெய்து கேட்காதீர்கள். ஒரு தீர்மானம் எப்படி இந்தச் சபையிலே நிறைவேற்றப்பட வேண்டுமோ, ஒரு தீர்மானத்தின்மீது இந்தச் சபையிலே எப்படிப் பேச முடியுமோ, அதுபோல இந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்க வேண்டுமென்று கொடுக்கப்படுகிற தீர்மானத்திலே முழுமையாக ஓர் உறுப்பினர் பேசலாம் என்பதுதான் அவையினுடைய விதி. எனவே, நான் முழுமையாகப் பேசலாம். இப்போது இந்த அவசரச் சட்டத்தை இந்த அவை நிராகரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அவசரச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்ற என்னுடைய தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இயக்கத்தின் சார்பில் இந்த மசோதாவை அறிமுக நிலையிலேயே நாங்கள் எதிர்க்கிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையேதான் நான் திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கும் சொன்னேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் ஓர் அவசரச் சட்டத்தை அறிமுகம் செய்தார்கள். அதிலே எதிர்ப்புத் தெரிவிக்கிறோம் என்று சொல்வதற்கு எங்களுக்கு வாய்ப்புக் கொடுக்க மறுத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் அதற்காகக் கேட்டீர்களா என்று தெரியவில்லை. வேறு ஏதோ பிரச்சினை பற்றி கேட்டீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, அதற்குத்தான் நான் அப்போது எழுந்து நின்றேன். வேறு எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களாலே கொண்டுவரப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்கள் நீட்டிப்புக்கான அவசரச் சட்டத்தை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Under Section 166, the House is disapproving the Ordinance என்பதுதான் என்னுடைய Motion. So, the House should be made to answer whether they are approving or disapproving. Then only this can be decided. (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம்; பேசட்டும், தெரியும் அவருக்கு.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவர் கேட்பது குரல் வாக்கெடுப்புக்கு விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார். நானும் அதுபோல குறைந்தபட்சம் குரல் வாக்கெடுப்புக்காவது இந்தத் தீர்மானத்தை நீங்கள் விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுத்து இருக்கிற தீர்மானத்தையா?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆமாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுடைய தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை) (குறுக்கீடுகள்)

அமைச்சர் அவர்கள் சட்டமுன்வடிவை அறிமுகம் பண்ணுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி, என்ன?



**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள்பாட்டுக்குச் சொல்லிவிட்டால், தீர்மானத்தை நிறைவேற்ற முடியுமா? (குறுக்கீடுகள்) இது முடியவே முடியாது. இல்லை, நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, இதை ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) இதை ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி. வேண்டுமானால் ஏற்றுக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள், அப்புறம் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, மிக உரத்த குரலிலே 'ஆம்' என்று அத்தனை உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, என்னுடைய தீர்மானம் நிறைவேறிவிட்டது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், என்ன சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நண்பர், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது என்று பேரவைத் தலைவர் தெரிவித்தீர்கள். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது என்று தாங்கள் தெரிவித்தவுடன், ஆளும் கட்சியில் இருப்பவர்கள் பெரும்பகுதி 'ஆம்' என்று, ஏற்போர் 'ஆம்' என்று தெரிவித்துவிட்டார்கள். எனவே தீர்மானம் நிறைவேறியது. So, அமைச்சர், Bill-ஐ introduce பண்ண முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் சட்டமுன்வடிவை அறிமுகம் பண்ணுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் சட்டமுன்வடிவை அறிமுகம் பண்ணுங்கள்.

***மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2002* ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

[2002 அக்டோபர் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் பேசி முடித்துவிட்டார்கள் (குறுக்கீடுகள்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம்.

*முற்பகல் 11—30*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Practice and Procedure of Parliament-ல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. 'A resolution seeking to disapprove an Ordinance cannot bar the progress of the Government Bill which seeks to replace that Ordinance' என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆகவே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எவ்வளவுதான் அறிவார்ந்தவர்களாக இருந்தாலும் சபாநாயகரின் தீர்ப்புக்குக் கட்டுப்பட வேண்டுமே தவிர, விதிமுறைகளைப்பற்றி சபாநாயகர் அவர்களுக்கே பாடம் கற்பித்துக் கொண்டிருப்பதை இந்த அவை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

(எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள் அதாவது எஸ்.ஆர்.பி. அவர்கள் அறிமுக நிலையிலே ...(குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். எஸ்.ஆர்.பி. பதில் சொல்லட்டும்...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 'Disapproves' என்று தெளிவாக என்னுடைய தீர்மானத்திலே நான் குறிப்பிட்டு இருக்கிறேன். 'This House disapproves the Ordinance promulgated by the Governor' என்று தெளிவாக தேதி உள்பட நான் குறிப்பிட்டிருக்கிறேன். என்னுடைய அந்தத் தீர்மானம், எஸ்.ஆர்.பி. கொடுத்த தீர்மானம் என்று சொல்லி 'ஆம்' என்று உரத்த குரலில் (குறுக்கீடுகள்) சபை ஒரே குரலில் ஒலித்தது. ஒரே குரலில் ஒலித்தது, அதை நீங்கள் மாற்ற முடியாது, ஒன்று இரண்டாவது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யுங்கள் (குறுக்கீடு) இல்லை, விளக்கம் முடிந்தது. முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். விளக்கம் முடிந்தது.



2002 அக்டோபர் 25]

***மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)

## (இ) தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருங்கள். எஸ்.ஆர்.பி. என்ன என்று சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இது என்ன முறை?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. என்ன என்று சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் disapproval Notice கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால், நீங்கள் என்னைப் பேசுவதற்கு விடவில்லை. அமைச்சர்களைக் கூப்பிடுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எப்படி அமைச்சர்களைக் கூப்பிடுவது முறையாக இருக்க முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது உங்களைக் கூப்பிடுகிறேன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இப்போது கூப்பிடுகிறீர்கள் சரி. என்னவென்றால், அதை வந்து சரி என்று நாங்கள் ஏற்றுக் கொண்டோம் என்பதை உறுதி பண்ணிவிட்டு எங்களைக் கூப்பிடுகிறீர்கள். இந்த முறை இதோடு நின்று போகட்டும். தயவுசெய்து இனிமேல் இதை நீங்கள் பின்பற்றாதீர்கள். ஆக. பேரவைத் தலைவர் அவர்கள் சொல்கிற தீர்ப்பை நாங்கள் இந்த முறை ஏற்றுக்கொள்கிறோம். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள் அப்படிப் பதிவு செய்வது சரி அல்ல. நீங்கள் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து முற்றிலுமாக நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீக்கப்பட்டாலும் சரி, அதுதான் உண்மை. அதுதான் உண்மை.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. கொஞ்சம் கவனியுங்கள். (குறுக்கீடு) எஸ்.ஆர்.பி. கொஞ்சம் கவனியுங்கள். விதி *129(1)*, "ஒரு

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்த அனுமதிகோரும் தீர்மானம் எதிர்க்கப் பெற்றால், பேரவைத் தலைவர், தாம் தேவையெனக் கருதினால், அத்தீர்மானத்தை மொழியும் உறுப்பினரையும், எதிர்க்கும் உறுப்பினரையும் அவர்களது கருத்தைச் சுருக்கமாகக் கூற அனுமதித்த பிறகு மேற்கொண்டு எவ்வித விவாதமும் இன்றி பேரவையின் முடிவிற்கு அதை விட வேண்டும்" (குறுக்கீடு) நம்முடைய சட்டமன்ற விதிதான் அது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் சொல்கிறேன். நான் சொல்கிற விதி *166*. *166* என்பது ஒரு தீர்மானம். 'Disapproval' என்பது 'Constitution'-ல் இருக்கிறது. நம்முடைய விதி என்பது Constitution-ஐ மீறி போக முடியாது. எந்த அவசரச் சட்டத்தை வேண்டுமானாலும் பேரவை நிராகரிக்கலாம் என்பது இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றிருக்கிற அந்தப் பகுதியைத்தான் நீங்கள் விதிகளில் விதி *166* என்று சேர்த்திருக்கிறீர்கள். விதி *166*-ன்கீழ் அவசரச் சட்டத்தை இந்த அவை நிராகரிக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்தால், அந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்கிற தீர்மானத்தைத்தான் முதலில் நாம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அது விவாதமாகவே நடைபெற வேண்டும். அதைக் கொடுத்தவர் பேசலாம். பேசியதற்குப் பிறகு அமைச்சர் பதில் சொல்லலாம். பதில் சொன்னதற்குப் பிறகு மீண்டும் உறுப்பினர் விரும்பினால் பதில் சொல்லி அதை வாக்கெடுப்பிற்கும் விட்டு, வாக்கெடுப்பிற்கு விட்டதற்குப் பிறகுதான் நீங்கள் தீர்ப்பு சொல்ல முடியும். வாக்கெடுப்பிற்கு விட்டீர்கள்: ஆனால் அந்தநேரத்தில் 'ஆம்' என்று அத்தனைபேரும் ஒருமித்த குரலில் குரல் கொடுத்தார்கள். குரல் கொடுத்த பின்னாலே.. (குறுக்கீடு) இல்லை என்று சொன்னால் வேறு. குரல் கொடுத்ததற்குப் பின்னாலே நீங்கள் உடனே அடுத்தவரைக் கூப்பிட்டால் என்ன முறை? அதேமாதிரி இதிலேயும் நான் 'Disapproval Notice' கொடுத்திருக்கிறேன். 'Disapproval Notice' நான் கொடுத்ததற்கு அவசியமே இல்லாமல் பண்ணிவிட்டீர்களே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. எஸ்.ஆர்.பி. அவர்கள், Parliament Procedure-ல் இதுதான் இருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை. Parliament Procedure இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக இருக்க முடியாது. இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராகவோ நம்முடைய விதிகளுக்கு முரணாகவோ இருக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நான் இப்போது கேட்கிறேன். மாநகராட்சிகள் சட்டத்தை நீங்கள் இப்போது எதிர்க்கிறீர்களா?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆம், எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். எஸ்.ஆர்.பி. பேசுகிறார், உட்காருங்கள். (குறுக்கீடு)

*முற்பகல் 11—55*

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Order. I am on a point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்கு என்று ஒரு மாண்பு இருக்கிறது. இந்த அவையிலே விதி 166-ன்படி எந்த ஒரு நபரும் ஒரு தனித் தீர்மானம் கொண்டு வரலாம். அந்தத் தனித் தீர்மானத்தில்—ஓர் அவசரச் சட்டம் இந்த அரசு பிறப்பிக்கும்பட்சத்தில், அவை கூடுகிறபோது, இதை நீங்கள் சட்டமாகக் கொண்டு வருகிறபோது, எந்த ஓர் உறுப்பினரும் முதலிலே notice கொடுத்து, தனித் தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்ற வகையிலே என்னுடைய தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் இங்கே ஒரு தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். கொண்டு வந்து இங்கே நீங்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பவர்கள் 'ஆம்' என்க என்றவுடனே, எல்லோருமே 'ஆம்' என்று உரக்கச் சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே (குறுக்கீடுகள்), இல்லை சொல்கிறேன். (குறுக்கீடுகள்) I will come to the point.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் தெளிவுபடுத்தி விடுகிறேன். அப்புறம் நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அவசரச் சட்டத்தை நாம் சட்டமாக்குவதற்காக ஒரு மசோதாவை கொண்டுவரும்போது எந்த உறுப்பினர் வேண்டுமானாலும் அந்த அவசரச் சட்டத்தை எதிர்ப்பதற்காகவோ அல்லது நிராகரிப்பதற்காகவோ ஒரு resolution - ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரலாம். அதற்கு எந்தத் தடையும் இல்லை. ஆனால், அந்த மசோதாவை அறிமுகப்படுத்துவதை அவர்கள் தடை. செய்ய முடியாது என்பது சட்டத்தில் தெளிவாக உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி விடுங்கள். இதை முடித்து விடுங்கள். இதை முடித்துவிடுங்கள். (கூச்சல்—குழப்பம்) இது வேண்டாம். இது வேண்டாம். இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) இப்போது மாநகராட்சிகள் சட்டத்தை நீங்கள் எதிர்க்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. என்னவென்று கேட்கிறேன். இல்லை, விவாதம் முடிந்தது. (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை. அவர்கள் விளக்கம் சொன்னதால் நான் சொல்கிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உங்களுடைய வாதம் சிறுபிள்ளைத்தனமானது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது வேறு. அது வேறு. அத்தனைப் பேரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அருள்கூர்ந்து நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எத்தனை பேர் என்பது உங்களுக்குத் தெரியாதா? (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள்...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள் இப்போது சொல்லிய கருத்துகள் அவ்வளவையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எத்தனை பேர் என்பது தெரியும். என்னவென்று தெரியும். ஏதோ 'ஆம்' என்று சொன்னார்கள் 'இல்லை' என்று சொன்னார்கள் என்று சொல்லிவிட்டு (குறுக்கீடுகள்) சிறுபிள்ளை விளையாட்டு விளையாடுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்கள் அப்படிக் கேட்கவில்லை. எஸ்.ஆர்.பி. தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றவை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகராமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் பேசுவதற்கு முன்னால் நீங்கள் எதிர்க்கிறீர்களா? திரு. எஸ்.ஆர்.பி. பேசுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**THIRU C. GNANASEKARAN:** I am on a Point of Order. (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 'ஜுலை 30 ஆம் தேதி ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம், 1981 ஆம் ஆண்டு கோயம்புத்துர் மாநகராட்சிச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டம் ஆகியவற்றை மேலும் திருத்துவதற்கான ஓர் அவசரச் சட்டத்தை இப்பேரவை நிராகரிக்கிறது' என்கின்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன். காரணம், இந்த அவசரச் சட்டம் 31-7-2002 அன்று காலாவதியாகிறது. இந்த அவசரச் சட்டம் ஏன் தேவைப்பட்டது என்பது வேறு விஷயம். நீண்ட காலமாக மாநகராட்சிப் பகுதிகள், நகராட்சிப் பகுதிகள் மற்றும் மற்ற மற்றப் பகுதிகளிலே அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகள், விதிமுறைகளுக்கு மீறி கட்டிய வீடுகள் என்று ஏராளமான கட்டடங்கள், வீட்டுமனைகள் இருந்தன. அவற்றை வரன்முறைப்படுத்துகின்ற நோக்கத்தோடு ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து, அதைச் செயல்படுத்தவும் அரசு முனைந்தது. கடும் எதிர்ப்பு அதற்குத் தோன்றியது. குறிப்பாக கோவை மாநகரத்திலே, அவற்றை அமல்படுத்த முனைந்தபோது, மக்கள் மத்தியிலே கடும் எதிர்ப்பு அதற்கு வந்தது. ஏனென்று சொன்னால், அன்றையதினம் அங்கீகரிக்கப்பட்ட மனைக்கட்டுப் பகுதிகளில் விதிகளுக்கு மீறி கட்டப்பட்ட கட்டடங்களுக்கு ஒரு சதுர அடிக்கு ரூ.30/- என இருந்தது. அதை நாங்கள் குறைக்க வேண்டும் என்று கேட்டோம். அதேபோல் அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைப் பகுதிகளில் ஒரு சதுர அடிக்கு ரூ.50/-. அதாவது ஒரு சதுர மீட்டருக்கு ரூ.500/-. இதையும் நாங்கள் குறைக்க வேண்டும் என்று கேட்டோம். ரூ.30/-ஐ ரூ.5/- ஆகக் குறைக்க வேண்டும் என்று



கேட்டுக்கொண்டோம். அதற்கேற்ப மற்றவற்றையும் குறைக்க வேண்டுமென்று கேட்டோம். அதேபோல் development charges அதைப் பொறுத்தவரைக்கும் குறைக்க வேண்டும். வரன்முறைச் சட்டத்தின்கீழ் தற்போது அமலில் இருக்கும் அபிவிருத்திக் கட்டணத்திற்கு மாற்றாக 1993-1994 ஆம் ஆண்டு அமலில் இருந்த கட்டணத்தை வசூல் செய்ய வேண்டும் என்று அந்த மனுவில் நாங்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.

*நண்பகல் 12—00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால், ஒரு காரணத்தைச் சொல்லி, நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரு சட்டத்தை எதிர்ப்பது என்பது வேறு. நிராகரிப்பது என்பது வேறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. ஆய்வுக்கு வரும்போது விரிவாகப் பேசுங்கள். (குறுக்கீடு) ஆய்வுக்கு வருகின்ற நேரத்தில் நீங்கள் விரிவாகப் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவசரச் சட்டத்தை எதிர்ப்பது என்பது வேறு. அவசரச் சட்டத்தை நிராகரிப்பது என்பது வேறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டும் ஒன்றுதான்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் ஒன்றும் முதல் முறையாகப் பேசுகிறேன் என்று நினைக்காதீர்கள். அவசரச் சட்டத்தை நிராகரித்து இந்த அவையிலே திரு. துரைமுருகன் அமைச்சராக இருந்தபோது, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அமைச்சராக இருந்தபோது பலமுறை பேசியிருக்கிறேன். இதேமாதிரி Disapproval Notice கொடுத்து அவர்களுக்கு எதிராக நான் பேசியிருக்கிறேன். இல்லையென்று சொல்லவில்லை. அதனாலே சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், என்ன? (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தாராளமாகப் பேசலாம். முழுமையான விவாதம் வேண்டாமென்று... ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். காய்தல், உவத்தல் இல்லாமல், உங்கள் ஆட்சிக் காலத்திலே இது நடந்தது என்ன, என்பதைக் கொஞ்சம் நீங்கள் விளக்கிச் சொல்லுங்கள். (குறுக்கீடு) சட்டமுன்வடிவு ஆய்வுக்கு வரும்போது நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** காய்தல், உவத்தல் இல்லாமல் இருந்திருந்தால் நாங்கள் அதிலேயே நின்றிருப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. சட்டமுன்வடிவு ஆய்வுக்கு வரும்போது பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதிலே என்ன இருக்கிறது' முடிக்கப் போகிறேன். நான் பேசி முடித்த பிறகு இன்னொருவர் பேசலாம். அவர்களுடைய வாய்ப்பை நான் ஏன் கெடுக்க வேண்டும்.' எனக்கு இதிலே ஒரு வாய்ப்பு இருக்கிறது, நான் பேசுகிறேன். நான் பேசி முடித்த பின்னால், எங்கள் கட்சித் தோழர்கள் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும். நான் இதற்குக் குறுக்கே நிற்க விரும்பவில்லை. (குறுக்கீடு) எதற்கு, வேண்டாம். விவாதம் எங்கேயோ போய்விட்டால், பேச்சு அகற்றப்படுகிறது என்று சொல்லிவிடப் போகிறீர்கள். அதனாலே வேண்டாம். இதுவே போதும்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, It has been made abundantly clear in 166 -- "Within six weeks from the re-assembly of the House any member may after giving three clear day's notice to the Secretary, move a motion disapproving the Ordinance". ஆனால் இந்த motion of disapproval குறித்து அவையின் விவாதம் at what stage should be taken up - move பண்ணியவுடனேயே அதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியுமா அல்லது consideration-க்கு வரவேண்டுமா என்பதே இதில் தெளிவாக்கப்படவில்லை.

You are submitting to the House your motion. The Bill is also placed before the House. Both can be simultaneously taken up for discussion at the time of consideration. That is what it means. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து இப்போதே அதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்; அவர்கள் பேச வேண்டும். என்பதற்கு விதி தெளிவாக இல்லை. (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் திரு எஸ்.ஆர்.பி. அவர்களுக்குச் சொல்வது, நான் அனுமதி அளிக்கிறேன். நீங்கள் கருத்தைச் சொல்லி, எதிர்க்கிறேன் என்பதைச் சொல்லுங்கள். அதைப்பற்றி ஒன்றும் இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** புதிய நடைமுறையைக் கொண்டு வராதீர்கள். ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட, அனுமதிக்கப்பட்ட நடைமுறை. நம்முடைய சட்டமன்றத்திலே மட்டுமல்ல, எல்லா சட்டமன்றங்களிலேயும் அமலில் இருக்கிறது. பாராளுமன்றத்திலே அமலில் இருக்கிறது. இது என்னவென்றால், Constitution-ல் இருக்கிறது. நான் ஒன்றும் புதியதாகச் சொல்லவில்லை. Constitution-ல் இருப்பதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) 166 - எங்கே போகும் என்றால், Motion-க்குப் போய்விடும். Motion-என்ன என்றால், ஒருவர் முன்மொழிந்து, இன்னொருவர் வழிமொழிந்து, அதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வது. அதைத்தான் Motion என்று சொல்வது. வேறொன்றும் இல்லை. ஆகவே, அதை இதற்குத் தடையாகச் சொல்லவில்லை. என்னுடைய Motion-ஐ நீங்கள் எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். அதற்கு முன்னதாக அவசரச் சட்டத்தை நிராகரிக்க முடியுமே தவிர, அவசரச் சட்டத்தை மாற்றிவிட்டு புதிய... (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Prtactice and Procedures of Parliament-ல் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. "If notice of a statutory resolution given by a private member. seeking disapproval of an Ordinance. is admitted by the Speaker. time has to be provided by Government for discussion thereof. However. the resolution and a motion for consideration of a Government Bill seeking to replace that Ordinance may be discussed together." அதைத்தான் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்கள்தான் time கொடுக்கவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Time கொடுக்காமலா இவ்வளவு நேரம் பேசினீர்கள்?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, Rule 97(1) Every motion must be proposed by one Member and seconded by another though the seconder of a substantive motion may reserve his right of speech till a later stage of the debate:

(2) A motion not seconded is forthwith dropped:

Provided that a motion need not be seconded if the motion is one which is moved by a Minister.......

Rule 98: After the Speaker has stated or read out the motion, members may speak on it in the order in which they are called by the Speaker.

Rule 99(1): Unless otherwise provided in the Constitution or Acts or these Rules, on the conclusion of the debate on a motion, the Speaker shall put the question to the vote of the House and decide it by votes and invite those who are in favour of the motion to say 'Ayes' and those against the motion to say 'No'.

(2) The Speaker shall then say.....அதைத்தான் நீங்கள் கேட்டீர்கள். 'ஆம்' 'Ayes' என்று சொல்லிவிட்டார்கள். அதைத்தான் சொல்கிறேன். பிறகு சொல்லி என்ன செய்வது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அதைத்தான் பேசி முடித்துவிட்டீர்களே? (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் எதிர்க்கிறீர்களா?

**திரு. துரைமுருகன்:** அறிமுக நிலையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏற்கெனவே சொல்லிவிட்டீர்கள். திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. நீங்கள் சீக்கிரம் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) அவர் முடித்துவிடட்டும்.

*பிற்பகல் 12—05*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல இது ஒரு பெரிய பிரச்சினையாக பல்வேறு பகுதிகளிலே இருந்து வருகிறது. ஆகவே, Reserved site விடவில்லை என்றால், அதற்காக ஒரு தொகையை நிர்ணயித்து, கட்ட வேண்டுமென்று



சொல்கிறார்கள். இன்றைய மார்க்கெட் ரேட்படி கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இன்று அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்களெல்லாம், எங்களையெல்லாம் கேட்கின்ற கேள்வி, மக்கள் பிரதிநிதிகளிடம் கேட்கின்ற கேள்வி, நாங்கள் பணமே கொடுத்தாலும் வாங்குவதற்கு அங்கே இடம் கிடையாது, reserve site கிடையாது; Reserve site இல்லாத நிலையில் எதற்காக எங்களிடத்திலே நீங்கள் வசூல் செய்கிறீர்கள், அது வேண்டாமென்று சொல்கிறார்கள். ஆக, என்னுடைய கோரிக்கை என்பது, புதிய சட்டத்தைக் கொண்டு வாருங்கள். 30 ரூபாய் என்பதற்குப் பதிலாக 5 ரூபாய் என்று செய்யுங்கள். 50 ரூபாய் என்பதற்குப் பதிலாக, அதற்கேற்ப 30 ரூபாய், 5 ரூபாய் என்று அதற்கேற்ப செய்யுங்கள். அதேபோல அபிவிருத்தி வரி, அபிவிருத்திக் கட்டணம் என்பதை நீங்கள் 1993-94-ல் இருந்த அதே அபிவிருத்திக் கட்டணத்தை, அதையே அமலுக்குக் கொண்டு வாருங்கள். நிச்சயமாக மக்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள். இந்த அவசரச் சட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு- புதிய சட்டம், இப்போது வரும் சட்டமல்ல, புதிய சட்டத்தை நீங்கள் முன்மொழிய வேண்டுமென்று, இந்த அரசு முன்மொழிய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு தீர்மானத்தை வலியுறுத்துகிறேன்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய மாண்புமிகு தலைவர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த அணுகுமுறையை அவை தொடர்ந்து கடைப்பிடிக்குமேயானால், இது ஏற்கெனவே நடைமுறையிலுள்ள வழக்கத்திற்கு மாறாக மாறிவிடும். அவையினுடைய நேரமும் இதில் உண்மையிலேயே வீணாகிவிடும் என்பதை இந்த அவை உணர வேண்டும். இதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டியது என்னுடைய கடமை. இதில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. "Ordinances and Proclamations by the President" என்ற தலைப்பில் Statutory resolutions seeking disapproval of an Ordinance" என்பதில் எத்தகைய அணுகுமுறையை அவை கடைப்பிடிக்க வேண்டுமென்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்துக் காண்பித்ததைப்போல், "If notice of a statutory resolution given by a private member, seeking disapproval of an Ordinance" மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கூறியதைப்போல, disapproval of an Ordinance என்று தீர்மானம் கொடுத்தால், if it is admitted by the Speaker - Speaker அதை மறுத்துக்கூட இருக்கலாம். அப்படி அவர் ஒருவேளை அதை ஒத்துக்கொண்டபட்சத்தில், time has to be provided by the Government for

discussion thereof. ஒத்துக்கொண்ட காரணத்தால், அதில் எப்போது நேரம் என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

"However, the resolution and a motion for consideration of a Government Bill seeking to replace that Ordinance may be discussed together" - என மிகத் தெளிவாக, "Practice and Procedures"-ல் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. மேலும் கூறப்பட்டிருக்கிறது, "When this is permitted by the Speaker, the resolution, after discussion, is put to vote first; because if the resolution is adopted, it would mean disapproval of the Ordinance and the Bill would automatically fall through." மிகத் தெளிவாக, "If the resolution is negatived....(Interruption) I am coming to it. "If the resolution is negatived, the motion for consideration of the Bill is then put to vote and further stages of the Bill are proceeded with" என்று சொல்லி, Similarly....நோக்கம் என்னவென்றால், அவையிலே இத்தகைய.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதாவது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படக்கூடிய நேரத்திலேதான் இந்த நிராகரிக்கக்கூடிய உங்களுடைய தீர்மானத்தை எடுத்துக்கொள்ள முடியும். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் Constitution-ஐப் படித்துக் காண்பிக்கிறேன். நீங்கள் பிறகு தீர்ப்புச் சொல்லுங்கள். நான் படித்துக் காண்பித்துவிடுகிறேன். "....or, if before the expiration of that period - Which period? - Before the Ordinance, a Resolution disapproving is passed by the Legislative Assembly and agreed to by the Legislative Council, - there is no Legislative Council here - if any, upon the passing of the Resolution or as the case may be, and the Resolution being agreed to by the Council" என்று இரண்டு பண்ணலாம். ஒன்று, ஆளுநராக withdraw பண்ணலாம். இல்லையென்றால், இந்த அவை தீர்மானத்தை நிறைவேற்றினால் இந்த அவசரச் சட்டம் போய்விடும். இதுதான் Constitution. அதனால் இதை நீங்கள் ஒரேயடியாக உதாசீனப்படுத்த முடியாது. இதைப் புறக்கணிக்க முடியாது. முதலில்தான் இதை பாஸ் பண்ண வேண்டுமே தவிர, பின்னாலே பாஸ் பண்ண முடியாது. ஒரு தீர்மானம் கொடுத்தால், அந்தத் தீர்மானம்" என்பது, சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்துவதற்கு முன்பு, அவசரச் சட்டத்தை அவை நிராகரிக்கிறதா இல்லையா என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அவசரச் சட்டத்தை நிராகரிப்பதாக நாங்கள் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். அவசரச் சட்டத்தை





நிராகரிப்பதாக இந்த அவை சொன்னால் அதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். வேறு வழி கிடையாது. அதுதான் உண்மையான நிலைமை. அதுதான் Constitution.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை ஏற்கெனவே படித்தார்கள். மறு தடவையும் படித்தார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதைத்தான் நான் படித்துக் காண்பித்தேன். அதையே அவரும் படித்துக் காண்பித்தார். முதலிலே அவர் படிக்கவில்லை. இரண்டாம் முறை படித்துக் காண்பித்தார். Not at the time of first. No. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, எம்மாதிரியாக இருந்தாலும், இப்போது நான் தீர்ப்பை வழங்குகிறேன். ஒரு சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படக்கூடிய நேரத்திலேதான் நிராகரிப்பதற்கான தீர்மானத்தை எடுத்துக்கொள்ள முடியும் என்ற தீர்ப்பை நான் வழங்குகிறேன். இனிமேல் அந்த நடைமுறைதான் பின்பற்றப்படும் என்பதைத் தெளிவாக, திட்டவட்டமாக, உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர், சட்டமுன்வடிவை அறிமுகம் செய்யுங்கள். (குறுக்கீடு) மேற்கொண்டு இதிலே விவாதம் தேவையில்லை. அமைச்சர், சட்டமுன்வடிவை அறிமுகம் செய்யுங்கள். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12—10*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். பேராசிரியர் அவர்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேரவைத் தலைவர் ஒரு விளக்கமான முடிவு தரவேண்டுமே தவிர, சுருக்கமாக தான் கருதுகிறபடி ஒரு முடிவைச் சொல்வதன் மூலமாக அடிப்படையே தகர்ந்து போகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஏற்கெனவே அவரை எவ்வளவோ பேசவிட்டாயிற்று. முதலமைச்சர் அவர்கள் விதிகளைப் படித்துக் காட்டினார்கள். நிதியமைச்சர் அவர்கள் படித்துக் காட்டினார்கள். நானும் விதிகளைப் படித்துக் காட்டினேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுப்பதற்காகக்கூட நான் பேசவில்லை. ஒரு விளக்கம் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே நான் முன்னவராகவும் இருந்திருக்கிறேன். அமைச்சராகவும் பணியாற்றியிருக்கிறேன். ஆகவே, இந்த வாய்ப்பு இருந்த காரணத்தால் சொல்கிறேன், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் கொடுத்த அந்தத் தீர்மானம் இந்த அவையினால் ஏற்றுக்கொள்ளப்படாமல் மறுக்கப் பட்டால் உடனே சட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு அதுபற்றி விவாதிக்கப் படலாம். அவர் கொடுத்த அந்தத் தீர்மானம் இந்த அவையிலே வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, சரியோ, தவறோ, பல பேர் இருக்கிற அவையிலே ஆளும் கட்சி சார்பான தீர்மானம் என்பதுபோலக் கருதி அவர்கள் அதை ஏற்றுக்கொள்வது என்பது.. ..





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடு)

**பேராசிரியர் க. அன்பழகன்:** அதை, அதை .. .. (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குரல் வழியாகச் சொன்னதை எத்தனை பேர் ஆதரித்தார்கள், எத்தனை பேர் எதிர்த்தார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. வேண்டுமானால் இப்போது வாக்கெடுப்பு நடத்திவிடலாம். (குறுக்கீடுகள்)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** சுருக்கமாக, நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள மாட்டேன். முதலமைச்சர் சொன்ன கருத்திலேகூட எனக்கு ஒன்றும் வேறுபாடு இல்லை. இந்த அவை அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளாமல்கூட தள்ளிவிட்டது என்று சபாநாயகர் சொல்லிவிடலாம். சொல்லிவிட்டால் அடுத்த சட்டத்தை எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் கொடுத்த தீர்மானத்தை, அவை ஏற்றுக்கொள்கிறதா அல்லவா என்பதைச் சொல்ல வேண்டிய ஒரு கட்டாயம் இருக்கிறது. அதையும் சேர்த்து, சட்டத்தோடு சேர்த்து விவாதிக்கலாம் என்று சொல்வது, அவையைத் தொடர்ந்து நடத்துகிறபோது சிக்கலை அதிகமாக வளர்க்கும். இரண்டாவதாக, ரிஜெக்ட் செய்கிறோம் அல்லது மொத்தமாக இந்த அவை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லப்படுகிற ஒரு தீர்மானத்தை இந்த அவை மறுத்துவிட்டது என்று சொல்லிவிட்டு, அவையினுடைய அடுத்த நடவடிக்கையிலே அவைத் தலைவர் ஈடுபடுவதுதான் முறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்களுக்கு, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசவேண்டிய கருத்தை எல்லாம் பேசி முடித்ததற்குப் பிறகுதான் கடைசியாக தீர்ப்புச் சொல்லியிருக்கிறேன். அவர் சொல்ல வேண்டியவற்றையெல்லாம் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) இல்லை, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், இதுகுறித்து தீர்ப்புச் சொன்னதற்குப் பிறகு விவாதத்திற்கு இடம் இல்லை. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** விவாதமே இல்லை. விவாதமே இல்லை. தவறான முன்னுதாரணம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசினால் வெளிநடப்பா

*(மேலும் தன்னைப் பேச அனுமதிக்காததை ஆட்சேபித்து வெளிநடப்புச் செய்வதாகக் கூறி, திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் வெளிநடப்புச் செய்தார். அவருடன் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.)*

*(எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் வெளிநடப்புச் செய்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், எதிர்க்கட்சித் தலைவர் எழுந்துபோய்விட்டார் நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ** வெளிநடப்புச் செய்கிறோம். (மணியடிக்கப்பெற்றது)

*(திரு. துரைமுருகன், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுடன் வெளிநடப்புச் செய்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. எதிர்க்கட்சிக்கு எவ்வளவு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமோ கொடுத்தோம். எஸ். ஆர். பி. அவர்களை எவ்வளவு பேசவிட வேண்டுமோ பேசவிட்டோம். ஆகவே (குறுக்கீடுகள்) மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் சொன்ன கருத்து அவைக் குறிப்பிலிருந்து இப்போது நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சியை எல்லாம் பேசவிட்டாகிவிட்டது. அப்புறம் என்ன இருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, இதே பொருள் குறித்து என்றால் வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது



*(பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

*(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

*பிற்பகல் 12—15*

## 5. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2002–2003 – அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்து முதல் துணை நிதிநிலை அறிக்கை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின்முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை@ இம் மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூ.175.99 கோடி நிதி ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், ரூ.119.19 கோடி வருவாய்க் கணக்கிலும் எஞ்சிய தொகையான ரூ.56.80 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2002 ஆம் ஆண்டு மார்ச் 28 ஆம் நாளன்று, கடந்த நிதியாண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளைச் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து, "புதுப் பணிகள்" குறித்து முன்பணங்கள் பெற்று, செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாராச் செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

3. கழிமுகப் பகுதியிலுள்ள விவசாயிகளின் துயர் துடைக்க அரசு 2002-2003 ஆம் ஆண்டில் பெரும் திட்டமொன்றை அறிவித்துள்ளது. தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய கழிமுக மாவட்டங்களில்

(@) 110 மற்றும் 111 ஆம் பக்கங்களில் அச்சிடப்பெற்றுள்ளது.

நெய்வேலி காட்டாமணக்குச் செடியை (IPOMEA ) ஒழிப்பதற்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 2.00 கோடி முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 5 - வேளாண்மைத் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. 2001-2002 ஆம் ஆண்டு நெல் பருவ காலங்களுக்கு இந்தியப் பொதுக் காப்புறுதிக் கழகத்தினால் (General Insurance Corporation of India) ஏற்பளிக்கப்பட்ட இழப்பீடுகளில் மாநில அரசின் 50 சதவிகித பங்குச் செலவினத்திற்காக ரூபாய் 6.61 கோடி எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 5 - வேளாண்மைத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

5. தேசிய வேளாண்மைக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் வரும் தொகுப்பு நிதிக்கு மாநில அரசின் பங்குத் தொகையாக ரூபாய் 5.50 கோடி எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 12 - கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

6. நெசவாளர்களிடமிருந்து 18 இலட்சம் சேலைகள் மற்றும் 9 இலட்சம் வேட்டிகள் வாங்குவதற்காக ரூபாய் 25 கோடியை அரசு அனுமதித்துள்ளது. இது துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 16 - கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை - கைத்தறி மற்றும் துணிநூல்" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு 31.12.1998 முதல் 31.12.2001 வரையிலான காலத்திற்கான வட்டிக்கான உதவித் தொகையாக ரூபாய் 27.50 கோடி அரசு அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 24.08 கோடி முன்பணம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒப்பளிப்பு செய்யப்பட்ட முழுத் தொகையும் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 16 - கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை - கைத்தறி மற்றும் துணிநூல்" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.



8. ஐந்து அரசினர் மருத்துவக் கல்லூரிகளுக்கு சாதனங்கள் மற்றும் அறைக் கலன்கள் வாங்கவும், கட்டடங்கள் கட்டவும் ரூபாய் 28.80 கோடி அரசு அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 1.00 கோடி முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 18 - மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

9. சென்னை மாநகர காவல் துறை பணியாளர்களுக்கு உணவு கட்டண வீதங்களை உயர்த்தி வழங்குவதற்காக ரூபாய் 9.68 கோடிக்கு அரசு அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூபாய் 1 கோடி வழங்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 21 - உள் துறை - காவல்" என்பதன்கீழ் ரூபாய் 2.42 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

10. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெற்ற கடன் தொகையை ஏழு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்குக் கடனாக வழங்க அரசு ரூபாய் 37.20 கோடி அளித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 26 - தொழில் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

11. ஆசாரிப்பள்ளத்தில் உள்ள அரசு காசநோய் மருத்துவமனையில் கட்டடங்களை மேம்படுத்துவதற்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூபாய் 1.30 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 38 - பொதுப் பணித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

12. முதியோர் ஓய்வூதியம் பெறும் 71,974 பேர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ உணவு தானியம் வழங்குவதற்காக அன்னபூர்ணா திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூபாய் 6.03 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 43 - சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

13. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை, இம் மாமன்றம் ஏற்று, இசைவளிக்க வேண்டுகிறேன்.

(437 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

முன்மொழியப்பெற்ற கூடுதல் செலவிற்கான முதல் துணை மானியக் கோரிக்கைகள், 2002—2003

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் |
|---|---|---|
| 1. மாநிலச் சட்டமன்றம்— | 45,03 | - |
| 3. நீதி நிருவாகம்— | 1,24,08 | - |
| 4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை— | 3,23,32 | - |
| 5. வேளாண்மைத் துறை— | 11,37,79 | - |
| 7. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-மீன் வளம்— | 25,00 | 30,00 |
| 9. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை— | 81,16 | - |
| 12. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 9,29,05 | - |
| 13. எரிசக்தித் துறை— | - | 1,00,00 |
| 15. நிதித் துறை— | 15,01 | 1,50,00 |
| 16. கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணிநூல்— | 52,50,05 | 96,37 |
| 18. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை— | 6,09,21 | - |





| கோரிக்கை | வருவாய் | மூலதனம் |
|---|---|---|
| 19. உயர் கல்வித் துறை— | 75,00 | - |
| 21. உள் துறை-காவல்— | 3,54,09 | - |
| 22. உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்— | 39,27 | - |
| 23. உள் துறை-சிறைச்சாலைகள்— | 71,60 | - |
| 25. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை— | 10,16,52 | 1,00,00 |
| 26. தொழில் துறை— | - | 38,79,22 |
| 27. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் | 3,20,00 | - |
| 29. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு— | 1,35,26 | - |
| 36. மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை— | 15,72 | - |
| 38. பொதுப் பணித் துறை— | 79,02 | 4,44,79 |
| 41. பள்ளிக் கல்வித் துறை— | 4,85,09 | - |
| 42. சிறுதொழில்கள் துறை— | - | 5,00 |
| 43. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை— | 6,55,67 | - |
| 45. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை— | 75,00 | - |
| 47. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை— | 56,75 | - |
| பெருமொத்தம் | 1,19,18,69 | 48,05,38 |

பிற்பகல் 12—20

## 3. அறிவிப்புகள்–தொடர்ச்சி

### (ஆ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2002-2003 – வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002-2003 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும் மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், அவற்றைப் பேரவை விதி 190-ல் உள்ளவாறு 28-10-2002, திங்கட்கிழமை, மாலை 3-00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (28-10-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12-21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

30. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) விதிகள் இயற்றியது குறித்து வணிக வரிகள் துறையின் 27-06-2002 ஆம் நாளிட்ட 75 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/2002) 15(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

31. தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயத்தின் துணைத் தலைவர் திரு. ஏ. பால்ராஜ், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களின் பதவி விலகலை ஏற்றுக்கொண்டது குறித்து வணிக வரிகள் துறையின் 16-06-2002 ஆம் நாளிட்ட 58 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1992) 23(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]



32. 01-07-2002 ஆம் நாளை 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர பொருட்கள் மீதான வரி (திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/2002) செயலுக்கு வரும் நாளாக அறிவிக்கப்பட்டது குறித்தும் மற்றும் 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பரப் பொருட்கள் மீதான வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து சில வகை நபர்களுக்கு விலக்களிப்பது குறித்தும் வணிக வரிகள் துறையின் 27-06-2002 ஆம் நாளிட்ட 77 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பரப் பொருட்கள் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

33. 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 28-05-1996 ஆம் நாளிட்ட 67 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972 ) 41(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

34. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை, ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

35. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

36. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

37. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

[2002 [illegible] 25

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

15. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (முதல் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

16. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

17. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

18. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

19. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

**********

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
225170
சென்னை-600 008
நூலகம்

N.T.P. SUPPLIED BY THE DEPARTMENT
PRINTED AT GOVERNMENT CENTRAL PRESS, CHENNAI-600 079.